# ஐயாச்சாமி அகாதெமி வழங்கும்

# தமிழ் இலக்கிய வரலாறு

பொருளடக்கம்


| | |
|---|---|
| 1. | சங்க காலம் |
| 2 | சங்கம் மருவிய காலம் |
| 3 | பல்லவர் கால இலக்கியம் |
| 4 | காப்பிய இலக்கியம் |
| 5 | இலக்கண நூல்கள் |
| 6 | நாயக்கர் காலம் ( சிற்றிலக்கியம்) |
| 7 | தனிப் புலவர்கள் |
| 8 | நூற்றாண்டுத் தமிழ்ப் புலவர்கள் |
| 9 | இருபதாம் நூற்றாண்டில் தமிழ்க் கவிதையும் வளர்ச்சியும் |
| 10 | நாவல் இலக்கியம் |
| 11 | தமிழ்ச் சிறுகதை இலக்கியம் |
| 12 | நாடக இலக்கியங்கள் |
| 13 | இசைத் தமிழ் |
| 14 | தமிழில் இதழ்கள் |



IYACHAMY ACADEMY

சென்னை | திருநெல்வேலி | தென்காசி

www.iyachamy.com

044-48601550 , 9952521550

Join our telegram channel - https://t.me/iyachamyacdemy

**தமிழ் இலக்கிய வரலாறு**

# 1. சங்க காலம்

## தோற்றமும் தொன்மையும்

'திங்களொடும் செழும்பரிதி தன்னோடும் விண்ணோடும் உடுக்களோடும் மங்குல் கடல் இவற்றோடும் பிறந்த தமிழ்' என்று புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் தமிழ் மொழியின் தொன்மையைக் குறிப்பிடுகின்றார். உலகத்தின் பழம்பெருமை மொழிகளாகிய சீனம், கிரேக்கம், இலத்தீன் ஹீப்ரு, வடமொழி ஆகியவற்றைக் காட்டிலும் பழமையும் சிறப்பும் கொண்டு விளங்குவது தமிழ்மொழி. ஈராயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட இலக்கிய வரலாற்று வளர்ச்சியைத் தமிழ் மொழியில் காண முடிகிறது.

நீண்ட காலமாகவே தமிழ் மக்கள் தம் மொழியைப் பற்றோடும் உணர்வோடும் போற்றி வளர்த்தனர்; கருத்துகளை வெளிப்படுத்தப் பயன்படும் ஒரு கருவியாக மட்டும் கருதாமல், தம் உயிரோடு கலந்த ஓர் உணர்வுப் பொருளாகவே தமிழ்மொழியைக் கருதினர். பண்டைத் தமிழ் நாட்டில் பாண்டிய மன்னர்கள் சங்கம் அமைத்துத் தமிழாராய்ந்து அரிய பாடல்களையும், பெருநூல்களையும் இயற்றச் செய்தனர்.

சமய அடிப்படையில், சிவபெருமானே வடமொழியைப் பாணினிக்கும், தமிழ் மொழியை அகத்தியருக்கும் அறிவுறுத்தினர் என்பர்.

சமுதாய வாழ்வினைக் கூட்டாக மேற்கொண்ட மக்கள் தம் உள்ளுணர்வுகளின் அடிப்படையால் மொழியினை உருவாக்கிக் கொண்டனர் என்றும், அம் மொழி பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாக வளர்ச்சி பெற்று இன்றைய நிலையினைப் பெற்றுள்ளது என்றும் மொழியாராய்ச்சி வல்லுநர் கூறுகின்றனர்.

மனிதனது நாகரிக வளர்ச்சிக் கேற்ப மொழியும் வளர்ந்து வந்தது போலச் செய்தல், ஒப்புமையாக்கம், இயற்கைச் சூழ்நிலை, வாழ்க்கை மரபுகள் ஆகியவற்றின் அடிப்படையில் படிப்படியாக வளர்ந்தது.

முதலில் பேச்சு வடிவில் மட்டுமே இருந்த மொழி காலப்போக்கில் ஓவிய எழுத்துருவம் பெற்றது. தொடக்க காலத் தமிழ் எழுத்துகள் வட்டெழுத்துகள் எனப்பட்டன. பின்னர் படிப்படியாக எத்துணையோமாறுதல்களுக்குட்பட்டு இன்றைய வடிவினைப் பெற்றன.

தமிழ், தெலுங்கு மலையாளம், கன்னடம், துளுகுடகு என்னும் ஆறும் செப்பம் செய்யப்பட்ட மொழிகளாகும். தோடர்மொழி, கொதவர்மொழி, கோந்த், கூ, ஒரோவன், ராஜ்மகால் என்னும் ஆறும் செப்பம் செய்யப்படாத மொழிகளாகும். இவ்விரு பிரிவும் திராவிட இனமொழிகள் எனப்படும். இப்பன்னிருமொழிகளும் **'Proto Dravidian'** எனப்படும் பழந்திராவிட மொழி ஒன்றிலிருந்து தோன்றியவை.

சேர, சோழ, பாண்டியர் எனும் மூவேந்தரும், குறுநில மன்னர்களும் தம் ஆட்சிக் காலத்தில் தமிழின் உயர்வுக்குச் சீரிய பணி ஆற்றியுள்ளனர். சங்க இலக்கியப் பாடல்கள் அனைத்தும் அவர்கள் கொண்ட தமிழ்ப் பற்றின் விளைவே எனலாம். அவர்களாட்சியில் தமிழ் ஓங்கி வளர்ந்தது; பின்னர் ஆண்ட பல்லவர் களப்பிரர் நாயக்கர், இஸ்லாமியர் ஆட்சிக்காலங்களில் குறிப்பிடத்தக்க அளவு அது வளர்ச்சியடையவில்லை. ஆனால், பிற்காலச் சோழர் தலையெடுத்தபோது அவர்கள் ஆட்சியில் அருங் காப்பிய நூல்கள் பல தோன்றித் தமிழின் மேன்மையை உயர்த்தியமை கருதத்தக்கது.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தமிழுக்குச் சிறிது உரிமை கிடைத்தது. அதனையடுத்து விடுதலை பெற்ற காலம் முதல் தமிழ் தன்னுரிமையோடும் பெருமிதத்தோடும் வளர்ந்து வருகிறது. கவிதை,

https://t.me/tnpscfree



சிறுகதை, நாவல், கட்டுரை நாடகம், இதழ்கள் எனப்பல துறைகளிலும் தமிழ் இன்று நன்கு வளர்ந்து வருகிறது.

**சங்கம்**

**இறையனார் அகப்பொருள் உரை**

இறையனார் அகப்பொருள் என்னும் பழைய தமிழ் இலக்கண நூலின் உரையில் நக்கீரர் மூன்று தமிழ்ச் சங்கங் களைப் பற்றிய செய்திகளைத் தந்துள்ளார். அவ்வுரை நக்கீரரால் எழுதப்படவில்லை என்றும், செவிவழிச் செய்தியாகக் கேட்டதை அவரது தலைமுறையில் வந்த முசிறி நீலகண்டர் என்பவர் எழுதினார் என்றும் கூறுவர். இவ்வுரையின் காலம் கிபி. 7 அல்லது 8ஆம் நூற்றாண்டு என்பர்.

**முதற் சங்கம்**

கடல் கொள்ளப்பட்ட தென்மதுரையில் முதற் சங்கமாகிய தலைச்சங்கம் இருந்தது என்பர். திரிபுரமெரித்த விரிசடைக் கடவுள், குன்றம் எறிந்த குமரவேள், அகத்தியர், முரஞ்சியூர் முடிநாகராயர், நீதியின் கிழவன் முதலான 549 புலவர்கள் அச்சங்கத்தில் இருந்தனர் 4449 புலவர்கள் பாடினர். அவர்கள் பாடிய முதுநாரை, முதுகுருகு, பெரும் பரிபாடல், களரியாவிரை முதலான நூல்கள் மறைந்து போயின. காய்சின வழுதி முதலாகக் கடுங்கோன் ஈறாக 89 மன்னர்கள் தலைச் சங்கத்தைப் புரந்தனர். இச்சங்கம் 4440 ஆண்டுகள் நிலவியது. இச்சங்கப் புலவர்க்கு, அகத்தியமே இலக்கண நூலாக விளங்கியது.

**இடைச் சங்கம்**

இடைச்சங்கம் கடல் கொண்டகபாடபுரத்தில் 3700 ஆண்டுகள் நிலவியது. இருந்தையூர்க் கருங்கோழி சிறு பாண்டரங்கன், துவரைக் கோமான், கீரந்தை, வெள்ளூர்க் காப்பியன், திரையன் மாறன் உள்ளிட்ட 59 புலவர்கள் வீற்றிருந்தனர்; 3700 புலவர்கள் பாடினர். கலி, குருகு, வெண்டாளி, வியாழமாலை அகவல், மாபுராணம், பூதபுராணம், தொல்காப்பியம் முதலான பல நூல்கள் இயற்றப்பட்டன. இவற்றுள் தொல்காப்பியம் ஒன்றே இன்று கிடைத்துள்ளது. வெண்டேர்ச் செழியன் முதலாக முடத்திருமாறன் ஈறாக 59 மன்னர்கள் இச்சங்கத்தைப் புரந்தனர்.

**கடைச் சங்கம்**

பாண்டியர் தலைநகரமாயிருந்த மதுரை மாநகரில் கடைச் சங்கம் நிறுவப்பட்டது. கபிலர், பரணர், நக்கீரனார், சிறுமேதாவியார், சேந்தம்பூதனார், பெருங்குன்றூர்க் கிழார் உட்பட 49 புலவர்கள் வீற்றிருந்தனர்.

449 புலவர்கள் பாடினர். எட்டுத் தொகையும் பத்துப்பாட்டும் வேறு பிற நூல்களும் இப்புலவர்களால் இயற்றப்பட்டன. 1850 ஆண்டுகள் நிலவிய இச்சங்கத்தை முடத்திருமாறன் முதலாக உக்கிரப்பெருவழுதி ஈறாக 49 பாண்டிய மன்னர்கள் போற்றிப் புரந்தனர்.

நக்கீரரின் இறையனார் அகப்பொருளுரை தவிர வேறு எந்தச் சான்றும் முச்சங்கம் நிலவிய உண்மையை அறியத் துணை செய்யவில்லை. சிலப்பதிகார உரையில் ஓரளவு செய்திகள் கிடைக்கின்றன. கடல் கோள்கள் காரணமாக முதலிரண்டு சங்கங்கள் அழிந்தன என்பர். சங்கம் என்பதொன்று தமிழகத்தில் இருந்ததாகச் சொல்வது முழுக் கற்பனை என்ற சிலரும், கடைச்சங்கம் ஒன்று மட்டுமே இருந்தது மற்றவை கற்பனை என்று சிலரும், முச்சங்க வரலாறு முழுவதும் உண்மையே என்று சிலருமாக இது குறித்துக் கருத்து வேறுபாடு கொண்டுள்ளனர்.



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



'ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவனாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைகவென் நிலவரை' - புறநானூறு -27
'நன்பாட்டுப் புலவனாச் சங்கமேறி நற்கனகக்
கிழிதருமிக் கருளினோன் காண்' - திருநாவுக்கரசர்.
'சங்கத் தமிழ் மூன்றும் தா' - **ஔவையார்.**
'தலைச்சங்கப் புலவனார் தம்முன்' - சேக்கிழார்.
'உயர் மதில்கூடலில் ஆய்ந்த ஒண் தீந்தமிழ்' - மாணிக்கவாசகர்
'சங்க முகத்தமிழ் சங்க மலி தமிழ்' - **திருமங்கையாழ்வார்.**

இவை போல மேலும் பல இலக்கியச் சான்றுகள் கிடைக் கின்றன. அதனால், சங்கம் என்ற ஒன்று உறுதியாக நிலவியிருக்க வேண்டும் எனக் கருதுவதில் தவறு ஒன்றுமில்லை.

**கல்வெட்டுச் சான்றுகள்**

சங்கம் இருந்தமையை உறுதிப்படுத்தத் தக்க சான்றாகச் சின்னமனூர்ச் செப்பேடு அமைந்துள்ளது. அச்செப்பேட்டின் காலம் கி.பி. 10ஆம் நூற்றாண்டு என்பர். சங்கம் உறுதியாக இருந்தது என்பதை உறுதிப்படுத்தும் வகையில்,

'மகாபாரதம் தமிழ்ப் படுத்தும்
மதுராபுரிச் சங்கம் வைத்தும்'

என்ற வரிகள் அதில் அமைந்துள்ளன.

**அகத்தியர்**

'தமிழைத் தந்தவர்' என்ற பெருமையோடு போற்றப் பெறுபவர் அகத்தியர். இவர் சந்தனப் பொதிகையில் செந்தமிழ் வளர்த்தவர், கும்பமுனி என்றும், தமிழ் முனிவன் என்றும் பலவாறு பாராட்டப் பெறுபவர், தலைச் சங்கத்திலும், இடைச் சங்கத்திலும் வீற்றிருந்தது தமிழாராய்ந்தவர்.

'தமிழெனும் அளப்பருஞ் சலதி தந்தவன்' என்றும், 'என்றுமுள தென்றமிழ் இயம்பி இசைகொண்டான் என்றும் கம்பர் இவரைக் குறிப்பிட்டுப் பாராட்டுகின்றார்.

பிற்காலத் தமிழ் நூல்களுள் பல அகத்தியரின் பெருமையை வானளாவப் புகழ்கின்றன. விந்திய மலையை அடக்கியவர் வாதாபி வில்லவன் என்னும் அரக்கரை அழித்தவர், காவிரியைப் பெருக்கெடுத்து ஓடச் செய்தவர், இராமனுக்கு வழிகாட்டிப் படைக்கலன்களை அருளியவர், கும்பத்தில் பிறந்தவர், சிவபெருமானின் ஆணைப்படி தெற்கே வந்தவர், வந்த பின்னர் இருந்த இடத்திலேயே இறைவன் திருமணக் கோலத்தைக் கண்டு களித்தவர் எனப் பலவாறு அவரைப் பற்றிப் புகழ்ந்து கூறுகின்றனர்.

அகத்தியர் என்ற பெயரில் பலர் தமிழகத்தில் இருந்தனர். அதனால், அகத்தியம் தந்த அகத்தியர் யார் எனத் தெளிவாக அறியக் கூடவில்லை.

தலைச் சங்கத்தில் அகத்தியர் வீற்றிருந்து தமிழ் ஆய்ந்தார். இவர் 12,000 நூற்பாக்கள் கொண்ட அகத்தியம் என்னும் முத்தமிழ் இலக்கண நூலை இயற்றினார். இந்நூலே முதல் சங்கத்தில் சிறந்த இலக்கண நூலாகப் போற்றப்பட்டது. இவருடைய மாணவராகப் பன்னிருவர் இருந்தனர். அவர்களுள் தொல்காப்பியர், பனம்பாரனார், காக்கை பாடினியார் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள் எனக் கூறுவர்.




https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



அகத்தியம் எழுத்து, சொல், பொருள், யாப்பு, சந்தம், வழக்கியல், அரசியல், அமைச்சியல், பார்ப்பனவியல், சோதிடம், கந்தருவம் முதலிய பல்வேறு பகுதிகளை உடையதென்பர். அஃது இப்பொழுது கிடைக்கவில்லை. ஆனால், உரையாசிரியர்கள் கையாண்ட சிற்சில நூற்பாக்கள் கிடைக்கின்றன. தொல்காப்பியர் எழுதிய தொல் காப்பியத்திற்கு அகத்தியமே மூல நூலாக விளங்கியது என்பர்.


**To buy this Book Online : https://imojo.in/2mmbx8t**

**Content of the Book https://iyachamy.com/wp-content/uploads/2020/03/CONTENT-.pdf**

**தமிழில் ஏப்ரல் மாதத்தில் வெளியிடப்படும்**


**தொல்காப்பியர்**

தொல்காப்பியரின் காலம் கிமு. 300க்கு முற்பட்ட தென்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். காப்பியன் என்பது இவரது குடி வழியாக வந்த பெயர், 'தொல்' என்பது அடைமொழி, இயற்பெயர் தெரியவில்லை; திரண தாமாக்கினியார் என்பதே இவர் இயற்பெயர் என்பர் நச்சினார்க்கினியர், இடைச் சங்க காலத்தில் வாழ்ந்தவர்; நிலந்தரு திருவிற் பாண்டியன் அவைக் களத்தில் வீற்றிருந்தவர் பாண்டியர் தலைநகரமாக விளங்கிய கபாடபுரத்தில் அதங்கோட்டாசான் என்னும் பெரும்புலவர் **தலைமையி**ல் தம் நூலை அரங்கேற்றினார். 'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்' எனப் பாயிரத்தில் பனம்பாரனார் இவரைப் பாராட்டுகிறார். இவர் அகத்தியரின் மாணாக்கர் இவர் நூலுக்குச் சிறப்புப் பாயிரம் வழங்கிய பனம்பாரனார் ஒரு சாலைமாணாக்கர். தொல்காப்பியரின் சமயம் இன்னதெனத் தெரியவில்லை.



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



**தொல்காப்பியம்**

தொல்காப்பியம் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்னும் மூன்று பிரிவுகளையுடையது. ஒவ்வோரதிகாரமும் ஒன்பது இயல்களைக் கொண்டுள் ளது. மொத்தம் ஏறத்தாழ 1600 நூற்பாக்கள் உள்ளன. சங்கப் புலவர்களுக்கும் அதற்குப்பின் வந்தவருக்கும் இது சிறந்த இலக்கண நூலாக விளங்கி வந்தது இன்றும் ஈடு இணையற்ற நூலாகத் திகழ்கிறது.

**எழுத்ததிகாரம்**

எழுத்ததிகாரத்தில் நூன்மரபு, மொழி மரபு, பிறப்பியல், புணரியல், தொகைமரபு, உருபியல், உயிர் மயங்கியல், புள்ளி மயங்கியல், குற்றியலுகரப் புணரியல் என்னும் ஒன்பது இயல்கள் உள்ளன. முதல் மூன்று இயல்களில் மொழிக்கு இன்றியமையாத எழுத்துகளின் தன்மை , வடிவம், வகை, நிற்கும் இடங்கள், பிறப்பு முதலியவை சிறப்புறக் கூறப்படுகின்றன. சொற்கள் இணையும் திறமும் அதனால் விளையும் பொருள் வேறுபாடுகளும் ஏனைய ஆறு புணரியற் பகுதிகளில் அழகுற விளக்கப்படுகின்றன.

**சொல்லதிகாரம்**

சொல்லதிகாரத்தில் அகத்திணையியல், புறத்திணை யியல், களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப்பாட்டில், உவமையியல், செய்யுளியல், மரபியல் என்னும் ஒன்பது இயல்கள் உள்ளன. அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல் நான்கும் மனிதனது அகவாழ்வினையும் புறத்திணையியல் புறவாழ்வினையும் விளக்குகின்றன.

செய்யுளுக்கு இன்றியமையாத மெய்ப்பாடும் உவமையும் யாப்பும் அடுத்து வரும் மூன்று இயல்களில் விளக்கப்படுகின்றன. சொற்களின் மரபு முதலாயினவற்றை மரபியல் விளக்குகிறது.

**தொல்காப்பியத்தின் சிறப்பு**

தமிழர்க்குக் கிடைத்துள்ள நூல்களுள் மிகப் பழமை யானது தொல்காப்பியமேயாகும். இது கால வெள்ளத்தைக் கடந்து அழியாமல் நிலை பெற்றுள்ளது. பண்டைத் தமிழ் மக்களின் மொழியியல்பு, நாகரிகம், பண்பாடு முதலியவற்றை விளக்கும் வரலாற்றுச் சிறப்பு மிக்கது. மூன்று அதிகாரங்களால் சுருக்கமாகவும் தெளிவாகவும் ஐந்திலக்கணங்களையும் கூறுகின்றது. சங்ககாலப் புலவர்களுக்கு இலக்கண நூலாக அமைந்ததும் இதுவே ஆகும்.

எழுத்தும் சொல்லும் பற்றிய இலக்கணமே பிறமொழிகளில் ஓதப்படுகிறது. தொல்காப்பியமோ, பொருள் பற்றியும் ஓதுகிறது. இது தனிச் சிறப்பாகும்.

தொல்காப்பியன் வகுத்த எழுத்தொலிகளைக் கொண்டு பிறமொழி ஒலிகளையும் எழுதிக்காட்ட முடியும் அத்தகு சிறப்புத் தமிழுக்கு உண்டு என்றார், அறிஞர் பாவே. மாணிக்க நாயக்கர் அவர்கள். இலக்**கண உலகின் ஏகசக்கரவர்த்தியான பாணினிகூட** மொழி பற்றி இவ்வளவுவிரிவாக ஆராயவில்லை, என்று பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையவர்கள் குறிப்பிட்டுள்ளார். தொல்காப்பியம் தமிழுக்கு உயிர் நாடி போன்றது என்கிறார் டாக்டர் மா. இராசமாணிக்கனார்.

இளம்பூரணர், நச்சினார்க்கினியர், சேனாவரையர், பேராசிரியர், தெய்வச் சிலையார், கல்லாடர் ஆகியோர் தொல்காப்பியத்திற்கு அரிய உரைகளை வழங்கியுள்ளனர்.


தொல்காப்பியம் தந்த விரிமுறைகள், வரம்புகளாக நின்று கடந்த இருபது நூற்றாண்டுகளாகத் தமிழைக் காத்து வருகின்றன.



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

IYACHAMY ACADEMY
(Associated With www.iyachamy.com)
Institution For Competitive Exam




https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



**எட்டுத் தொகை**

'நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம்புறமென்று
இத்திறத்த எட்டுத்தொகை'

எனப் பழைய வெண்பா ஒன்று எட்டுத்தொகை நூல்களைத் தொகுத்தோதுகின்றது. இந்நூல்கள் அனைத்தும் பல புலவர்கள் பாடிய பாடல்களின் தொகுப்பு நூல்கள் பாடல்களின் அளவு, கூறும் பொருள், சிறப்பு ஆகியவை குறித்துத் தொகுக்கப்பட்டன. இவற்றின் பாடல்களைப் பாடிய புலவர்கள் பல்வேறு இனத்தினர்; பல்வேறுகாலத்தினர் பல்வேறு தொழிலினர் பலபாடல்களுக்குப் பாடிய புலவர்களின் பெயர் தெரியவில்லை.

எட்டுத் தொகை நூலுள் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு என்னும் ஐந்து நூல்களும் அகப்பொருள் பற்றியன. புறநானூறு, பதிற்றுப் பத்து இரண்டும் புறப்பொருள் பற்றியன பரிபாடல் அகம் புறம் என்ற இரண்டையும் பற்றியது.

**நற்றிணை**

ஒன்பதடிச்சிற்றெல்லையும் பன்னிரண்டடிப்பேரெல்லையும் கொண்ட அகப்பொருள் பற்றிய நானூறு பாடல்களைக் கொண்ட சிறந்த நூல் நற்றிணை. இதனைத் தொகுப்பித்தவன் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி என்பவன் தொகுத்தவர் இன்னாரென்று அறியுமாறில்லை.

ஏறத்தாழ 175 புலவர்கள் பாடிய அகவற்பாக்கள் இந்நூலுள் இடம் பெற்றுள்ளன.

பொதுவாகச் சேர சோழ பாண்டிய மன்னர்களைப் பற்றியும் அஞ்சி, ஆய்,மலையமான் ஓரி முதலிய வள்ளல்களைப் பற்றியும், பழையன், தித்தன் முதலிய குறுநில மன்னர்களைப் பற்றியும் இந்நூல் குறிப்பிடுகிறது.

**சாதல் அஞ்சேன்**

ஒருதலைவியின் அச்சம் மிகவும் வியப்பைத் தருகின்றது அவள் தன் தலைவன் பிரிவால் மெலிந்து நலிந்து வேதனையுறுகின்றாள். அவள் சாவதற்காக அஞ்சவில்லை. செத்தால் ஒரு வேளை வேறு பிறப்பு கிடைத்துவிடுமே அப்படிக் கிடைத்தால் **தலைவனை** மறக்கவும் கூடுமே என்பதற்காகவே அஞ்சுகிறாள்.

'சாதல் அஞ்சேன் அஞ்சுவல் சாவின்
பிறப்புப் பிறிது ஆகுவது ஆயின்
மறக்குவென் கொல்என் காதலன்'

எனவே என்பது நற்றிணைக் காதலியின் புலம்பல்

'முந்தையிருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனிநா கரிகர்'

என்று நம்பின் இலக்கணம் வகுக்கிறது நற்றிணை. தமிர மக்கள் அன்று எவ்வளவு நாகரிக வாழ்க்கை உடையவராய் வாழ்ந்தனர் என்பதற்கு இஃது ஒரு சான்றாகும்.

**உவமை அழகு**



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



தலைவன் நட்பைத் தலைவி மிக உயர்ந்த உவமை கொண்டு விளக்குவது நம் உள்ளத்தைக் கவர்கிறது. நின்ற சொல்லர் நீடுதோன்று இனியராகவிளங்கும் தலைவரின் நட்பின் திறத்திற்குச் சந்தன மரத்தின் உயரத்தில் தொகுத்து வைத்த தாமரை மலர்த் தேனை உவமையாகக் காட்டுகின்றாள் தலைவி ஒருத்தி.

'நின்ற சொல்லர்; நீடு தோன்று இனியர்
என்றும் என் தோள் பிரிபு அறியலரே
தாமரைத் தண்தாது ஊதி மீமிசைச்
சாந்தின் தொடுத்த தீந்தேன் போலப்
புரைய மன்ற புரையோர் கேண்மை'

'முல்லை சான்ற கற்பின் மெல்லியல்' எனத் தலைவியின் இயல்பையும், இளமையும் செல்வமும் எய்கணை நிழலின் கழியும்' என நிலையாமையையும், நெடிய மொழிதலும் கடிய ஊர்தலும் செல்வமன்று அதுதம் செய்வினைப்பயனே, சான்றோர் செல்வம் சேர்ந்தோர் புன்கண் அஞ்சும் பண்பின் மென்கட் செல்வம்' என உண்மைச் செல்வத்தையும் நற்றிணை விளக்குகிறது.

உள்ளத்தைக் கவரும் உவமைகளும் அணிநலன்களும் நற்றிணைப் பாடல்களில் அமைந்துள்ளன. தேய்புரிப் பழங் கயிற்றினார் தனிமகனார் விழிக்கட்பேதைப் பெருங்கண்ணனார் ஆகிய பெயர்கள் பாடல்களின் தொடர்களால் அமைந்தவை.

**குறுந்தொகை**

'நல்ல குறுந்தொகை' என்று சிறப்பிக்கப்படும் இந்நூல் நான்கடிச் சிற்றெல்லையும், எட்டடிப் பேரெல்லையும் கொண்ட நானூறு பாடல்களைக் கொண்டது. இந்நூலைத் தொகுத்தவன் பூரிக்கோ என்பவன்.

இரு நூற்றுக்கு மேற்பட்ட புலவர்கள் இதில் பாடியுள்ளனர். ஔவையார், அள்ளூர் நன்முல்லையார், ஆதிமந்தியார், ஒக்கூர் மாசாத்தியார், காக்கை பாடினியார், வெள்ளி வீதியார் முதலான பெண்பாற் புலவர்களின் பாடல்களும் குறுந்தொகையில் இடம்பெற்று உள்ளன. இதன் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாரதம் பாடிய பெருந்தேவனார் பாடியுள்ளார்.

பாரி, ஓரி, மலையமான் அஞ்சி, ஆய் நன்னன், நள்ளி, கட்டி, அகுதை முதலான குறுநில மன்னரைப் பற்றிய செய்திகளைக் குறுந்தொகை தருகிறது.

அணிலாடு முன்றிலார், குப்பைக் கோழியார், செம்புலப் பெயல் நீரார், விட்ட குதிரையார், மீனெறி தூண்டிலார் முதலிய பெயர்கள் பாடற்றொடர்களால் அமைந்தவை.

**செம்புலப் பெயல் நீரார்**

ஒரு பாடலில் செம்புலப் பெயர்நீர் அன்புடைய நெஞ்சத்துக்கு உவமையாக வந்துள்ளது. என் தாயும் தந்தையும் நின்தாயும் தந்தையும் முற்றிலும் வேறுபட்டவர்; வானத்து மழைத்துளி செம்மண்ணில் கலந்தாற் போல் நம்மிருவர் நெஞ்சமும் ஒன்று கலந்தன' எனக் கூறித் தலைவன் தலைவியின் அச்சத்தைப் போக்குகிறான் பாடிய புலவர் பெயர் தெரியாமையால் செம்புலப் பெயல் நீரார்' என்ற தொடரைப் பாடிய புலவர்க்குப் பெயராக வழங்கியது பண்டைத் தமிழுலகம்.

'செம்புலப் பெயல் நீர்போல
அன்புடை நெஞ்சம் தாங் கலந்தனவே'

என்பன பாடல் அடிகள்.

**குப்பைக் கோழியார்**



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



குப்பை மேடுகளில் திரியும் கோழிகளைப் போரிட்டுக் கொள்ள விடுவர் சிலர், விலக்குவார் இலர். அவை இறுதி மூச்சுவரை போரிட்டு இறந்தொழியும் தன் காதல் நிலையும் அது போன்றது என்றாள் தலைவி.

'குப்பைக் கோழித் தனிப்போர் போல
விளிந்தாங்கு விளியின் அல்லது
களைவோர் இல்லை யான் உற்ற நோய்க்கே'

என்பது குறுந்தொகைத் தலைவி புலம்பல்.

'முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅதுடீஇக்
குவளை உண்கண் குய்ப்புகை கமழத்
தான்துழந் தட்ட தீம்புளிப் பாகர்
இனிதுஎனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே'

என்று தலைவியின் அன்பு நெஞ்சினை அழகு ஓவியமாகப் படைத்துக் காட்டுகிறார் ஒரு புலவர். தான் சமைத்த உணவைத் தன் கணவன் இனிதென் உண்ணும் போது பெரிதும் மகிழ்கிறாள் தலைவி. இல்லறத்தின் இனிமை இதில் இனிதாக இனிக்கிறது.

'வினையே ஆடவர்க்கு உயிரே; வாணுதல்,
மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்'

இல்லத் தலைவனுக்கு வினை உயிராம் மனை உறை மகளிர்க்குத் தலைவனே உயிராம் ! என்ன அழகு!

**ஐங்குறுநூறு**

மூன்றடிச் சிற்றெல்லையும் ஆறடிப் பேரெல்லையும் கொண்ட ஐந்நூறு அகப்பொருட் பாடல்களால் ஆனது. மருதப் பாடல்களை ஓரம் போகியாரும் நெய்தற் பாடல்களை அம்மூவனாரும், குறிஞ்சிப் பாடல்களைக் கபிலரும், பாலைப் பாடல்களை ஓதலாந்தையாரும், முல்லைப் பாடல்களைப் பேயனாரும் இயற்றியுள்ளனர். பழைய வெண்பா ஒன்று,

'மருதமோ ரம்போகி நெல்தலம் மூவன்
கருதுங் குறிஞ்சி கபிலன் ரீ கருதிய
பாலையோத லாந்தை பனிமுல்லை பேயனே
நூலையோ தைங்குறு நூறு'

என்று பாடியவரை வரிசைப்படுத்திக் கூறுகிறது.

பெருந்தேவனார் இதற்குக் கடவுள் வாழ்த்துப் பாடியுள்ளார். இதனைத் தொகுப்பித்தவன் யானைக்கட் சேய் மாந்தரஞ் சேரலிரும் பொறை, தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர் கிழார்.

இதில் அமைந்திருக்கும் ஒவ்வொரு திணையும் பிரிவுக்குப் பத்துப் பாடல்களாகப் பத்துப் பிரிவுகளை உடையது. ஒவ்வொரு பிரிவும் வேட்கைப் பத்து, வேழப் பத்து எனத் தலைப்புகளைப் பெற்றுள்ளன. பிற்காலத்தில் மணிவாசகரும்பிடித்த பத்து வாழாப் பத்து எனப் பத்துப் பத்தாகப் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன் பாடல்கள் அளவால் சிறியனவாயினும் உள்ளம் உருக்கும் உணர்ச்சிச்செறிவுமிக்கன. உணர்ச்சியூட்டும் வகையில் சொற்களைத் திரும்பத் திரும்பக் கையாளுதலே அச்செறிவுக்குக்



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



காரணமாகும். இந்நூலுள்ளும் குறுந்தொகையைப் போல உள்ளுறை உவமை, இறைச்சி முதலியன மிகுதியாகக் கையாளப்பட்டுள்ளன.

தலைமகள் ஒருத்தி தன் தலைவனுடன் உடன் போக்காகச் சென்று விடுகிறாள். இதனை அறிந்ததாய் அவளைத் தேடி வருமாறு பலரையும் போக்கினாள். அவர்களோ, அவளைக் காணாது வறிதே திரும்பினர்.

தன் அருமை மகளை விட்டு ஒரு நாளும் பிரியாத தாய்க்கு மகளின் பிரிவு எல்லையற்ற துன்பத்தை அளித்தது. குழந்தைப் பருவத்திலிருந்து தன் மகள் விளையாடிய பாவை, அவள் வளர்த்த கிளி பூவைப்பறவை ஆகியவற்றை எல்லாம் நோக்கி நோக்கி மனம் குழைந்து ஏங்கி வருந்துகிறாள். அஃது உள்ளம் உருக்கும் தகையது.

'இது என் பாவை பாவை; இதுஎன்
பூவைக்கு இனிய சொற்பூவை என்று
அலமரு நோக்கின் நலம்வரும் சுடர்நுதல்
பைங்கிளி எடுத்த பைங்கிளி என்றுஇவை
காண்தொறும் காண்தொறும் கலங்க
நீங்கினளே என்பூங்க ணோளே'

**பொருளை உவமையாக்கிக் கூறும் பாங்கு**

உவமையைப் பொருளாக்கியும் பொருளை உவமையாக்கியும் கூறும் மரபுக்கு ஐங்குறுநூற்றுப் பாடல்கள் தக்க சான்றுகளாகும். வினை முடித்து மீளும் தலைவன் கார் காலத்துக் காட்சிகளைக் காண்கிறான். அவை தலைவியின் நினைவை மனக்கண்முன் கொண்டு வந்து நிறுத்துகின்றன. எப்பக்கம் பார்த்தாலும் அவள் உறுப்புகளாகத் தோன்றுகின்றன.

மருண்ட மான் அவளுடைய பிரமும் கண்களையும், கரியமேகம் அவளது கூந்தலையும், ஆடும் மயில் அவளது சாயலையும் நினைவூட்டுகின்றன. காட்டுள் காணும் அத்தனித்தனிக் காட்சிகளை ஒன்றுபடுத்திக் காண்கிறான் தலைவன் தலைவியை உடனே காண வேண்டும் எனும் துடிப்பு அவனுள்ளத்தின் எழுகிறது. விரைந்து வந்து தலைவியைக் காண்கின்றான்; தன் நிலையைக் கூறுகிறான்.

'நின்னே போலும் மஞ்ஞை ஆலநின்
நன்னுதல் நாறும் முல்லை மலர
நின்னே போலும் மாமருண்டு நோக்க
நின்னே உள்ளி வந்தனன்
நன்னுதல் அரிவை காரினும் விரைந்தே'

இந்நூல் குட்டுவன், ஆதன், அவினி , கடுமான் கிள்ளி, கொற்றைக் கோமான், விரான், மத்தி முதலான தலைவர்களைப் பற்றிய குறிப்புகளையும் தருகிறது. மார்கழி நீராடல் பற்றிய செய்தியும் 84ஆம் பாடலில் இடம் பெற்றுள்ளது. தாமரை வெள்ளம், ஆம்பல் முதலான பேரெண்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.

'அன்னை வாழிவேண் டன்னைநம் படப்பை
தேன்மயங்கு பாலினும் இனிய அவர்நாட்டு
உவலைக் கூவற் கீழ்
மானுண் டெஞ்சிய கலுழி நீரே'



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



என்ற 203ஆம் பாடல் தலைவி, வளம் குறைந்த தலைவனோடு வாழும் இல்லற வாழ்வில் பெற்ற மன நிறைவைக் காட்டுகிறது.

**கலித்தொகை**

இது கடவுள் வாழ்த்து உட்பட 150 அகப்பொருட்பாடல்கள் கொண்டது. பாலைத் திணையில் 35 பாடல்களும் குறிஞ்சித் திணையில் 29 பாடல்களும், மருதத் திணையில் 35 பாடல்களும், முல்லைத் திணையில் 17 பாடல்களும், நெய்தல் திணையில் 33 பாடல்களும் உள்ளன. இந்நூல் ஐந்திணைக்கும் உரிய உரிப்பொருள்களை,

'போக்கெல்லாம் பாலை புணர்தல் நறுங்குறிஞ்சி
ஆக்கமளி ஊடல் அணிமருதம் - நோக்கொன்றி
இல்லிருத்தல் முல்லை இரங்கிய போக் கேர்நெய்தல்
புல்லுங் கலிமுறை கோப்பு'

என்ற வகையில் செம்மையான முறையில் எடுத்துரைக்கக் காணலாம். இந்நூலைத் தொகுத்தவர் நல்லந்துவனார். பாலைக் கலியைப் பாலை பாடிய பெருங்கோவும், குறிஞ்சிக் கலியைக் கபிலரும், மருதக் கலியை மருதனிள நாகனும், முல்லை கலியைச் சோழன் நல்லுருத்திரனும், நெய்தற் கலியை நல்லந்துவனாரும் பாடியதாகக் கூறுவர். சி.வை. தாமோதரம் பிள்ளை , கே.என். சிவராசப் பிள்ளை, டாக்டர் மா. இராசமாணிக்கனார் முதலானோர் கலித் தொகையைப் பாடியவர் ஒருவரே என்பர்.

பழையவெண்பா ஒன்று,

'பெருங்கடுங் கோன்பாலை; கபிலன் குறிஞ்சி
மருதனிள நாகன் மருதம் - அருஞ்சோழன்
நல்லுருத்திரன் முல்லை; நல்லந்துவன் நெய்தல்;
கல்விவலார் கண்ட கலி.'

என ஐவர் பாடியதாகக் கூறுகிறது.

நாடகப் போக்கமைந்த இனிய பாடல்களை இந் நூலிற் காணலாம். கலியோசை நிறைந்த இசைப் பாடல்களைக் கொண்ட இந்நூல் 'கற்றறிந்தார் ஏத்தும் கலி என்றும் 'கல்விவலார் கண்ட கலி' என்றும் போற்றப்படுகின்றன. பிற சங்க நூல்களைக் காட்டிலும் இதிகாசப் புராணச் செய்திகள் இதில் மிகுந்துள்ளன. பாலைக் கலியில் சுரத்தின் கொடுமை சிறப்பாகப் புனைந்துரைக்கப்பட்டுள்ளது.

'உண்ணீர் வறப்பப் புலர்வாடு நாவிற்குத்
தண்ணீர் பெறாஅத் தடுமாற்று அருந்துயரம்
கண்ணீர் நனைக்கும் கடுமைய காடு'

எனக் கடுங்கோ பாலை நிலம் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

வேட்கை மிகுதியால் தலைவியைக் காண அவள் இல்லத்திற்குப் போந்தான் தலைவன், வீட்டு வாயிலில் நின்று தண்ணீர் கேட்டான் பொற்கலமொன்றில் நீர் கொண்டு சென்று ஊற்றுமாறு தன் மக்களுக்குப் பணித் தாள் தாய், அதன்படி நீர் கொணர்ந்த போது தலைவியின் கரத்தைத் தலைவன் பற்றி இழுக்கத் தொடங்கி விட்டான். இதனை எதிர்பாராத தலைவி உடனே அம்மா! இவன் செய்ததைப் பாராய்' என்றாள் தாய் விரைந்தாள், நிலைமையைப் புரிந்து கொண்ட தலைவி, இவன் நீர் குடிக்கையில் விக்கினான்' எனக்கூறி உண்மையை மறைத்தாள் தாயோ தலைவன் முதுகினைத் தடவிவிடத் தொடங்கிவிட்டாள்! தலைவனும் கொல்வான் போல**த் தலைவியைக் கடைக்கண்ணால்** நோக்கினான். இது கபிலர் தீட்டும், காட்சிகளுள் ஒன்று.



https://t.me/tnpscfree

'சுடர்த்தொடீஇ கேளாய் தெருவில்நாம் ஆடும்
மணற்சிற்றில் காலிற் சிதையா அடைச்சிய
கோதை பறிந்து வரிப்பந்து கொண்டோடி
நோதக்க செய்யும் சிறுபட்டி மேலோர்நாள்
அன்னையும் யானும் இருந்தோமா இல்லீரே
உண்ணுநீர் வேட்டேன் எனவந்தாற்கு அன்னை
அடர்பொற் சிகரத்தால் வாக்கிச் சுடரிழாய்
உண்ணுநீர் ஊட்டிவா என்றாளென யானும்
தன்னை யறியாது சென்றேன்மற் றென்னை
வளைமுன்கை பற்றி நலியத் தெருமந்திட்டு
அன்னாய் இவனொருவன் செய்ததுகாண் என்றேனா
அன்னை அலறிப் படர்தரத் தன்னையான்
உண்ணுநீர் விக்கினான் என்றேனா அன்னையும்
தன்னைப் புறம்பழித்து நீவமற் றென்னைக்
கடைக் கணாற கொல்வான்போல் நோக்கி நகைக்கூட்டம்
செய்தானக் கள்வன் மகன். குறிஞ்சிக் கலி -5

**ஐந்து கலிகளுக்கிடையே உள்ள ஒற்றுமைகள்**

**1.** அறநெறிகளை உவமையாகக் கூறும் மரபு நூல் முழுவதும் காணப்படுகிறது. **2.** பாரத இதிகாசக் கதைகள் மிகுதியாக இவ்வுவமைகளில் இடம் பெறுகின்றன. **3.** பாண்டிய நாட்டுச் செய்திகளும் மதுரை நகரும் வையை நதியுமே வருணனைகளிலும் உவமைகளிலும் இடம் பெறுகின்றன. அதே போலப் பாண்டிய மன்னர்களின் புகழ் மொழியே இடம் பெறுகின்றன.

**4.** செய்திகளையும் உவமைகளையும் மூன்று முறை அடுக்கிக் கூறுதல் இதில் காணப்படும் மற்றொரு சிறப்பாகும்.

**5.** மொழிநடையிலும் ஒற்றுமை காணப்படுகிறது குறிஞ்சிக் கலியின் சில வரிகள் மருதக் கலியின் வரிகளோடு ஒத்து வருகின்றன.

'நீயும் தவறிலை நின்னைப் புறங்கடைப்
போதரவிட்ட நுமரும் தவறிலர்' - குறிஞ்சி-20
'நீயும் தவறிலை நின்கை இதுதந்த
பூவெழில் உண்கண் அவளும் தவறிலள்' - மருதம் - 19
'பறையறைந்து அல்லது செல்லற்க
என்னா இறையே தவறுடையான்' - குறிஞ்சி-20
'தான் யாரோ என்று வினவிய நோய்ப்பாலேன்
யானே தவறுடையேன்' - மருதம்-19
மக்கள் மேற்கொள்ள வேண்டிய பண்புகள் பலவற்றைத் தெளிவாக விளக்குகிறது.

'ஆற்றுதல் என்பது ஒன்றலர்ந்தவர்க் குதவுதல்;
போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை;
பண்பெனப் படுவது பாடறிந் தொழுகல்;
அன்பெனப் படுவது தன்கிளை செறாஅமை;
அறிவெனப் படுவது பேதையர் சொல் நோன்றல்;
செறிவெனப் படுவது கூறியது மறா அமை

நிறைவெனப் படுவது மறைபிறர் அறியாமை
முறையெனப் படுவது கண்ணோடாது உயிர்வௌவல்.'
என்பது நெய்தற் கலி காட்டும் பண்பாடு.

**அகநானூறு**

இது பதின்மூன்று அடிச் சிற்றெல்லையும் முப்பத் தோரடிப் பேரெல்லையும் கொண்ட அகப் பொருள் நூலாகும். இது நெடுந் தொகை என்றும் வழங்கும். மதுரை உப்பூரிகுடி கிழான் மகன் உருத்திர சன்மன் என்பவன் இதனைத் தொகுத்தான். தொகுப்பித்தவன் பாண்டியன் உக்கிரப் பெருவழுதி என்பவன், பாரதம் பாடிய பெருந் தேவனார் இதற்குக் கடவுள் வாழ்த்துப் பாடியுள்ளார்.

அகநானூற்றின் முதல் 120 பாடல்கள் களிற்றியானை நிரை எனவும், 121 முதல் 300 வரை உள்ள பாடல்கள் மணி மிடை பவளம் எனவும், இறுதி 100 பாடல்கள் நித்திலக் கோவை எனவும் வழங்குகின்றன. பாடல்களின் வைப்பு முறையில் ஒரு புதுமை காணப்படுகிறது. 1,3,5,7,9 என ஒற்றை எண்பட வரும் 200 பாடல்கள் பாலையைப் பற்றியவை; 2,8(12,18) எனும் எண்களால் வரும் 80 பாடல்கள் குறிஞ்சி பற்றியவை, 4 (14) எனவரும் 40 பாடல்கள் மருதம் பற்றியவை, 10, 20, 30 எனும் எண்களால் வரும் 40 பாடல்கள் நெய்தல் பற்றியவை. இந்நூற் பாடல்களை 158 புலவர்கள் பாடியுள்ளனர். முதல் 90 பாடல்களுக்குப் பழைய உரை ஒன்று உள்ளது. அகப் பொருட் செய்திகள் இதில் மிகச் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன; அழகிய புனைந்துரைக் காட்சிகளும் வரலாற்றுச் செய்திகளும் பண்பாட்டுக் கூறுகளும் இடம் பெற்றுள்ளன, நந்தர், மோரியர் முதலியோர் பற்றிய குறிப்பும், கடையெழு வள்ளல்கள்.

குறுநில மன்னர்கள், மூவேந்தர் பற்றிய செய்திகளும் மிகுதியாகக் காணப்படுகின்றன. பண்டைத் தமிழர் திருமணத்தை இரண்டு பாடல்கள் விளக்குகின்றன. தமிழகத்தின் மலைகளும், ஆறுகளும், நகரங்களும் இதில் இடம் பெற்றுள்ளன. சங்க கால ஊராட்சித் தேர்தல், நீதி வழங்கும் திறம் , வாணிகம் முதலியனவும் விளக்கப்படுகின்றன.

**மாண்வினைத் தேரன்:**

சோலையிலே மலர்கள் பூத்துக் குலுங்குகின்றன. அவற்றில் பெடையும் வண்டும் பெட்புடன் படிந்து தேன் உண்டு தம்மை மறந்து கிடக்கின்றன. வினை முடித்து மீளும் தலைமகன் அவ்வழியே தேரூர்ந்து வருகிறான், இக்காட்சியைக் காண்கிறான் தன் தேர்மணி நாவொலி அவற்றின் இன்பத்திற்கு இடையூறு தருமே எனக் கலங்குகிறான்; மணிகளின் நாவை அசையாவாறு கட்டித் தேரைச் செலுத்துகிறான்

'பூத்த பொங்கர்த் துணையொடு வதிந்த
தாது உண் பறவை பேதுறல் அஞ்சி
மணிநா ஆர்த்த மாண்வினைத் தேரன்'

அகநானூற்றின் ஐந்தாம் பாடல் குழந்தையைப் புனைந் துரைக்கும் ஓர் அழகிய பாடலாகத் திகழ்கிறது.

'நாயுடை முதுநீர்க் கலித்த தாமரைத்
தாதின் அல்லி அயலிதழ் புரையும்
மாசில் அங்கை மணிமருள் அவ்வாய்
நாவொடு நவிலா நகைபடு தீஞ்சொல்
யாவரும் விழையும் பொலந்தொடிப் புதல்வன்'

இப்பாடல் கற்போர் உள்ளத்தைக் கனிவிக்கிறது.

https://t.me/tnpscfree



**நீண்ட பாடல்கள்**

பாடல்கள் நீண்டிருப்பதால் ஒவ்வொரு பாடலிலும் முதல், கரு, உரி ஆகிய முப்பொருளும் ஓவியம் போல் நன்கு விளக்கப்படுகின்றன. முன்னங்காட்டி முகத்தின் உரைத்து ஓவச் செய்தியின் ஒன்று நினைந்த **தலைவியையும், தலைவனின் குழந்தை** தெருவில் தனித்து நிற்க, அதனை எடுத்து மார்போடணைத்து நிற்கும் பரத்தையையும் இந்நூலில் காணமுடிகின்றன.

'சிறுகா ரோடன் பயினொடு சேர்த்திய
கற்போற் பிரியலம்'
'இருதலைப் புள்ளின் ஓருயி ரம்மே'

என்பன போன்ற அரிய உவமைகளும் இந்நூலில் நிறைந்துள்ளன.

**பதிற்றுப் பத்து**

இது சேர வேந்தர் பதின்மரைப் பற்றிப் பத்துப் புலவர்கள் பாடிய புறப்பாடல்களின் தொகுப்பாகும். சேர மன்னர்களின் வீரம், வெற்றிச் சிறப்புகள், கொடை, உயர் பண்பாடு, நீதி வழங்கும் முறை, அறம் வளர்த்த பான்மை, அஞ்சாமை, நாகரிகம் முதலிய பல செய்திகளை இவற்றால் அறியலாம்.

ஒருவேந்தருக்குப் பத்தாகப் பத்து வேந்தரைப் பற்றி நூறு பாடல்கள் இதில் இடம் பெற்றுள்ளன.

முதற் பத்தும் இறுதிப் பத்தும் கிடைக்கவில்லை . இப் பகுதிகள் முறையே உதியன் சேரலாதன் யானைக்கட் சேய் மாந்தரஞ் சேரலிரும் பொறையைப் பற்றியனவாக இருத்தல் வேண்டும்.

இரண்டாம் பத்தில் இமயவரம்பன் நெடுஞ்சேர**லாதனைப்** பற்றிக் குமட்டூர்க் கண்ணனார் பாடியுள்ளார். மூன்றாம் பத்தில் பல்யானைச் செல்கெழு குட்டுவனைப் பற்றிப் பாலைக் கௌதமனார் பாடியுள்ளார். களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரலைப் பற்றிக் காப்பியாற்றுக் காப்பியனார் பாடியது நான்காம் பத்தாகும். பரணர் என்னும் பெரும்புலவர் ஐந்தாம் பத்தால் கடல் பிறக் கோட்டிய குட்டுவனைப் பாடியுள்ளார். காக்கை பாடினியார், நச்செள்ளையார், ஆடுகோட்பாட்டுச் சேரலாதனைப் பாடியது ஆறாம் பத்தாகும். செல்வக் கடுங்கோ வாழியாதனைப் பற்றிக் கபிலர் பாடியது ஏழாம் பத்தாகும். தகடூரெறிந் பெருஞ்சேரலிரும்பொறையைப் பற்றி பத்தின் தலைவன் இளஞ்சேரலிரும்பொறை பாடிய பெரும் புலவர் பெருங்குன்றூர் கிழார் ஆவார்.

ஒவ்வொரு பத்தின் இறுதியிலும் ஒரு பதிகம் காணப் படுகிறது. அஃது அப்பத்தால் பாடப்பெறும் மன்னவன் பெயர், அவனது வெற்றி, கொடைத் திறம், பாடிய புலவர் பெயர், அவர் பெற்ற பரிசில் முதலியவற்றைக் கூறுகிறது. நூலின் பாட்டின் இறுதியிலும் துறை வண்ணம், தூக்கு பெயர் முதலிய செய்திகள் தரப்பட்டுள்ளன. பாட்டின் கண் இடம் பெற்றுள்ள ஒரு சிறந்த தொடரேஒவ்வொரு பாட்டிற்கும் தலைப்பாக அமைந்துள்ளது.

பூத்த நெய்தல், கூந்தல் விறலியார், கயிறுகுறு முகவை, செங்கை மறவர், சில்வளை விறலி , ஏறா ஏணி போன்றன தலைப்புகளாக விளங்குகின்றன.

சேரமன்னர்தம் சிறப்பையும், செல்வாக்கையும் அறிவதற்குப் பெருந்துணைபுரியும் இந்நூலுக்குப் பழைய உரை ஒன்றுளது.

**ஒற்றுமைக் காட்சி**



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



வடக்கே இமயமும் தெற்கே குமரியும் பாரத நாட்டு எல்லைகளாகும். இவற்றை ஒன்றாக இணைத்துக் காட்டும் மரபு பதிற்றுப்பத்தில் காணப்படுகிறது. இந்திய ஒருமைப்பாட்டுக் கருத்துச் சங்க காலத்தில் இருந்தமைக்கு இந் நூல் சான்றாகத் திகழ்கிறது.

'ஆரியர் துவன்றிய பேரிசை இமயம்
தென்னங் குமரியொடு ஆயிடை
மன்மீக் கூறுநர்' - பதிற்றுப்பத்து-ஐ
'ஓவத் தன்ன வினைபுனை நல்லில்
**பாவை அன்ன நல்லோள்'** - பதிற்றுப்பத்து - 61

என்னும் அடிகள் அழகிய சொற் சித்திரமாக அமைந்துள்ளன.

**புறநானூறு**

சங்க நூல்களுள் தலையாயதும் வரலாற்றுச் சிறப் புடையதுமாக விளங்குவது புறநானூறு. அஃது அறம், பொருள், வீடு எனும் புறப்பொருள் பற்றிய 400 பாடல்களைக் கொண்டுள்ளது; ஏறத்தாழ 160 புலவர்கள் பாடிய பாடல்கள் அதிலுள்ளன.

தமிழர் வாழ்வினையும், நாகரிகத்தினையும் அறிய அந் நூல் பெரிதும் துணை செய்கிறது. அது கிடைக்கப் பெறா திருப்பின் பண்டைத் தமிழக வரலாற்றை அறிய முடியாத நிலை ஏற்பட்டிருக்கும். தமிழரின் வீரம், வேந்தர்களின் வெற்றிச் சிறப்புகள், கொடை, பண்பாடு, நீதி, அறம், அஞ்சாமை, நாகரிகம் முதலிய பலவற்றை அறிய அந்நூல் துணை செய்கிறது: **எண்ணற்ற** வேந்தர்களைப் பற்றியும், குறுநில மன்னர்களைப் பற்றியும் பல செய்திகளை வழங்குகிறது; பழந்தமிழரின் பண்பாட்டுப் பெட்டகமாகவும், நாகரிகத்தைப் பிரதிபலிக்கும் ஆடியாகவும் விளங்குகிறது.

புறநானூற்றின் முதல் 226 பாடல்களுக்குப் பழைய உரையொன்று கிடைத்துள்ளது. பேராசிரியர் ஔவை சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள் முதல் 226 பாடல்களின் பழைய உரைக்குச் சிறந்த விளக்கமும், எஞ்சிய பகுதிக்குச் சிறந்த புத்துரையும் எழுதியுள்ளார். முதன் முதலில் நூலைப் பதிப்பித்தவர் டாக்டர் உ.வே. சாமிநாத ஐயராவார்.

**வரலாற்று நூல்**

புறநானூறு முடிதரித்த வேந்தரின் படைவளத்தையும், கொடை வளத்தையும், சிறப்பினையும் விளக்குகிறது. பண்டைக் காலமாந்தரின் நாகரிகத்தையும் நன்னீர்மையையும் விளக்குகிறது. சிறப்பாகச் சேர சோழ பாண்டிய மன்னர்களின் செங்கோன்மைச் சிறப்பையும், குறுநில மன்னர்களின் கொடைச் சிறப்பையும் எடுத்துக் காட்டுகின்றது, ஔவையும், அதிகமானும் அன்பும் பண்பும் பொருந்திய நட்புக் கொண்டு பழகிய திறமும், பாரியும் கபிலரும் மாரியும் நிலமும் போல நெருங்கிய தொடர்பு கொண்டு வாழ்ந்த திறமும் உணர்வு மிக்க சித்திரங்களாக அதில் தீட்டப்பட்டுள்ளன; நாட்டு மன்னனிடம் வீரர்கள் காட்டிய அன்பும் அவனுக்காக அஞ்சாமல் உயிர் துறந்த வீர வரலாறும் சிறப்பாகப் பேசப்படுகின்றன. சுருங்கக் கூறின் அது பண்டைக் கால வாழ்வை விளக்கும் ஒரு காலக் **கண்ணாடியாகவும்** பண்பாட்டுக் கருவூலமாகவும் விளங்குகிறதெனலாம்.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்.'
'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத் தோரே.'
'எவ்வழி நல்லவர் ஆடவர், அவ்வழி
நல்லை வாழிய நிலனே.'
'இன்னா தம்ம இவ்வுலகம், இனிய காண்க
இதன் இயல்புணர்ந்தோரே.'



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



'செல்வத்துப் பயனே ஈதல், துய்ப்போம் எனினே
தப்புந பலவே.'
'பெரியோரை வியத்தலும் இலமே, சிறியோரை
இகழ்தல் அதனினும் இலமே.'
'மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்.'
'புகழெனின் உயிரும் கொடுக்குவர், பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலார்.'

முதலான சிறப்பு மிக்க புறநானூற்றுப் பகுதிகள், பண்டைத் தமிழரின் உயர்பண்பாட்டையும் ஒழுக்க நெறிகளையும் சிறந்த நாகரிகத்தையும் விளக்குவனவாகும்.

'நல்லது செய்தல் ஆற்றீ ராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்'

என்னும் அடிகளும்,

'ஈயென இரத்தல் இழிந்தன்று; அதனெதிர்
ஈயேன் என்றால் அதனினும் இழிந்தன்று
கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று; அதனெதிர்
கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று'

என்னும் அடிகளும்,

'நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்'

என்னும் அடிகளும் பொன்னெழுத்துகளால் பொறிக்கத் தக்கவையாகும்.

புலவர்களின் வறுமையை விளக்கும் பாடல்கள் ஒரு புறம் இருந்தாலும், அவர்களுடைய பெருமிதம், அஞ்சாமை, அறிவாற்றல், பெருநட்பு, கொடையுள்ளம், அன்புணர்வு, கவியாற்றல் ஆகியவற்றை விளக்கும் பாடல்களும் புறநானூற்றில் மிகுதியாக இடம் பெற்றுள்ளன.

ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன், கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி, கோப்பெருஞ்சோழன், சேரமான் கணைக்காலிரும்பொறை, சேரமான் மாக்கோதை, சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன், சோழன் நலங்கிள்ளி, தொண்டைமான் இளந்திரையன், பாண்டியன் அறிவுடைநம்பி, பாண்டியன் நெடுஞ்செழியன், பாலை பாடிய பெருங்கடுங்கோ முதலான மன்னர்கள் பாடிய பாடல்கள் புறநானூற்றில் உள்ளன. அவ்வையார், அள்ளூர் நன்முல்லையார், ஒக்கூர் மாசாத்தியார், காக்கை பாடினியார், நச்செள்ளையார், காவற்பெண்டு குறமகள் இளவெயினி , பாரிமகளிர், பெருங்கோப்பெண்டு, நக்கண்ணையார், பொன்முடியார், மாறோக்கத்து நப்பசலையார் முதலான பெண்பாற் புலவர்களின் தீந்தமிழ்ப் பாடல்களும் பல்வேறு தொழில் புரிவோரின் பாடல்களும் இடம் பெற்று நூலுக்கழகு செய்கின்றன.

**பரிபாடல்**

பரந்து செல்லும் ஓசையுடைய ஒரு வகை இசைப் பாவால் ஆன 70 பாடல்களைக் கொண்டு பரிபாடல் . அவற்றுள் 22 பாடல்களே இன்று நமக்குக் கிடைத்துள்ளன. அகப்பொருள், புறப்பொருள் பாடல்கள் இதன்கண் இடம் பெற்றுள்ளன. திருமாலைப் பற்றிய ஆறுபாடல்களும் திருமுருகனைப் பற்றிய எட்டுப் பாடல்களும் புறப்பொருள் பற்றியவை. வையை பற்றிய எட்டுப் பாடல்கள் அகப்பொருள் பற்றியவை. இவையே அன்றிப் புறத்திரட்டிலும் இரு பாடல்கள் காணப்படுகின்றன.



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



இன்பத்தையே பொருளாகக் கொண்டு கடவுள் வாழ்த்த, மலை வளம், புனல் விளையாட்டு முதலியவற்றையடக்கி 25 முதல் 400 அடிகட்கு உட்பட்ட அளவில் பாடப்படுவது பரிபாடலாகும்.

திருக்குறளுக்கு உரை எழுதிய பரிமேலழகரின் அரிய உரை இப்பரிபாடலுக்குக் கிடைத்துள்ளது.

திருப்பரங்குன்றம், இருங்குன்றம், மதுரை, வையை, இருந்தையூர் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளை இந்நூலை தருகிறது, முருகனின் பெருமையையும் திருமாலின் சிறப்பையும் மிக அழகாகப் புனைந்துரைக்கிறது. 22 பாடல்களையும் பதின்மூன்று புலவர்கள் பாடியுள்ளனர். வேறு புலவர்கள் அவற்றிற்கு இசையமைத்துள்ளனர்.

சங்க நூல்களிலே காலத்தால் மிகவும் பிற்பட்டது பரிபாடல் என்பது அறிஞர் கருத்து. டாக்டர் மா. இராச மாணிக்கனார் பரிபாடலின் காலம் கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் இறுதி என்பர். கலித்தொகையும் இக்காலத்தைச் சேர்ந்ததே என்பது அவர் கருத்து.

சிவபெருமான், முருகன், கண்ணன், அகலிகை முதலான வர்களைப் பற்றிய புராணக் கதைகள் பரிபாடலில் காணப்படுகின்றன.

**முருகன் வழிபாடு**

முருகனிடம் அருள் வேண்டும் ஒருவன், 'யாம் இரப்பவை, பொருளும் பொன்னும் போகமுமல்ல, நின்பால் அருளும் அன்பும் அறனும், உருளிணர்க்கடம்பினொலிதாரோயே என்று பரிபாடலின் ஐந்தாம் பாடல் கூறுகிறது. மார்கழி நீராட்டையும் இந்நூல் குறிப்பிடுகிறது.

மதுரை மாநகரின் அமைப்பை ஒரு தாமரை மலருக்கு ஒப்பிட்டுப் பாடுகிறார் ஒரு புலவர், மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப் பூவொடு புரையுஞ் சீறூர் பூவின் இதழகத்து அனைய தெருவம் ; இதழகத்து அரும் பொகுட்டனைத்தே அண்ணல் கோயில்' என்பது மதுரை வருணனை.

**திருமால் வழிபாடு**

திருமாலுக்குரிய ஏழு பாடல்களில் திருமால் பலவாறு போற்றப்படுகிறார்.

> 'தீயினுள் தெறல் நீ பூவினுள் நாற்றம் நீ;
> கல்லினுள் மணியும் நீ; சொல்லினுள் வாய்மை நீ'

என்று திருமாலின் நிலை விளக்கப்படுகிறது. இவ்வடிகள் 'இறைவன் தூணிலும் இருப்பார் துரும்பிலும் இருப்பார்' என்ற பிரகலாதனின் வாக்கிற்கு விளக்கமாக அமைந்துள்ளன.

**பரிபாடல் நடை**

பரிபாடலும் கலித்தொகையும் மிகவும் பிற்பட்ட காலத்தன. நற்றிணை, குறுந்தொகை போன்ற ஓட்டமான தெளிந்த நடையை இவற்றில் காண முடியாது. அக்காலத்துப் பேச்சு மொழிகளுக்கு வடிவு தந்தது போன்ற கரடு முரடான நடையையே இவ்விரண்டு நூல்களிலும் காணலாம். இவ்விரண்டும் பாண்டிய நாட்டைச் சுற்றியே இயங்குவதால் மிகக் குறுகிய எல்லையில் வாழும் மக்களின் பழக்க வழக்கங்களையே எடுத்துக் கூறுகின்றன. சங்க இலக்கியப் பொருள் மரபுக்கும் மொழிநடைக்கும் முற்றிலும் இவை மாறுபட்டுள்ளன.

**பத்துப்பாட்டு**

சான்றோர் புகழ்ந்த அறிவினில் தெரிந்து, சான்றோர் உரைத்த தண்டமிழ்த் தெரியல் ஒருபது பாட்டு' என்று நச்சினார்க்கினியர் உரைப்பாயிரம் பத்துப்பாட்டின் பெருமையைக் குறிப்பிடுகின்றது. இதிலுள்ள



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



பாடல்கள் ஒவ்வொன்றும் மிக நீண்ட அளவினையுடையதாகும். அகப் பொருள் பாடல்களும் புறப்பொருள் பாடல்களும் இதில் இடம் பெற்றுள்ளன.

’முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை

பெருகு வளமதுரைக் காஞ்சி – மருவினிய

கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்

பாலை கடாத்தொடும் பத்து'

எனும் வெண்பா பத்துப் பாடல்களின் பெயர்களைத் தெரிவித்தலைக் காணலாம்.

முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை மூன்றும் அகப்பொருள் பற்றியன மற்ற ஏழும் புறப்பொருள் பற்றியன. இவற்றுள் திருமுருகாற்றுப்படை, பெரும் பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பொருநராற்றுப் படை, மலைபடுகடாம் என்ற ஐந்தும் ஆற்றுப் படை வகையின. மதுரைக்காஞ்சி நிலையாமையைப் பொருளாகக் கொண்டு விளங்குகிறது. நெடுநெல்வாடை முற்றிலும் அகப்பொருள் பற்றியதே என்றாலும் வேம்பு தலையாத்த நோன் காழ் எஃகம்' என்ற தொடர் தலைவனது அடையாள மாலையைச் சுட்டி விட்டதால் இது புறப் பொருளின்பாற் பட்டுவிட்டது.

முல்லைப் பாட்டு இருத்தல் என்னும் முல்லைத் திணை ஒழுக்கத்தையும், குறிஞ்சிப்பாட்டுப் புணர்தல் என்னும் குறிஞ்சித் திணை ஒழுக்கத்தையும், பட்டினப் பாலை பிரிதல் என்னும் பாலைத் திணை ஒழுக்கத்தையும் பொருளாகக் கொண்டுள்ளன.

நெடுநல்வாடையில் வேம்பு எனும் சொல் இடம் பெறாதிருந்தால் அதுவும் அகப்பாடலாகிப் 'பாலை' ஒழுக்கத்தை ஓதுவதாக அமைந்திருக்கும். திருமுருகாற்றுப் படை தெய்வத்தைப் பற்றியதாகும். பிற புறப்பாடல்கள் அனைத்தும் மன்னர்களுடைய பெருமையை விளக்கும் திறத்தன. பட்டினப் பாலையும் பொருநாராற்றுப் படையும் கரிகாற் சோழனது பெருமையையும் சிறப்பையும் விளக்குகின்றன. நெடுநல்வாடையும் மதுரைக் காஞ்சியும் பாண்டியன் நெடுஞ்செழியனின் மாண்பையும் வீரத்தையும் உணர்த்துகின்றன. மற்றவை நல்லியக்கோடன், இளந்திரையன், நன்னன் சேய் நன்னன் ஆகியோரைப் பற்றியனவாகும்.

**ஆற்றுப்படை**

வள்ளன்மைப் பண்பு மிக்க மன்னனிடம் பரிசில் பெற்றுத் திரும்பும் கலைஞ்னொருவன், தனக்கெதிரே வரும் மற்றொரு கலைஞனைத் தனக்குப் பரிசில் ஈந்த மன்னனிடம் அவன் அருமை பெருமைகளைக் கூறி அனுப்பிவைத்தல் ஆற்றுப்படை எனப்படும்.

'கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்
சென்று பயன்எதிரச் சொன்ன பக்கமும்'

என்று தொல்காப்பியம் ஆற்றுப்படைக்கு இலக்கணம் வகுக்கிறது.

புறநானூற்றிலும் விறலியாற்றுப்படை முதலான துறைகளில் அமைந்த பாடல்கள் பல காணப்படுகின்றன.


'ஆற்றுப்படை என்பது வேறு எம் மொழியிலும் காணமுடியாத தமிழுக்கே உரிய சிறப்பான இலக்கிய வகையாகும்.'



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree






**To buy this Book Online : https://imojo.in/2mmbx8t**

**Content of the Book https://iyachamy.com/wp-content/uploads/2020/03/CONTENT-.pdf**

**தமிழில் ஏப்ரல் மாதத்தில் வெளியிடப்படும்**

**திருமுருகாற்றுப் படை**

பத்துப்பாட்டில் கடவுள் வாழ்த்துப் போல் முதலாவ தாக அமைந்துள்ள பாடல் திருமுருகாற்றுப்படை. இதனை 'முருகு' என்றும், புலவராற்றுப் படை' என்றும் வழங்குவர். 317 அடிகளைக் கொண்ட இப்பாடலின் ஆசிரியர் நக்கீரர், சைவர் தம் பதினோராந் திருமுறையில் இஃது இடம் பெற்றுள்ளது. 'வீடு பேற்றை விரும்பும் ஓர் இரவலனை வீடு பெற்றான் ஒருவன் முருகன் பால் ஆற்றுப்படுத்துவதாக இப்பாடல் அமைந்துள்ளது. ஏனைய ஆற்றுப்படைகள் எல்லாம் ஆற்றுப்படுத்துபவர் பெயரால் அமைந்திருக்க இஃதொன்று மட்டும் பாட்டுடைத் தலைவன் பெயரால் அமைந்திருத்தல் குறிப்பிடத்தக்கதாகும்.

திருமுருகப் பெருமானின் ஆறு படைவீடுகளையும் இது நன்கு விளக்கிப் பாடுகிறது. திருப்பரங்குன்றத்தின் இயற்கை வளத்தோடு முருகன் பொலிவாக வீற்றிருக்கும் திறம் , மதுரை நகரின் மாண்பு, திருச்சீரலைவாயில் கோலம் கொண்ட முருகனின் ஆறுகச் செயல்கள், பன்னிரு கரங்களின் சிறப்பு, திருவாவினன் குடியில் முருகனை அடியார் வணங்கும் திறம், திருவேரகத்தில் அந்தணர் வழி பாடியற்றும் திறம், குன்றுதோறாடற் பகுதியில் முருகனின் அணிநயச் சிறப்பு, வழிபடும் மகளிர் இயல்பு பழமுதிர் சோலையின் அழகு, அடியவர்தம் வழிபாட்டு நெறி, முருகன் அருள் புரியும் பாங்கு



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



முதலியவற்றை விரிவாக இப் பாடல் விளக்குகிறது. திருச்சீரலைவாய் என்பது திருச்செந்தூர் திருவேரகம் என்பது சுவாமிமலை, திருவாவினன் குடி என்பது பழனிமலை, குன்றுதோறாடல் என்பது திருத்தணிகையும் பிற மலைகளுமாகும்.

'உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு , பலர்புகழ் ஞாயிறு கடல் கண் டாஅங்கு' எனச் செவ்வேளாகிய முருகன், பசுந்தோகை விரித்த மயிலின் மீது காட்சியளிக்கும் திறம் புனைந்துரைக்கப்பட்டுள்ளது.

'ஆடுகளம் சிலம்பப்பாடி, பலவுடன்
கோடுவாய் வைத்துக் கொடுமணி இயக்கி,
ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி,
வேண்டுநர் வேண்டியாங்கு எய்தினர் வழிபட,
ஆண்டு ஆண்டு உறைதலும் அறிந்தவாறே.'

என்று முருகனை வழிபடுகின்றார் நக்கீரர்.

**பொருநராற்றுப்படை**

பரிசில் பெற்ற பொருநன் ஒருவன் பரிசில் பெற விரும்பும் மற்றொரு பொருநனைக் கரிகால் பெருவளத்தானிடம் ஆற்றுப்படுத்துவதாக இஃது அமைகிறது. முடத்தாமக் கண்ணியார் இதனைப் பாடியுள்ளார்.

இது **248** அடிகளைக் கொண்ட ஆசிரியப்பாவாகும். ஆசிரிய அடிகளோடு சில வஞ்சியடிகளும் இதில் விரவி உள்ளன. விழா முடிந்த பிறகு வேற்றூர் செல்லும் பொருநன் ஒருவனது யாழ் வருணனையோடு இப்பாடல் தொடங்குகிறது; பின்னர்த் தொடர்ந்து பாடினியின் கேசாதிபாத வருணனையும், பெருநகர் விழாக் கொள்ளலும், கரிகாலனைக் காணலும், அவன் விருந்தோம்பும் சிறப்பும், உணவின் உயர்வும், பரிசிலின் பெருமையும் பிரிய மனமின்றி வழியனுப்புதலும் கூறப்படுகின்றன. இறுதிப் பகுதியில் கரிகாலனின் வெற்றிச் சிறப்புகள் வெண்ணிப் பறந்தலைப் போர், வேந்தனின் கொடைச் சிறப்புகள், ஆட்சித் திறம், காவிரியால் சோணாடு பெற்ற வளம் முதலியன விளக்கப்படுகின்றன.

'ஆறலை கள்வர் படைவீடு அருளின்
மாறுதலை பெயர்க்கும் மருவின் பாலை'

என்று பாலையாழ் சிறப்பிக்கப்படுகிறது.

**கரிகாலன் கொடை**

முரசு முழங்குதானை மூவரும் கூடி, அரசவை இருந்த தோற்றம் போல, என மூவேந்தர் ஒருங்கிணைந்து விளங்கும் திறம் இதில் உவமையாகக் காட்டப்பட்டுள்ளது. கரிகாலன் பொருநனுக்கு அரவுரியன்ன அறுவை நல்கினான் அரண்மனை மகளிர் பொலங்கலம் நிறைய மது அளித்தனர். பல்வகை உணவினைப் பகலும் இரவும் தின்றதனால் பொருநனின் பல் மழுங்கின வேந்தன் பெரும் பரிசிலை வழங்கி ஏழடிப் பின் சென்று வழியனுப்பினான். இத்தகைய செய்திகள் சுவைபட இப்பாடலில் கூறப்பட்டுள்ளன.

**இசை பற்றிய கருத்துக்கள்**

ஆற்றுப்படை நூல்கள் எவற்றிலும் கூறாத அளவில் இசை பற்றிய குறிப்புகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. பத்தல், பச்சை, போர்வை, ஆணி முதலிய உறுப்புகளோடு கூடி எல்லாம் நாள் நிலவு போன்று வளைந்த அமைப் போடு தினை அரிசியின் அவியல் போன்ற நரம்புகளால் அமைந்த யாழ், அணிகள் பல பூண்டு அழகின் உருவாக அமைந்த புது மண மகளின் தோற்றம் போலத் திகழ்கிறது என்று கூறுப்படுகிறது.



https://t.me/tnpscfree

பாடினி அறல் போன்ற கூந்தலும் , பிறை போன்ற நெற்றியும், மழை போன்ற கண்ணும், இலவின் இதழ் போன்ற இதழும், முத்தன்னபல்லும் கொண்ட முழுமைபெற்ற அழகுத் தெய்வமாகப் பொருநன் அருகே அமர்ந்து அவன் மீட்டும் யாழிசைக் கேற்பத் தன் இனிய குரலால் பாடுகிறாள் எனக் கூறப்படுகிறது.

**வரலாற்றுச் செய்திகள்**

ஆற்றுப்படை இலக்கணப்படி பாட்டுடைத் தலைவனின் பல்வேறு பண்புகளைப் பாராட்டுவதோடு நில்லாமல், அவனைப் பற்றிய சில வரலாற்று உண்மைகளையும் இந்நூல் கூறுகிறது. இஃது இந்நூலின் தனிச் சிறப்பாகும்.

சோழ மன்னன் கரிகாலன், இளஞ்சேட் சென்னியின் மகன் இளஞ்சேட்சென்னி சிறந்த தேர்ப் படைகளை உடையவன் கரிகாலன் தாய் வயிற்றில் இருக்கும் போதே இளஞ்சேட் சென்னி இறந்து போனான், தாய் வயிற்றி லிருந்து நிலமகளின் கைக்கு வருமுன்னரே தன் அரசுரிமையை அவன் அடைந்தான். வெண்ணிப் பறந்தலை என்ற இடத்தில் சேர பாண்டியர்களை வென்று தன் வெற்றிக் கொடியை எட்டுத் திக்கும் தெரிய ஏற்றினான் முதலான செய்திகள் இந்நூலில் கூறப்படுகின்றன.

'உருவப் பல்தேர் இளையோன் சிறுவன்'

'தாய் வயிற்றிலிருந்து தாயம் எய்தி'

'இருபெரு வேந்தரும் ஒரு களத்து அவிய
வெண்ணித் தாக்கிய வெருவரு நோன்தாள்
கண்ஆர் கண்ணிக் கரிகால் வளவ'

**சிறு பாணாற்றுப் படை**

பரிசில் பெற்ற சீறியாழ்ப் பாணன் ஒருவன் பரிசில் பெற விரும்பிய பாணனொருவனை ஓய்மானாட்டு நல்லியக் கோடனிடத்தே ஆற்றுப்படுத்துவதாக இப் பாடல் அமைந்துள்ளது. இதனை இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார் பாடியுள்ளார். இது 269 அடிகளைக் கொண்டது.

விறலியின் கேசாதிபாத வருணனை, வஞ்சி, கொற்கை, மதுரை, உறந்தை ஆகிய நகரங்களின் சிறப்பு, வள்ளல் எழுவரின் செயற்கரும் செயல்கள், நல்லியக் கோடனின் வீரம், நெய்தல், முல்லை, மருத நில மக்களின் ஒழுகலாறு மன்னனின் வண்மை, அவன் விருந்தோம்பும் திறம், அவன் பாணனைப் போற்றிப் பரிசளிக்கும் திறம் முதலாய செய்திகள் இப் பாடலில் இடம் பெற்றுள்ளன.

**வீழ்ந்த தமிழகம்**

பொதுவாக மற்ற ஆற்றுப்படைகளைப் போலவே இஃது அமைந்திருந்தாலும் சில கருத்துகளைத் தனக்கே உரியனவாக இஃதெடுத் தோதுகிறது. அதனால், ஆற்றுப்படை நூல்களுள் இது சிறந்ததாகக் கருதப் படுகிறது. தான் எழுந்த காலத்துத் தமிழகத்தின் நிலையினைப் படம் பிடித்துக் காட்டும் வரலாற்று நூலாகவும் இது திகழ்கிறது.

**மூவேந்தர் நிலை**

தன்னைச் சூழ்ந்து வரும் வறுமை நோயினை நீக்கக் கருதிய பாணன் ஒருவன் வரையாது கொடுக்கும் வள்ளன்மைமிகுந்தோர் வாயில்களை எல்லாம் நோக்கிச் செல்கிறான், திண்ணிய தோளும் இயன்ற தேர்களையும் கொண்ட குட்டுவனின் வருபுனலை வாயிலாக உடைய வஞ்சிக்கும் போகிறான், அந்நகரம் வறியதாய் வாயில் மூடிய நிலையில் கிடக்கிறது. அதனை விடுத்துச் செழியனின்

https://t.me/tnpscfree



அரண்மனையை நாடுகிறான், அதுவும் வாயில் மூ டப்பட்டதாய் வறியதாய்க் கிடக்கிறது, சோழனின் உறந்தையை அடைகிறான், அதன் நிலையும் அதுவே, தம் கையில் இறுதிப் பொருள் உள்ளவரை உள்ளக்களிப்போடு நல்கும் வள்ளல்களைக் காண அவன் மனம் திரும்புகிறது.

**கடையெழு வள்ளல்கள்**

காட்டு மயிலின் குளிரைத் தன் போர்வையால் போக்கிய மலைநாட்டுப் பேகன், நாத்தழும்பு ஏறத் தன்னைப் பாடாது ஆயினும் முல்லைக் கொடிக்குக் கறங்கு மணி நெடுந்தேர் கொடுத்த பாரி, இரப்பவர்க் கெல்லாம் ஈவதற்கென்றே வாழ்ந்த காரி, வறிஞர்க்குத் தாயாய், நற்குணங்களின் உறைவிடமாய் வாழ்ந்த ஆய், அம்பொடு வேல் நுழையும் இடமெல்லாம் தான் நின்று, என்பொடு தசை வரும் இடமெல்லாம் இரப்பவர்களை நிறுத்திய அருந்திறல் அதிகன், நட்டோர் உவப்ப நடைப் பரி எல்லாம் முட்டாது கொடுத்த நள்ளி, காரியோடு போரிட்டுக் கலைஞர்களுக்கு மாரியென வழங்கிய ஓரி ஆகிய ஏழு வள்ளல்களையும் தன் வறுமையைத் தீர்ப்பவர்கள் எனப்பாணன் எண்ணுகிறான். ஆனால், அவர்கள் அனைவருமே மறைந்து விட்டனர். என் செய்வான் பாவம்! முடிவில் நல்லியக் கோடனை நாடுகிறான் வேண்டு மளவுக்குப் பொருள் பெற்று மகிழ்கிறான்.

'முல்லை சான்ற கற்பின் மெல்லியல் மானோ**க்கின் வாணுதல்** விறலி' என்று இதில் விறலி பாராட்டப் பெறுகிறாள். இன்குரற் கீறியாழ் இடவயின் தழீஇ' என்பதால் பாணன் சிறுபாணன் என்பது அறியப்படுகிறது, வருபுனல் வாயில் வஞ்சி என்று வஞ்சியும், தமிழ் நிலைபெற்ற தாங்கரு மரபில் மகிழ்நனை மறுகின் மதுரை' என்று மதுரையும், 'ஓடாப் பூட்கை யுறந்தை' என்று உறையூரும் சிறப்பிக்கப்பட்டுள்ளன. " நல்லியக்கோடனைக்கண்டு அவனைக் கேட்பதற்கு முன் நல்குவான் என நல்லியக்கோடனின் இயல்பை மற்றொரு பாணனுக்கு நவின்று வழிப்படத்துகிறான் **பாணன்.**

**பெரும்பாணாற்றுப் படை**

பரிசில் பெற்ற பேரியாழ்ப் பாணன் ஒருவன் பரிசில் பெற விழையும் மற்றொரு பெரும்பாணனைத் தொண்டை மான் இளந்திரையனிடம் ஆற்றுப்படுத்துவதாக இப் பாடல் அமைந்துள்ளது.

இதனைப் பாடியவர் கடியலூர் உருத்திரங்கண்ணனார். இது 500 அடிகளைக் கொண்டது. யாழ் வருணனை, வழியினிமை, உப்பு வணிகர் இயல்பு, எயினர், மறவர்,இடையர், உவர், வலைஞர், அந்தணர் ஆகியோரின் செயலும் ஒழுக்கமும், பட்டினம், திருவெஃகா, காஞ்சி ஆகிய இடங்ளின் சிறப்பும், இளந்திரையனின் வீரம், கொடை முதலிய பண்புகளும் இப்பாடலில் சிறப்பாகக் கூறப்படுகின்றன.

**ஐந்திணை மக்கள்**

காஞ்சி நகருக்குச் செல்லும் வழியின் இயல்பைக் கூறும் போக்கில் புலவர் குறிஞ்சி, முல்லை , மருதம், நெய்தல், பாலை எனும் ஐவகை நிலத்தில் வாழும் மக்களின் வாழ்க்கையையும், பல்வேறு பழக்க வழக்கங்களையும் கூறுகின்றார்.

**உமணர்கள்**

நெய்தல் நிலப் பரதவர்கள் தாம் விளைவித்த உப்பை மூட்டைகளாகக் கட்டிக் காளைகள் பூட்டிய வண்டியில் ஏற்றிச் சென்று மருதநில ஊர்களில் நெல்லுக் கீடாக விற்பார் அவ்வண்டிகள் ஒன்றன்பின் ஒன்றாகப் பல வரிசை களாகச் செல்லும் , உமணப் பெண்டிரே அவற்றை ஓட்டிச் செல்வர். ஆடவர்கள் வண்டியின் இருபுறத்தும் பாதுகாப்பாகச் செல்வர். வண்டி இழுக்கும் காளைகளுள் ஒன்று களைத்து விட்டால், மாறாக வேறு காளையைப் பூட்டுதற் காகச் சில காளைகளையும் உடன் ஓட்டிச் செல்வர்.



https://t.me/tnpscfree

**வணிகர்கள்**

முத்து மாணிக்கம் முதலிய பொருள்களை விற்கும் வணிகர்கள் வழிப்பறி செய்வோரால் தம் பொருளுக்கும் உயிருக்கும் ஊறு நேராமல் தடுக்க உடைவாள், அரை வாள் முதலியன உடன் கொண்டு செல்வர். அவர்கள் மிளகு மூட்டைகளைக் கழுதையின் மேல் ஏற்றி நடத்திச் செல்வர்.

**பாலை நிலப் பழக்கங்கள்**

பாலை நில மக்கள் தம் குடிசைக்குள் எலி, அணில் முதலியன நுழையாதபடி கூரிய ஈந்தின் ஓலையால் கூரை களை வேய்வர்; இருள் நிறைந்த நள்ளிரவில் வேட்டை யாடச் செல்வர், வலைகளைக் கட்டி முயலைப் பிடிப்பர். பாலை நிலப் பெண்கள் கரம்பை நிலத்தில் எறும்புகள் சேர்த்து வைத்திருக்கும் புல்லரிசியையும் தாம் கவர்ந்து வரும் உடும்பின் இறைச்சியையும் உணவாகச் சமைப்பர்.

**குறிஞ்சி நில மக்கள்**

குறிஞ்சி நிலமகள் பகைவர்களின் பசுக்களை எவரும் அறியா வகையில் இரவில் கவர்ந்து வருவர்; அவற்றைக் கொடுத்து அதற்கீடாகக் கள்ளைப் பெற்றுக் குடிப்பர்; தம் வீடுகளில் நெல்லரிசியால் ஆன கள்ளையும் உண்டு மகிழ்வர்.

**முல்லை நில மக்கள்**

ஆயர்கள் ஆவினை ஓம்பி வாழும் வாழ்க்கையினர் அரையில் மட்டும் ஓராடையை அணிந்து பசுவின் பாலைக் கறப்பர், பால்பட்ட கரங்களைக் கழுவாது தலையில் தடவிக் கொள்வர்; ஆக்களை மேய்த்து வருவர்.

**மருத நில மக்கள்**

உழவர்கள் எருதுகளை ஏரில் பூட்டி நிலங்களை நன்றாக உழுவர்; உழத்தியர்கள் சேற்று நிலத்தில் நாற்று முடிகளை நடுவர்; களைகளைப் பிடுங்கி எறிவர். உழவர் வீடுகளில் நெற்கூடுகள் நிறைந்திருக்கும். உழவச் சிறுவர்கள் சிறுதேர் உருட்டி விளையாடுவர். தம்மிடம் விருந்தாக வந்தவருக்கு உழவர் குடிமக்கள் நெல் சோற்றைக் கோழிப் பொறியலுடன் படைப்பர்.

**திரையனின் சிறப்பு**

கௌரவர்களைக் கொன்ற குன்றாத வலிமை படைத்த பாண்டவர் ஐவர் போலத் திரையன் தன் பகைவர்களை அழித்தான்; மந்திரச் சுற்றத்தோடு மாட்சி பெற அவையில் அமர்ந்து, முறை வேண்டுபவருக்கும் குறை வேண்டுபவருக்கும் வேண்டுவன வேண்டியவாறு தருபவன்.

**விருந்தோம்பும் திறன்**

திரையன் பாணனின் பாசி போன்ற உடைகளைக் கழற்றிப் பாலின் ஆவியன்ன அவிர நூற்கலிங்கங்கள் தருவான் பாணனையும் அவன் சுற்றத்தையும் பல நாள்கள் தன் அரண்மனையில் தங்கச் செய்வான்; கொழுத்த நெய் ஒழுகும் ஆட்டிறைச்சியையும் மெல்லிய சோற்றையும் அவர்களுக்களிப்பான், பாணன் தன் ஊர் செல்லும் போது வண்டு இமிரா அழல் அவிர் தாமரை மலரைச் சூடிக் கொள்ளவும் அவனுக்களிப்பான் பொன்னின் தொடை அமை மாலைகள் பலவற்றைப் பொலிவுடைய விறலியர்கள் தம் கழுத்தில் அணியக் கொடுப்பான், பார் அதிரப் பரந்து செல்லும் குதிரைகளைப் பூட்டிய தேர்களைத் தந்து பாணன் தன் சுற்றத்தோடு தன்னூருக்குச் செல்ல விடுப்பான்.

'பழுமரம் தேரும் பறவை போலக் கல்லென் சுற்ற மொடு திரிதரும் புல்லென்யாக்கைப் புலவுவாய்ப் பாணன்' என்று பாணனியல்பு இதில் கூறப்படுகிறது. உருமும் உறாது அரவும் தப்பா காட்டுமாவும் உறுகண் செய்யா' என்று இளந்திரையனின் ஆட்சிச் சிறப்பு அறிவுறுத்தப் படுகிறது. முள்ளரைத் தாமரைப் புல்லிதழ் புரையும் நெடுஞ்செவிக் குறுமுயல்' என்று சிறு முயல் புனைந் துரைக்கப்படுகிறது.

**மலைபடுகடாம் - கூத்தராற்றுப்படை**

பழந்தமிழ் ஆற்றுப்படை இலக்கிய வகையில் அடியளவால் பெரியது மலைபடுகடாம் என்னும் கூத்தராற்றுப் படையே ஆகும். பரிசில் பெற்ற கூத்தன் ஒருவன், பரிசில் பெற விரும்பும் கூத்தனொருவனை ஆற்றுப்படுத்துவதாக இஃதமைந்துள்ளது. இது 583 அடிகளைக் கொண்டது, பல் குன்றக் கோட்டத்துச் செங்கண் மாத்துவேள் நன்னன் சேய் நன்னனை**த் தலைவனாகக்** கொண்டது. இவ்வரிய பாடலை இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங் கௌசிகனார் பாடியுள்ளார்.

'அலகைத் தவிர்த்த எண்ணருந் திறத்த, மலைபடு கடாஅம் மாதிரத் தியம்ப' என்னும் அடிகளில் (347-348) மலைபடுகடாம்' என்னும் தொடர் வருகிறது. இதற்கு உரை வகுத்த நச்சினார்க்கினியர் மலைக்கு யானையை உவமித்து அதன்கண் பிறந்த ஓசையைக் கடாம் எனச் சிறப்பித்தமையால், இப் பாட்டிற்கு மலைபடுகடாம் என்று பெயர் கூறினார்' என்று விளக்கம் தருகின்றார். பத்துப் பாட்டில் இஃதொன்றே பாட்டில் வரும் தொடரால் பெயர் பெற்றது எனலாம். பதிற்றுப்பத்தில் இம்மரபு போற்றப்பட்டுள்ளது.

செங்கண்மா என்னும் இடத்திற்குச் செல்லும் வழியின் தன்மை, இயற்கைவளம், கொடைப் பண்பு முதலியவற்றை இப்பாடல் சிறப்பாகக் கூறுகிறது. கூத்தரின் பல்வேறு இசைக் கருவிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. மலையின் கண் தோன்றும் பல்வேறு ஓசைகளை ஆசிரியர் நன்கு எடுத்துக் காட்டியுள்ளார்.

'புலவோர்க்குச் சுரக்கும் அவன் ஈகை மாரியும் இகலுநர்ப் பிணிக்கும் ஆற்றலும் குறிப்பிடப்பட்டுள்ளன. பொருள் கொடுத்துப் புகழ் பெறாது மடிந்த அரசர்களைப் புலவர்,

'தம்பெயர் தம்மொடு கொண்டு மாய்ந்தோர்
சேயாற்று வடுவாழ் எக்கர் மணலிலும் பலரே'

என்றிகழ்கிறார்.

**நன்னன் பெருமை**

நன்னன் மலைநாட்டுத் தலைவன், பெருமையும் சிறப்பும் மிக்கவன். அவன் ஊரான மூதூரின் தெருக்கள் ஆறு போல் அகன்றன, கடலெனக் காரென முழங்கும் ஆரவாரம் மிகுதி; திருவிழாக் காலத்தைப் போன்ற மக்கள் கூட்டம் எப்போதும் அந்நகரில் உண்டு. அவனைப் பாடும் விறலியர் அவன் முற்றத்தில் எந்நாளும் குழுமியிருப்பர். தன்னை நாடி வந்தவர்களைப் பெருவியப்போடு நசைதர வந்தது சாலும், வருத்தமும் பெரிது' எனக் கூறி அவன் வரவேற்பான், இழைமருங்கு அறியாநுழை நூற் கலிங்க மும் நிணமும் கலந்த் ஊன் சோறும் நல்குவான்: கூத்தர் தலைவன் அணியப் பொன்னாலான தாமரையையும் விறலியர் அணிய விளங்கிய அணி இழைகளையும் அளிப்பான். அவர்கள் ஏறிச் செல்ல நீரோட்டம் போன்று வரிசையாக விரைந்து செல்லும் குதிரை பூட்டிய தேர்களைத் தருவான்; மேலும், பகைவர்களிடம் திரையாகப் பெற்ற யானைகளையும், மணிகட்டிய காளைகளையும், பசுக்களையும் அளித்து அன்போடு அவர்களைத் தம் ஊர்களுக்குச் செல்ல விடுவான்.

**ஓசைகள்**

https://t.me/tnpscfree



மலையில் ஒலிக்கும் ஓசைகள் அனைத்தும் இப் பாட்டில் ஒலிக்கின்றன. அந்த ஒலிகள் எப்படி எழுகின்றன என்பதையும் ஆசிரியர் சுவையாகக் கூறுகிறார். இவ்வாறு மலையில் ஒலிக்கும் ஒலிகளாக 20 ஒலிகளைக் கூறகின்றார்.

**வழியின் அருமை**

கூத்தர்கள் நன்னனின் மலை நாட்டை அடையக் கூறும் வழியின் அமைப்பும், அந்த வழியில் எப்படி எல்லாம் பாதுகாப்பாகச் செல்லவேண்டும் என்று ஆசிரியர் கூறும் திறனும் நம்மை மலைக்க வைக்கின்றன.

**முல்லைப் பாட்டு**

பத்துப் பாட்டில் அளவாற் சிறியது 103 அடிகளைக் கொண்ட முல்லைப் பாட்டே. காவிரிப்பூம் பட்டினத்துப் பொன் வாணிகன் மகனார் நப்பூதனார் இதனைப் பாடியுள்ளார், அகனைந்திணைகளுள் ஒன்றான முல்லைத் திணையின் இருத்தல்' என்னும் உரிப்பொருளுக்குச் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குவது இப்பாடல் வினைமேற் சென்ற தலைவன் திரும்பி வருமளவும் வருந்திய தலைவியைப் பெருமுதுபெண்டிர் ஆறுதல் மொழி கூறித் தேற்றுகின் றனர். தலைவன் மீண்டும் வருதலையறிந்த தோழி மகிழ்ந்து கூறுகிறாள்.

கார்கால வருணனை, முல்லை நில இயல்பு, மன்னபாசறை, பாதுகாக்கும் மெய்க்காப்பாளர், வீரமங்கையர், நாழிகையறியும் கணக்கர், வெருவருந் தோற்றத்து யவனர் முதலானோரின் செயல்கள் தலைவி தலைவனைக் காணாது துயருறுதல் ஆகியன இதன்கண் சிறப்பிடம் பெற்றுள்ளன.

**தலைவியின் துயரும் தேற்றலும்**

பெருமுது பெண்டிர் விரிச்சி கேட்டல், நற்சகுணம் பார்த்தல் முதலிய நம்பிக்கைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. வினை முடித்துத் தலைவர் வருதல் உறுதி; நீ நின் பிரிவுத் துயர் களைக . என்று பெண்டிர்தலைவியைத் தேற்ற, அவள் பூப்போல் உண்கண் புலம்பு முத்து உறைப்ப நின்றனள்' என்கிறார் புலவர். பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை' என்ற அடி, முல்லைக்குரிய காரும் மாலையும் ஆகிய பொழுதுகளைக் காட்டுகிறது. துயருழந்து, நெஞ்சாற்றுப்படுத்த நிறைதபு புலம்ப எனும் தொடர் தலைவி நெஞ்சினை ஆற்றி நிற்கும் திறத்தை விளக்குகிறது. இதனால், முல்லைப் பாட்டினை 'நெஞ்சாற்றுப் படை' என்றும் சிலர் வழங்குவர். 'முல்லை' எனச் சுருக்கமாகவும் இது வழங்குவதுண்டு.

**பாசறையில் அரசன்**

வீட்டில் தலைவனைப் பற்றிய எண்ணங்களால் தலைவி, தன்னை மறந்து கிடத்தல் போலவே பாசறையில் தலைவன் போரைப்பற்றிய நினைவுகளால் தன்னையே மறந்து கிடக்கின்றான். படுக்கையில் இருக்கும் அவன் கண்களை உறக்கம் தழுவவில்லை; புரண்டு புரண்டு படுக்கிறான்; முன்னாள் போரில் புண்பட்ட யானைகளை நினைக்கிறான். பகைவர் யானைகளை வெட்டி வீழ்த்திய வீரர்களின் உடலிற்பட்ட புண்களை எண்ணுகிறான்; அம்பு பாய்ந்த வலியால் உணவு கொள்ளாமல் செவிகளைக் கவித்துக் கொண்டு கண்ணீர் சிந்தி நிற்கும் குதிரைகளை நினைக்கிறான். அவன் கைகளுள் ஒன்று படுக்கையில் கிடக்கிறது. மற்றொன்று தலையின் கீழ்த் தலையணையாகக் கிடக்கிறது. தன் படை இந்நிலையில் இருக்க, மறுநாள் போர்த்தொடுக்கும் வகையை நினைத்துக் கொண்டே கண்துயில்கின்றான்.

**வருணனை**



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



கார் காலத்தில் பூத்த மலர்களை உருவகச் சொற்க ளால் கூறும் திறம் நயம் மிக்கதாகும்.

'முறி இணர்க் கொன்றை நன்பொன் காலக்
கோடற் குவிமுகை அங்கை அவிழத்
தோடார் தோன்றி குருதி பூப்ப' (முல்லை , 94-96)

என்று கூறுகிறார்.

**முன்னோர் பழக்கங்கள்**

காதலன் காதலியர் நெஞ்சங்களில் எழும் காதல் உணர்ச்சியைப் பாடுவதாக அமையும் இந்நூல் பண்டைத் தமிழ் மக்களின் பழக்க வழக்கங்களையும் கூறுகிறது.

1. தான் நினைக்கும் செயலொன்று நன்மையாக முடியுமா என்பதை அறிய மாயோன் கோயிலுக்கு முல்லை மலரும், அலரி அரும்பும், நெல்லும் ஒரு நாழியில் கொண்டு போய்த் தூவி நன்மொழி கேட்டல்.

2. யானைப் பாகர்கள் வடமொழியின் மூலம் யானைகளைப் பயிற்றுவித்தல்.

3. காவியாடை அணிந்த துறவிகள் தமது திரி தண்டங்களை ஊன்றி அவற்றின் மேல் காவியாடைகளை உலரவைத்தல்.

4. அரசன் பாசறையில் இரவு முழுவதும் விளக்கு எரிந்து கொண்டிருத்தல், விளக்குகள் எண்ணெய் இல்லாமல் அணையும் போதெல்லாம் பெண்கள் அவற்றில் எண்ணெய் இட்டு எற்றி வைத்தல்.

5. யவனர்கள் அரசனின் பாசறையைக் காவல் செய்தல். காலக்கணியன் பொழுதறிந்து காட்ட, யவன வீரன் விளக்கு வெளிச்சம் காட்ட அரசன் தன் பாசறையின் உட்பகுதிக்கு உறங்கச் செல்லுதல்

6. கவலையால் தன் கையைத் தலையின் கீழ் வைத்துப்படுத்தல்.

இவ்வாறு அகப்பொருளின் காதல் வாழ்வையும் புறப்பொருளின் போர் நிகழ்ச்சிகளையும் ஒருங்கு கூறி மலர்களில் முல்லையாக மணக்கிறது முல்லைப் பாட்டு.

**மதுரைக் காஞ்சி**

பத்துப் பாட்டில் அளவாற் பெரியது மதுரைக் காஞ்சி, 782 அடிகளைக் கொண்டது. இதன் ஆசிரியர் மாங்குடி மருதனார். பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு உலக நிலையாமையினை உணர்த்தி வீடுபேறு அடைவதற்கு வழி காட்டுவதாக அமைந்தது இப்பாடல். இதில் ஆசிரியப்பா அடிகளோடு வஞ்சி யடிகளும் கலந்து வந்துள்ளன 'பெருகு வளமதுரைக் காஞ்சி' எனப் பெருமையாகப் பேசுகிறது ஒரு தனி வெண்பா

பாண்டியனது படையெடுப்பு, பகைவரை யழித்தது, தலையாலங்கானத்தில் எழுவரை வென்ற சிறப்பு , புலவர்க்கு வாரி வழங்கும் வள்ளன்மை, பிறர்க்குப் பணியாத பெருவிறல், முந்தையோரின் மூதறிவு, பொய்யின் நீங்கி வாய்மையோடு அறங்காக்கும் பொற்பு கொடுத்துப் புகழ் கொள்ளும் கொள்கை முதலான நெடுஞ்செழியனின் செயல்களும் அரும்பண்புகளும் மதுரைக் காஞ்சியில் விரித்துச் சொல்லப்படுகின்றன. மதுரையின் நாளங்காடி, அல்லங்காடி வருணனை யும், மக்களுடைய பழக்க வழக்கங்களும், மகளிர் ஒழுக்கமும், கள்வர் செயலும், காவலர் திறமும், அந்தணர் இயல்பும், இப்பாடலில் சிறப்பாகக் கூறப்படுகின்றன.



https://t.me/tnpscfree

நெடுஞ்செழியனின் முன்னோராகிய முந்நீர் அடியலம்ப நின்ற பாண்டியன் பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி, நிலந்தரு திருவிற் பாண்டியன் ஆகியோர் இதில் குறிக்கப்படுகின்றனர். 'தென்குமரி வடபெருங்கல், குணகுடகடலான எல்லைத் தொன்று மொழிந்து தொழில் கேட்ட நாடாண்டவன், பெருநர்க்கு 'இலங்கு மருப்பின் களிறு கொடுத்தும் பொலந்தாமரைப் பூச்சூட்டி யும் நலம் சான்ற கலம் சிதறியும் சிறப்புச் செய்தவன்' எனப் பாண்டியன் செழியனைப் போற்றுகிறது.

'மழை கொளக் குறையாது புனல் புகமிகாது கரை பொருது இரங்கும் முந்நீர் போலக், கொளக் கொளக் குறையாது தரத்தர மிகாது' என்று மதுரைக் காஞ்சி மதுரையைப் பாராட்டுகிறது.

காஞ்சித் திணையும் மதுரையம்பதியும் : இப்பாடல் புறத் திணைகள் ஏழனுள் ஒன்றான காஞ்சித் திணையைக் கருப்பொருளாகக் கொண்டு அமைந்துள்ளது. காஞ்சித் திணை இந்த உலகில் தோன்றிய பொருள் எத்தகைய சிறப்புடையதாக இருந்தாலும் ஒருநாள் அழிந்தே தீரும் என்ற உண்மையை வற்புறுத்துவதாகும். இதனைத் தொல்காப்பியர்,

'பாங்கருங் சிறப்பிற் பல்லாற் றானும்
நில்லா உலகம் புல்லிய நெறித்தே'

என விளக்குகிறார்.

'பணைகெழு பெருந்திறல், பல்வேல் மன்னர்
கரைபொருது இரங்கும், கனை இரு மூந்தீர்த்
திரை இடு மணலினும், பலரே உரைசெல
மலர்தலை உலகம் ஆண்டு கழிந் தோரே'

எனப் பாண்டியனுக்கு உலக நிலையாமையை விளக்குகிறார்.

'போய் செய்வதையே பணியாகக் கொண்டிருப்பதை ஒழித்து, முன்னோர்களுள் ஒருவரான முதுகுடுமிப் பெருவழுதியைப் போலப் பலயாகங்களைச் செய்து பகைமன்னரெல்லாம் வணங்க வாழ்க' எனவும்,

'இலங்கு இழை மகளிர் பொலங்கலத்து ஏந்திய
மணம் கமழ் தேறல் மடுப்ப , நாளும்
மகிழ்ந்து இனிது உறைமதி, பெரும!'

எனவும் வாழ்த்துகிறார்.

**மதுரை நகர அமைப்பு**

பல்வளம் நிறைந்து பாவலர்களின் கண்ணையும் கருத்தையும் ஈர்க்கும் பாடல் சான்ற பாண்டிய நாட்டின் நடுவில் மதுரை மாநகரம் அமைந்துள்ளது. மேகத்தைத் தொடும்படி வளர்ந்த மரங்களையும், குயில் கூவி மயிலாடும் சேலைகளையும், வெண்மணல் கரையினையும் கொண்டது வையை . அதன் துறைதோறும் கலை வளர்க்கும் பெரும்பாணர்களின் இருக்கைகள் அமைந்துள்ளன.

அவற்றை யடுத்து உயர்ந்த மலையைப் போல் மேகம் தவழும் மாட மொடு, வையை அன்ன வழக்குடை வாயிலை உடைய மதிலும், அந்த மதிலை அடுத்து ஆறு கிடந்தது போன்ற அகல் நெடுந் தெருக்களும் அமைந்துள்ளன. தெருக்களில் கவின் பெறு தேர்ப்படையும், புரவிப் படையும், வீரர் படையும் எப்போதும் இயங்கிக் கொண்டே இருக்கும். மழுவாள் நெடியோனான சிவனின் கோயிலும், பூவினர், புகையினர், தொழுவனர் பழிச்சினராய்ச் சிறந்து புறங் காக்கும் பௌத்தப் பள்ளியும், குன்று குயின்றான்ன அந்தணர் பள்ளியும், சான்ற கொள்கையும் சாயா யாக்கையும் ஆன்று அடங்கிய இயல்பும் உடைய அறிஞர்களான சமணர்களின் சமணப் பள்ளியும்,

'அச்சமும் அவலமும் ஆர்வமும் நீக்கிச்
செற்றமும் உவகையும் செய்யாது காத்து
நெமன் கோல் அன்ன செம்மைத்து ஆகிச்
சிறந்த கொள்கை அறம்கூறு அவையமும்'

அந்நகரில் அமைந்துள்ளன.

மதுரையைத் தலைநகரமாகக் கொண்டு பல்லூழிக் காலம் பாண்டிய நாட்டை ஆண்ட பாண்டியர் குலத்தைப் பற்றியும், அவர்களுக்குத் தலைநகரமாக அமைந்த மதுரையைப் பற்றியும், பாண்டியருள் ஒப்பாரும் மிக்காரும் இல்லாது விளங்கிய தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைப் பற்றியும் காவிய வடிவில் நம் மனம் களிகொள்ளுமாறு கூறுகிறது மதுரைக் காஞ்சி.

**நெடுநல்வாடை**

நக்கீரர் பாடிய நெடுநல்வாடை 188 அடிகளைக் கொண்டது ஆசிரியப் பாவால் அமைந்தது, போர்க் காரணமாகப் பிரிந்த தலைவன் நெடுஞ்செழியனை எண்ணி வருந்துகிறாள் தலைவி. அவன் பகை முடித்து வென்று விரைவில் திரும்பி வருவானாக என்று கொற்றை வையைப் பரவுகின்றாள் ஒருத்தி பொதுவாகப் பார்க்கும் போது பிரிவு குறித்த பாலைத் திணை சார்ந்த அகப் பொருட் பாடலாக இது விளங்குகிறது. அகப் பாடலில் தலைவனின் பெயரைச் சுட்டுதல் கூடாது.

ஈண்டு வேம்பு தலையாத்த நோன்காழ எஃகம்' என்று பாண்டியனது அடையாளப் பூவாகிய வேம்பைப் புலவர் சுட்டிப் பாடி விட்டார்; அதனால், இப்பாடல் அகத்திணையாகாது என்பர் நச்சினார்க்கினியர்.


தலைவனைப் பிரிந்து வருந்தும் தலைவிக்கு ஒரு பொழுது ஓர் ஊழிபோலத் தோன்றும் நெடிதாகிய வாடையாகவும், பாசறையில் தங்கியிருக்கும் வேந்தனுக்கு நல்ல வாடையாகவும் அமைந்ததனால் இப்பாடல் நெடுநல்வாடை' என்னும் பெயர் பெற்றது.

குளிர் காலத்தில் மக்களும், விலங்குகளும் குளிரால் வருந்தும் நிலை, அரசி வாழும் அரண்மனையின் அமைப்பு, அந்தப்புரக் கட்டிலின் நலம், மன்னன் பிரிவால் அவள் வருந்தும் நிலை, செவிலியரும் பிறரும் கூறும் ஆறுதல் மொழி, புண்பட்ட வீரர்களைக் கண்டு மன்னன் அன்போடு ஆற்றுவித்தல் முதலியன இதில் விளக்கமாகக் கூறப்படு கின்றன.

பாண்டியன் பலரொடு முரணிய பாசறைத் தொழில் விரைவில் முடிவதாக' என மகளிர் கொற்றவையை வழிபட்டு வேண்டுகின்றனர். 'முடலை யாக்கை முழுவலி மாக்களாய், யவனர் மதுரையில் திரிந்தனர் மகளிர் அந்தியில் நெல்லும் மலரும் தூவி இல்லுறை தெய்வத்தை வணங்கினர்; தலைவனைப் பிரிந்த தலைவி 'புனையா ஓவியம்' போல விளங்கினாள்.

https://t.me/tnpscfree






To buy this Book Online : https://imojo.in/2mmbx8t

Content of the Book https://iyachamy.com/wp-content/uploads/2020/03/CONTENT-.pdf

**தமிழில் ஏப்ரல் மாதத்தில் வெளியிடப்படும்**

**அந்தப்புரத்தில் அரசி**

அரண்மனை உட்புறத்தில் அந்தப்புரம் அமைந்துள் ளது. அது பல கட்டுகளைக் கொண்டது. அக்கட்டுகள் மலை கண்டன்ன உயரத்தையும் மலையைச் சேர்ந்துவலை கிடந்தன்ன கொடிகளையும், வெள்ளி கிடந்தன்ன வெள்ளிய சுண்ணத்தையும், மணி கண்டன்ன திரட்சியை யுடைய தூண்களையும், அழகிய பூ வேலைப்பாடு அமைந்த நடுவிடங்களையும் உடையன. அவற்றில் யவனர் இயற்றிய வினைமாண் பாவை விளக்குகள் நிறைய நெய் சொரியப் பட்டு ஒளிவிட்டு எரிந்து கொண்டிருக்கின்றன.

கட்டில் ஒன்று, அதன்மேல் மடைமாண் நுண் இழை பொலிய முத்துச் சாலோகம் அமைந்த புலி பொறிக்கப் பட்ட பூங்கேழ்த் தட்டு ஒன்று அமைந்துள்ளது. குற்றம் நீங்கிய நிறம் ஊட்டப்பட்ட பலவகையான மயிர்கள் விரவியுள்ளன. மெல்லிய முல்லை அரும்பிய இதழ்கள் அமய மலர்கள் நிறைந்துள்ளன. விரிந்த மெல்லிய படுக்கை ஒன்றுள்ளது. அந்தப் படுக்கையின் மேல் அன்னத் தூவியைப் பரப்பி **அணையாகத்தலையணைகளை** இட்டுத் தூய துணியை விரித்துப் பரப்பிய மற்றொரு விரிப்பு உள்ளது. அதன்மேல் கிடந்து கணவனைப் பிரிந்த ஏக்கத் தால் அரசி வருந்துகின்றாள்.

'பூந்துகில் மரீஇய ஏந்து கோட்டு அல்குல்



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



அம்மாசு ஊர்ந்த அவிர்நூற் கலிங்கமொடு'
என்று கூறுகிறது.

கட்டிலின் மேற்கட்டியில் உரோகிணி தன் கணவன் சந்திரனோடு பிரியாமல் கூடி இருப்பது போன்ற ஓவியம் வரையப்பட்டுள்ளது. அதனைக் கண்டு, தன் கணவன் தன்னைப் பிரிந்தமையை எண்ணி, நெடிது உயிர்த்துத் தன் கன்னங்களில் வழியும் நீரைத் தன் செவ்விரலால் தெறிக் கின்றாள் தலைவி.

**பாசறையில் மன்னன்**

தலைவியைப் பிரிந்த பாண்டியனோடு பாசறையில் முன்னாள் நடந்த போரில் புண்பட்டும் மண்மேல் வீழாது வீரங்காட்டி வெற்றிப் பயிர் விளைத்த வீரர்களைக் கண்டு அவர்கள் அகம் மகிழ, முகம் மலர்ந்து ஆறுதல் மொழிகளைக் கூறுகின்றான்.

இரவில் பெய்கின்ற மழைத்துளிகளையும் பொருட்படுத்தாமல் காவலர் குடை பிடித்து வர, போரிடும் யானைகளையும், குதிரைகளையும் பார்த்து வருகின்றான், தனக்கு வழி காட்ட உடன் வரும் வீரனின் தோள்மீது அன்போடு கைவைத்துப் பாசறை முழுவதும் சுற்றிப் பார்க்கிறான் பின்னர்த்தம் வீரர் உற்ற புண் களையே எண்ணி நள்ளென் யாமத்தும் பள்ளி கொள்ளா தவனாய்ப் பல அரசர்களோடு முரணிய அவ் வேந்தன் சில வீரரோடு செல்கிறான்.

அகமும் புறமும் ஒருங்கமைந்த சிறந்த தமிழ் நூல் நக்கீரர் பாடிய நெடுநல்வாடை.

**குறிஞ்சிப் பாட்டு**

குறிஞ்சி யொழுக்கத்தின் சிறப்பைக் கூறுவது குறிஞ்சிப் பாட்டு. ஆரிய அரசன் பிரகதத்தனுக்குத் தமிழ்ச் சுவையை அறிவுறுத்தற் பொருட்டுக் கபிலர் இதனை இயற்றினார் என்பர். 'பெருங்குறிஞ்சி' என்ற பெயரும் இதற்குண்டு.

இது **21** அடிகளைக் கொண்டது. ஆசிரியப்பாவால் அமைந் தது. இதில் தோழி செவிலிக்கு அறத்தோடு நின்று தலைவியின் காதலை வெளிப்படுத்துகிறாள்.

தலைவியும் தலைவனும் முதல் முதல் சந்தித்தல், அவர்க்கு அன்பு நெருக்கம் உண்டாதல், கெடுதி வினாதல், களிறு தரு புணர்ச்சி, குறிஞ்சி நிலத்தின் சிறப்பு குறிஞ்சி நிலத்து மலர்களின் பெயர் முதலியன இதில் இயம்பப்படுகின்றன.

தலைவனுடைய வீரமும், தலைவனின் காதல் உள்ள மும் இதில் கபிலரால் செவ்விதின் காட்டப்படுகின்றன. இஃது அகப்பொருள் களவொழுக்கத்திற்கும் அறத்தொடு நிற்றல் துறைக்கும் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

**தலைவியின் கடமை**

தலைவியைத் தாய் தினைப்புனம் காத்து வருமாறு தோழியுடன் அனுப்புகிறாள் தலைவியின் தோழியும் தினைப்புனம் செல்கின்றனர் அருவியாடியும் மலர் கொய்தும், தழை தொடுத்தும் பண்ணெழப்பாடியும், மாலை தொடுத்தும், இடையிடையே கிளிகளை ஓப்பியும் இன்பமாகப் பொழுதுபோக்குகின்றனர். இளமையும், அழகும் கொழிக்கும் அவ்விள நங்கையர் இயற்கை அழகு நிறைந்த மலைச்சாரற்கண் அமைந்த தினைப் புனத்தில் **கிளைகளை** ஓப்பிக் காவல் செய்கின்றனர்.

**தலைவன் வருகை**



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



வீரமும் அழகும் நிறைந்த ஓர் இளைஞன் அவ்வழியே வருகிறான். அவன் கண்கள் அவள் அழகைப் பருகுகின்றன. இருவர் விழிகளும் சந்திக்கின்றன. அவள், வாய்ச் சொற்கள், வெளிவராமல் நின்று அவள் உள்ளக் கருத்தை மறைக்கின் றன. நாணம் அவள் நிறையைக் காக்கின்றது.

**தலைவன் குறிப்புரை**

தலைவனோடு சில நாய்கள் தொடர்கின்றன. அவளை எப்படியும் பேசவைக்க வேண்டும் என்று நினைக்கிறான் தலைவன். வேட்டைக்குத் தப்பிய யானையைக் கண்டீர் களோ என்று முன்னிலைப் புறமொழியாக நாய்களோடு பேசுகிறான், வாய் முத்து உதிராத நிலையில் தலைவி நிற்கின்றாள். "என் வினாவிற்கு விடைதரக் கூடாதா?" என்று வாய்விட்டுச் சொல்லி ஒரு பூங்கொம்பை எடுத்துக்குரைத்துக் கொண்டிருந்த நாய்களை அடக்குகின்றான் தலைவன்.

**நாணம் கரைதல்**

காட்டுயானை ஒன்று வேட்டுவன் அம்புக்குத்தம்பி அவ்வழியே வருகிறது. அதனைக் கண்டு அம்மகளிர் அஞ்சி நடுங்குகின்றனர் தலைவியின் நாணம் கரைகிறது தலை வனை **அணைகின்றாள்;** அம்பெண்ணை மிக எளிதாகக் தொடுத்து மதயானையைத் துரத்துகின்றான் தலைவன், தலைவியை அடைகிறான். இதனைக் களிறு தருபுணர்ச்சி என அகப்பொருளிலக்கணம் கூறும்.

**களவொழுக்கம்**

தலைவனும் தலைவியும் உள்ளம் கலந்து உரையாடி உறவு கொள்கின்றார். தினைப்புனக் காவல் அவர்கள் ஆவலை நிறைவு செய்கிறது. காலையில் தினைப்புனம் செல்வதும், கிளிகளை ஒப்புவதும், தலைவனைக் கண்டு பேசி மகிழ்வதும், மாலையில் வீடு திரும்புவதும் அவள் வழக்கமும் ஒழுக்கமும் ஆகின்றன. கதிர் முற்றுகிறது. தினைப்புனம் காக்கும் கடமை அவளை விட்டு அகல்கிறது.

**அறத்தொடு நிற்றல்**

பகலில் சந்திப்பது நிற்கிறது. இரவில் சந்திப்புத் தொடர்கிறது. காவல் மிகுகிறது. தலைவனைக் காணல் அரிதாகிறது. தலைவி உணவும் உறக்கமும் இழக்கிறாள், உடல் மெலிகிறாள்; தாயோ நோயின் மெய்ம்மையை அறியாமல் மருத்துவமும் தெய்வ வழிபாடும் மேற்கொள்ளுகிறாள்.

**தலைவியின்** கற்பு நெறியைக் காக்கவும் தாயின் துன்பத்தைக் குறைக்கவும் தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்கின்றாள். செவிலி நற்றாய்க்குச் செய்தியை உரைக்கிறாள். இவ்வாறு குறிஞ்சிப் பாட்டுச் செல்கிறது. இது சிறந்த அகப்பொருள் நூலாக விளங்கித் தனிப்பெருமையோடு திகழ்கிறது.

**அறிவுரை**

மக்களுக்குச் சிறந்த அறிவுரை ஒன்றை இது கூறுகிறது. முத்தும் மணியும் பொன்னும் மாசு அடைந்தால் அதைக் கழுவித் தூய்மைப்படுத்தலாம். ஆனால் மாந்தரது கற்பும் இயல்பும் ஒழுக்கமும் குன்றினால் அதனை ஈடுசெய்ய முடியாது என்று கூறுகிறது.

"சால்பும் வியப்பும் இயல்பும் குன்றின்
மாசறக் கழீஇ வயங்கு புகழ் நிறுத்துதல்
ஆசறு காட்சி ஐயர்க்கும் அந்நிலை
எளிய என்னார்" (குறிஞ்சி , 15-18)

**பட்டினப் பாலை**



https://t.me/tnpscfree

இது 301 அடிகளைக் கொண்டது. இப்பாடலை இயற்றியவர் கடியலூர் உருத்திரங் கண்ண னார். இதன் தலைவன் கரிகாற் பெருவளத்தான். இது வஞ்சியடிகளை மிகுதியாகக் கொண்ட ஆசிரியப்பாவால் அமைந்தது. பொருள் காரணமாகப் பிரிய நினைத்த தலைவன் தன் நெஞ்சினை நோக்கித் தலைவியைப் பிரிந்து வாரேன்' என்று கூறிச் செலவழுங்குவதாகப் பாடப் பெற்ற அகத்திணைப் பாடல் பட்டினப்பாலை பட்டினம் என்பது காவிரிப்பூம்பட்டினத்தைக் குறிக்கும், பாலை என்பது திணை யொழுக்கத்தைக் குறிக்கும். இதனை வஞ்சிநெடும் பாட்டு என்றும் வழங்குவர்.

தலைவன் செல்லும் கானம் வெம்மையானது, தலைவியின் **தோள்களோ தண்மையானவை** புகார்ப்பட்டினமே கிடைப்பினும் அவளைத் தான் பிரிவதற் கில்லை ' என்று தலைவன் தன் நெஞ்சினை நோக்கிக் கூறுகிறான்.

> ‘முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும்
> வாரிருங் கூந்தல் வயங்கிழை ஒழிய
> வாரேன் வாழிய நெஞ்சே!'

அவன் கடக்க வேண்டிய சுரத்தைத்

> 'திருமாவளவன் தெவ்வர்க்கு ஒக்கிய வேலினும்
> வெய்ய கானம்'

என்றும், அவன் தழுவும் தலைவியின் தோள்களைக் கரிகாலன், 'கோலினும் தண்ணிய ' என்றும் குறிப்பிடுகிறான். புகார்த் துறைமுகத்தைக் கூறவந்த புலவர்,

> 'நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
> காலின் வந்த கடுங்கறி முடையும்
> வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
> குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
> தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்
> கங்கை வாரியும் காவிரிப் பயனும்
> ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும்'

முதலிய பொருள்கள் அங்கு நிறைந்து கிடந்தமையைச் சுவைபடக் கூறுகின்றார்.

**திருமாவளவன் திறன்**

பட்டினத்தின் சிறப்பை எவ்வாறு மிகச் சிறந்த முறையில் பாடினாரோ, அதே நிலையில் வளவனையும் புகழ்கிறார். அவன் பகைவரின் சிறைச் சாலையில் பல காலம் அடைபட்டிருந்ததையும், வீரத்தோடு வளர்ந்ததையும் மீண்டும் தன்னாட்சியைப் பெற்றதையும் முறையே

> 'கொடிவரிக் குருளை கூட்டுள் வளர்ந்தாங்கு'

என்றும்,

> 'பிறர் பிணியகத்து இருந்து, பீடுகாழ் முற்றி
> அருங்கரை கவியக் குத்தி, குழிகொன்று
> பெருங்கை யானை பிடிபுக் காங்கு,
> நுண்ணிதின் உணர நாடி நண்ணார்
> செறிவுடைத் திண்காப்பு ஏறி, வாள்கழித்து
> உருகெழு தாயம் ஊழின் எய்தி'

என்றும் குறிப்பிடுகிறார்.

**புதுநாடு கண்டமை**

தான் உரிமையால் பெற்ற நாட்டோடும் வலிமையால் பகைவரை வென்று பெற்ற நாட்டோடும் அமையாமல் காடழித்து நிலந்திருத்தி, வரம்பமைத்து, வாய்க்கால் பல வெட்டிப் புது நாடுகளையும் உருவாக்கிய திறனைக்

'காடு கொன்று நாடு ஆக்கிக்
குளம் தொட்டு வளம் பெருக்கிப்
பிறங்குநிலை மாடத்து உறந்தைபோக்கிக்
கோயிலொடு குடிநிறீஇ
வாயிலொடு புழை அமைத்து
வாயில் தொறும்புதை நிறீஇ
பொருவோம் எனப் பெயர்கொடுத்து,
ஒருவேம் எனப் புறக்கொடாது
திருநிலை இய பெருமன் எயில்'

எனப் பாடுகிறார். காட்சிப் பொருளாகிய காவிரிப்பூம்பட்டினம் மறைந்தாலும் கடியலூர் உருத்திரங்கண்ணனார் கண்ட கருத்துப் பொருளாகிய காவிரிப்பூம்பட்டின மும், கரிகாலன் வாழ்வும் என்றும் மறையாது கற்றார் மனத்தில் கவினொடு திகழ்கின்றன.

**சங்க காலம் ஒரு பொற்காலம்**

**தொன்மைச் சிறப்பு**

நமக்குக் கிடைத்திருக்கும் தமிழ் நூல்களுள் தொல்காப் பியமும் சங்க இலக்கியங்களுமே தொன்மை வாய்ந்தவை. இவை பிற நாட்டின் தாக்குதலால் தோன்றியவை அல்ல, மக்கள் வாழ்க்கையினின்றுதாமே முகிழ்த்து எழுந்தவை பண்டைக்காலத் தமிழ் மக்கள் இயற்கையோடு இயைந்த இன்ப வாழ்க்கை நடத்தினர். அவ்வாழ்க்கையின் பிரதி பலிப்பே சங்க நூல்களாகும். எட்டுத் தொகை, பத்துப் பாட்டு நூல்களேயன்றி அவற்றிற்கு முற்பட்ட தொல்காப் பியம் தமிழினத் தொன்மைக்குச் சான்று பகரும்.

**அகமும் புறமும்**

சங்க இலக்கியங்கள் அனைத்தும் அகம் புறம் எனும் இரு பெரும் பிரிவுகளுள் அடங்கும். வாழ்க்கையின் உயிர் நாடியாகிய காதலும், போரும் இப்பாடல்களில் சித்திரிக் கப்படுகின்றன. எட்டுத் தொகையுள் நற்றிணை, குறுந் தொகை, ஐங்குறுநறு, கலித்தொகை, அகநானூறு எனும் ஐந்தும் அகத்திணை நூல்களாகும். பரிபாடல், புறம், பதிற்றுப்பத்து எனும் மூன்றும் புறப்பொருள் நூல்களாகும். பத்துப்பாட்டுள் முல்லைப் பாட்டு, பட்டினப் பலை குறிஞ்சிப் பாட்டு எனும் மூன்றும் அகப் பாடல்களாகும். ஏனைய ஏழும் புறப் பாடல்களாகும். இவற்றுள் ஆற்றுப் படை நூல்கள் ஐந்துள்ளன. பரிசில் பெற்ற கலைஞன் ஒருவன் பெறாதவர்க்கு அறிவுறுத்தி ஆற்றுப்படுத்துதல் ஆற்றுப்படையாகும். அது புறத்துறைக்குள் சிறந்ததாகப் போற்றப்படுகிறது. அவர்கள் கலைஞர்களைப் போற்றிய திறம் ஆற்றுப்படைகளால் தெளிவாகப் புலப்படுகிறது.

**உரிய பொருளின் சிறப்பு**

முதற்பொருள் கருப்பொருள், உரிப்பொருள் எனும் மூன்றும் அகப்பொருள் பாடல்களுக்கு இன்றியமையாதனவாகும். நிலமும் பொழுதும் முதற் பொருளாகும். தெய்வம், உணவு, மரம், விலங்கு தொழில், யாழ் பண் மலர், பறவை முதலியன கருப்பொருளாகும். உரிப் பொருள இவ்விரண்டனையும்

பின்னணியாகக் கொண்டு விளங்குகிறது. புணர்தல், பிரிதல், இருத்தல், ஊடல், இரங்கல் என்பன முறையே குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் எனும் ஐந்திணைகளுக்கு உரிப்பொருளாகின்றன. இம்மூன்றனுள் உரிப் பொருளே சிறந்ததாகக் கருதப்படும்.

இயற்கைக்காக இயற்கையைப் பாடும் மரபினைச் சங்க இலக்கியங்களில் காண இயலாது.

'முதல் கரு உரிப்பொருள் என்ற மூன்றே
நுவலுங் காலை முறை சிறந் தனவே
பாடலும் பயின்றவை நாடுங் காலை' (தொல். அக. 8)

**தன்மை நவிற்சி**

இல்லது புனைதல் என்பதைச் சங்க இலக்கியத்தில் காண முடியாது. உள்ளதை உள்ளவாறு கூறிச் சங்க காலப் புலவர்கள் மன நிறைவு பெற்றனர். உண்மை நிகழ்ச்சிகளை அழகுப்படக் கூறி அழகுணர்வை வெளிப்படுத்தினர்.

'திறவாக் கண்ண சாய்செவிக் குருளை
கறவாப் பால்முலை கவர்தல் நோனாது
புனிற்று நாய் குரைக்கும் புல்லென் அட்டில்'

(சிறு பாண். 130-132)

என்பது வறுமை பற்றித் தீட்டிய சித்திரமாகும். இது தன்மை நவிற்சியாகும்.

**உவமைத் திறன்**

வினை, பயன், மெய், உரு எனும் நான்கன் அடிப்படை யில் உவமைகளை அமைத்தனர். 'உயர்ந்த பொருள் களையே **உவமைகளா**கக் கூறினர்.''

'தாமரைத் தண்தாது ஊதி மீமிசைச்
சாந்தின் தொடுத்த தீந்தேன் போலப்
புரைய மன்ற புரையோர் கேண்மை'

தலைவனின் நட்பின் திறத்திற்கு உயர்ந்த சந்தன மரத்தில் தாமரை மலரிலிருந்து தொகுத்த தேனை உவமையாகக் காட்டுகிறாள் தலைவி. உயர்ந்த பொருளை உவமையாகக் காட்டும் அழகை இங்குக் காணலாம்.

வெளிப்படையாக அன்றி உள்ளுறையாகவும் உவமம் கூறுதல் சங்கப் பாடல்களின் தனி அழகாகும்.

'கழனி மாஅத்து விளைந்துகு தீம்பழம்
பழன வாளை கதூஉம் ஊரன்' (குறுந். 8)

இதில் உள்ளுறைப் பொருள் அமைந்து கிடத்தலைக் காண்க.

**உயர்ந்த கோட்பாடுகள்**

''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்னும் உயர்ந்த கோட்பாட்டைச் சங்க இலக்கியம் வெளிப்படுத்துகிறது.

'எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி

https://t.me/tnpscfree



நல்லை வாழிய நிலனே'

என்ற வரிகள் மக்களின் சிறப்பால் தான் நாடு உயர்வு பெறுகிறது என்பதைக் காட்டுகின்றன.

'முந்தையிருந்து நட்டோர் கொடுப்பின்

நஞ்சும் உண்பர் நனிநா கரிகர்' **(நற்றிணை )**

என்பது அக்கால மக்களின் பண்பாட்டுச் சிறப்பை விளக்குகிறது.

'வினையே ஆடவர்க்கு உயிரே ! வாணுதல்

மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்

இல்லத் தலைவனுக்குத் தொழிலே உயிராம் ; மனை உறை மகளிர்க்குத் தலைவனே உயிராம், வினைக்கு ஆண் காதலுக்குப் பெண் என்ற கோட்பாடு அவர்கள் வாழ்க்கையில் மிளிர்கின்றன.

**அரசர்களுள் புலவர்கள்**

அரசர்களும் தம் புலமையை அரிய பாடல்களின் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளனர். பாண்டியன் அறிவுடை நம்பி குழந்தையின் இன்பத்தை மிகச் சிறப்பாகப் பாடி யுள்ளான். குறுகுறு நடந்தும், சிறுகை நீட்டியும், இட்டும் தொட்டும், கவ்வியும் துழந்தும் குழந்தை மயக்கும் காட்சியை அறிவுடைநம்பி விளக்கி இருப்பது மறக்க முடியாதது, இளம்பெருவழுதி சோழன் நல்லுருத்திரன், ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் முதலாய வேந்தர் பலர் பாடியுள்ளனர்.

**பெண்பால் புலவர்கள்**

அவ்வையார் அதிகனின் உயிர் நண்பராகவிளங்கியவர். அவர் பாடிய பாடல்கள் புறநானூற்றில் மிகுதியாக இடம் பெற்றுள்ளன. காக்கை பாடினியார், நச்செள்ளை யார், பொன்முடியார், பெருங்கோப்பெண்டு, ஆதிமந் தியார் முதலிய பெண்பாற் புலவர்கள் பாடிய பாடல்கள் மிகச் சிறப்பானவையாகும். யாப்பு

அகவல், கலிப்பா, வெண்பா, வஞ்சிப்பா இந் நால் வகைப் பாக்களே சங்க காலப் பாடல்களாகும். அகவற் பாவுக்கே அவர்கள் முதலிடம் தந்தனர். ஓசைக்கு அவர்கள் முதன்மை தரவில்லை. உரைநடையே சீர் பெற்று அழகாக இயங்கியபோது அவை பாட்டாயின.

பிற்காலக் கவிஞர்கள் சந்தங்களுக்கு அடிமையாகிவிட்டனர். அதனால் கருத்துக் கும், தக்க சொல்லாட்சிக்கும் அவர்கள் சிறப்புத்தர இயலாமல் போய்விட்டது. அகவலும், செப்பலும், தூங்கலும், துள்ளலும் ஆகிய இவ்வோசைகளை மட்டும் தம் பாடல்களில் கையாண்டனர்.

**மரபுகள்**

சங்க இலக்கியம் சிறந்த இலக்கிய மரபுகளை உள்ள டக்கி இருப்பன. மெய்ப்பாடு, உவமை, அகப்பொருள், புறப் பொருள், களவு, கற்பு முதலியன மரபுகளை மீறாமல் அமைந்துள்ளன புலவர்கள் எண்ணிக்கையில் மிக்கு இருந்தும் மரபுக்குக் கட்டுப்பட்டு உயர்ந்த செய்திகளையே இலக்கியத்தில் பாடினர். அவை செவ்விய இலக்கியமாகப் போற்றப்படுகின்றன.

**சங்க காலம் இலக்கியத்தின் பொற்காலம்**



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



பிற்காலத்தில் கம்பர், வள்ளுவர், இளங்கோ போன்ற மாபெரும் கவிஞர்கள் மிகச் சிறந்த படைப்புகளைத் தந்துள்ளனர்

என்றாலும் அவை தோன்றுவதற்கு முன்னோடியாகத் திகழ்ந்தவை சங்க இலக்கியங்களாகும். கவிப் பெருக்கும் கலைப்பெருக்கும் மகுந்த காலம் சங்க காலம் பிற்காலத்துப் புலவர்களை விரல்விட்டு எண்ணிக் கூற முடியும். சங்ககாலப் புலவர்கள் எண்ணிக்கையில் மிக்க வர்கள். அவர்கள் பாடிய கவிதைச் செல்வம் தமிழரின் பண்பாட்டுக்கும், உயர்வாழ்வுக்கும் சான்று பகர்கின்றன.

தமிழ் வளர்ச்சி என்று எடுத்துக்கொண்டால் சங்க காலமே உச்சநிலை பெற்ற காலம் எனலாம். பிற மொழிச் சொற்களும், கதைகளும், மரபுகளும் புகாமல் மண்ணின் வளத் தால் எழுந்த செழுமைமிக்க கவிதைகளாகும். அழகும், சிந்தனையும், உயர்ந்த குறிக்கோளும் சீரிய கருத்துகளும், இனிய விழுமிய ஓசையும் கொண்டு விளங்குபவை, எனவே சங்க காலத்தைப் பொற்காலம் என்று கூறுவதில் தமிழர்கள் பெருமை கொள்கின்றனர். சங்க காலம் இலக்கிய வளர்ச்சியில் ஒரு பொற்காலம் ஆகும்.

## 2. சங்கம் மருவிய காலம்

**பதினெண்கீழ்க் கணக்கு நூல்கள்**

எட்டுத் தொகையும் பத்துப்பாட்டும் மேல்கணக்கு நூல்கள் எனப்படும். சங்க காலம் கிபி. முதல் அல்லது இரண்டாம் நூற்றாண்டின் முற்பட்டதாகக் கருதப் படுகிறது. அதனை அடுத்துத் தோன்றிய இலக்கியம் ஒரு புதிய மரபினைக் கொண்டு விளங்குகிறது. இக்கால இலக்கியங்களைச் சங்கம் மருவிய நூல்கள் எனக் கூறுவர். நீதி நூல்கள் சிலவும், அகப்பொருள் புறப்பொருள் பற்றிய திணை நூல்கள் சிலவும் இக்காலத்தில் தோன்றின. இவைபதினென்கீழ்க்கணக்கு நூல்கள் எனப்பட்டன.

**கீழ்க்கணக்கு நூல்கள்**

கி.பி. 3ஆம் நூற்றாண்டில் களப்பிரர் ஆட்சி கால் ஊன்றியது. பாண்டிய நாட்டைக் கைப்பற்றித் தமிழகத்தை ஆட்சி செய்தனர். இக்காலத்தில் சங்க இலக்கியம் போன்ற குறிக்கோள் இலக்கியங்கள் வளரவில்லை. நீதிகளும் தொகுப்பு நூல்களுமே எழுந்தன. வெண்பா , ஆசிரியம், வஞ்சி, கலி , மருட்பா என்னும் பா அமைப்பில் 50 முதல் 50வரையுள்ள செய்யுட்களை மேல்கணக்கு என்பர்.

'ஐம்பது முதலா ஐந்நூ (று) ஈறா
ஐவகைப் பாவும் பொருள்நெறி மரபின்
தொகுக்கப் படுவது மேற்கணக் காகும். -பன்னிரு படலம்

கணக்கென்பது நூல் என்னும் பொருளினது. ஐந்து அடிகளைக் கொண்டு வெண்பாவால் இயங்கி அறம், பொருள், இன்பம் ஆகிய இவற்றை அடுக்கிச் சொல்லுதல் கீழ்க்கணக்காகும்.

'அடி நிமிர்பில்லாச் செய்யுள் தொகுதி
அறம்பொருள் இன்பம் அடுக்கி அவ்வகைத்
திறம்பட வருவது கீழ்க்க ணக்காகும்.' - பன்னிரு படலம்.

இவை ஐந்தடிக்கு மேல் செல்லுவதில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

**பதினெண்கீழ்க் கணக்கு நூல்கள் பின்வருமாறு**

1. நாலடியார், 2. நான்மணிக்கடிகை, 3. இனியவை நாற்பது, 4. இன்னாநாற்பது, 5. கார்நாற்பது, 6.களவழி நாற்பது 7. ஐந்திணை ஐம்பது, 8. ஐந்திணை எழுபது, 9. திணைமொழி ஐம்பது, 10 திணைமாலை நூற்றைம்பது, 17. திருக்குறள், 12. திரிகடுகம், 13. ஆசாரக்கோவை, 14. பழமொழி, 15.



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



சிறுபஞ்சமூலம், 16. முதுமொழிக் காஞ்சி, 17. ஏலாதி, 18. கைந்நிலை என்பன. இவற்றை உணர்த்தும் வெண்பா

'நாலடி நான்மணி நானாற்பது ஐந்திணைமுப்
பால்கடுகம் கோவை பழமொழி - மாமூலமும்
இன்னிலை சொல் காஞ்சியோ(டு) ஏலாதி என்பவே
கைந்நிலைய வாம்கீழ்க் கணக்கு!"

**1. நாலடியார்**

நான்கு அடிகளைக் கொண்ட நூல் என்ற பொருளில் நாலடியார் என வழங்குகிறது. இது சமண முனிவர்கள் பலர் பாடிய பாடல்களின் தொகுப்பாகும். இவற்றைத் தொகுத்தவர் பதுமனார் ஆவார். இவை வெண்பா யாப்பில் பாடப்பட்டவை. அறம், பொருள், இன்பம் என்ற மூன்று பகுப்புகள் இந்நூலில் உள்ளன.

"நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி"

"பழகுதமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில்"

இத்தொடர்கள் நாலடியாரின் சிறப்பினைக் கூறும். ஜியு. போப் இதனை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்.

இளமை நிலையாமையை "முற்றியிருந்த கனியொழியத் தீவளியால், நற்காய் உதிர்தலும் உண்டு" என்றும், செல்வத் தைச் சகடக் கால் போல் வரும்' என்றும் நாலடியார் அழகுற விளக்குகின்றது.

கற்ற சான்றோர் அமைதியாயிருக்க அவையில் கல்லாதவர் ஆரவாரம் செய்வர் இதனை "வற்றிய ஓலை கலகலக்கும் எஞ்ஞான்றும் பச்சோலைக் கில்லை ஒலி என்று கூறுகிறது நாலடியார் நண்பனிடம் உள்ள குறையைப் பொறுத்தல் வேண்டும், ஏனெனில், நெல்லுக்கு உமியுண்டுநீர்க்கு நுரையுண்டு புல்லிதழ் பூவிற்கும் உண்டு' என்பர்.

முத்தரையர் என்னும் குறுநில மன்னரைப் பற்றிய குறிப்பு வருவதால் இந்நூல்கியி.8-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்பர்.

**2. நான்மணர்க்கடிகை**

இதன் ஆசிரியர் விளம்பிநாகனார் என்பவர் நான்மணிக்கடிகை 104 பாடல்களைக் கொண்ட அறநூல். ஒவ்வொரு பாடலும் நன்னான்கு மணியான கருத்துக்களைக் கொண்டு விளங்குகின்றது. நல்லவர் பிறக்கும் குடி இதுவென்று அறியமுடியாது என்பதனை ஒரு பாடல் பின்வருமாறு அழகாகத் தருகின்றது.

'கள்ளி வயிற்றில் அகில் பிறக்கும்; மான் வயிற்றில்
ஒள்ளரி தாரம் பிறக்கும், பெருங்கடலுள்
பல்விலைய முத்தம் பிறக்கும்; அறிவார்யார்
நல்லாள் பிறக்கும் குடி'

நல்லவர்கள் எந்தக் குடியிலும் பிறப்பர் என்பதனை இப் பாடலால் அறியலாம்.

**3. இனியவை நாற்பது**



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



இதன் ஆசிரியர் மதுரை தமிழாசிரியர் மகனார் பூதன் சேந்தனார் கடவுள் வாழ்த்தோடு சேர்ந்து 47 பாடல்களைக் கொண்டது. ஒவ்வொரு பாடலும் இனியது எது என்று கூறுவதால் இந்நூல் இப்பெயர் பெற்றது.

இளமையை முப்பென்று கருதிக் கடமையை உடன் ஆற்றல் இனிது என்றும், சுற்றத்தாரிடம் அச்சமில்லாது இருத்தலைக் கேட்டல் இனிது என்றும், அழகிய விலை மகளிரை நஞ்சென்று உணர்ந்து விலக்குதல் இனிது என்றும் தெளிவாகக் கூறும்.

'இளமையை மூப்பென்று உணர்தல் இனிதே
கிளைஞர்மாட்டு அச்சமின்மை கேட்டல் இனிதே
தடமென் பணைத்தோள் தளரிய லாரை
விடமென் றுணர்தல் இனிது.'

### 4. இன்னா நாற்பது

கடவுள் வாழ்த்தோடு 41 வெண்பாக்களைக் கொண்டது இந்நூல். பாடியவர் கபிலர். காலம் கி.பி. 50 முதல் 125 வரை இன்னாமை பயப்பன இவை எனக் கூறலின் இப்பெயர் அமைந்தது.

துன்பத்தின் காரணமாக அமைபவை இவையென்று கண்டு தொகுத்துரைப்பது இதன் தனிச்சிறப்பாகும். பார்ப்பார் வீட்டில் கோழியும் நாயும் புகுவதும், மனைவி அடங்காமல் இருப்பதும், கரையில்லாத புடவை உடுத்துவதும், உலகைக் காப்பாற்றாத வேந்தனும் இன்னாதவை என்று குறிப்படுகிறது.

'பார்ப்பாரில் கோழியும் நாயும் புகலின்னா
ஆர்த்த மனைவி யடங்காமை நன்கின்னா
பாத்தில் புடவை யுடையின்னா ஆங்கின்னா
காப்பாற்றா வேந்தன் உலகு.'

### 5. கார் நாற்பது

இதன் ஆசிரியர் மதுரை கண்ண னார் காலம் கிபி. 2000க்கு உட்பட்டது. இது முல்லைத் திணையைச் சார்ந்த தாகும். கார்காலத்தில் திரும்பி வருவேன் என்று சொல்லிச் சென்ற தலைவன் குறித்த காலத்தில் திரும்பி வாராமை யால் தலைவி **வருந்திக் கூறுவது. தலைவனைப் பிரிந்த தலைவியினது வருத்தத்தை** இப்பாடல்களில் ஆசிரியர் நன்கு காட்டுகின்றார்.

'சென்றநங் காதலர் சேணிகந்தா ரென்றெண்ணி
ஒன்றிய நோயோடிடும்பை பலகூர
வென்றி முரசின் இரங்கி யெழில்வானம்
நின்று மிரங்கு மிவட்கு' (கார் நாற்பது - 35)

காரென்னும் பருவத்தைச் சிறப்பித்துக் கூறுவதால் காலத்தை ஒட்டிக் கார்நாற்பது என்ற பெயர் பெற்றது.

### 6.களவழி நாற்பது

கீழ்க்கணக்கு நூல்கள் பதினெட்டில் போர் பற்றிய புற நூல் இஃது ஒன்றேயாகும். இதன் ஆசிரியர் பொய்கையார் என்னும் புலவர் ஆவார். இவரைச் சங்க காலத்தவர் என்பர். சோழன் செங்கணான் கழுமலம் என்னுமிடத்தில் சேரமான் **கணைக்**கால் இரும்பொறையோடு மாறு பட்டுப் போர் புரிந்து வெற்றியடைந்தான், சோழனின் வெற்றியைப் புகழ்ந்து பாடிப் புலவர் சேரனைச் சிறையினின்றும் மீட்க முனைந்தார். ஆனால் சிறையில் தண்ணீர் பெறாது தடுமாறிப்பின் பெற்று மானம் கருதி நிலத்தில்



https://t.me/tnpscfree

அதனை உகுத்து உயிர் நீத்தான் சேர மன்னன் சோழனது கழுமல் வெற்றியை இந்நூல் விரிவாகப் பாடுகிறது. இதில் உள்ள 40 வெண்பாக்களும் களத்து' என்ற சொல்லால் முடிகின்றன.

'அஞ்சனக் குன்றேய்க்கும் யானை அமருழக்கி
இங்குலிகக் குன்றே போல்தோன்றும் - செங்கண்
வரிவரால் மீன்பிறழும் காவிரிநாடன்
பொருநரை யட்டகளத்து.'

என்பது இந்நூலில் உள்ள ஓர் அழகிய பாடல்.

## 7. ஐந்திணை ஐம்பது

இதன் ஆசிரியர் மாறன் பொறையனார். முல்லை , குறிஞ்சி , மருதம், நெய்தல், பாலை என்னும் ஐந்திணைக்கும் முறையே பத்துப் பத்துப் பாடல்களாக மொத்தம் ஐம்பது பாடல்களைக் கொண்டு விளங்கும் அகப்பொருள் நூல் ஐந்திணை ஐம்பது. **வெண்பா யாப்பில் பாடல்கள் அமைந்துள்ளன.**

''ஐந்திணை ஐம்பது ஆர்வத்தின் ஓதாதார் செந்தமிழ் சேராதவர்'' என்று இந்நூலின் சிறப்பைப் புகழ்கிறது இதன் பாயிரப்பாடல். காதலர் செல்லும் சுரநெறியில் உள்ள மான்களின் அன்புக் காட்சியை ஒரு பாடல் அழகாகக் காட்டுகிறது.

'சுனைவாய்ச் சிறுநீரை எய்யாதென்று எணிப்
பிணைமான் இனிதுண்ண வேண்டி - கலைமாத்தன்
கள்ளத்தின் ஊச்சும் சுரமென்பர் காதலர்
உள்ளம் படர்ந்த நெறி.''

என்பது அப்பாடல்.

## 8. ஐந்திணை எழுபது

ஆசிரியர் பெயர் மூவாதியா. திணைக்கு 14 பாடல்கள் வீதம் ஐந்திணைக்கும் எழுபது பாடல்களைக் கொண்ட ஓர் அகப்பொருள் இலக்கியம் இது. காலம் கி.பி. 5ஆம் நூற்றாண்டு **கார் காலத்தைக் கண்டு தலைமகள் தலைவனை நினைந்து நெஞ்சு** உருகும் அழகு இதில் சித்திரிக்கப்படுகிறது.

'இனத்த அருங்கலை பொங்கப் புனத்த
கொடிமயங்கு முல்லை தளிர்ப்ப இடிம யங்கி
யானு மவரும் வருந்தச் சிறுமாலை
தானும் புயலும் வரும்.' (ஐந்திணை எழுபது-20)

## 9. திணைமொழி ஐம்பது

இதன் ஆசிரியர் கண்ணன் சேந்தனார் என்னும் செந்தமிழ்ப் புலவர். இவர் கி.பி. 6ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்பர் அருவியினது அழகைப் பாராட்டும் புலவர் "யாழும் குழலும் முழவும் இயைந்தென வீழும் அருவி என்று பாடுகிறார். நயமிக்க பாடல்களைக் கொண்ட நற்றமிழ் நூல் இது.

தலைவனுக்குத் தோழி வற்புறுத்தும் செய்யுள் இது தலைவியின் உறவினர் கடுஞ்சொல்லினர், வில்லினர், வேலினர்; அம்பினர்; கல்லிடை வாழுநர் என்று கூறி மலையிடை வராதே என்று தடுக்கின்றாள் தோழி.

"விரைகமழ் சாரல் விளைபுனங் காப்பார்

https://t.me/tnpscfree



வரையிடை வாரன்மின் ஐய-உரைகடியார்
வில்லினர் வேலர் விரைந்துசெல் அம்பினர்
கல்லிடை வாழ்நர் எமர்" (திணைமொழி ஐம்பது - 5)

**10. திணைமாலை நூற்றைம்பது**

இதன் ஆசிரியர் கணிமேதாவியார். திணைக்கு முப்பது பாடல்கள் வீதம் நூற்றைம்பது பாடல்கள் கொண்டுள்ளது இந்நூல். காலம் கி.பி. 5ஆம் நூற்றாண்டு. நெய்தல் நிலத்துக் கடல் காட்சியும், தலைவன் வருகையும் கீழ்வரும், பாடலில் சித்திரிக்கப்படுகிறது.

"ரேங்கும் வருதி யிருங்கழித் தண்சேர்ப்ப!
பொங்கு திரையுரைப்பப் போந்தொழிந்த - சங்கு
நரன்றுயிர்த்த நித்தில் நள்ளிருள்கால் சீக்கும்
வரன்றுயிர்த்த பாக்கத்து வந்து "
(திணைமாலை நூற்றைம்பது-49)

**11. திருக்குறள்**

இதன் ஆசிரியர் திருவள்ளுவர். அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்ற மூன்று பகுப்புகளைக் கொண்டது. 1330 குறள்களும் 133 அதிகாரங்களும் கொண் டுள்ளது.

இதன் சிறப்புகள் : (1) குறள் வெண்பாவால் இயற்றப் பெற்ற தனி நூல். (2) சுருங்கச் சொல்லி விளங்க உரைத்தல் என்பது இதன் தனிப் பண்பாகும். 3. குறிக்கோள் மிக்க வாழ்க்கையை இது வலியுறுத்தும்.

**அறத்துப்பால்**

அறத்தை இல்லறம் என்றும், துறவறம் என்றும் பாகுபாடு செய்து காட்டுவர். அறத்தில் அவருக்கு அசையாத நம்பிக்கை உள்ளது. தாய் பசித்தாலும் சான்றோர் பழிக்கும் வினையைச் செய்யக்கூடாது என்பது அவர் கோட்பாடு ஆகும்.

'ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை' (குறள் - 656)

அன்பே அறத்தின் இயக்கம் என்பது அவருடைய கொள்கையாகும்.

'அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்பு தோல் போர்த்த உடம்பு.'

பொருள் ஈட்டுதலும் மற்றவர்க்கு ஈவதற்கே என்பது அவருடைய கருத்தாகும். ஈதல் இசைபட வாழ்தல் இதுவே வாழ்க்கையின் குறிக்கோள் என்பர்.

'தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு' (குறள்-202)

**பொருட்பால்**

அரசர்க்கு என்று அறிவுறுத்தும் நீதிகள் அனைவருக் குமே பொருந்துவனவாகும். அறிவு என்பதற்கு வள்ளுவர் தரும் விளக்கம் போற்றத்தக்கதாகும்.

'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு' - (குறள்-423)



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



மருந்து என்னும் அதிகாரத்தில் மருத்துவம் பற்றிச் சிறந்த கருத்தினைத் தருகின்றது. அதுவே அவர் இலக்கியக் கொள்கையுமாகும்.

'நோய்நாடி நோய் முதல்நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்' (குறள் - 948)

**காமத்துப்பால்**

இது கற்பனை நயம் மிக்கது. சங்க இலக்கிய மரபினின்று மாறுபட்டது. ஊடல் நுணுக்கங்கள் அவருடைய கற்பனைத் திறனைக் காட்டுகின்றன.

'இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனாக்
கண்ணிறை நீர்கொண் டனள்.' (குறள்-1315)

**உரைகள்**

**திருக்குறளுக்கு உரைகண்டவர் தருமர், தாமத்தர், நச்சர்,** மல்லர், பரிதி, பரிப்பெருமாள், காளிங்கர், பரிமேலழகர், மணக்குடவர் , திருமலையர் ஆகிய பதின்மர். அவற்றுள் பரிமேலழகர் உரையே தலைசிறந்ததாகக் கருதப்படுகிறது. திருக்குறளைப் பிறமொழிகளில் மொழி பெயர்த்துள்ளனர் வீரமாமுனிவர் இலத்தினிலும், ஜீயு. போப் ஆங்கில மொழியிலும் மொழி பெயர்த்துள்ளனர். இது உலகப் பொதுமறையாகத் திகழ்கிறது.

## 12. திரிகடுகம்

இதன் ஆசிரியர் நல்லாதனார். சுக்கு மிளகு, திப்பிலி என்னும் மூன்று பொருள்களால் ஆன மருந்து உடல் நோயினைப் போக்கி மக்களுக்கு நம் சேர்ப்பது போல, இந்நூற் பாடல்கள் ஒவ்வொன்றும் மக்களுக்கு உறுதிப் பொருளை உணர்த்தி, **அறியாமையை அழித்து இன்பத்தை நல்கும் என்பதால் ஒவ்வொரு** பாடலிலும் மும்மூன்று உறுதிப் பொருள்கள் கூறப்பட்டுள்ளன. வாழ்வில் மனிதன் மேற்கொள்ள வேண்டிய நன்னெறிகளை இந்நூல் அழகு பட எடுத்துக் கூறுகிறது.

'தாளாளன் என்பான் கடன்படா வாழ்பவன்;
வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணாதான்;
கோளாளன் என்பான் மறவாதான்; இம்மூவர்
கோளாக வாழ்தல் இனிது'

## 13. ஆசாரக் கோவை

இதன் ஆசிரியர் பெருவாயில் முள்ளியார். காலம் கி.5ஆம் நூற்றாண்டு. இந்நூலில் உணவு கொள்ளும் முறை, உறங்கும் முறை, உடையணியும் முறை நீராடும் முறை முதலான பல செய்திகள் கூறப்பட்டுள்ளன. இத்தகைய ஆசார ஒழுக்கங்களைத் தொகுத்துக் கூறுவதனால் ஆசாரக் கோவை எனப் பெயர் பெற்றது.

'**வைகறை** யாமம் துயிலெழுந்து தான்செய்யும்
நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து வாய்வதில்
தந்தையும் தாயும் தொழுதெழுக என்பதே
முந்தையோர் கண்ட முறை' (ஆசாரக் கோவை-4)



https://t.me/tnpscfree

**14. பழமொழி**

இதன் ஆசிரியர் மூன்றுறையரையனார். ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் பழமொழியைக் கூறுவதால் இந் நூல் பழமொழி என்று கூறப்படுகிறது. இந்நூலில் 400 வெண்பாக்கள் உள்ளன.

எடுத்துக்காட்டு

'உரைமுடிவு காணான் இளமையோன் என்ற
நரைமுது மக்கள் உவப்ப-நரை முடித்துச்
சொல்லால் முறை செய்தான் சோழன், குலவிச்சை
கல்லாமல் பாகம் படும்.' (பழமொழி - 6)

**15. சிறுபஞ்சமூலம்**

இதன் ஆசிரியர் காரியாசான் ஆவார். கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி ஆகிய ஐந்து வேர்கள் நோயைப் போக்குவது போல் ஐந்து உண்மைகள் மக்களது மனநோயைப் போக்குமென்பது கருத்தாகும். ஒவ்வொரு பாடலிலும் ஐந்து செய்திகள் இடம் பெறுகின்றன.

''மயிர்வனப்பும் கண்கவரும் மார்பின் வனப்பும்
உகிர்வனப்பும் காதின் வனப்பும்-செயிர்தீர்ந்த
பல்லின் வனப்பும் வனப்பல்ல நூற்கியைந்த
சொல்லின் வனப்பே வனப்பு'' (சிறுபஞ்சமூலம் -37)

**16. முதுமொழிக் காஞ்சி**

இந்நூலின் ஆசிரியர் கூடலூர் கிழார். ஒவ்வொரு செய்யுளிலும் ஒரு சிறந்த முதுமொழி இடம் பெற்றுள்ளது.

'ஆர்கலி யுலகத்து மக்கட்கெல்லாம்
ஓதலிற் சிறந்தன்று ஒழுக்க முடைமை'

என்பது முதுமொழியாகும்.

**17. ஏலாதி**

ஆசிரியர் கணிமேதாவியார். இந்நூல் 80 வெண் பாக்கள் கொண்டது. கடவுள் வாழ்த்துடன் சேர்த்து 8 பாடல்கள் இதில் **உள்ளன.**

ஏலம், இலவங்கப்பட்டை , சிறுநாவற் பூ மிளகு, சுக்கு, திப்பிலி ஆகிய ஆறும் சேர்ந்தது ஏலாதி எனப்படும். அது உடலுக்கு நன்மை தருவது போல் ஆறு உறுதிப் பொருள்கள் உடலுக்கு நன்மை செய்கின்றன என்பதே இதன் கருத்தாகும்.

'கொல்லான்; கொலைபுரியான் ; பொய்யான்; பிறர் மனைமேல்
செல்லான்; சிறியார் இனம் சேரான்-சொல்லும்
மறையிற் செவியிலன், தீச்சொற்கண் மூங்கை;
இறையிற் பெரியாற் கிவை' (ஏலாதி -19)

**18. கைந்நிலை**

https://t.me/tnpscfree



இதன் ஆசிரியர் புல்லங் காடனார் என்பவர் ஆவார். இதில் 45 பாடல்கள் உள்ளன. இவை திணை அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளன.

காந்தள் பூவினைப் புகை என்று கருதிக் களிறு தன் கூட்டத்தை நோக்கி ஓடும் மலை நாடன் என்று கூறுகிறது.

'காந்தள் அரும்புகை என்று கதவேழம்
ஏந்தல் மருப்பிடைக் கைவைத்து இனன்நோக்கிப்
பாய்ந்தெழுந் தோடும் பயமலை நன்னாடன்' (கைந்நிலை-9)

**பொருள் பாகுபாடு**

இவற்றுள் அகம் பற்றிய நூல்கள் ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது திணைமாலை நூற்றைம்பது திணைமொழி ஐம்பது, கைந்நிலை , கார்நாற்பது னென்பனவாம் புறம் பற்றியது களவழி நாற்பது (1) ஏனையவை நீதி நூல்களாம் (11)

**பிற நூல்கள்**

சங்கம் மருவிய காலத்தில் குறிப்பிடத்தக்க ஏனைய நூல்கள் சில உள்ளன. அவை முத்தொள்ளாயிரம் பெருங் கதை என்பன.

**முத்தொள்ளாயிரம்**

இருண்ட கால எல்லையில் தோன்றிய ஒரு சிறந்த நூல் முத்தொள்ளாயிரம். சேர சோழ பாண்டியர்களைத் தலைவர்களாகக் கொண்டு சிறப்பித்துப் பாடிய பாடல் களைக் கொண்ட நூல் இது. ஒவ்வொரு அரசருக்கும் 900 பாடல்கள் பாடப்பட்டன என்பர். ஆனால், நூல் முழுமையும் இப்போது கிடைக்கவில்லை. 108 செய்யுட்களே புறத்திரட்டில் கிடைத்துள்ளன. யானை மறம், குதிரை மறம், அரசன் வெற்றி, ஈகை முதலான பல செய்திகளை அழகிய வெண்பாக்களில் இந்நூல் கூறுகின்றது. கைக்கிளை ஒழுக்கத்தைச் சார்ந்த இனிய காதற் பாடல்களை இதில் காணலாம். நளவெண்பாவினைப் போலச் சிறந்த மற்றொரு வெண்பா நூல் இது. இதன் காலம் கி. 5 அல்லது ஆம் நூற்றாண்டு என்று கருதுவர் அறிஞர் சதாசிவப் பண்டாரத்தார். திரு. எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்கள் ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்பர்.

'கச்சி யொருகால் மிதியா ஒருகாலால்
தத்துநீர்த் தண்உஞ்சை தான்மிதியாப் - பிற்றையும்
ஈழம் ஒருகால் மிதியா வருமேநம்
சோழியர்கோக் கிள்ளி களிறு'

என்று சோழ மன்னனின் யானை மறம் இயம்பப்படு கின்றது.

**பெருங்கதை**

இதற்குக் கொங்குவேள் மாக்கதை என்ற பெயரும் உண்டு. இதனை இயற்றியவர் கொங்குவேள் என்னும் புலவர். பைசாச மொழில் குணாட்டியார் எழுதிய நூல் பிருகத்கதா என்பதாகும். அவற்றுள் ஒரு கதையை மட்டும் எடுத்துக் கொண்டு இவர் காவியமாக்கித் தந்துள்ளார். இது சமணர்ச்சார்புடைய காவியமாகும். இந்நூல் கிபி. 6 ஆம் நூற்றாண்டினது ஆகும். இதில் உஞ்சைக் காண்டம், இலாவண காண்டம், மகத காண்டம், வத்தவ காண்டம், நரவாண காண்டம் என ஐந்து காண்டங்கள் உள்ளன. இஃது ஆசிரியப்பாவால் இயற்றப்பட்டுள்ளது. வத்தவ நாட்டில் கௌசாம்பிய நகரத்து அரசன் உதயணன்



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



ஆவான். இவன் யாழ் இசையில் மயங்கிய கடவுள் தன்மை வாய்ந்த யானை அடிபணிகிறது. இவன் உச்சையினி நகரத்து அரசனால் சிறை செய்யப்பட்டான். இவனுடைய நண்பன் யூகியின் உதவியால் சிறையினின்று வெளியேறி னான். அந்நகரத்து மன்னன் மகள் வாசவதத்தையை மணக்கிறான். இறுதியில் அவன் துறவறம் ஏற்றுத் தவம் செய்கிறான். இந்நூலில் சமணக் கோட்பாடுகள் மிகுதியாக விளக்கப்படுகின்றன.

'அன்புடைக் கணவர் அழிதகச் செயினும்
பெண்பிறந் தோர்க்குப் பொறையே பெருமை'

போன்ற அரிய கருத்துக்கள் இந்நூலில் உள்ளன.

## 3. பல்லவர் காலம் (கி.பி. 600-900)

சிலப்பதிகாரம் மணிமேகலைக்குப் பின் தமிழகம் இடைக் காலத்தில் இலக்கிய வளர்ச்சி குன்றி இருளடைந்து கிடந்தது. பாலியும் பிராகிருதமும் செல்வாக் குப் பெற்றன. சமணமும் பௌத்தமும் தழைத்தன.

இக்காலத்தில் களப்பிரர் தமிழகத்தை ஆண்டனர். இரண்டு நூற்றாண்டுகளுக்கு மேல் இந்நிலை நீடித்து இருந்தது. பாண்டியன் கடுங்கோன் உள்ளிருந்து எதிர்த்தான் பல்லவர்கள் வடக்கே யிருந்து படை எடுத்தனர். களப்பிரர் ஆட்சி வீழ்ச்சி உற்றது.

பல்லவர் ஆட்சியில் தமிழ் இசையும் சைவ வைணவ சமயங்களும் தழைத்து ஓங்குதற்கு வழி செய்தது. இன்னிசையால் தமிழ் பாடி இறைவனை வாழ்த்தி வணங்கினர்.

### பன்னிரு திருமுறைகள்

சைவமும் வைணவமும் தழைத்தன அதற்குப் பணி செய்த தொண்டர்களுள் தலை சிறந்தவர்கள் நாயன்மார் எனப்பட்டனர். அவர்கள் அறுபத்தி மூவர் ஆவர் அவர்களுள் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர், சேந்தனார் திருமூலர், **காரைக்காலம்மை**யார் முதலியோர் இயற்றிய பாடல்களை 10-ஆம் நூற்றாண்டில் இராசராசனின் வேண்டுகோட்கு இணங்க நம்பியாண்டார் நம்பி தொகுத்துப் பதினொரு திருமுறைகளாகத் தந்தார்.

பின்னர் பன்னிரண்டாம் நூற்றாண்டில் சேக்கிழார் இயற்றிய பெரிய புராணமும் சேர்ந்து திருமுறைகள் பன்னிரண்டு ஆயின.

### முதல் மூன்று திருமுறைகள் (திருஞான சம்பந்தர்)

திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர், சுந்தரர், மா**ணிக்கவாசகர்** இவர்கள் நால்வரும் சைவ சமய குரவர் எனப் பட்டனர். முதல் மூவரும் பாடிய பாடல்கள் தேவாரம் எனப்பட்டன, மாணிக்க வாசகர் பாடியது திருவாசகம் எனப்பட்டது.

### வரலாறு

திருஞானசம்பந்தர் சீர்காழிப்பதியில் சிவபாத இருதயருக்கும் பகவதி அம்மையாருக்கும் பிறந்தவர் குழவிப் பருவத்தில் இறைவி பாலூட்டியதால் ஞானம் பெற்றார் என்று கூறுப்படுகிறது.

ஞானசம்பந்தர் தம் தந்தையின் தோளில் அமர்ந்து கோயில் தலங்களுக்குச் சென்று கைத்தாளமிட்டுப் பாடினார். திருக்கோலக்கா என்னும் திருப்பதியில் இறைவன் அவருக்குப் பொற்றாளம் தந்தார்.



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



நாளும் இன்னிசையால் தமிழைப் பரப்பி வந்தார். அரத்துறையில் முத்துப் பல்லக்கினையும், திருப்பட்டீச்சுரத்தில் முத்துப் பந்தலையும், திருவாவடு துறையில் பொற்கிழியையும், திருவீழிமிழலையில் படிக்காசும் பெற்றார். திருநல்லூரில் அவருக்குத் திருமணம் நடந்தது. அங்கே பெருமணம் என்ற கோயிலை அடைந்து மணமகளோடும் இறைவனோடும் இரண்டறக் கலந்தார்.

**காலம்**

நரசிம்ம பல்லவனின் தானைத்தலைவரை இவர் சந்தித்ததாகப் பெரிய புராணம் கூறும். நரசிம்மவர்மனின் காலம் **630-668.** அதனால் இவரது காலம் ஏழாம் நூற்றாண்டின் இடைப் பகுதி என்பர். திருநாவுக்கரசரை இவர் இருமுறை சந்தித்திருக்கிறார். இருவரும் சம காலத்தினர்.

**சில பாடல்கள்**

**இயற்கை வருணனை (ஓர் எடுத்துக்காட்டு)**

'வாவிதொறும் வண்கமலம் முகங்காட்டச் செங்கு முதம் வாய்கள் காட்டக்
காவியிருங் கருங்குவளை கருநெய்தல் கண்காட்டும் கழுமலமே.'

**அகவுணர்வுப் பாடல்**
சிவபெருமானைத் தலைவனாகவும் தான் தலைவியாகவும் வைத்துப் பாடும் பாடல் இது.

’சிறையாரும் மடக்கிளியே இங்கேவா தேனொடு பால்
முறையாலே உணத்தருவன் மொய்பவளத் தொடு தரளம்
துறையாரும் கடல் தோணி புரத்தீசன் துளங்கும் இளம்
பிறையாளன் திருநாமம் எனக்கொரு கால் பேசாயே.'

**நான்கு, ஐந்து, ஆறாம் திருமுறைகள்**

**(திருநாவுக்கரசர்) வரலாறு**

இவற்றைப் பாடியவர் திருநாவுக்கரசர். வாகீசர் எனவும் அழைக்கப்படுகின்றார். இவர் இயற்பெயர் மருள் நீக்கியார் என்பது. இவர் தமக்கையார் திலகவதியார் இவரைச் சமண சமயத்தினின்று சைவத்திற்குக் கொண்டு வந்தார்.

இறைவன் சூலை நோய்தந்து ஆட்கொண்டார். பல்லவன் மகேந்திரன் இவரை வாட்டினான் இவர் அஞ்சாமல் இறையருளால் அவற்றைத் தாங்கிக் கொண்டார்.

**காலம்**

சம்பந்தரை விட வயதில் மூத்தவர் மகேந்திரவர்மன் காலத்தவர். இவர் காலம் கிபி.**7**ம் நூற்றாண்டின் முற்பகுதி என்பர்.

**பாடல்கள்**

பாடியவை **4900** என்பர். கிடைத்தவை **3066,** இவை **312** பதிகங்களுள் அடங்கும்.

**யாப்பு**



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



இவர் பாடிய விருத்தப்பா தனிச்சிறப்பு வாய்ந்தவை தாண்டகம் எனப் பெயர் பெறும். இவரைத் தாண்டக வேந்தர் என்பர்.

**பாடல்கள் சில**

இவர் அஞ்சா நெஞ்சு வெளிப்படுத்தும் பாடல்;

'நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்
நகரத்தில் இடர்ப்படோம் நடலை இல்லோம்
ஏமாப் போம் பிணியறியோம் பணிவோம் அல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை.'

**இறை உணர்வுப் பாடல்**

'மாசில் வீணையும் மாலை மதியம்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.'

**ஏழாம் திருமுறை (சுந்தரர்)**

**வரலாறு**

இதைப் பாடியவர் சுந்தரர் திருக்கயிலையில் இறை வனுக்கு மலர்த்தொண்டு செய்து வந்தவர். அநிந்திதை கமலினி என்ற தெய்வ மகளிர் மீது அவர் காதல் கொண்டார். அவர்கள் இறைவிக்குத் தொண்டு செய்தவர்கள். இம் மூவரையும் மண்ணில் பிறந்து அவர்கள் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ள இறைவன் திருவுள்ளம் கொண்டார். அதன்படி கமலினி பரவையாராகவும், அநிந்திதை சங்கிலியாராகவும் பிறந்தனர்.

சுந்தரரின் மணநாளில் அவர் சடங்கவியின் மகளை மணம் செய்து கொள்ளாது தடுத்து அவரை ஆட்கொண் டார். இறைவனைத் தோழராகக் கொண்டார். வெள்ளை யானை மீது இவர்ந்து திருக்கயிலைக்குச் சென்றார் என்பர்.

**பாடல்கள்**

இவர் பாடிய பாடல்கள் 38,000 என்பர். கிடைத்தவை 1026, பதிகங்கள் 100ல் இவை அடங்கும்.

பித்தன் என்று இறைவனை விளிக்கவும் அதையே அவர் பாடுவதற்கு உரிய முதல் அடியாகக் கொடுத்தார் என்பர்.

**இயற்கை வருணனை (ஓர் எடுத்துக்காட்டு)**

'அரும்பருகே சுரும்பருவ அறுபதம் பண்பாட
அணிமயில்கள் நடமாடும் அணிபொழில் சூழ்வயலின்
கரும்பருகே கருங்குவளை கண்வளரும் கழனிக்
கமலங்கள் முகமலரும் கலயநல்லூர் காணே.'

**நகைச் சுவைப் பாடல்**



https://t.me/tnpscfree

'கங்கையாளேல் வாய் திறவாள்,
கணபதியேல் வயிறுதாரி
அங்கை வேலோன் குமரன் பிள்ளை;
தேவியார் கொற்றட்டி யாளர்
உங்களுக்கு ஆட்செய்ய மாட்டோம்
ஓண்காந்தன் தளியுளீரே'

## எட்டாம் திருமுறை (மாணிக்க வாசகர்)

மாணிக்க வாசகர் பாடியவை திருவாசகமும் திருக் கோவையாரும் ஆகும். எட்டாம் திருமுறை எனப்படும்.

### வரலாறு

இவர் திருவாதவூரில் பிறந்தவர் தந்தை சிவபாத இருதயர் தாய் சிவஞானவதியார். அரசன் அரிமர்த்தன பாண்டியன் பரிவாங்கத் தந்த பொருளைக் கோயில் திருப்பணிக்குச் செலவிட்டவர். திருப்பெருந்துறையில் குருந்த மரத்தடியில் இறைவனைத் தரிசித்துக் குருவாகக் கொண்டார் பிட்டுக்கு **மண்சுமந்த கதையில்** பாண்டியன் கைப்பிரம்பால் இவருக்காக இறைவன் அடிபட்டது கூறப்படுகிறது.

### காலம்

இவர் கி.பி. 9ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவர் என்று சொல்லப்படுகிறது.

### இவர் பாடிய பாடல்கள்

இவர் பாடிய நூல்கள் திருவாசகமும், திருக்கோவையாரும் ஆகும். திருவாசகம் 656 பாடல்கள் கொண்டு விளங்குகிறது. திருக்கோவையார் கட்டளைக் கலித்துறையில் பாடப்பெற்ற 400 பாடல்கள் கொண்டது. இவை இரண்டனையும் சேர்த்து எட்டாம் திருமுறை என்பர்.

### திருவாசகம்

'திருவாசகத்துக்கு உருகார் ஒரு வாசகத்துக்கும் உருகார்' என்னும் பழமொழி இதன் நெஞ்சு நெகிழ்விக்கும் பாங்கைப் புலப்படுத்தும். இராமலிங்க அடிகளும் 'வான் கலந்த மாணிக்கவாசகர்' என்று இவரைப் பாராட்டியுள்ளார்.

திருவாசகத்தில் பல பகுதிகள் அடங்கியுள்ளன. சிவபுராணம், கீர்த்தித் திருவகவல், போற்றித் திருவகவல், நீத்தல் விண்ணப்பம் முதலியவை இதன் கண் உள்ள பாடல்களாகும். மற்றும் திருவம்மானை, திருப்பொற் சுண்ணம், திருத்தெள்ளேணம், திருச்சாழல், திருப்பூவல்லி, திருப்பொன்னூசல் முதலிய பாடற் பகுதிகள் மகளிர் ஆடல்களை அடிப்படையாகக் கொண்டு அமைந்தவை யாகும். மற்றும் இவர் பத்துப் பத்தாகப் பல பாடல்கள் பாடியுள்ளமை சிறப்பியல்பாகும். அதிசயப்பத்து, அன்னைப்பத்து, ஆசைப்பத்து, அருட்பத்து, குயிற்பத்து முதலியன இத்தகையனவாம்.

திருவாசகத்தில்,

'வெள்ளம் தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானே எனக் கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளம் தாழ் உறுபுனலின் கீழ்மேல் ஆகப்
பதைத்துருகும் அவர்நிற்க என்னை ஆண்டாய்க்கு

https://t.me/tnpscfree



உள்ளந்தாள் நின்று உச்சி அளவும் நெஞ்சாய்
உருகாதால் உடம்பெல்லாம் **கண்ணாய் அண்ணா**
வெள்ளந்தான் பாயாதால் நெஞ்சம் கல்லாம்
கண்இணையும் மரமாம் தீ வினையி னேற்கே'

என்னும் உணர்ச்சிமிக்க இப்பாடல் பத்திச் சுவை நனி சொட்டிய பாடல் என்பதில் ஐயமில்லை.

**திருக்கோவையார்**

இது மாணிக்கவாசகர் பாடிய நூல் என்பர். இது 400 கட்டளைக் கலித்துறைகளைக் கொண்ட அகப்பாடல் துறைகளைக் கொண்ட கோவை நூலாகும். இறைவனைத் தலைவனாகவும் ஆன்மாவைத் தலைவியாகவும் கொண்டு இது பாடப்பட்டது என்ற உள்ளுறைக் கருத்தை இதற்கு ஏற்றிக் கூறுவர். இலக்கியக் கண்ணோட்டத்தோடு பார்க்கும் பொழுது இஃது ஒரு சிறந்த அகப் பொருள் கோவை நூலாகும்.

**ஒன்பதாம் திருமுறை (ஒன்பதின்மர் பாடியவை)**

ஒன்பதாந் திருமுறையாகக் கொள்ளப்படுவன திருவிசைப்பாவும், திருப்பல்லாண்டும் ஆகும். இவற்றுள் திருவிசைப்பாவைத் திருமாளிகைத் தேவர், சேந்தனார், சேதிராயர், கண்டராதித்தர், பூத்துருத்தி நம்பி காடவ நம்பி, கருவூர்த் தேவர் வேணாட்டடிகள், திருவாலி அமுதனார் புருடோத்தம நம்பி ஆகிய ஒன்பது பேரும் பாடி அருளினர்.

திருப்பல்லாண்டு பாடியவர் சேந்தனார், மொத்தம் 301 பாடல்கள் இப்பகுதியில் உள்ளன. கருவூர்த்தேவர் பத்துப் பதிகங்களில் அடங்கிய 105 பாடல்களைப் பாடி யுள்ளார். மற்றவர்கள் குறைந்த அளவே பாடியுள்ளனர்.

இத்தொகுதியில் தில்லையைப் பற்றிய பாடல்களே மிகுதியாகும். இத்திருமுறையைப் பாடிய அடியார்கள் 10, 11ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள். திருமாளிகைத் தேவர் பாடிய ஒரு பாடல் பத்திச் சுவை மிக்கதாக உள்ளது. அப்பாடலில் அவர் "கற்றவர் விழுங்கும் கற்பகக்கனியைக் கரையி**ல்லாக் கருணைமாக்** கடலை, மற்றவர் அறியாமாணிக்கமலையை மதிப்பவர் மனமணி விளக்கை" என்று இறைப்பெருமையினைப் பறையறைகின்றார். இவ்வொன்பதாம் திருமுறை 29 பதிகங்களைக் கொண்டதாகும்.

**பத்தாம் திருமுறை (திருமூலர் பாடியவை)**

சமய உலகில் பகுத்தறிவாளராகக் காட்சி அளிப்பவர் திருமூலராவார். இவர் பாடிய திருமந்திரமே 3000 பாடல்களைக் கொண்டது. யாக்கை நிலையாமை முதலானவற்றை விளக்கிக் கூறி, வீடுபேற்று நெறியினை விளக்கும் நூல் திருமந்திரம். ஒன்பது தந்திரங்களில் 232 அதிகாரங்கள் உள்ளன. இப்போது இடைச் செருகலோடு 3071 பாடல்கள் உள்ளன. திருமூலர் தில்லைப் பொன்னம்பலத்தைச் சில பாடல் களில் குறிப்பிடுவதால், பொன் வேய்ந்த சிம்மவர்மன் ஆண்ட ஐந்தாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவர் என்றும், ஆறாம் நூற்றாண்டின் முற்பகுதி என்றும் கூறுவர்.

இவருடைய திருமந்திரம் ஒன்பது தந்திரங்களாக அமைந்துள்ளது. கடவுள் வாழ்த்து விநாயகக் கடவுளைப் போற்றுவதாக உள்ளது. இப்பாடலைப் பிற்காலப் புலவர் ஒருவர் எழுதிச் சேர்த்திருக்கலாம் என்று சிலர் கூறுவர், திருமூலர் பாடல்களைப் பெரும்பாலும் உருவகங்க ளாகவே அமைத்துள்ளார். சைவ சமயக் கருத்துகளை விளக்கும் முதல் நூலாக இதைத்தான் கூறவேண்டும். மனிதன் ஐம்புலன்களையும் அடக்கினால் ஆற்றல் பெறலாம் என்பதை,

"பார்ப்பா னகத்திலே பாற்பசு ஐந்துண்டு;



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



மேய்ப்பாரு மின்றி வெறித்துத் திரிவன;
மேய்ப்பாரும் உண்டாய், வெறியும் அடங்கினால்
பார்ப்பான் பசுவைந்தும் பாலாய்ச் சொரியுமே''

என்று சித்தருக்கே உரிய பாணியில் கூறுகின்றார்.

இவர் ஆற்றொழுக்கான தெளிவான நடையில் நகைச் சுவையும் தமிழ்ச் சுவையும் ததும்பப் பாடல்களை இயற்றியுள்ளார்.

''மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தின் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்தின் மறைந்தது பார்முதற் பூதமே"

என்றும்,

"ஒன்றே குலம் ஒருவனே தேவன்"

என்றும் ,

"உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேன்''

என்று பாடும் இவர் பாடல்களில் உயர்ந்த கருத்துக்கள் மிளிர்வதைக் காணலாம்.

**பதினோராந் திருமுறை (பன்னிருவர்)**

**காரைக்காலம்மையார்**

தமிழக வரலாற்றின் இருண்ட காலத்திலும் ஒளி**விளக்காகச்** சிலர் திகழ்ந்தனர். அவர்களுள் ஒருவர் காரைக்காலம்மையார். சங்க காலத்தில் புலமை நூல் பெண்டிரைக் கண்டிருக்கலாம், ஆனால் அவர்களிடத்தில் சமயச்சாயலைக் கண்டிருக்க முடியாது. காரைக்காலம்மையாரோ சமயப் புலவராகத் திகழ்கிறார். வட நாட்டுச் சமயம், மொழி ஆகியவற்றினின்றும் தமிழ் நாட்டுச் சமயம் தமிழ்மொழி ஆகியவற்றைக் காப்பதில் முனைபவராக விளங்குகின்றார். இவர் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராவார். இவர் காலம் கி.பி. 6ஆம் நூற்றாண்டு.

**காரைக்காலம்**மையாருடைய வரலாறு பெரிய புராணத்தில் கூறப்பட்டுள்ளது. இவருடைய ஊர் காரைக்காலென்றும் இயற்பெயர் புனிதவதியார் என்றும் வரலாறு பகர்க்கின்றார். கணவனால் கைவிடப்பட்ட காரிகையார் எலும்புருக் கொண்டு கைலாயம் சென்றார். சிவபெருமான் அருளியபடி திருவாலங்காட்டில் சிவ னுடைய திருக் கூத்தைக் கண்டு மகிழ்ந்தார்.

இவர் இயற்றிய நூல்கள் அற்புதத் திருவந்தாதி திருவிரட்டை மணிமாலை, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் ஆகியவையாகும். இப் பாடல்கள் பதினோராம் திருமுறையில் அடங்கும்.

இறைவன் ஆடுகின்ற அழகை அற்புதத் திருவந்தாதியில்,

'அழலாட அங்கை சிவந்ததோ அங்கை
அழகால் அழல் சிவந்தவாறோ - கழலாடப்
பேயோடு கானிற் பிறங்க அனல் ஏந்தித்
தீயாடுவோய் இதனைச் செப்பு'

**பதினோராந் திருமுறையின் மற்ற நூல்கள்**



https://t.me/tnpscfree

சுந்தரரின் நண்பரான சேரமான் பெருமாள் நாயனார் பாடியவை திருக்கைலாய ஞானஉலா, பொன்வண்ணத் தந்தாதி ஆகியவை. இத்திருக்கைலாய ஞான உலாவே தமிழில் தோன்றிய முதல் உலா நூல் ஆகும். ஐயடிகள் காடவர்கோனின் சேத்திரத் திருவெண்பாவும், அதிரா அடிகள், இளம் பெருமானடிகள் ஆகியோர் இயற்றிய மும்மணிக் கோவையும், பட்டினத்தார் இயற்றிய நூல்களும், திருமுறை வகுத்தளித்த நம்பியாண்டார் நம்பி இயற்றிய நூல்களும் இப்பதினோராந் திருமுறையில் அடங்கும். திருத்தொண்டர் திருவந்தாதி நம்பி பாடியதே ஆகும். மற்றும் நக்கீரர் இயற்றிய திருமுருகாற்றுப் படை என்னும் 317 அடிகள் கொண்ட பாவும், இதில் அடக்குவர். கபிலர், பரணர், கல்லாடர் என்ற பெயரில் வழங்கிய அடியார்களும் இத்திருமுறைக்குப் பதிகங்கள் பாடியுள்ளனர்.

இவ்வடியார்கள் வெவ்வேறு நூற்றாண்டுகளில் வாழ்ந்தவர்கள். இவர்கள் தம் பாக்களில் இறை மணம் கமழ்வதைக் காணலாம். அரசராய் விளங்கிய சேரமான் பெருமாள் நாயனார் இயற்றிய திருக்கைலாய ஞான உலா நல்ல பா அமைப்புடைய நூலாகும். இவர் புவிவேந்தரா யும், கவி வேந்தராயும் விளங்கிச் சமயத் தொண்டாற்றிய பெருமானாவார். நம்பியாண்டார் நம்பிகள் முதலாம் இராசராசன் கட்டளையை ஏற்றுத்தில்லைக்குச் சென்று அங்குக் கிடைத்த தேவாரப் பாடல்களை எல்லாம் திருமுறையாக வகுத்தருளினார் என்பர்.

**பன்னிரண்டாந் திருமுறை :**

**சேக்கிழார்**

சேக்கிழார் என்னும் சைவப் பெரியார் கி.பி. 12ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் இவர் இரண்டாம் குலோத்துங்கனிடம் அமைச்சராய் இருந்தவர். சோழ மன்னன் சைவம் விட்டுச் சமணம் தழுவியதைக் கண்டு வருந்தித் திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணத்தைப் பாடியருளினார். இவர் ஒவ்வொரு பதிக்கும் நேரில் சென்று உண்மையான வரலாற்றைக் கண்டு தமது நூலை ஆக்கினார். அதனால் அவர் நூல் ஒரு வரலாற்று நாலாகவும் விளங்குகிறது. இவருடைய இந்நூலுக்குச் சுந்தரர் இயற்றிய திருத்தொண்டர் தொகையும் நம்பியாண்டார் நம்பிகள் இயற்றிய திருத்தொண்டர் திருவந்தாதியும் ஆதார நூல்களாக அமைந்தன.

**காலம்**

இவரது காலம் சோழர் காலமாகும் கம்பருக்கு முற்பட்டவர். எனவே இவர் காலம் 12 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி என்று கருதப்படுகிறது.

**நூல்**

சேக்கிழார் இயற்றியருளிய பெரிய புராணமே சைவத் திருமுறைகளுள் பன்னிரண்டாம் திருமுறையாக விளங்குகிறது. இந்நூல் இரண்டு காண்டங்களாகவும், பதின் மூன்று சருக்கங்களாகவும் அமைந்துள்ளன. ஏறத்தாழ 4253 பாடல்களைத் தன்னகத்தே கொண்டு 63 நாயன்மார்களின் வரலாற்றையும் கூறுகின்றது. சிவனடியார்களின் வாழ்க்கை வரலாறுகளைக் கூறும் சேக்கிழார் சுந்தரர் வரலாற்றில் தொடங்கி, அவர் வரலாற்றிலேயே முடிக்கும் திறன் போற்றத்தக்கதாகும். சைவ நாயன்மார்களின் பெருந் தொண்டினை உணர்த்தும் ஒரு சிறந்த நூல் இது. எளிய நடை, தெளிவான சொற்கள், உயர்ந்த கருத்துக்கள், பண்பாட்டு நெறிகள், பக்தி உள்ளிட்ட பல சுவைகள் நிறைந்தது.

சேக்கிழாரின் இயற்பெயர் "அருண் மொழித் தேவர்" என்பது. அமைச்சராய் இருந்த காலத்து அரசனாக இருந்தவன் இரண்டாம் குலோத்துங்க சோழன். பெரிய புராணம் பாடிய பின் அவருக்களித்த பட்டப் பெயர் தொண்டர் சீர் பரவுவார் என்பதாகும். "பத்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவ"

https://t.me/tnpscfree



என்று மீனாட்சி சுந்தரனாரால் புகழப்பட்ட இவர் பாடல்களில் வருணனைக்கு அளவில்லை. இதோ ஒரு பாடல்

"காடெல்லாம் கழைக் கரும்பு; காவெல்லாம் குழைக்கரும்பு;
மாடெல்லாம் கருங்குவளை, வயலெல்லாம் நெருங்குவளை;
கோடெல்லாம் மடவன்னம் குளமெல்லாம் கடலன்ன
நாடெல்லாம் நீர்நாடு தனை ஒவ்வா நலமெல்லாம்;

இப்பாடல் சோழ நாட்டின் வளத்தைப் படம் பிடித்துக் காட்டுவது போல் அமைந்துள்ளது.

சுந்தரர் பரவையாரின் மீது கொண்ட காதலை,

'கற்பகத்தின் பூங்கொம்போ காமன்தன் பெருவாழ்வோ
**பொற்புடைய புண்ணியக்தின் புண்ணியமோ புயல்சுமந்து**
விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக் கொடியோ
அற்புதமோ சிவனருளோ அறியேனென்று அதிசயித்தார்'

என்று பாடுகிறார்.

**பன்னிரு ஆழ்வார்கள்**

வைணவ அடியார்களாகிய ஆழ்வார்கள் பன்னிருவர். அவர் தம் நூல்கள் இருபத்து நான்கு பாடிய மொத்தப் பாடல்கள் ஏறத்தாழ நாலாயிரம். அவை நான்கு பகுதிகளாக நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் இடம் பெற்றுள்ளன. கி.பி. ஆறாம் நூற்றாண்டு தொடங்கி ஒன்பதாம் நூற்றாண்டுக்கு உட்பட்ட முந்நூறு ஆண்டுக் காலத்தில் இத்திரு**மால் அடியார்கள் அற்புதத்** திருப் பாசுரங்களைப் பாடித் தமிழையும் இறையுணர்வையும்

ஒருங்கே வளர்த்துள்ளனர். எளிமையும், இனிமையும், அழகும் பொலிந்து விளங்குகின்ற நாலாயிரம் பாடல்கள் தமிழின் பெருமையை என்றும் நிலைநாட்டுவன. இவற்றைத் தொகுத்தவர் நாதமுனிகள் ஆவார்.

**1. பொய்கையாழ்வார்**

பொய்கையாழ்வார் காஞ்சியில் பிறந்தவர். இவர் சங்க காலப் பொய்கையார் அல்லர். பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகிய மூவரையும் முதலாழ் வார்கள் என்பர். மூவரும் ஒருகால் தனித்தனியே திருக் கோவலூரை அடைந்து ஒரு வைணவர் வீட்டின் இடைக் கழியில் இருந்தனர். ஒருவர் படுக்கவும், இருவர் இருக்கவும், மூவர் நிற்கவும் இருந்த அச்சிறிய இடத்தில் நாலாமவராக இறைவன் வந்து நெருக்கிப் பின் தம் அருட் காட்சியினை அவர்களுக்கு அளித்தான் என்பர். இப் பொய்கை யாழ்வாரின் நூல் முதல் திருவந்தாதி' எனப்படும்.

'வையந் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காகச்-செய்ய
சுடராழி யானடிக்கே சூட்டினேன் சொல்மாலை
இடராழி நீங்குகவே என்று'

என்று இறைவனுக்குப் பாமாலை சூட்டிய நிலையினை உரைக்கின்றார். இவர் பாடியது 72 பாசுரங்கள். அந்தாதி முறையில் வெண்பா யாப்பில் அமைந்தது.

**2. பூதத்தாழ்வார்**



https://t.me/tnpscfree

கடன்மல்லை எனப்படும் மாமல்லபுரத்தில் தோன்றியவர் பூதத்தாழ்வார். திருமாலைப் "பூதம்" என்று பாடியதனால் இப்பெயர் பெற்றார் எனக் கருத இடம் உள்ளது.

அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியா - என்புருகி
ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ் புரிந்த நான்'

என்னும் பாடல் இவர் பாடிய இரண்டாம் திருவந்தாதி யின் முதல் பாடல். இவரும் வெண்பாவாக அந்தாதி அமைப்பில் பாடியுள்ளார். இவர் காலம் 7ஆம் நூற்றாண்டு.

### 3. பேயாழ்வார்

இவர் திருமயிலையில் பிறந்து திருமாலைப் பாடிப் புகழ் பெற்றவர். இவர் இறைவன் மீது மிகுந்த காதல் கொண்டு பேயாய் அலைந்ததனால் பேயாழ்வார் என்ற பெயர் பெற்றார் என்பர்.

'திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்
அருக்கன் அணிநிறமும் கண்டேன்-செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன் புரிசங்கம் கைக்கண்டேன்
என்னாழி வண்ணன்பால் இன்று'

என்னும் பாடல் தொடங்கி நூறு வெண்பாக்களைக் கொண்ட அந்தாதி நூல் பேயாழ்வார் பாடிய மூன்றாம் திருவந்தாதி. இவரும் பூதத்தாரும் ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்தவர் என்பர்.

### 4. திருமழிசையாழ்வார்

தொண்டை நாட்டின் ஒரு பகுதியாகிய திருமழிசை யில் பிறந்தவர் இவர். பக்திசாரர் என்ற பெயர் கொண்டவர். பெற்றோரை இழந்த இவரை ஒரு தாழ்ந்த குலத்தவன் வளர்த்து வந்தான். இறைவன் அருளினை முழுமை யாகப் பெற்ற இவ் ஆழ்வாரின் கூற்றுப்படி காஞ்சிபுரத்தில் திருமால் தன் பைந் நாகப்பாய் சுருட்டிக் கொண்டு சென்றான் என்றும், பின்னர் அவர் விரும்பியபடியே பைந்நாகப் பாய் விரித்துக் கொண்டான் என்றும் கூறுவர். இதனால் திருமாலும் அங்குச் சொன்ன வண்ணம் செய்த பெருமாள்' என்று பெயர் பெற்றார்.

இவர்பாடியவை திருச்சந்த **விருத்தம், நான்முகன் திருவந்தாதி** என்பவை. இவரது காலம் கி. 7ஆம் நூற்றாண்டு.

'ஒன்றி நின்று நல்தவம் செய்து
ஊழி ஊழி தோறெலாம்
நின்று நின்று **அவன்கு ணங்கள்**
உள்ளி உள்ளம் தூயராய்ச்
சென்று சென்று தேவ தேவர்
உம்பர் உம்பர் உம்பராய்
அன்றி எங்கள் செங்கண் மலை
யாவர் காண வல்லரே'

என்று திருமாலைக் காண வல்லவர் யார் என்பதைப்பகர்கின்றார்.

### 5. நம்மாழ்வார்

திருக்குருகூரில் வேளாளர் குலத்தில் தோன்றியவர் மாறன்' என்ற இயற்பெயர் பெற்ற நம்மாழ்வார். அங்கே புளியமரத்தடியில் பதினாறு ஆண்டுகள் யோக நிலையில் இருந்தார். ஆழ்வார்களுள் இவரை

https://t.me/tnpscfree



உடலாகவும் மற்றை யோரை உறுப்பாகவும் வைணவர் கருதுவர். இவர் தந்தையார் அமைச்சராயிருந்தவர். சடகோபன், பராங்குசன், வகுளாபரணன் முதலானவை இவரது வேறு

பெயர்கள். திருவாய்மொழி, திருவாசிரியம், திருவிருத்தம், பெரிய திருவந்தாதி ஆகிய நான்கு நூல்களை நம்மாழ்வார் பாடியுள்ளார். திருவாய்மொழி 'திராவிட வேதம்' என்று போற்றப்படுவது இறுதி ஆயிரமாகத் திகழ்வது; வேத சாரமாக விளங்குவது. இதற்குப் பல சிறந்த உரைகள் உள்ளன. அவற்றுள் பெரிய வாச்சான் பிள்ளையவர்கள் உரை சிறந்து விளங்குகிறது.

'உயர்வற உயர்நல முடையவன் யவனவன்
மயர்வற மதிநல மருளினன் யவனவன்
அயர்வறும் அமரர்கள் அதிபதி யவனவன்
துயரறு சுடரடி தொழுதெழன் மனனே'

என்பது ஆழ்வார் அருளிய தத்துவப் பொருளமைந்த பாசுரமாகும். அகப்பொருள் மரபை ஒட்டியும் ஆழ்வார் பாடியுள்ளார்.

இவர் எல்லா நாட்டிற்கும், எல்லா இனத்திற்கும் பொதுவாய் உரியவர். அதனால் திரு.வி.க. இவரை 'வாயால் வாழ்த்துகின்றேன். கையால் தொழுகிறேன்' என்று புகழ்கின்றார். எல்லோரும் நம்மாழ்வாரென்று பெருமையுடன் போற்றும் இவர்,

'பூவையும் காயாவும் நீலமும் பூக்கின்ற
காவிமலரென்றும் காண்டொறும் - பாவியேன்
மெல்லாவி மெய்மிகவே பூரிக்கும் அவ்வவ
எல்லாம் பிரான் உருவே'

என்று உளங்கசிந்து உருகுகின்றார்.

### 6. மதுரகவியாழ்வார்

இவர் நம்மாழ்வாரின் சீடர் திருக்கோளூர் இவரது பிறப்பிடம் ஆகும். அயோத்திக்கு ஒருமுறை சென்றபோது அங்கு ஓர் ஒளியினைக் கண்டு அதனைத் தொடர்ந்து பின்பற்றிவர நம்மாழ்வாரை வந்தடைந்தனர் என்பர். திருக்குருகூரில் வந்து சேர்ந்து மதுரகவியார் அவர் சீடரானார். நம்மாழ்வாரின் பாடல்களனைத்தையும் தம் கரத்தால் ஓலையில் எழுதிப் பெருமை பெற்றவர். திருமாலை விட்டு ஆழ்வாரையே தம் தெய்வமாகக் கருதி வழிபட்டவர். இவர் பாடிய நூல் கண்ணிநுண் சிறுதாம்பு' என்பது, அளவால் மிகச் சிறியது.

'நண்ணித் தென்குருகூர் நம்பியென்றக்கால்
அண்ணிக்கும் அமுதூறும் என் நாவுக்கே'
குறுகூர்நம்பி பாவின்னிசை பாடித் திரிவேனே'

என்று இவர் பாடும் அடிகள் நம்மாழ்வாரின் சிறப்பைப் பாடுவதாகவே உள்ளது.

### 7. குலசேகராழ்வார்

திருவஞ்சைக்களத்தில் சேர அரசபரம்பரையில் தோன்றியவர் குலசேகராழ்வார். சேர குலமும் வைணவ குலமும் தழைக்கப் பிறந்ததனால் இவர் குலசேகரர்' ஆனார். வீரப் போர் புரிந்து வெற்றி பல கண்ட இவர் பின்னர் திருமால் அடியரானார். பக்தி மேலீட்டால் பாசுரங்கள் பாடினார். இராமன் மீது பித்துக் கொண்டிருந் தார். வடமொழியும் தமிழ் மொழியும் நன்குணர்ந்தவர். வடமொழியில் முகுந்தமாலை' என்னும் நூலையும், தமிழ் மொழியில் பெருமாள் திருமொழி' என்னும் நூலையும் பாடினார். இது 05



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



இனிய பாசுரங்களின் தொகுப்பாகும்; கவிதை நயமும் பக்திச் சிறப்பும் இவர் பாடல்களின் தனித் தன்மைகளாக விளங்குகின்றன.

'அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்
படியாய்க் கிடந்துன் பவளவாய் காண்பேனே.'

என்று திருவேங்கடத்துப் பெருமானின் கோயில் படியாய்த் தாமிருக்க வேண்டும் என்று பாடினார். இன்றும் அங்கு இறைவன் முன்னிலையில் உள்ளபடி 'குலசேகரப்படி' என்றழைக்கப்படுகிறது. இவருடைய காலம் 9-ஆம் நூற்றாண்டு.

'மன்னுபுகழ்க் கௌசலைதன் மணிவயிறு வாய்த்தவனே
தென்னிலங்கைக் கோன்முடிகள் சிந்துவித்தாய் செம்பொன்சேர்
கன்னிநன்மா மதிள்புடைசூழ் கணபுரத்தென் கருமணியே
என்னுடைய இன்னமுதே இராகவனே தாலேலோ'

என்பது இராமனுக்கு இவர் பாடிய ஒரு தாலாட்டுப் பாடாகும். இவருடைய காலம் கி.பி. 8-ஆம் நூற்றாண்டு என்பர்.

### 8. பெரியாழ்வார்

திருவில்லிபுத்தூரில் வேயர் குலத்தில் பிறந்தவர்; விட்டுணுசித்தர் என்னும் இயற்பெயருடையவர் இவர். பூந்தோட்டம் அமைத்து நாள்தோறும் பெருமாளுக்குப் பூமாலை சார்த்தும் திருத்தொண்டு புரிந்து வந்தார். இவர் இறைவனுக்கே திருப்பல்லாண்டு பாடியதால் பெரியாழ்வார் என்றழைக்கப்பட்டார். இவர் பாடிய திருப்பல்லாண்டு நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தின் தொடக்கத்தில் அமைந்துள்ளது. இவர் கண்ணனைக் குழந்தையாகக் கொண்டு, தன்னையே தாயாக பாவித்துத் தாலாட்டுப் பாடிய பெருமானாவார். இம்முறையே பின்னர், பிள்ளைத் தமிழ் என்னும் இலக்கிய வகை தோன்றக் காரணம் என்பர். ஆழ்வார் பாடியது மற்றொரு நூல் பெரியாழ்வார் திருமொழி. இப்பெருமானரே ஆண்டாளை வளர்த்தவர் ஆவார்.

"பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத் தாண்டு
பலகோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா! உன்
சேவடி செவ்வி திருக்காப்பு"

என்னும் பாடல் பெரியாழ்வாரின் திருப்பல்லாண்டு ஆகும்.

"மாணிக்கம் கட்டி வயிரமிடை கட்டி
ஆணிப்பொன் னாற்செய்த வண்ணச் சிறுதொட்டில்
பேணி உனக்குப் பிரமன் விடுதந்தான்
மாணிக் குறளனே தாலேலோ
**வைய மளந்தவனே தாலேலோ**"

என்பது இவர் பாடிய தாலாட்டுப் பாடலாகும். இவரது காலம் 9-ஆம் நூற்றாண்டு.

### 9. ஆண்டாள்

பெரியாழ்வாரின் வளர்ப்பு மகள் கோதை என்னும் ஆண்டாள். திருமாலுக்குப் பூமாலை சூடிக் கொடுத்த காரணத்தால் சூடிக் கொடுத்த சுடர்க்கொடி என்னும் பெயர் பெற்றார். திருமாலையே மணம் புரிவேன் என இரவும் பகலும் நினைத்து ஏங்கி, இறுதியில் திருவரங்கத்தில் அவனோடு ஒன்றானார் என்பர். ஆண்டாள் ஒரு கற்பனைப் பாத்திரம் என்பர் சிலர். இவர் பாடியது நாச்சியார் திருமொழியும், திருப்பாவையும் ஆகும். திருப்பாவை இன்றும் மக்களால் பெரிதும் விரும்பிப் பயிலப்படுவதாகும்.



https://t.me/tnpscfree

இவர் திருப்பாவையில் "மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்நாளில் நேரிழையாரெல்லாம் எழுந்து வாருங்கள் நீராடச் செல்லுவோம் என்று அழைக்கின் றார். இவர் திருமாலையே மணம் செய்து கொள்ள வேண்டும் என்ற உறுதியில், "மானிடர்க்கு என்று பேச்சுப்படில் வாழகில்லேன்" என்று பாடுகின்றார்.

'மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத் தாமம் நிரைதாழ்ந்த பந்தற்கீழ்
**மைத்துனன் நம்பி மதுசூதனன் வந்தென்னைக்**
கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழீநான்'

என்னும் நாச்சியார் திருமொழிப் பாசுரம் அவரது காதல் மணத்தை அழகுறக் காட்டுவதாகும். இவரது காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு என்பர்.

### 10. தொண்டடிரப் பொடியாழ்வார்

திருமண்டங்குடி என்னும் சோழ நாட்டுப் பகுதியில் முன்குடுமிச் சோழியப் பார்ப்பனர் குலத்தில் தோன்றியவர் தொண்டடிரப் பொடியாழ்வார். இவர் இயற்பெயர் விப்பிரநாராயணர், அடியாராகிய இவர் ஒரு பொதுமா தினை விரும்பி, மையலுற்று அவளோடு சில காலம் வாழ்ந்து பின் இறைநெறியினைத் தொடர்ந்தார் என்பர். இவர் பாடிய பாடல்கள் அழகும் உருக்கமும் கொண்டவை. 'திருமாலை, திருப்பள்ளியெழுச்சி' என்பன இவரது நூல்கள் ஆகும்.

'பச்சைமா மலைபோல் மேனி பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமரரேறே ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிரயான் போய் இந்திர லோக மாளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே'

என்று இறைவனின் தோற்றப் பொலிவினை அழகிய கவிதையாக வடித்துத் தருகின்றார். இப்பெருமானார். இவருடைய காலம் கிபி. 8 ஆம் நூற்றாண்டு என்பர்.

### 11. திருப்பாணாழ்வார்

உறையூரைச் சார்ந்தவர் திருப்பாணாழ்வார், பாணர் குலத்தில் - தீண்டத்தகாதவராகப் - பிறந்தவர். அதனால் இவர் கோயிலுக்குள் செல்லாமல் காவிரியாற்றங் கரையிலே நின்று அரங்கன் குடிகொண்டிருக்கும் ஆலயம் நோக்கிப் பாடி வந்தார். ஒருநாள் இவரை இறையன்ப ரென்று பாராது மற்றவர்கள் கல் கொண்டடித்தார்கள். அப்போது திருவரங்கநாதர் தம் நெற்றியில் குருதி கொட்டச் செய்தார். நல்லவர் ஒருவர் கனவில் தோன்றித் திருப்பாணாழ்வாரை ஆலயம் அழைத்துவரச் செய்தார். இறைவனை நேரில் கண்ட ஆழ்வார், இறைவன் அழகிலே மையல் கொண்டு அமலனாதிபிரான்' என்ற பதிகத்தைப் பாடியருளினார்.

'கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணெய்
உண்ட வாயன்என் உள்ளம் கவர்ந்தானை
அண்டர் கோன்அணி அரங்கன்என் அமுதினைக்
கண்ட கண்கள் மற்று ஒன்றினைக் காணாவே'

என்று மாலிடம் கொண்ட மயக்க நிலையில் பாடுகின்றார். இவருடைய காலம் கிபி. 8-ஆம் நூற்றாண்டு என்பர்.

### 12. திருமங்கையாழ்வார்

நாலாயிரப் பிரபந்தத்தில் மிகுதியாகப் பாடியவர் இவ்வாழ்வார், திருக்குறையலூரில் 'நீலன்' என்ற பெயரோடு பிறந்து பின்னர் மன்னனிடம் 'பரகாலன்' என்ற பெயரோடு சேனைத் தலைவராக இருந்து,

திருமங்கை' என்னும் பதியைத் தலைநகராகக் கொண்டு வாழ்ந்தவர். இவர் குமுதவல்லி என்னும் மாதினை மணந்து திருமால் அடிய வர்க்குப் பெருந்தொண்டு புரிந்தார். தம் கைப்பொருள் முழுவதையும் செலவழித்தபின், இறைத்தொண்டிற்காக வழிப்பறியும் தயங்காமல் செய்தார் அப்போது இறைவனால் ஆட்கொள்ளப் பெற்றார்.

இவர் பாடிய நூல்கள் பெரிய திருமொழி திருக்குறுந்தாண்டகம் திருநெடுந்தாண்டகம், சிறிய திருமொழி, பெரிய திருமடல் திருவெழுகூற்றிருக்கை என்பவை. இவற்றைத் திருவாய்மொழி முதலான நம்மாழ்வாருடைய தமிழ் வேதத்தின் ஆறு அங்கங்கள் என்பது மரபு. இறையுணர்வும், உருக்கமும், இலக்கிய நயமும் கொண்டவை இவரது சிறப்புமிக்க பாசுரங்கள். 'வாடினேன் வாடி வருந்தினேன்' 'ஏழை ஏதலன்' முந்தை வண்ணம்' முதலிய பாடல்கள் அழகானவை.

"குலம்தரும் செல்வம் தந்திடும் அடியார் படுதுயர் ஆயினவெல்லாம்
நிலந்தரஞ் செய்யும் நீள்விசும்பருளும் அருளொடு பெருநிலமளிக்கும்
வளந்தரும் மற்றும் தந்திடும் பெற்ற தாயினும் ஆயின செய்யும்
நலந்தருஞ் சொல்லை நான் கண்டு கொண்டேன் நாராயணா
என்னும் நாமம்"

என்பது ஆழ்வார் நாராயணன் மேல் கொண்ட பக்தியை நன்கு காட்டும். இவருடைய காலம் கி.பி.8-ஆம் நூற்றாண்டு.

**பன்னிரு திருமுறைகள் (சைவ இலக்கியங்கள்)**

| **பாடியவர்கள்** | **நூல்கள்** |
|---|---|
| 1. திருஞானசம்பந்தர் | முதல் மூன்று திருமுறைகள் (திருக்கடைக் காப்பு ) |
| 2. திருநாவுக்கரசர் | 4, 5, 6ஆந்திருமுறைகள் (தேவாரம்) |
| 3. சுந்தரர் | ஏழாந் திருமுறை (திருப்பாட்டு) |
| 4. **மாணிக்கவாசகர்** | எட்டாந் திருமுறை (திருவாசகம், திருக்கோவையார்) |
| 5. ஒன்பதின்மர் | ஒன்பதாம் திருமுறை (திருவிசைப்பா) |
| 6. திருமூலர் | பத்தாம் திருமுறை (திருமந்திரம்) |
| 7. பன்னிருவர் | பதினோராம் திருமுறை (பக்திப் பாடல்கள்) |
| 8. சேக்கிழார் | பன்னிரண்டாம் திருமுறை (பெரிய புராணம்) |

**பன்னிரு ஆழ்வார்கள் (வைணவ இலக்கியங்கள்)**

| **பாடியவர்கள்** | **நூல்கள்** |
|---|---|
| 1.பொய்கையார் | **முதல் திருவந்தாதி** |
| 2. **பூதத்தாழ்வார்** | **இரண்டாம் திருவந்தாதி** |
| 3. **பேயாழ்வார்** | **மூன்றாம் திருவந்தாதி** |

| | |
|---|---|
| 4. **திருமழிசை ஆழ்வார்** | திருச்சந்த விருத்தம்,<br>நான்முகன் திருவந்தாதி |
| 5. நம்மாழ்வார் | **திருவாசிரியம், திருவாய்மொழி, திருவிருத்தம், பெரிய திருவந்தாதி** |
| 6. **மதுரகவியாழ்வார்** | **கண்ணிநுண் சிறுதாம்பு** |
| 7. குலசேகராழ்வார் | பெருமாள் திருமொழி |
| 8. பெரியாழ்வார் | திருப்பல்லாண்டு,<br>பெரியாழ்வார் திருமொழி |
| 9. ஆண்டாள் | நாச்சியார் திருமொழி,<br>திருப்பாவை |
| 10. தொண்டரடிப்பொடி ஆழ்வார் | திருமாலை, திருப்பள்ளியெழுச்சி |
| 11. திருப்பாணாழ்வார் | அமலனாதிபிரான் |
| 12. திருமங்கையாழ்வார் | பெரியதிருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம்,சிறிய திருமடல், பெரிய திருமடல், திருவெழுகூற்றிருக்கை |

## 4. சோழர் காலம் (கி.பி. 800 - 1200)

**காப்பியங்கள்**

பல்லவர்கள் காலம் சைவ வைணவ **இலக்கியங் களுக்கு** வழிகோலின. சோழர் காலம் பெருங் காப்பியங் களைத் தோற்றுவித்தன. திருத்தக்கதேவர், சேக்கிழார், கம்பர் முதலிய மாபெரும் கவிகள் அழியா இலக்கியங் களைப் படைத்தது இக்காலமே சிலம்பும், மேகலையும் தொடர் நிலைச் செய்யுட்களுக்கு அடிகோலின.

அவற்றைத் தொடர்ந்து ஆழ்வார்களும் நாயன்மார்களும் பாடிய விருத்தப் பாக்கள் உடன் சேரக்காப்பியங்கள் தோன்றின இவற்றை ஆதரித்தவர்கள் சோழப் பெருமன்னர்கள் ஆவர்.

கி.பி. 9ஆம் நூற்றாண்டிலிருந்து 13 ஆம் நூற்றாண்டு வரை சோழர்கள் தமிழகத்தை ஆண்டனர். அவர்கள் காலத்தில் கலையும், இலக்கியமும் புத்தெழுச்சி பெற்றன. சிற்பக்கலைக்கு எடுத்துக்காட்டாகத்தஞ்சைப் பெரிய கோயிலைக் குறிப்பிடலாம். இக்காலத்தில் பௌத்த சமண, வைணவ, சைவ சமயங்கள் வேறுபாடின்றிப் போற்றி வளர்க்கப்பட்டன.

சமணப் பின்னணியில் திருத் தக்க தேவர் எழுப்பிய சிந்தாமணியும், சைவ சமயத்திற்குச் சேக்கிழார் எழுதிய பெரிய புராணமும், வைணவச் சார்பில் கம்பர் எழுதிய இராம காவியமும், பௌத்த அடிப்படையில் குண்டலகேசியும் நீலகேசியும் அக்காலத்தில் எழுந்த காப்பியங்களாம். ஒவ்வொரு சமயமும் மாபெரும் காப்பியங்கள் எழுவதற்குத் துணை செய்தன.

இவை சமயப் பின்னனியைக் கொண்டிருந்த போதிலும் பக்திப் பாடல்களாக அமையாமல் இலக்கியப் பாங்கு உடைய காவியங்களாக அமைந்து இலக்கிய வளர்ச்சிக்குத் துணை செய்தன.

**காப்பியத்தின் கூறுகள்**

1. அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு பொருள்களைக் கூறும். இவற்றுள் வாழ்த்து அல்லது வணக்கம் முதற்கண் இடம் பெறும்.

https://t.me/tnpscfree



2. மலை, கடல், நாடு, நகர், பொழுது, ஞாயிறு, திங்கள் இவற்றின் வருணனைகள் இடம் பெறும்.

3. தன்னிகரில்லாத் தலைவனைப் பெற்று இயங்கும்.

4. நீர் விளையாட்டு, சோலை விளையாட்டு, மதுஉண்டு மகிழ்தல், மணவாழ்வு, மக்கள் பேறு முதலியன அமையும்.

5. அரசியல், அமைச்சியல், போர், தூது, பயணம், வெற்றி முதலியன இடம் பெறும்.

6. சருக்கம், படலம், இலம்பகம், பரிச்சேதம் முதலிய பிரிவுகளைப் பெறும்.

7. புனைவியல் மிகுதியாக இடம்பெறும்.

8. தீமை அழிய நன்மை தலையோங்குவதாக முடியும்.

9. தமிழ்க் காப்பியங்கள் பொதுவாக இன்பியலிலேயே முடிவு பெற்றன.

**ஐம்பெருங்காப்பியங்கள்**

**இரட்டைக் காப்பியங்கள்**

தமிழில் தோன்றிய காப்பிய**ங்களை ஐம்பெருங்காப்பியங்கள்** எனவும், ஐந்து சிறு காப்பியங்கள் எனவும் வகைப்படுத்திக் காண்பர். சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி, இவை ஐம்பெருங் காப்பியங்கள் ஆகும். இவற்றுள் கி.பி. இரண் டாம் நூற்றாண்டிலேயே தோன்றியவை சிலப்பதிகாரமும், மணிமேகலையும் ஆகும். இவை ஒரே காலத்தில் தோன்றி யமையினாலும், ஒரே கதைக் கருவைச் சுற்றிப் பின்னப்பட்டிருத்தலாலும் இவற்றை இரட்டைக் காப்பியங்கள் என்பர்.

**1. சிலப்பதிகாரம்**

'நெஞ்சை அள்ளும் சிலப்பதி காரமென்றோர் - மணி
யாரம் படைத்த தமிழ்நாடு'

என்று இதனைப் பாரதியார் பாராட்டினார். ஐந்து காப்பியங்களும் மகளிர் அணியும் அணிகலன்களை ஒட்டிப் பெயர் அமைந்திருப்பது வியத்தற்கு உரியது. கண்ணகியின் காற்சிலம்போ கதைக்குக் கருவாக அமைந்திருத்தலின் இது சிலப்பதிகாரம் என்னும் பெயர்பெற்றது.

**இதன் காலம்**

சேரன் செங்குட்டுவன் பத்தினிக் கடவுளுக்கும் கோயில் கட்டிச் சிலையமைத்து வழிபாடு செய்தான். அவ் வழிபாட்டிற்கு **இலங்கை மன்னன் க**யவாகு வந்திருந்தான் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது.

இலங்கை வரலாற்று நூல்களான மகாவசம், இராஜாவளி என்பவை இவன் காலம் கிபி. 114- து36 என அறிவிக்கிறது. ஆகவே இவனுடைய காலமே சிலப்பதிகாரம் எழுந்த காலம் எனக் கணிக்கப்படுகிறது. அது கி.பி. 2ம் நூற்றாண்டு ஆகும்.

**குடிமக்கள் காப்பியம்**

காப்பியம் என்பது தன்னிகரில்லாத தலைவனை உடைத்தாய் நாடு நகர இயற்கை வருணனைகள் பெற்று அறம் பொருள் இன்பம் வீடு என்னும் உயர்ந்த நோக்கங்களைத் தாங்கி அமைவது என்பர். பொதுவாக அரசர் களையே தலைவர்களாக வைத்துக் காப்பியம் அமைப்பர்.



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



இங்கே மக்களுள் சிறந்தவனாகிய கோவலனையும், கற்பின் செல்வியாகிய கண்ணகியையும் காப்பியத் தலைவர்களாக வைத்து இக் காப்பியம் இயற்றப்பெற்றுள்ளது. இது இதன் தனிச் சிறப்பாகும். பெண்மைக்கு உயர்வு தரும் நோக்கில் இது படைக்கப்பட்டதாகும். அவ்வகையில் இலக்கிய வரலாற்றில் பெண்மைக்கு உயர்வு தரும் அதி அற்புதமான காப்பியமாக இது விளங்குகிறது. இதை ஒட்டி மணிமேகலையும் பெண்மைக்கு உயர்வு தருகிறது.

**காப்பியத்தின் நோக்கம்**

காப்பியம் மூன்று உண்மைகளை உணர்த்துகிறது.

'அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற் றாவதூஉம்
உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பதூஉம்'

இக்காவியம் உணர்த்தும் செய்திகளாகும்.

ஊழ்வினை உத்து வந்து ஊட்டும் என்பது கதை நிகழ்ச்சிக்கும் பின்னணிக்கும் பயன்படுத்தும் உத்தியாகும். கோவல**ன் கொலைக்கு** எந்தத் தனிப்பட்ட வரும் காரணம் **அல்லர் ஊழ்வினையே என்பது** ஆசிரியர் கோட்பாடு ஆகும். சமண சமயத்தின் கோட்பாடு ஊழ்வினையின் ஆற்றலை வற்புறுத்துவதாகும், அதனை இக் காப்பியத்தில் நன்கு காட்டியுள்ளார்.

முறை தவறிய பாண்டியன் உயிர் விடுகிறான் அவன் ஆட்சி குலைகிறது அரசியல் பிழை செய்தவர் அழிவர் என்பது இந்நிகழ்ச்சியால் காட்டப்படுகிறது.

கண்ணகியைத் தெய்வமாக்கி அவள் வழிபடத் தக்கவள் என்று காட்டுவதே இக்காப்பியத்தின் தலையாய நோக்கமாகிறது. ஏனைய இரண்டு உண்மைகளும் எந்தக் காவியமும் காட்டும் பொதுச் செய்திகளாம். கற்பிற் சிறந்த காரிகை தொழத்தக்க தெய்வம் என்று காட்டுவதில் இது தனிச் சிறப்புப் பெறுகிறது.

**இயற்கை வழிபாடு**

கடவுள் வாழ்த்தோடுதான் ஏனைய காப்பியங்கள் தொடங்கும் இயல்பின. அவ்வாறு தொடங்க வேண்டும் என்பது காப்பிய இலக்கணம். இது பிற்காலத்து மரபு என்று தெரிகிறது.

'திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்'
'ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்'
'மாமழை போற்றுதம் மாமழை போற்றுதும்'
(மங்கல வாழ்த்துப் பாடல் - 1, 4, 7).


இவற்றோடு சோழ அரசனையும் புகார் நகரத்தையும் சிறப்பிப்பதும் இதன் சிறப்பியல்பாகும்.



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree






To buy this Book Online : https://imojo.in/2mmbx8t

Content of the Book https://iyachamy.com/wp-content/uploads/2020/03/CONTENT-.pdf

தமிழில் ஏப்ரல் மாதத்தில் வெளியிடப்படும்

**நாட்டுக் காவியம்**

இது தனி மனிதர் வரலாற்றைக்கூற எழுந்தது அன்று. புகார், மதுரை, வஞ்சி இம்மூன்று தலைநகர்களுக்குத் தலைமை தருகிறது. சோழ பாண்டிய சேரநாடுகளில் நடை பெறுகின்றன. மன்னர்களும் பாத்திரங்கள் ஆகின்றனர்.

மாடலன் குமரிமுனையிலிருந்து புறப்பட்டு வடவேங்கடம் வரை செல்கிறான். காவிரிக் கரையில் பள்ளி கொண்ட அரங்கனையும், வேங்கடத்தில் நின்ற நெடுமாலையும் காண்கிறான். வேட்டுவர்களின் பாடல்கள், குன்றக் குறவர்களின் கூத்துகள் முதலியன இடம் பெறுகின்றன. கற்புடைய மாந்தர்களின் பெருமை பேசப்படுகிறது.

சிதைந்து கிடைந்த மூவேந்தரை ஒருங்கிணைத்துக் காட்டும் சிறப்பு இதில் காணப்படுகிறது. வடநாட்டு வேந்தரை எதிர்த்துத் தமிழகத்தின் பெருமையைச் சேரன் செங்குட்டுவன்

**2.** சிலப்பதிகாரத்தைப் போல் இது முத்தமிழ்க்காப்பியமாகக் திகழவில்லை; இஃது இயல் தமிழ்க் காப்பியமாகவே **அமைந்துள்ளது.**



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



**3.** இஃது அறநூலாகவே திகழ்கிறது. இளமை, யாக்கை, செல்வம் இவற்றின் நிலையாமையை வற்புறுத்தி அறம் செய்ய வேண்டியதன் இன்றியமையைக் காட்டு கிறது.

**4.** பசிப் பிணியை ஒழிக்க வேண்டும் என்பது இக் காவியம் உணர்த்தும் செய்தியாகும். 'மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம் உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே' (காதை -1)

**5.** உண்மையான தொண்டு செய்வதற்குத் துறவு உள்ளம் வேண்டும் என்பதை இந்நூல் வற்புறுத்துகிறது. 'ஆபுத்திரன்' என்ற பாத்திரப் படைப்பு இக் கருத்தை உணர்த்தவே சேர்க்கப்படுகிறது.

**6.** 'அட்சயபாத்திரம்' என்ற கற்பனை உலகத்தின் பசியைப் போக்கக் கூடிய ஒரு பொது நெறி வேண்டும் என்பதை உணர்த்த அமைந்த ஓர் அறிகுறியாகும்.

**துணைப் பாத்திரங்களும் கதைகளும்**

சிலம்பில் கண்ணகியை மையமாக வைத்து நிகழ்ச்சிகள் பின்னப்படுகின்றன. துணைக் கதைகள் இடம் பெறவில்லை. மணிமேகலையில் ஆபுத்திரன், ஆதிரை, சாதுவன், காயசண்டிகை, மருதி, விசாகை, உதயகுமரன் இவர்கள் வரலாறுகள் பிணைக்கப்படுகின்றன. துணைக்கதைகள் காவியப் பெருங்கதையோடு பிணைக்கப்படு கின்றன. மணிமேகலை உதயகுமரனிடம் காதல் கொள் கிறாள்; அவன் விடாமல் பின் தொடர்கிறான். அவன் இறப்புக்கு அவள் காரணமாகிறாள். உறவைக் களைந்து துறவு கொள்ளும் உயர்நிலை அவளிடம் காணப்படுகிறது. இதுவே கதையின் முக்கிய நிகழ்ச்சி. ஏனையவை எல்லாம் மணிமேகலையின் துறவுக்கும், தொண்டுக்கும், சமய அறிவுக்கும் துணை செய்கின்றன. அறவண வடிகள் இதில் இடம் பெறும் தலைமையான பாத்திரம் மண்ணிலிருந்து பாண்டம் செய்யும் குயவனைப் போலப் பெண்ணொருத்தியின் வாழ்க்கையை அவர் மிளிரச் செய்கிறார்.

**புரட்சிக் காப்பியம்**

மன்னரைப் பாடாமல் மக்களைப் பாடுவதில் சிலம்பு முந்திக் கொள்கிறது. அப்பாத்திரங்க**ளுள் கணிகையர் மகளைத்** தேர்ந்தெடுத்து அக்கதையின் தொடர்ச்சியாக அமைத்த பெருமை சாத்தனாரைச் சாரும். அவளைக் காவியத்தலைவியாக்கிச் சமயத் தலைவியாக உயர்த்தி இருக்கிறார்.

'அருந்தவப் படுத்தல் அல்லது யாவதும்
திருந்தாச் செய்கைத் தீத்தொழிற் படாஅள்'

என்று மாதவி மணிமேகலையைப் பற்றிக் கூறுகிறாள்.

கணிகையர் வாழ்க்கையைத் தள்ளி அவளை உயர்த் தியது ஒரு பெரும் புரட்சியாகும். பாட்டி சித்திராபதி உடல் விற்றுப் பிழைப்பு நடத்தியவள்; மாதவி ஒருவனுக்கே நேயம் புண்டு கற்பிற் சிறந்து கலையை உயர்த்துகிறாள்; மணிமேகலை உலகம் போற்றும் உயர் தொண்டில் நின்று அற உபதேசம் செய்யும் அறச் செல்வியாக மாறுகிறாள்.

பெண்மை உயர்வு பெறுகிறது. இப்படைப்பில் குலத் தொழிலை விட்டு அவள் மக்கள் போற்றும் மாபெரும் தலைவி ஆகிறாள். அரச மகனின் இச்சைக்கு அவள் இசையாமல் இன்ப வாழ்வைத் துச்சமாக மதித்துத் தன் வாழ்வை உயர்த்திக் கொள்கிறாள். இது மாபெரும் புரட்சியாகும்.

**அறிவுரை நூல்**

வேள்விக்காகப் பசுவை வதைக்கக் கட்டி வைத்திருந்த அந்தணர்க்கு ஆபுத்திரன் அறிவுரை கூறுகிறான்.

'அறம்தரு நெஞ்சோடு அருள்சுரந்தூட்டும்



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



இதனொடு வந்த செற்றம் என்னை
முதுமறை அந்தணீர்'

என்று வினவுகிறான் பசுவைக் கொன்று வேள்வி செய்யும் உயிர்க் கொலையை எதிர்த்து அவர்கள் பகைமையை ஏற்கிறான்.

நாகர் தலைவனுக்குச் சாதுவன் கீழ்வரும் அறிவுரை யைக் கூறுகிறான்.

'மயக்கும் கள்ளும் மன்னுயிர் கோறலும்
கயக்கறு மாக்கள் கடிந்தனர் கேளாய்'

என்று அறிவுரை கூறுகிறான்.

மகனை இழந்த இராசமாதேவி அதே வருத்தத்தால் அல்லலுற்ற நிலையில் மணிமேகலை அறிவுறுத்தும் அறிவுரை இது:

"நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணியாரம் படைத்த தமிழ் நாடு" என்று பாராட்டுகிறார். ஏனைய காவியங்களை விட இது ஒளி மிக்கது என்ற கருத்தில் இப் பாராட்டுரை அமைந்துள்ளது.

### 3. சீவக சிந்தாமணி

**ஆசிரியர்**

இதன் ஆசிரியர் திருத்தக்க தேவர் சமண சமயத்தைச் சார்ந்தவர் ஆவார். இவர் மாசுமறுவற்ற துறவியாக வாழ்ந் தவர் எனத் தெரிகிறது. நிலையாமை அறத்தை வற்புறுத் தும் நோக்கத்தோடே இந்நூல் அமைக்கப் பட்டுள்ளது. மணம் அற்ற அவர் வாழ்வில் சமணம் இடம் பெற்றது. அதுவே அவர் காவியத்தில் மணக்கும் நெறியாகவும் திகழ் கிறது.

**சீவக சிந்தாமணி நாம**கள் இலம்பகம் முதல் முத்தியிலம்பகம் முடிய அமைந்த பதின்மூன்று இலம்பகங்களைக் கொண்டதாகும். 3145 செய்யுட்களைக் கொண்டது. இதற்கு நச்சினார்க்கினியர் உரை எழுதி யுள்ளார். இதன் காலம் கி.பி. பத்தாம் நூற்றாண்டு **என்பர்.**

**காப்பியத் தலைவன்**

இக் காப்பியத்துத் தலைவன் சீவகன் ஆவான். ஏமாங்கத நாட்டை ஆண்டு வந்த சச்சந்தன் விசயமா தேவியை மணந்து இன்பவாழ்வு நடத்தி வந்தான். நாட்டு ஆட்சியைக் கட்டியங்காரன் என்ற அமைச்சனிடம் ஒப்புவித்துவிட்டுப் புதுமண வாழ்வில் இடையறா இன்பம் விரும்பி ஒதுங்கி வாழ்ந்தான்.

திரு உற்ற போது தெள்ளியரும் தம் மனம் மாறுபாடு தல் இயல்பு. கட்டியங்காரன் ஆட்சியைத் தானே கைப்பற்றி ஆள விரும்பினான், சூழ்ச்சி செய்து மன்ன வனை வீழ்த்தத் திட்டமிட்டான். அதில் விசயமாதேவியை அமர்த்தி மேலே எழுமாறு செய்து விட்டுத் தான் போர்க் களத்தில் கட்டியங்காரனைச் சந்தித்தான்.

தீமை அழிந்து நன்மை வெல்கிறது. அதனோடு கதை அமையவில்லை. சீவகன் துறவு கொண்டு முத்தி பெற்ற தாகக் கதையின் முடிவு அமைகிறது.

**துறவு நெறியும் சமயக் கருத்தும்**



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



இத்தகைய போராட்டக் கதையை அமைத்ததோடு மட்டும் நில்லாமல் இடையிடையே சமண சமயக் கருத்துகளை ஏற்ற இடத்தில் புகுத்திக் கலையைச் சமயக் கருத்து கட்குக் கருவியும் ஆக்குகின்றார். நுட்பக் கருத்துகளையும் பெண்களாக உருவகித்துக் காட்டும் சிறப்பியல்பு இவரிடம் காணப்படுகிறது. முத்தியும் ஒரு மகளாக அவருக்குக் காட்சி அளிக்கிறது. சீவகன் முத்தி நிலை அடைந்த செய்தியைக் கூறும்பொழுது அவன் கேவல மடந்தையைப் புல்லி இன்பக் கடலுள் முழ்கியதாகக் கூறப்படுகிறது. காவியம் துறவு நெறியை வற்புறுத்தி முடிகிறது.

**தனிச் சிறப்பு**

**கலைநாமகளாக**வும், நிலம் மண்மகளாகவும் அத்துறைவியின் கவியுள்ளத்தில் உருவமாக அமைக்கின்றன. பெண்மையின் மென்மையையும் அழகையும் நன்கு கண்ட அப்பாவலர் காவிய உலகில் பெண்மையின் எழிலைச் சுவைபடச் கூறி முருகியல் உணர்வுக்கு முதலிடம் தருகிறார்.

காதல் உணர்வுகள் கவிதையில் கவின் பெற்று வெளிப்படுகின்றன; கவிச் சுவை மிக்க சொல்லோவியங்கள் விருத்தப்பாவின் பண் கனிந்த சந்த இசைகளில் பல்வேறு வடிவம் பெறுகின்றன.

**புதிய பாதை**

காவிய நியதியில் ஒரு திருப்பு நிலையைக் காட்டித் தந்தவர் திருத்தக்க தேவர். முதன் முதலில் விருத்தப்பாவில் புதிய சந்தங்கள் அமைந்த தொடர்நிலைக் காவியம் சீவக சிந்தாமணி எனில் மிகையாகாது. தேவாரதிவ்வியப் பிரபந் தங்கள் அமைத்துக் கொடுத்த விருத்தப் பாடல்களைப் புதிய உருவங்களாகப் படைத்துப் புதிய ஓசை வடிவங்களை அமைத்துக் கொடுத்தார். இவை சேக்கிழாருக்கும் கம்பருக்கும் முன்மாதிரியாக அமைந்தன.

### 4. வளையாபதி

**நூல்**

ஐம்பெருங் காப்பியங்களில் நான்காவதாகக் கொள்ளப்படுவது வளையாபதியாகும். இது ஒரு சமண காவியம். இக்காப்பியம் முழுமையாகக் கிடைக்கவில்லை, பல செய்யுட்கள் உரையாசிரியர்களால் ஆங்காங்கே மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளன. புறத்திரட்டு என்னும் தொகை நூலில் இந்தக் காப்பியத்திலிருந்து 66 செய்யுட்கள் தொகுக்கப்பட்டுள்ளன. இப்போது நமக்குக் கிடைத்துள்ளவை 72 பாடல்களாகும். இந்நூலின் ஆசிரியர் பெயர் அறியப்படவில்லை . இந்நூலின் காலமும் தெளிவாக அறிதற்கில்லை . இக் காவியம் கவியழகு மிக்கது எனத் தெரிகிறது. சிலப்பதிகார உரையாசிரியர்களான அடியார்க்கு நல்லாரும், அரும்பத உரைக்காரரும் ஐந்து இடங்களில் இந்நூலைக் குறிப்பிடுகின்றனர். தொல்காப்பியப் பொருளதிகார 470வது சூத்திர உரையின் மேற்கோளாக இளம்பூரணரும் இந்நூலின் பாடலை உதாரணத்திற்கு எடுத்துக் காட்டுகிறார்.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் வளையாபதிப் பாடல்களையும், குண்டலகேசிப் பாடல்களையும் தொகுத்து "வளையாபதி குண்டலகேசி' என்ற பெயரில் உரையோடு வெளியிட்டு இருக்கின்றனர். இவ்வாறு தொகுக்கப்பட்ட வளையாபதிப்பாடல்கள் யாவும் **யாக்கை நிலையாமை, கற்புடை** மகளிர், கற்பில் மகளிர், விரதத்தின் வகை, அருளுடைமை, புலால் மறுத்தல் முதலிய நீதிகளைக் கூறுவனவாகவே அமைந்துள்ளன.

**சில பாடல்கள்**

வளையாபதியில் இன்று நமக்குக் கிடைத்துள்ள பாடல்கள் அனைத்தும் நீதியை வற்புறுத்தும் ஒழுக்க நெறிப் பாடல்களே. அவற்றுள் இரண்டு காண்போம்.



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



**பத்தினிச் சிறப்பு**

'நாடும் ஊரும் நனிபுகழ்ந் தேத்தலும்
பீடு றும்மழை பெய்கெனப் பெய்தலும்
கூடு பெற்றவர் நல்லது கூறுங்கால்
பாடு சால்மிகு பத்தினிக் காவதே'

**சேய் இலாச் செல்வம்**

'பொறையிலா அறிவு, போகப் புணர்விலா இளமை , மேவத்
துறையிலா வனசவாவி, துகிலிலாக் கோலத்தூய்மை,
நறையிலா மாலை, கல்வி நலமிலாப் புலமை, நன்னீர்ச்
சிறையிலா நகரம் போலும் சேயிலாச் செல்வ மன்றோ'

## 5. குண்டலகேசி

**நூல்**

தமிழ் அன்னையின் குண்டலமாக விளங்கும் குண்டல கேசி என்னும் இந்தக் காவியம் ஐம்பெருங்காப்பியங்களில் ஐந்தாவதாகக் கூறப்படுவதாகும். இது பௌத்த சமய நூல். இந்நூல் முழுமையும் கிடைக்கப் பெறவில்லை. மண்ணிலும், நீரிலும், கரையான்களின் வயிற்றிலும் போய்ப் புதைந்து போன எண்ணற்ற இலக்கியங்களில் இதுவும் ஒன்றாக அமைந்துவிட்டது. ஆனாலும் மலர்ச்சரத்திலிருந்து உருவி எடுத்த பூக்களைப் போல் சில பாடல்கள் உரையாசிரியர்களால் காட்டப்பட்டு, இப்போது தொகுக் கப்பட்டுள்ளன. இவற்றுள் பல புறத்திரட்டிலும் காணப் படுகின்றன. இந் நூலைப் பற்றிய விரிவான செய்திகள் இந்நூலுக்கு மறுப்பாக எழுதப்பட்ட நீலகேசியின் உரையாசிரியர் மூலம் தெளிவாக அறியக் கிடக்கின்றன. நீலகேசியை ஆராயும் ஒருவர், "குண்டலகேசி என்பது பௌத்த சமயச் சார்பு பற்றியது. அம்மதத்திற்குப் பெரும்பகையாக இருந்த சமண சமயக் கொள்கைகளைக் குற்றங்கூறி அச்சமண சமயத்தின் இறுமாப்பை அடக்க எழுந்தவொரு சொற்போர் நூல்' என்று கூறுகிறார்.

இதன் ஆசிரியர் நாதகுத்தனார்; விருத்தப் பாவினது.

**சிறப்பு**

இதன் பாடல்கள் இனிய ஓசையும், தெளிவான அமைப்பும், ஆழமான பொருளும், கொண்டு அமைந்துள்ளன. நிலையாமையைப் பற்றிக் கூறும் ஒரு பாடல் மிகச் சிறப்பாக அமைந்துள்ளது.

"பாளையாந் தன்மை செத்தும், பாலனாம் தன்மை செத்தும்,
காளையாந் தன்மை செத்தும், காமுறும் இளமை செத்தும்
மீளுமிவ் வியல்பு மின்னே மேவரூ முப்பு மாகி
நாளும் நாள் சாகின் றாமால் நமக்கு நாம் அழாத தென்னே "

## 5. ஐஞ்சிறு காப்பியங்கள்

அறம், பொருள், இன்பம், வீடு இவற்றில் சில குறைந்து வருவன சிறுகாப்பியம் என்பர்.

அறமுதல் நான்கினும் குறைபாடு உடையது



https://t.me/tnpscfree

காப்பியம் என்று கருதப்படும். (தண்டி -10)

1. சூளாமணி, 2. நீலகேசி, 3. யசோதர காவியம், 4. உதயண குமார காவியம், 5. நாக்குமார காவியம் என்னும் இவ்வைந்து நூலும் ஐஞ்சிறு காப்பியங்களாகும்.

### 1. சூளாமணி ஆசிரியர்

தோலாமொழித் தேவர் என்பவரால் சூளாமணி இயற்றப்பட்டது. இஃது எளிய ஓசை நயத்தில் சிந்தாமணியையும் வெல்லக் கூடியது என்பர்.

இது சமண சமய நூலாகிய பிரதமாநுயோகமா' புராணத்தில் கூறப்பட்ட பழைய கதை ஒன்றினைப் பொருளாகக் கொண்டு 2330 பாடல்களால் அமைந்த நூலாகும். இனிய ஓசையுடைய விருத்தப்பாவால் அமைந்தது ஆகும்.

**காலம்**

இந்நூல் தோன்றிய காலத்தை வரையறை செய்ய இயலவில்லை என்றாலும் சங்க காலத்துக்குப் பின்னரும், தேவார காலத்திற்கு முன்னரும் உள்ள காலத்தே இந்நூல் தோன்றி இருக்க வேண்டும் என்பர். அக்காலமே சமணம் தலை தூக்கி நின்ற காலமாகும்.

**பெயர்**

இந்நூலுக்குச் சூளாமணி என்னும் பெயரை ஆசிரியர் வைத்ததாகத் தெரியவில்லை. செங்கண் நெடியான் சரிதம்' என்று இந்நூலை அவர் பாயிரத்தில் குறித்திருக்கிறார். இந்நூலின் வருணனைப் பகுதியில் சூளாமணி என்னும், அணி நான்கு இடங்களில் உவமையாகச் சிறப்பிக்கப்பட்டிருப்பதால் இந்நூல் சூளாமணி எனப் பெயர் பெற்றதென்பர். பழைமைத் தமிழ்க் காப்பியங்கள் பலவும் அணிகலன்களால் பெயர் பெற்றதைப் போலவே இந்நூலும் அணிகலன்களில் சிறந்த **தலையணியாகிய** சூளாமணியால் பெயர் பெற்றது.

### 2. நீலகேசி

இந்நூல் 'நீலகேசித் தெருட்டு' என்றும் வழங்கப் பெறும். சமணக் கருத்தை நிலைநாட்டவும், குண்டலகேசி என்னும் பௌத்த காப்பியத்திற்கு எதிராகவும் தோன்றிய நூல் என்று இதனைக் குறிப்பிடுவார். இந்நூல் 10 சருக்கங்களையும் 894 பாக்களையும் கொண்ட நூலாகும். இந் நூலுக்கு வாமான முனிவர் எழுதிய உரையொன்றும் உண்டு நூலாசிரியர் பெயர் அறியப்படவில்லை.

### 3. யசோதர காவியம்

ஆசிரியர் இன்னாரென அறிதற்கில்லை. எனினும் சமண முனிவரால் இயற்றப்பட்டதென்பதை அறிய முடிகிறது. 5 சருக்கங்களாக வகுக்கப்பட்டு 320 பாடல் களால் இந்நூல் அமைந்துள்ளது. பாடல்கள் எளிய நடையில் அமைந்து அவந்தி நாட்டு மன்னன் யாசோதரன் என்பானின் வரலாற்றைக் காவியமாகக் கூறுகிறது. இந் நூலில் கூறப்படும் கதைகள் வடமொழி நூல்களில் பலவாறாகக் கூறப்படுகின்றன. சூளாமணி, நீலகேசி போன்று இந்நூல் அத்துணை இலக்கிய நயம் உடைய பாடல்களால் அமையவில்லை என்றாலும் புதுமையான கதையமைப்பைக் கொண்டது. இந்நூல் சமண சமயக் கருத்துகளைப் பெரிதும் பெருமைப்படுத்திக் கூறுவதோடு இசையை மிகவும் இழித்துக் கூறுகிறது.

### 4. உதயண குமார காவியம்

https://t.me/tnpscfree



உதயணன் வரலாறு கூறும் காவியமாகும். இதிலுள்ள பாடல்களின் எண்ணிக்கை 367 ஆகும். இது ஐஞ்சிறு காப்பியங்களில் ஒன்று. நூல்கள் இயற்றுவதனை இலக்கண ஆசிரியர்கள், முதல் நூல், வழிநூல், சார்பு நூல் என மூன்றாகக் கூறுவர். அதற்கு இணங்கச்சுவையும், பழமையும் பொருந்திய அரிய காப்பியமான பெருங்கதை யின்' வழிநூல் இது. பெருங்கதைச் செய்திகளைச் சுருக்கி அதன் பிழிவாகச் செய்யுட்களில் இது தருகிறது. பெருங்கதை கற்றவர்கள் அன்றி வேறு எவராலும் அறிய முடியாத கடின நடையைக் கொண்டது. இந்நூலாசிரியர் பெயரோ, காலமோ தெரியவில்லை. இதனைப் பாடியவர் இயற்கையில் கவிபாடும் இனிய நலம் வாய்க்கப் பெற்றவர் அல்லர் என்பதை அவர் செய்யுட்களைப் படிக்கும் போது அறியலாம். மனத்தை ஈர்க்கின்ற இன்னிசையோ, பொருளோ, கற்பனையோ இவர் பாட்டில் சிறிது அளவிற்கும் இல்லை. இது உஞ்சைக் காண்டம், இலாவணக் காண்டம், மகதக் காண்டம், நர**வாகனக்** காண்டம், துறவுக்காண்டம் என ஐந்து காண்டங்களை உடையது.

### 5. நாக குமார காவியம்

இந்நூலின் பெயர் ஐஞ்சிறு காப்பியங்களுள் ஒன்றாக வழக்கமாகச் சொல்லப்பட்டு வருகின்றது. இந்நூலின் பெயரையும், அது சமண சமயச் சார்புடையது என்பது பற்றியும் தவிர வேறு ஏதும் தெரியவில்லை. யசோதர காவியம் போல் வடமொழிக் கதை பற்றிய காவியமாக இஃது இருந்திருக்கலாம்.

**கம்பராமாயணம்**

பாரதமும் இராமாயணமும் இதிகாசங்கள் என்ப தால் அவற்றைக் காப்பியங்களுள் **சேர்க்கவில்லை எனக் கருதலாம்.**

**ஆசிரியர்**

கிபி பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் வால்மீகியின் வடமொழி இராமாயணத்தைக் கம்பர் தமிழில் விளக்கமாகவும், கற்பனையழகோடும் புனைந்தார்.

வழிநூல் ஆகிய இதனை வெறும் மொழிபெயர்ப்பு நூலாக அல்லாமல் சிறந்த முதல் நூல் எனக்கருதுமாறு கதையை நடத்திச் செல்கிறார் கம்பர். சோழ நாட்டு மக்களின் வாழ்வு, ஆட்சித் திறம், பண்பாடு, காதல் நெறி ஆகியவற்றைக் காட்டுவதாகவே கம்பனது படைப்பு அமைந்துள்ளது. காடும் நாடும் பிற காட்சிப் புனைவுகளும் தமிழகத்தையே நினைவுப்படுத்துகின்றன.

**நூல்**

பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் என்னும் ஆறு பகுதிகளைக் கொண்ட இந்நூலுக்குக் கம்பர் இட்ட பெயர் "இராமாவதாரம்" என்பது.

இந்நூல் 113 படலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. 10500 பாடல்களைக் கொண்டது. காவியக் கட்டுக் கோப்பும் நாடக நயமும் கொண்டது இவ்வரிய படைப்பு ஆகலின் கம்ப நாடகம்' என்றே இதனை அறிஞர் போற்றுவர்.

'சேலுண்ட ஒண்கணாரின் திரிகின்ற செங்கால் அன்னம்
மாலுண்ட நளினப் பள்ளி வளர்த்திய மழலைப் பிள்ளை
காலுண்ட சேற்று மேதி கன்றுள்ளி கனைப்பச் சோர்ந்த
பாலுண்டு துயிலப் பச்சைத் தேரைதாலாட்டும் பண்ணை'



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



என்பது கம்பரின் இயற்கை வருணனைக்கு ஓர் எடுத்துக் காட்டு ஆகும்.

'பஞ்சியொளிர் விஞ்சுகுளிர் பல்லவம் அனுங்கச்
செஞ்செவிய கஞ்சநிமிர் சீறடிய ளாகி
அஞ்சொலிள மஞ்ஞையென அன்னமென மின்னும்
வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்'

என்னும் இப்பாடலில் கம்பரின் சந்த **நயத்தைக் காணலாம்.**

**முன்னோர் மரபுகள்**

இராமாயணம் எழுதுவதற்குத் திருக்குறளும், சிந்தா மணியும், பெரிய புராணமும் கம்பருக்குப் பெரிதும் துணை செய்துள்ளன. சங்க இலக்கிய மரபுகளும் அவருக்குப் பெரிதும் உதவியுள்ளன. வள்ளுவர் உணர்த்தும் அறக்கொள்கை கம்பரின் அறக்கொள்கையாக விளங்கு கிறது. கம்பரின் நடையின் எளிமைக்குப் பெரிய புராணம் வழி காட்டியாக அமைந்துள்ளது எனலாம். அவர் கவிதைச் சுவை சிந்தாமணியின் மெருகு ஏறப் பெற்று விளங்குகிறது. சங்க இலக்கிய வருணனை மரபுகளும், சொல்லாட்சிகளும் கம்பரின் கவிதையில் ஒளிபெற்று விளங்குகின்றன. முன்னோர் மரபைப் போற்றியும், ஒருசில இடங்களில் மாற்றியும் பாடும் கவிஞ**ன் என்பதால்தான்** அவர் கல்வியிற் பெரியவர் கம்பர்' என்ற பழமொழியால் பாராட்டப்பட்டு வருகின்றார்.

**கம்பரின் கற்பனை**

இது, வடமொழிக் கதையைத் தழுவி எழுந்த மொழி பெயர்ப்பு நூல் எனினும் அவர் தீட்டும் வாழ்வு சோழ நாட்டு மக்கள் வாழ்க்கையையும், தமிழ் நாட்டு அரசர் திருவினையும், செங்கோன்மையையும், மக்கள் பண்பாட்டையுமே சுட்டுகிறது எனலாம். இது அவருக்கு உரிய தனிப் போக்காகும்.

இராமன் செல்லும் காடும், அவன் வாழ்ந்த நாடும், கடந்து செல்லும் வழிகளும், வருணிக்கும் செடியும் கொடியும், புல்லும் பூவும் சோழநாட்டுப் பொருள்களே, சீதை, இராமன் பால் கொண்ட காதலும், காட்சியும் தமிழ்க்களவு முறையைப் பின்பற்றி அமைந்த ஒன்றாகும். வில்லை முறித்துச் சீதையை மணந்தான் என்று அமைக் காமல் இராமனைத் தெருவில் நடக்க வைத்துக் கன்னி மாடத்தில் அவளை நிற்க வைத்து இருவர் விழிகளும் உள்ளமும் சந்திக்குமாறு செய்து காதல் கொள்ளுமாறு அமைத்த கற்பனை கம்பருக்கே உரியது. வான்மீகத்தில் இவ்வாறு முதன் முதலில் இருவரும் சந்தித்ததாகக் கூறப்படவில்லை . இலக்குவன் தொடுத்த புல்லினால் அமைத்த சாலையில் சீதை இருந்தாள் என்பதும், இராவணன் அப்பன்ன சாலையை அடியோடு பெயர்த்து எடுத்துச் சென்றான் என்பதும் கம்பரின் படைப்பு. சீதையின் மேனியைத் தீண்டித் தூக்கிச் சென்றான் என்பது முதல் நூல் தரும் செய்தி.

கற்புடைய நங்கையை அப்பொற் பிலான் தீண்டுதல் தகாது என்ற அடிப்படையைக் கம்பர் புகுத்தியிருப்பது அவர் பண்பட்ட படைப்புத் திறனைக் காட்டுகிறது. மேலும் சீதை இராவ**ணனை** இப்பொழுதே சொல்லினால் சுடுவேன், ஆனால் நாளை இராமன் வில்லினால் சுடுவன், அவனை விட்டு வைத்திருக்கிறேன் என்று கூறும் கூற்று மதுரையை எரியிட்டுக் கொளுத்திய நெறியுடைய கண்ணகியை நினைவுப்படுத்துகிறது. கம்பர் படைத்த சீதைக்குக் கண்ணகியின் சொல்லாற்றல் நினைவுக்கு வருகிறது.

கங்கை பாயும் கழனி நாடுகளைக் கடக்கும் இராமன் செய்கையைக் குறிப்பிடும் பொழுது காவிரி பாயும் சோழ நாடு அவர் கண்முன் வருகிறது. காவிரி நாடன்ன கழனி நாடு ஒரீஇ'' என்று கம்பர் வருணிக்கின்றார். சேக்கிழாரின் படைப்பாகிய காளத்தி வேடனாகிய கண்ணப்பரும் கம்பர் படைப்பாகிய கங்கை வேடனாகிய குகனும் பலவகையில் ஒத்து இருக்கிறார்கள்.



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



"வெல்லுமோ தீவினை அறத்தை மெய்ம்மையால் "

என்ற வினாவுக்கு விடையாக இராமகாதை அமைந் துள்ளது. அறம் வெல்லும் பாவம் தோற்கும்' என்பதே இதன் காவிய நீதியாகும்.

கண்ணகியின் கற்பின் பெருமையை உணர்ந்த தமிழ் நாட்டில், கற்புக்குப் பெருமை கொடுக்கக் கூடிய வகையில் சீதையின் பண்புகள் சித்திரிக்கப்படுகின்றன. கண்ணகியின் கற்பு ஒருவகை, அது வெளிப்பட்ட வரலாறு தனிவகை . சீதையின் சூழ் நிலை வேறு சீதையும் கணவனோடு தனிவழி நடந்து இன்பத்திலும், துன்பத்திலும் பங்கு கொண்டாள். மாற்றானின் சிறையில் வைக்கப்பட்டுச் செல்வமும், கொடுமையும் சூழ்ந்த சூழ்நிலையில் பொறுமையின் உறைவிடமாகவும், கவலையின் இருப்பிட மாகவும், துன்பத்தின் நிறைவிடமாகவும் அவள் வாழ்வு அமைகிறது. இந்த இப்பிறவியில் இருமாதரைச் சிந்தை யாலும் தொடேன்' என்ற கொள்கையுடைய கணவனை நினைந்து அழுது ஏங்கும் நிலைமை காவியத்தை மிக உயர்த்தி விடுகிறது. இராமனின் பிரிவுத் துன்பமும், துன்பத்தால் ஏங்கும் அவள் சிந்தையும் படிப்போர் உள்ளத்தை உருக்கும் இயல்பின. கல்லையும் கனிவிக்கும் இராமனின் கதை என்று சொல்லத்தக்க வகையில் மிகவும் உருக்கமான நிகழ்ச்சிகள் கொண்டுள்ளது.

இதில் வரும் குணச்சித்திரங்களைச் சித்திரித்துக் காட்டும் எழில் இவர் படைப்பின் தனி இயல் எனலாம். இவர் மக்கள் மனக் குறிப்புகளை முன்னுக்குப் பின் முரணில்லாமல் காட்டும் உயர்ந்த கலைஞர் பண்பு நலன்கள் சிறப்பாக அமையக் காவிய மாந்தர்களைப் படைக்கும் திறன் கம்பனுக்கே உரியது எனலாம்.

'கம்பர் வீட்டுக் கட்டுத் தறியும் கவிபாடும்' என்னும் பழமொழி யும், 'இது என்ன கம்ப சூத்திரமா' என்ற வினாமொழியும் முறையே கவிதை உயர்வும், கல்வி நலமும், குறிப்புப் பொருள்களும் அமைந்துள்ள கம்பரின் கவிதைகளுக்குச் சிறந்த நற்சான்றுகளாகும். கம்பநாடனின் கவிதை கற்றோர்க்குக் கழிபேர் உவகை ஊட்ட வல்லது.

தமிழர் வாழ்வும், பண்பாடும் மிக உயர்ந்திருந்த காலத்தில் கம்பர் வாழ்ந்தார். அவர் வடமொழிக் கதையைப் பாடினாலும், தமிழ் நாட்டின் கலை, பண்பாடு, பழக்க வழக்கங்கள், வளம் வாழ்வு இன்ன பிறவே அவர் காவியத்தில் மிளிர்ந்து ஒளிசெய்யக் காண்கிறோம். சொல் வளம், ஓசைநயம், மனிதவியல்பை அறிந்து உணர்த்தும் ஆற்றல், கற்பனை முதலிய பண்புகள் யாவும் கம்பனிடத்தில் ஒருங்கு அமைந்துள்ளன. உணர்ச்சி வேகத்திற்கு ஏற்றவாறு கவிதையின் நடை அமைந்துள்ளது.

**செஞ்சோற்றுக் கடன் மறவாக் கவிஞன்**

தமிழில் இராம காதை உருவாகியதற்குக் கம்பனின் கற்பனையும், கவிதை வளனும் காரணம் எனினும் கம்பரை உருவாக்கி அவரைக் கவிஞன் ஆக்கியது சடையப்ப வள்ளலின் கொடைத் திறனே. எந்தச் சோழ மன்னனையும் தனிப்பட்ட முறையில் பாடவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

மன்னனை விட வேளாண் மரபில் தோன்றிய சடையப்பனே நாட்டின் உயிர்நாடி என்பதை உணர்ந்த கவிஞர் சடையப்ப வள்ளலை ஆங்காங்கு உவமை வாயிலாகப் பாராட்டிச் செய்ந்நன்றியைப் போற்றி அவ்வள்ளலுக்கு அழியா இடம் அளித்துள்ளார்.

'மண்ணவர் வறுமை நோய்க்கு
மருந்தென சடையன் வெண்ணெய்
**அண்ணல் தன் சொல்லே என்ன**
படைக்கலாம் அருளினானே.'

என விசுவாமித்திரன் இராமனுக்கு அளித்த படைக் கலத்தைச் சிறப்பிக்கின்றார்.

**காலம் வென்ற கவிஞன்**



https://t.me/tnpscfree

சடையப்பரை மிக உயர்ந்த இடத்தில் சிறந்த **கற்பனையாற்றல்** தோன்ற அமைந்துள்ளது கம்பரை இருபதாம் நூற்றாண்டுக் **கவிஞன் என்**று சொல்ல வைக்கின்றது. நாட்டு முடியை வசிட்டன் இராமனுக்குப் புனைந்தான் என்று சொல்லாமல் குடியரசுக் கொள்கையை புகுத்திச் சடையன் மரபில் உள்ளவர் எடுத்துக் கொடுக்கவசிட்டன் முடியை அணிவித்தான் என்று சொல்லுவது பாராட்டத்தக்கதாகும். அவர் உழவன் கையில்தான் ஆட்சி இருக்கிறது என்ற கருத்தையும், குடியரசுக் கொள்கைப்படி மக்கள் கொடுப்பதே ஆட்சி என்ற கருத்தையும் அமைத்துள்ளார். தம் கற்பனையால் அவர் காலத்தையும் வென்று முடியாட்சிக் காலத்தில் குடியாட்சி யின் கற்பனையைப் புகுத்தியிருப்பது, அவரை இருபதாம் நூற்றாண்டுக் கவிஞன் ஆக ஆக்குகிறது. கம்பரின் மற்றொரு கற்பனை இருபதாம் நூற்றாண்டையும் கடந்து முன் செல்லும் தகையதாய் உள்ளது.

கம்பன் கவிதையில் பொருளால் பொதுவுடைமை அமைதலோடு எல்லா வகையிலும் சமஉடைமை வேண்டும் என்ற கற்பனை நிலவுகிறது. எல்லா வகையிலும் சமநிலை வேண்டும் என்பதை அவர் வற்புறுத்துகிறார். அவர் ஓர் உயர்ந்த குறிக்கோளைக் காட்டும் பொழுது அவர் இக்காலப் பொது உடைமைக் கொள்கையையும் விஞ்சி விடுகின்றார்.

> **'வண்மை இல்லை ஓர் வறுமை இன்மையால்;**
> திண்மை இல்லைநேர் செறுநர் இன்மையால்;
> உண்மை இல்லை பொய் உரை இலாமையால்;
> வெண்மை இல்லைபல் கேள்வி மேவலால்.'

(நாட்டுப் படலம்)

**பெரிய புராணம் (திருமுறைகள் என்ற தலைப்பில் காண்க)**

**கந்த புராணம்**

பன்னிரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த மற்றொரு காப்பியம் கந்த புராணம். இதன் ஆசிரியர் கச்சிய**ப்பசிவாசாரியார்** முருகனுக்கும் சூரனுக்கும் நடந்த போர் இதில் விரித்துக் கூறப்பட்டுள்ளது. வள்ளி தெய்வானை ஆகிய இருவரை அவன் மணந்த வரலாறு ஏனையவும் ஆறு கண்டங்களில் கூறப்பட்டுள்ளது. இந்நூல் வடமொழி ஸ்காந்தத்தின் ஒரு பகுதியாகிய 'சங்கர சங்கிதை' யிற் கூறப் படும் முருகனின் வரலற்றைக் கூறுவதாகும்.

இந்நூல் பெருங் காப்பியத்திற்குரிய அத்துணை இலக்கணங்களையும் பெற்று விளங்குகிறது, சைவ சித்தாந்தக் கருத்துகளை மிகுதியாகப் பெற்றுள்ளது இது. ஆறுமுக முடையதோர் அமலன் மாக்கதை' எனப்படும் இந்நூல் இராமாயணத்திற்கு இணையாகப் பலவகை ஒப்புமைகளைப் பெற்றுள்ளது. இதனைச் சேதுப்பிள்ளையவர்களின் வேலும் வில்லும்' நன்குணர்த்தும்.

கீழ்வருவன நாயக்கர் காலத்துக் காப்பியங்களாம்.

**திருவிளையாடற் புராணம்**

இந்நூல் பரஞ்சோதி முனிவரால் இயற்றப்பட்டது. மதுரைச் சொக்கநாதரின் அறுபத்தி நான்கு திருவிளை யாடல்களைக் குறிப்பிட்டுப் பாடுவதாகும். இது மதுரைக் காண்டம், கூடற்காண்டம், திருவாலவாய்க் காண்டம் என்னும் மூன்று பிரிவுகளைக் கொண்டது. இக் கதைகள் மதுரை நகரையும். ஆலவாய் இறைவனாகிய சுந்தரேசனின் பெருமையையும் விளக்க எழுந்தன. இதில் பாண்டிய மன்னர்களின் வரலாறுகளும் பிணைக்கப் பட்டுள்ளன. அவற்றில் கற்பனை மிகுதியாக உள்ளது. பெரிய புராணத்திற்கு அடுத்ததாகப் பெருமை பெற்று விளங்குவது இத்திருவிளையாடற் புராணம் எனலாம்.

https://t.me/tnpscfree



இதன் தமிழ்நடை எளிமையும் இனிமையும் பெற்றுள்ளது. கதை வடிவில் இக்கவிதைகள் உருவாகியுள்ளன.

இக்கதைகள் மக்களுக்குச் சிறந்த கற்பனைகளைத் தந்து கடவுள் பேரில் பத்தியும் ஊட்டக்கூடிய வகையில் அமைந்துள்ளன. விறகு விற்ற படலத்தில் யாழிசைக்கு ஏற்றமும், உயர்வும் கொடுக்கப்பட்டுள்ளன. இந்நூலின் காலம் கிபி. 16ஆம் நூற்றாண்டு.

**நளவெண்பா**

நளவெண்பா, வெண்பாவிற் புகழேந்தி ' என்று புகழ் பெற்ற புகழேந்திப் புலவரால் பாடப்பட்டது. இதிகாச புராணங்களின் கிளைக் கதைகளைக் காப்பியமாக ஆக்கும் முறை ஏற்பட்டது. நளவெண்பா அத்தகைய காப்பியங் களில் தலைசிறந்தது. பாடல்கள் ஓசைநயமும் சொல் வளமும் உடையவை. இந்நூல் கிபி. 13ம் நூற்றாண்டில் தோன்றியது.

இந்நூல் கற்பனை நயம் மிக்கதாக உள்ளது.

'தையல் துயர்க்குத் தரியாது தம்சிறகாம்
கையால் வயிறலைத்துக் காரிருள்வாய் - வெய்யோனை
வாவுபரித் தேரேறி வாவென் றழைப்பன போல்
கூவினவே கோழிக் குலம்.'

என்னும் இப்பாடலில், அவரது கற்பனை ஓட்டம் எல்லை கடந்து ஓடுகிறது. நளன் தமயந்தியை இருளில் விட்டுச் சென்றுவிட்டான். அதனால் தமயந்தி துயர்ப்படுகிறாள் தமயந்தி துயர்ப்படுவதனைப் பொறாத தோழிகள் தங்கள் வயிற்றிலடித்துக் கொண்டு கூவின என்று கூறுகின்றார்.

**வில்லி பாரதம்**

இந்நூலை இயற்றியவர் வில்லிபுத்தூரார். இந்நூலின் காலம் பதினான்காம் நூற்றாண்டின் இடைப் பகுதி. சந்த இன்பம் மிக்கவை இப்பாடல்கள் இந்நூல் வடமொழியைப் பின்பற்றித் தமிழ்மொழியில் எழுந்தது. வடமொழி யுள் 18 பருவங்கள் உள்ளன. தமிழில் இது பத்துப் பருவங்களைக் கொண்டுள்ளது. பல்வகை அணி நலன்களும் பொருந்திச்சிறப்புமிக்க காப்பியமாக விளங்குகிறது. இந்நூலில் வடமொழித் தொடர்கள் மிகுதியும் பயின்று வருகின்றன. இந்நூல் கால வெள்ளத்தில் அழியாத நிலைத்து நிற்கும் தன்மை பெற்றுள்ளது.

**இலக்கண நூல்கள் (சோழர் காலம்)**

தொல்காப்பியத்தை அடுத்து அதனை முதல் நூலாகக் கொண்டு பல இலக்கண நூல்கள் பிற்காலத்தில் எழுந்தன. அவை பெரும்பாலும் சோழர் காலத்திலேயே இயற்றப் பெற்றன. தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என்ற மூன்று பாகுபாடுகளைச் செய்தது. பிற்காலத்தில் அவை எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐந்தாக வகுக்கப்பட்டன.

**வீர சோழியம் (ஐந்திலக்கணம்)**

தொல்காப்பியத்திற்கு அடுத்து அதனை முதல் நூலாகக் கொண்டு எழுதப்பட்ட மொழி இலக்கண நூல் வீரசோழியம் ஆகும். தொல்காப்பியத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது எனினும் இதில் வடமொழி இலக்கணத் தாக்கம் மிகுதியாக உள்ளது.

இஃது ஐந்திலக்கணத்தையும் சுருக்கமாக உணர்த்து கிறது. இதன் ஆசிரியர் புத்தமித்திரர் என்பவர். இவர் பௌத்த சமயத்தினர். பொன்பற்றி என்னும் ஊரில் வாழ்ந்தவர். இவர் தம்மை ஆதரித்த வீரசோழ



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



மன்னனின் பெயரையே தம் நூலுக்கு வைத்துள்ளார். அம்மன்னனின் ஆட்சிக் காலம் கி.பி. 1ஆம் நூற்றாண்டு. அதுவே இந் நூலின் காலமும் ஆகும்.

**நேமி நாதம் (எழுத்து, சொல்)**

நேமிநாதம் எழுத்துக்கும் சொல்லுக்கும் அமைந்த சுருக்கமான இலக்கணமாகும், 96 சூத்திரங்களைக் கொண்டுள்ளது. இதற்குச் 'சின்னூல்' என்ற பெயரும் வழங்குகிறது. இதன் ஆசிரியர் குணவீர பண்டிதர் ஆவார். இவரும் சமணர் ஊர் தொண்டை நாட்டில் உள்ள களத்தூர் ஆகும். இது 12ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது ஆகும்.

**நன்னூல் (எழுத்தும் சொல்லும் )**

வீர சோழியத்தையும் தொல்காப்பியத்தையும் முதல் நூலாகக் கொண்டு பவணந்தியார் நன்னூலை எழுதியுள் ளார். தமிழ் மரபுக்குத் தொல்காப்பியத்தையும் பதவியல் பகுதிக்கு

வீரசோழியத்தையும் இவர் பின்பற்றியுள்ளார்.

இதுவே இப்பொழுது தமிழ் மொழிக்குத் தன்னிகரற்ற இலக்கண நூலாகப் பயிலப்பட்டு வருகிறது. தொல்காப்பியர் விரித்துக் கூறியவற்றைத் தொகுத்துக் கூறியுள்ளார். மற்றும் கால மாறுதல்களுக்கு ஏற்பப் புதிய இலக்கண விதிமுறைகளையும் சேர்த்துள்ளார்.

இதன் ஆசிரியர் பவணந்தி முனிவர் சமணர் இந்நூல் எழுந்த காலம் சீயகங்கள் ஆண்ட காலம், பதின்மூன்றாம் நூற்றாண்டு.

**நம்பியகப் பொருள் (அகப் பொருள்)**

நாற்கவிராச நம்பி என்பவர் எழுதிய அகப் பொருள் இலக்கண நூல் நம்பியகப் பொருள் எனப்பட்டது. இவர் சமணர், தொல்காப்பியம் அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல் என்ற இயல்களில் கூறியவற்றைத் தொகுத்தும் விரித்தும் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

எளிமையாகவும், தெளிவாகவும் இஃது அகப்பொருள் **துறைகளை விளக்**குகிறது. தஞ்சைவாணன் கோவைப் பாடல்கள் இந்நூல் உரையில் உதாரணச் செய்யுள்களாகத் தரப்பட்டுள்ளன. இதன் காலம் 12ஆம் நூற்றாண்டு என்பர்.

**புறப்பொருள் வெண்பா மாலை (இது பல்லவர் காலத்து நூல்)**

இது புறப்பொருள் பற்றி எழுந்த பொருள் இலக்கண நூலாகும். சூத்திர யாப்பில் கொளுவும் வெண்பாவில் உதாரணமும் தரப்பட்டுள்ளன. இந்நூல் பன்னிரு படலத் தைப் பின்பற்றி அமைந்தது என்பர். தொல்காப்பியத்திலிருந்து ஓரளவு மாறுபட்டுச் செல்கிறது. இதன் ஆசிரியர் ஐயனாரிதனார். இதன் காலம் ஆம் நூற்றாண்டு.

**யாப்பருங்கலம் (யாப்பு நூல்)**

இஃது அமிதசாகரர் என்பவரால் கிபி. 10ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட யாப்பிலக்கண நூல், மூன்று இயல்களில் 96 நூற்பாக்களில் யாப்பினை ஆராய்கிறது. இதற்குக் குண சாகரர் விருத்தியுரை செய்துள்ளார்.

இது கா**க்கைபாடினியத்தை முதல் நூலாகக் கொண்டுள்ளது**. இவரும் சமணரே.



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



**யாப்பருங்கலக் காரிகை (யாப்பு நூல்)**

இதுவும் அமிதசாகரரால் இயற்றப் பெற்றது. இதற்கும் குண சாகரர் உரை இயற்றியுள்ளார். கலம் விரிவான நூல்; இது சுருங்கக் கூறுகிறது. இதுகலித்துறை யாப்பில் பாடப் பெற்றுள்ளது. இதில் 44 காரிகைச் சூத்திரங்கள் உள்ளன. உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல் என்ற மூன்று இயல்களைக் கொண்டு விளங்குகிறது.

**வச்சணந்தி மாலை (பாட்டியல்)**

வச்சணந்தி என்னும் முனிவர் பெயரால் அவருடைய மாணவர் குண வீர பண்டிதர் பாடியது. வச்சணந்தி மாலை எனப்படும் வெண்பாப் பாட்டியல் சிற்றிலக்கியங் களின் அமைப்பைப் பற்றியும் செய்யுள் எழுதும் முறைகள் குறித்தும் கூறும் இந்நூல் மூன்று இயல்களைக் கொண்டது, 103 வெண்பாவில் அமைந்தது; இது கிபி. 12ஆம் நூற்றாண்டில் எழுதப் பெற்றது பாட்டியல் நூல்களில் இது மிகவும் சிறப்பு வாய்ந்தது ஆகும்.

**தண்டியலங்காரம் (அணி நூல்)**

'காவியதர்சம்' என்னும் வடமொழி அலங்கார நூலின் மொழி பெயர்ப்பாகும். இதன் ஆசிரியர் பெயர் அறியப்படவில்லை . வடமொழி காவியதர்சம் என்னும் நூலின் ஆசிரியர் தண்டி என்பது. இது பொது வணியியல், பொருளணியியல், சொல் லணியியல் என்ற மூன்று இயல்களைக் கொண்டு உள்ளது.

ஆசிரியர் அநபாய சோழனைச் சிறப்பித்துப் பாடியதால் இதன் காலம் பன்னிரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதி எனக் கொள்ளக் கிடக்கிறது.

காப்பியத்தின் இலக்கணத்தை இதுவே விரித்துக் கூறுகிறது. தொல்காப்பியர் உவமையணி ஒன்று மட்டும் கூற இஃது ஏனைய அணிகளையும் கூறுகிறது. அணியிலக் கணத்திற்குத் தமிழ்ச் செய்யுள்கள் இலக்கியமாகத் தரப்பட்டுள்ளமையின் இது தமிழ் மரபுக்கே இலக்கணம் கூறுவது போல் அமைந்துள்ளது.

சோழர் காலத்துக் காப்பியங்களில் இவ்வணிகள் மிகுதியாக இடம் பெற்றுள்ளன. காப்பிய இலக்கணங்களும் தண்டியாசிரியர் கூறுவதை ஒட்டி அமைந்துள்ளன. யமகம், மடக்கு சொற்சித்திர யாப்புகள் முதலியன சொல்லணியியலில் இடம் பெறுகின்றன.

**மாறன் அலங்காரம்**

இது நாயக்கர் காலத்தைச் சார்ந்தது. இதன் ஆசிரியர் குருகைப் பெருமாள் கவிராயர் ஆவார். காலம் 16ஆம் நூற்றாண்டு தண்டியலங்காரம் கூறும் அணிகளை விரித்து 64 **அணிகளாக** ஆக்கியுள்ளார். இவர் நம்மாழ்வாரிடம் ஈடுபாடு கொண்டவர் ஆதலின் இதற்கு மாறன் அலங்காரம் என்ற பெயர்வைத்துள்ளார்.

**நிகண்டுகள்**

தொல்காப்பியமும் நன்னூலும் உரியியல்களில் உரிச் சொற்களுக்கு மட்டும் பொருள் தருகின்றன. சோழர் காலத்தில் நிகண்டுகள் பல தோன்றின. தற்காலத்தில் அகராதிகள் சொற்பொருள் விளக்கங்களைத் தருகின்றன.

பழங்காலத்தில் ஒரு பொருளுக்கு வழங்கிய பல சொற் களும், ஒரு சொல்லின் பல பொருள்களும் உணர்த்தத் தனி நூல்கள் எழுந்தன. இவை செய்யுள் வடிவிலும் சூத்திர வடிவிலும் மனப்பாடம் செய்யத்தக்க வகையில் தொகுத்துத் தரப்பட்டன. இவற்றை நிகண்டுகள் என்றனர்.



https://t.me/tnpscfree

**திவாகரம்**

இது காலத்தால் முற்பட்டது. இதன் காலம் 10ஆம் நூற்றாண்டு, இதன் ஆசிரியர் திவாகர முனிவர் சேந்தன் என்னும் அரசனது வேண்டுகோளுக்கு இணங்க இந்நூல் இயற்றப் பெற்றதால் இதற்குச் சேந்தன் திவாகரம் என்ற பெயரும் வழங்குகிறது.

**பிங்கல நிகண்டு**

திவாகர முனிவரின் மகனார் பிங்கலர் எழுதிய நூல் இது. இதன் காலம் 10ஆம் நூற்றாண்டு. திவாகரத்தில் இடம் பெறாத புதிய சொற்களுக்கு இதில் பொருள் கூறப் பட்டுள்ளது.

**சூடாமணி நிகண்டு**

மண்டல புருடர் என்ற சமண முனிவர் இதன் ஆசிரியர் ஆவார். இவர் கிருஷ்ணதேவராயர் காலத்தில் வாழ்ந்தவர். இது 10ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எழுதப்பட்டது என்ற கருத்தும் உள்ளது.

**உரிச்சொல் நிகண்டு**

நாயக்கர் காலத்து நூல், வெண்பாவில் இயற்றப்பட்டு உள்ளது. இதன் காலம் 15 ஆம் நூற்றாண்டு என்று கருதப்படுகிறது.

**கயாதர நிகண்டு**

கயாதர முனிவர் இயற்றியது கட்டளைக் கலித்துறையில் எழுதப்பட்டது, பழைய செய்திகளையே திரும்பக் கூறுகின்றது.

**அகராதி நிகண்டு**

சிதம்பரம் இரே வண சித்தர் இயற்றியது காலம் கிபி. 1594.

**ஆசிரியர் நிகண்டு**

இது மிகப் பிற்காலத்தில் எழுதப்பட்டது. ஆண்டிப் புலவர் என்பவர் இதன் ஆசிரியர்.

## 6. நாயக்கர் காலம் (கி.பி. 1350-1750)

**வரலாற்றுப் பின்னணி**

பதின்மூன்றாம் நூற்றாண்டில் சோழப்பேரரசு வீழ்ச்சியுற்றது. பாண்டியர்கள் தமிழ் நாட்டை ஆண்டு வந்தனர். வடக்கிலிருந்து பதினான்காம் நூற்றாண்டின் முற்பகுதியில் அலாவுதீன் கில்ஜியின் படைத்தலைவன் மாலிக்காபூர் பாண்டியரை வென்று அமைதியைக் குலைத் தான். அதற்குப் பின் பாண்டிய நாடு மகமதியர் ஆட்சியில் சிக்கியது.

ஆந்திர நாட்டில் விஜய நகர ஆட்சி நிலைபெற்றபின் மகமதியரின் வலிமை குறைந்தது. தென்னகம் முழுவதும் விஜய நகர ஆட்சி பரவியது. அவர்களின் பிரதிநிதிகளாக மதுரையில் நாயக்கர் ஆட்சி செலுத்தினர். நானூறு ஆண்டுகள் அவர் ஆட்சி நிலவியது.

https://t.me/tnpscfree



தென்னாட்டுக் கோயில்கள் பல அவர்களால் கட்டப்பட்டன. மதுரையில் மீனாட்சி கோயிலும் ஆயிரங்கால் மண்டபமும் திருமலை நாயக்கர் புதுப்பித்தவை. சீரங்கமும் நாயக்கர்களால் சீர் செய்யப்பட்டது. அவர்கள் தமிழ் இலக்கியத்தையும் வளர்க்க உதவினர்.

**சிற்றிலக்கியங்கள்**

பேரிலக்கியங்கள் எழுந்த சோழர் காலத்தில் ஒரு சில சிற்றிலக்கியங்கள் தோன்றாமல் இல்லை. அவற்றைப் பின் பற்றி நாயக்கர் காலத்தில் இச்சிற்றிலக்கியங்கள் மிகுதியாக வளர்ந்தன. **காப்பியங்களும் புராணங்களு**ம் எழுந்து வளர்ந்தபின் இலக்கியப் பரப்பில் ஒரு சரிவு ஏற்பட்டது.

நாயக்கர்களின் புகழ்ச்சியாகவும், பிரபுக்களின் புகழ்மாலை யாகவும், கோயில் தெய்வங்களின் பாமாலையாகவும் இச் சிற்றிலக்கியங்கள் அமைந்தன. காவியக் கூறுகளாக விளங்கும் உலா, தூது, பிள்ளைப்பாடல், பரணி முதலியன தனித்தனி நூல்கள் ஆயின. நில மக்களைத் தலைமக்களாகக் கொண்டு பள்ளும் குறவஞ்சியும் தோன்றின. மன்னர்களையும், அடியார்களையும், கடவுளரையும் தலைவர்களாகக் கொண்டு விளங்கிய தமிழ்க் காவியங்கள் மறைந்து மண்ணின் புதல்வர்களைக் கதை மாந்தர்களாக வைத்துச் சிற்றிலக்கியங்கள் பாடினர். வெறும் **வருணனைகளாகவும் கற்பனைகளா**கவும் அமைவதே இலக்கியம் என்ற தாழ் நிலையை அடைந்து விட்டது. சுவைபடப் பாடுவது கவிதை என்ற கோட்பாட்டைக் கொண்டனர். சொற்சுவை யும் பொருள் சுவையும் தோன்றப் பாடினர். இவற்றிற்குத் துணையாக வடமொழிப் பிரபந்தங்கள் என்றனர். அவற்றை எண்ணிட்டுத் தொண்ணூற்று ஆறு என்றனர். தமிழில் தோன்றிய சிற்றிலக்கியங்கள் கோவை, உலா, அந்தாதி, கலம்பகம், தூது, பிள்ளைத்தமிழ், சதகங்கள், பள்ளு, குறவஞ்சி முதலியன.

**கோவை**

**வரலாறு**

நானூறு பாடல்களின் தொகுப்பு கோவை எனப்பட்டது. சங்க இலக்கிய அகப்பாடல்கள் திணை துறை பாகுபாட்டைப் பெற்றன. சங்க காலத்தில் எந்த ஒரு புலவரும் தொடர் நிலையாகத் துறைகளை வைத்துப் பாடினாரில்லை, பதினெண் கீழ்க்கணக்கில் 'திணை' என்ற தொகுப்பில் அகப்பாடல்கள் பாடப்பட்டன. இறையனார் களவியல் உரை அகப்பொருள் துறைகளை விரிவு படுத்திக் கூறியது, பின்னால் எழுந்த நம்பி அகப்பொருள் துறை களை விரித்துக் கூறுகின்றது.

இவற்றிற்கு இலக்கியமாகத் தொடர்நிலைச் செய்யுள்களாக இக்கோவை நூல் எழுந்தது. இதில் பாட்டுடைத் தலைவனும் கிளைவித்தலைவனும் இடம் பெற்றனர் புலவர் தாம் பாராட்டும் தலைவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டனர். அகப்பொருள் இலக்கிய மரபுக்கேற்பக் கிளவித் தலைவனை வைத்து அவன் மேற்கொள்ளும் களவு கற்பு வாழ்க்கையைச் சித்திரித்தனர், இறையனார் களவியல் உரைக்குப் பாண்டிக் கோவையும், நம்பி அகப் பொருளுக்குத் தஞ்சை வாணன் கோவையும் உதாரணச் செய்யுள்களாகக் காட்டப்பட்டுள்ளன; இவை கட்டளைக் கலித்துறையில் பாடப்பட்டன.

'கோவை என்பது கூறுங்காலை
மேவிய களவு கற்பு என்னும் கிளவி
ஐந்திணை திரியா அகப்பொருள் தழீஇ
முந்திய கலித்துறை நானூறெண்ப' – பன்னிரு பாட்டியல்

பாண்டிக் கோவையில் பாட்டுடைத் தலைவன் நெடுமாறன் ஆவான்.



https://t.me/tnpscfree

இதனை அடுத்து ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த மாணிக்கவாசகர் திருக்கோவையார் பாடினர். இதில் பாட்டுடைத் தலைவர் தில்லை நடராசன் ஆவார். இஃது அகப்பொருள் பாடலாயினும் இறைவனை அடையும் உயிர்களின் நிலைமையை உருவகமாகக் கூறுகிறது என்பர்.

அம்பிகாபதிக் கோவையைக் கம்பர் பாடினர் என்பர். இக்கருத்து ஏற்றுக்கொள்வதாயின் இது சோழர் காலத்தைச் சார்ந்தது ஆகும். ஒட்டக்கூத்தர் பாடியவை குலோத்துங்கன் கோவையும் நாலாயிரக் கோவையும் ஆகும்.

இவையும் சோழர் காலத்தினர், திருவேங்கைக் கோவை சீகாழிக் கோவை என வேறு கோவை நூல்களும் இக்காலத்தில் எழுந்தன.

**நாயக்கர் காலம்**

கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டில் பொய்யா மொழிப் புலவர் பாடிய நூல் தஞ்சைவாணன் கோவை யாகும். இஃது நம்பியகப் பொருளுக்கு மேற்கோளாகவும் காட்டப்படுகிறது. மாறை நாட்டில் தஞ்சாவூர் என்னும் ஊரை ஆண்ட சிற்றரசன். தஞ்சைவாணன் இதன் பாட்டுடைத் தலைவன் ஆவான். அவன் வீரமும் கொடையும் இதில் பேசப்படுகின்றன.

**உலா**

காப்பிய நூல்களில் தலைவனின் உலா வருணிக்கப் படுவது மரபு அவ்வொன்றனையே விரிவாகப் பாடிச் சிறப்பித்துக் கூறும் சிற்றிலக்கிய வகை இது. இதில் பாட்டுடைத் தலைவனே கிளவித் தலைவனாகிறான். அவன் உலா வருதலின் சிறப்பு முதற்பகுதியில் சிறப்பிக்கப்படுகிறது. இதை முன்னிலை ஏழு என்பர்.

பிற்பகுதியில் ஏழு பருவ மாதர் அவன் எழிலில் தம் சிந்தையைப் பறிகொடுப்பதாகப் பாடுவர். பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண் என்னும் எழுபருவ மாதர்களின் உள்ள நிலையையும் மெய்ப்பாடுகளையும் விவரித்துக் கூறும்.

**வரலாறு**

'ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிய
வழக்கொடு சிவணிய வகைமையான' - தொல் புறத் 30-31.

என்பது உலாவுக்கு இலக்கணம் தோற்றுவாய் செய்கிறது. காவியங்களில் காவியத்தலைவர்களின் உலாவில் மகளிர் நெஞ்சு பறி கொடுப்பது தீட்டப்படுகிறது.

கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் சேரமான் பெருமாள் நாயனார் இயற்றிய திருக்கைலாய ஞான உலா முதல் உலா நூலாகும். இதனை ஆதி உலா' என்பர், திருஞானசம்பந்தரின் உலாவை நம்பியாண்டார் நம்பிகள் பாடியுள்ளார். அதற்கு ஆளுடைய பிள்ளையார் திரு உலாமாலை' என்று பெயர். இது கிபி. பதினொன்றாம் நூற்றாண்டைச் சார்ந்தது.

ஒட்டக் கூத்தர் மூன்று உலாக்களைப் பாடினார். அதற்கு மூவருலா என்று பெயர். அவை 'விக்கிரம சோழன் உலா குலோத்துங்க சோழன் உலா, இராசராச சோழன் உலா' என்பனவாகும். கோவை உலா அந்தாதிக்கு ஒட்டக் கூத்தர்' என்று பாராட்டுரை வழங்குகிறது.

**நாயக்கர் காலம்**

https://t.me/tnpscfree



திரிகூடராசப்பகவிராயரின் திருக்குற்றாலநாதர் உலா', இரட்டைப் புலவர்களின் 'ஏகாம்பர நாதர் உலா', அந்தகக் கவிராயரின் திருவாரூர் உலா', தத்துவராயரின் சொக்கநாதர் உலா முதலானவை நாயக்கர் காலத்துச் சிறந்த உலா நூல்களாகும்.

**அந்தாதி**

இறுதியை முதலாகத் தொடுப்பது யாப்பில் ஒரு தொடையழகாகும்; அணி வகையில் இது சொல்லணி யாகும். இதையே தலைப்பாகக் கொண்டு ஒரு சில நூல்கள் எழுந்தன. அந்தம் முதலாகத் தொடுப்பது அந்தாதி என்னும் காரிகை இதனை வெண்பா அல்லது கட்டளைக் கலித்துறையில் பாடுவர்.

**வரலாறு**

அந்தாதி பாடுவது மிகப் பழங்காலத்திலே இருந்து வருவது. சங்க இலக்கியத்திலும் அது தோற்றம் அளித்து உள்ளது.

'மண்டிணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்புதைவரு வளியும்
வளித் தலைஇய தீயும்
தீ முரணிய நீரும் என்றாங்கு' - புறம் 2,

அதனைத் தொடர்ந்து காரைக் காலம்மையார் அற்புதத் திருவந்தாதி பாடினார்.

முதலாழ்வார்கள் ஆகிய பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகியோரும், திருமழிசை ஆழ்வார் முதலானோரும் அந்தாதிப் பாடல்களைப் பாடியுள்ளனர்.

கம்பர் பாடிய சரசுவதி அந்தாதியும், சடகோபரந் தாதியும் சோழர் காலத்தில் எழுந்தவையாகும்.

**நாயக்கர் காலம்**

எல்லப்ப நாவலரின் திருவருணை அந்தாதி, பிள்ளைப் பெருமாளையங்காரின் திருவரங்கத்து அந்தாதி, அருண கிரி அந்தாதி, அபிராமி அந்தாதி முதலியன நாயக்கர் காலத்தைச் சார்ந்தவையாகும். பிறமொழிகளில் இத்தகைய அமைப்புமுறையில் பாடல்கள் எழவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். மற்றும் கலம்பகம், உலா, தூது முதலிய பாடல்களும் அந்தாதித் தொடையில் பாடப் பட்டுள்ளன.

**கலம்பகம்**

கதம்பமாலை என்பதன் மரூஉ முடிவு கலம்பகம் என்பற். 'பல்பூமிடைந்தபடலைக் கண்ணி' என்னும் பெரும்பாணாற்றும் படைத் தொடருக்குக் கதம்பமாகிய மாலை என்று உரை கூறுவர் நச்சினார்க்கினியர்.

''களிவண்டு மிழற்றிய கலம்பகம் புனைந்த
அலங்கலந் தொடையல்''

என்பர் தொண்டரடிப் பொடியாழ்வார்.

இதில் பதினெட்டு உறுப்புகள் இடம் பெறுகின்றன. அவை புயவகுப்பு, மதங்கு, அம்மானை, காலம், சம்பிரதம், கார், தவம், குறம், மறம், பாண், களி, சித்து, இரங்கல், கைக்கிளை, தூது, வண்டு, தழை, ஊசல் என்பனவாம். இவற்றோடு பிச்சியார், கொற்றியார், இடைச்சியார், வலைச்சியார் என்ற உறுப்புகளும் இடம் பெறும். கலம் -12, பகம் - பாதி, 18 உறுப்புகள் கொண்டது கலம்பகம் என்று விளக்கம் தருவாரும் உளர். இதில் 100 பாடல்கள் இடம் பெறுகின்றன. இவை அந்தாதித் தொடையில்



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



பாடப் பெறுகின்றன; கோயில் தலங்கள் மீதும் ஊர்கள் மீதும் இவை பாடப்படுகின்றன. நால்வகைப் பாக்களும், தாழிசை, துறை, விருத்தம் என்னும் பாவினங்களும் விரவி வரப் பாடப் பெறும்.

**வரலாறு**

பல்லவர் காலத்தில் கி.பி. 880 இல் நந்திவர்மன் மீது பாடப்பட்ட நந்திக் கலம்பகம் முதல் நூலாகும்.

**நாயக்கர் காலம்**

பிள்ளைப் பெருமாளையங்காரின் திருவரங்கக் கலம்பகம், அருணைக் கலம்பகம், கச்சிக் கலம்பகம், திருவரங்கக் கலம்பகம், குமர குருபரரின் மதுரைக் கலம்பகம் முதலியவை குறிப்பிடத்தக்கவையாகும். கலம்பகத்திற்கு இரட்டையர்கள்' என்ற பாராட்டுரை வழங்குகிறது. இவர்கள் பாடியவைதில்லைக் கலம்பகம். திருவாமாத்தூர்க் கலம்பகம் என்பன ஆகும்.

**பரணி**

போர்க் களத்தில் பரண் மீது இருந்து கொண்டு போர்க் காட்சிகளைப் பாடுவது பரணி என்பர். பரணியில் பிறந்து தரணியாளும் மன்னனைப் பாடுவதால் இதற்குப் பரணி என்ற பெயர் வழங்குவதாகவும் கூறுவர்.

'ஆனை ஆயிரம் அமரிடை வென்ற
மானவனுக்கு வகுப்பது பரணி'

என்று கூறுவர்.

இது கடவுள் வாழ்த்து, கடை திறப்பு, காடு பாடியது தேவியைப் பாடியது, பேய்களைப் பாடியது, இந்திரசாலம் இராசபாரம்பரியம், பேய் முறைப்பாடு, அவதாரம், காளிக்குக் கூளி கூறியது, போர் பாடியது, களம் பாடியது என்ற பதின்மூன்று உறுப்புகளைக் கொண்டு விளங்குவது தோற்றவர் பெயர் இதற்கு வழங்கப்படுகிறது, கலித்தாழி சையில் பாடப்பெறும்.

**வரலாறு**

முதற்பரணி நூல் கலிங்கத்துப்பரணி; இதுவே மிகச் சிறந்தது என்றும் பாராட்டப்படுகின்றது.

'பரணிக்கோர் ஜெயங்கொண்டான்' என்ற தொடருக்கேற்ப அவர் பாடிய கலிங்கத்துப்பரணி கற்பனை நயமும் ஓசை நலமும், கருத்துச் செறிவும், பொருட் சிறப்பும், கற்பனை நயமும், சுவைப் பெருக்கும் கொண்டு விளங்குகிறது. ஒட்டக்கூத்தரின் தக்கயாகப் பரணியும் சோழர் காலத்தினது ஆகும்.

**நாயக்கர் காலம்**

சூரன் வதைப் பரணி, இனிய வதைப் பரணி, கஞ்ச வதைப் பரணி, அஞ்ஞவதைப் பரணி பாசவதைப் பரணி, திருச்செந்தூர்ப் பரணி முதலியவை இக்காலத்துப் பரணி நூல்களாம். சோழர் காலத்து எழுந்த கலிங்கத்துப் பரணியும், தக்கயாகப் பரணியுமே மிகச் சிறத்தனவாகப் போற்றப்படுகின்றன.

**தூது**

அகப்பொருள் இலக்கியங்களில் தூது சிறப்பிடம் பெறுகிறது. தலைவி காதல் வயப்பட்டுத் தன் நெஞ்சைப் பறிகொடுக்கிறாள். தலைவனிடம் தூது அனுப்புவதாகக் கவிஞர்கள் பாடுவது இலக்கிய மரபாக விளங்கி வருகிறது. தமிழ் இலக்கியங்களில் அரசர்களையும் தெய்வங்களையும் தலைவர்களாகக் கொண்டு தம் நெஞ்சைத் தூது விடுவதாகக் கூறும் மரபு உள்ளது. அதோடு நில்லாமல் நாரை, அன்னம்,



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



கிளி முதலியவற்றிடம் தம் நிலையைச் சொல்லித் தூது அனுப்பி மாலை வாங்கி வரும்படி கூறும் மரபும் உள்ளது. இவை கலி வெண்பாவில் பாடப் பெறுகின்றன.

"பயில் தருங் கலிவெண் பாவினாலே
உயர்திணைப் பொருளையும் அஃறிணைப் பொருளையும்
சந்தியின் விடுத்தல், முந்துறு தூதெனப்
பாட்டியல் புலவர் நாட்டினர் தெளிந்தே"

- இலக்கண விளக்கப் பாட்டியல்

**வரலாறு**

தொல்காப்பியர் 'தூது முனிவின்மை' என்ற துறையை மெய்ப்பாட்டியலில் குறிப்பிடுகின்றார். அதற்குப் பேராசிரியர் தரும் உரை, புள்ளும் மேகமும் போல்வன கண்டு செல்லுமின் அவர்க்கென்று தூது இரந்துபன் முறையானும் சொல்லுதல்' என்று விளக்கம் தந்துள்ளார். எனவே காதல் தூதுக்குத் தொல்காப்பியம் கால்கோள் செய்திருக்கிறது.

புறநானூற்றுப் பாடல் ஒன்றில் பிசிராந்தையார் தம் நண்பன் சோழனுக்கு அன்னச் சேவலைத் தூது விடுவதை அப்பாடல் அறிவிக்கிறது.

சமய காலத்தில் நாயன்மார்களும் ஆழ்வார்களும் தம்மைக் காதலியர்களாக அமைத்துக் கொண்டு இறைவனிடம் குயில். தும்பி, நெஞ்சம் இவற்றைத் தூதாக அனுப்பும் மரபினை உண்டாக்கியுள்ளனர்.

திருமங்கை ஆழ்வார் செங்கால் மட நாரையை அழைத்துத் தூது விடுகிறார்;

'செங்கால் மட நாராய்! இன்னே சென்று
திருக்கண்ண புரம்புக்கென் செங்கண் மாலுக்கு
என்காதல் என் துணைவற்கு உரைத்தி யாகில்
இதுவொப்பது எனக்கு இன்பம் இல்லை'

என்று சொல்லிப் பாடுகிறார்.

தூதுப் பொருள்களாக அன்னத்தையும் தென்றலை யும் கிளியையும் தூது விட்டதாகத் தனித்தனி நூல்கள் எழுந்துள்ளன.

**நாயக்கர் காலம்**

உமாபதி சிவாச்சாரியார் எழுதிய நெஞ்சு விடு தூது என்னும் நூலே முதல் தூது இலக்கியமாகும். இது தத்துவ உட்பொருள் கொண்டதாக விளங்குகிறது. அதனைப்பின் பற்றிச் சிவப்பிரகாசர் தத்துவராயர், மீனாட்சி சுந்தரம் பிள்ளை ஆகியவர்களும் இதே போக்கில் தூது இலக்கியங்களை வளர்த்தனர்.

தெய்வங்களைத் தலைவர் களாக வைத்துத் தூது என்னும் காதல் இலக்கியமும் எழுந்தது. அதில் தலை சிறந்தது பலபட்டடை சொக்கநாதப் புலவர் எழுதிய அழகா கிள்ளைவிடு தூது ஆகும். இதற்கு அடுத்ததாகக் குறிப்பிடத்தக்க தூது இலக்கியம் தமிழ்விடு தூது எனலாம். தமிழின் பெருமையை இது விரித்துக் கூறுகிறது.

'இருந்தமிழே உன்னால் இருந்தேன்; இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்'

என்று தமிழ்விடு தூது கூறுகிறது.



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



மதுரைச் சொக்கநாதர் மீது காதல் கொண்ட தலைவி தமிழைத்தாது விடுவதாகக் கூறுவது இந்தால், இதனை அடுத்துக் குறிப்பிடத்தக்கது. விறலி விடு தூது என்னும் நூலாகும். தாசி ஒருத்தியின் வலையில் சிக்கி வாழ்வை நாசப்படுத்திக் கொண்ட கவிஞன் ஒருவன் தன் மனைவியின் ஊடலைத் தணிவிக்க விறலி ஒருத்தியைத் தூதாக அனுப்புவது போன்ற அமைப்பினை உடையது விறலிவிடு தூதாகும். இதைப் பாடியவர் சுப்ரதீபக் கவிஞர் மற்றும் பணத்தைத் தூதாக அனுப்புவதைச் செய்தியாகக் கொண்டு பணவிடு தூது என்ற நூலும் எழுந்துள்ளது.

தாசி ஒருத்தியைக் கண்டு மோகம் கொண்டு அவளிடம் பணத்தையே தூதாக அனுப்பித் தன் காதல் வேட்கையைத் தீர்க்குமாறு வேண்டுவது இந்நூல்.

எகினமயில் கிள்ளை எழிலியோடு பூவை
சகி குயில் நெஞ்சம் தென்றல் வண்டு – தொகைபத்தை
வேறுவேறாகப்பிரித்து மாலை கொண்டன்பு
ஊறிவா என்றல் தூது

எனப் பிரபந்தத் திரட்டுப்பாடல் தூதுப் பொருள் பத்து என இயம்புகிறது. இவையேயன்றித் தமிழ், பணம், மான், வனசம், சவ்வாது, புகையிலை, நெல், துகில், காக்கை, கழுதை, அன்பு, பழையது, செருப்பு முதலிய பொருள் களில் தூது நூல்கள் எழுந்துள்ளன.

**பிள்ளைத் தமிழ்**

இது ஆண்பால் பிள்ளைத்தமிழ், பெண்பால் பிள்ளைத்தமிழ் என இருவகையாக வழங்குவர். தான் போற்றும் கடவுளையோ அரசனையோ பெரியோரையோ குழந்தையாகக் கற்பித்துப் பாடுவது பிள்ளைத் தமிழாகும்.

ஆண்பால் பிள்ளைத் தமிழ் காப்புப் பருவம், செங்கீரைப் பருவம், தாலப் பருவம், சப்பாணிப் பருவம், முத்தப் பருவம், வருகைப் பருவம், அம்புலிப் பருவம், சிற்றில் பருவம் சிறுபறைப் பருவம் சிறுதேர்ப் பருவம் ஆகிய பத்துப் பருவங்களையும் பெறும் பெண்பால் பிள்ளைத் தமிழில் இறுதியில் உள்ள சிற்றில், பறை, சிறுதேர் இவற்றுக்கு மாறாக அம்மானை நீராடல், ஊசல் ஆகிய பருவங்கள் இடம் பெறும். இவற்றுள் அம் புலிப் பருவம் கற்பனை நயம் மிக்க பகுதியாகும்.

ஆழ்வார்களின் பாடல்களில் குழந்தைப் பாடல்கள் மிகுதியாக உள்ளன.

**நாயக்கர் காலம்**

இப்பிள்ளைத் தமிழ் இலக்கியங்கள் நாயக்கர் காலத் திலேயே எழுந்தன. குமரகுருபரர் பாடியவை மீனாட்சியம்மைப் பிள்ளைத் தமிழும் முத்துக் குமார சுவாமிப் பிள்ளைத் தமிழும் ஆகும். பகழிக்கூத்தர் பாடிய திருச் செந்தூர்ப் பிள்ளைத் தமிழ் சிறப்புமிக்கதாகும்.

மீனாட்சி சுந்தரம் பிள்ளை சேக்கிழார் பிள்ளைத்தமிழ் என்ற நூலைப் பாடியுள்ளார். குமரகுருபரர் பாடிய மீனாட்சியம்மைப் பிள்ளைத் தமிழில் கீழ்வரும் பாடல் அழகிய உயிர்ச் சித்திரமாக விளங்குகிறது. இறைவியை உயிர் ஓவிய மாகப் பாடியிருக்கும் பாடல் கற்பனை நயம் மிக்கதாகும். அப்பாடல் பின்வருமாறு.

'தொடுக்கும் கடவுள் பழம்பாடல்
தொடையின் பயனே நறைபழுத்த
துறைத்தீந் தமிழின் **ஒழுகுநறுஞ்**
சுவையே அகந்தைக் கிழங்கையகழ்ந்
தெடுக்குத் தொழும்பர் உளக்கோயிற்(கு)



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



ஏற்றும் விளக்கே வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே எறிதரங்கம்
உடுக்கும் புவனங் கடந்து நின்ற
ஒருவன் திருவுள்ளத்திலழ
கொழுக எழுதிப் பார்த்திருக்கும்
உயிரோ வியமே மதுகரம்வாய்
மடுக்குங் குழற்கா டேந்துமிள
வஞ்சிக்கொடியே வருகவே
மலயத்துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே'

**பள்ளு**

**நாயக்கர் காலம்**

பள்ளு நூல்கள் நாயக்கர் காலத்தில் எழுந்ததாகும். இது உழவர்களின் வாழ்க்கையைச் சித்திரிப்பதாகும். இந்நூலின் கடவுள் வணக்கம் பள்ளன் பெருமை.

அவன் மனைவியர் உறவுகள், நாட்டுவளம், மழைக்குறி, ஆற்று வெள்ளம் முதலிய செய்திகள் உள்ளன. பண்ணையாரிடம் பள்ளன் பேசும் உரையாடல்களும், அவன் தன் மனைவிய ரிடையே நிகழ்த்தும் ஊடற் செய்திகளும், நகைச்சுவை களும் இவை சித்திரிக்கின்றன. தொடக்கத்தில் இஃது உழத்திப் பாட்டு என வழங்கியது.

பள்ளு நூல்களுள் முக்கூடற்பள்ளு தலைசிறந்த தாகும். பள்ளனின் மனைவியருள் ஒருத்தி சைவ சமயத் தினள். மற்றொருத்தி வைணவி.

அவர்கள் தத்தம் ஊர் களின் பெருமை பற்றியும், சமயங்களின் சிறப்பைப் பற்றியும் பேசுகின்ற ஏசல்களும் பூசல்களும் சுவைபட அமைந்துள் ளன. இதில் நெல்லின் வகைகளைப் பற்றியும், எருதுகளின் வகைகளைப் பற்றியும் விவரமாகக் கூறப்பட்டுள்ளன. மழையின் வருணனை இதில் சிறப்பிடம் பெற்றுள்ளது; ஓசை நயம்பட அமைந்துள்ளது. ஆற்று வெள்ளம் நாளை வரத்

தோற்று தேகுறி - மலை
யாள மின்னல் ஈழமின்னல்
சூழ மின்னுதே
நேற்றும் இன்றும் கொம்புசுற்றிக்
காற்றடிக்குதே - கேணி
நீர்ப்படு சொறித் தவளை
கூப்பிடு குதே -
சேற்று நண்டு சேற்றில்வளை
ஏற்றடைக் குதே - மழை
தேடியொரு கோடி வானம்
பாடி யாடுதே
போற்று திரு மாலழகர்க்
கேற்ற மாம்பண்ணைச் சேரிப்
புள்ளிப் பள்ளர் ஆடிப்பாடித்
துள்ளிக் கொள்வோமே' (முக்கூட. 35)



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



மற்றும் பள்ளு நூல்கள் பல உள்ளன. செங்கோட்டுப்பள்ளு. ஞானப்பள்ளு வடகடலைப் பள்ளு சேற்றூர்பள்ளு திருவாரூர் பள்ளு, குருகூர்ப் பள்ளு, செண்பகராமன் பள்ளு முதலியன வழங்குகின்றன. இவை ஊர்களின் பெயர்களையே பொதுவாகக் **கொண்டுள்ளன.** நாட்டுப்புற இயல் இவற்றில் மிளிர்கின்றது. இஃது மண் மணம் வீசும் பண் கலந்த பாடல்களைக் கொண்டதாகும்; சிந்தும், விருத்தமும் மிகுதியாக இடம் பெறுகின்றன.

**குறவஞ்சி (நாயக்கர் காலம்)**

குறத்தியைக் கதை மாந்தராகக் கொண்டு பாடப்படும் மற்றொரு மக்கள் இலக்கியம் குறவஞ்சியாகும். வஞ்சிக் கொடி போன்றவள் குறத்தி என்ற பொருளில் குறவஞ்சி என்ற பெயர் அமைகிறது.

உலா வருகின்ற தலைவனைக் கண்டு காதல் கொள்ளும் தலைவிக்குக் குறத்தி கூறிகூறல் இதில் இடம் பெறும் **தலைமையான** செய்தியாகும், குறவன் குறத்தி அவர்கள் உரையாடல்கள் நாட்டு வளத்தையும் மலைவளத்தையும் மையமாகக் கொண்டு அமையும், அவர்கள் வேட்டுவ வாழ்க்கை இவற்றில் காட்டப்படுகிறது. குறத்தி தலைமகளிடத்துப் பெறும் பரிசிலும், அதனால் அவர்கள் அடையும் உவகையும் இதில் பேசப்படுகின்றன. சிந்து, வெண்பா முதலியயாப்பில் நாடகப் போக்கில் இப்பாடல்கள் அமைகின்றன. கோயில் தலங்களின் பெருமைகளைக் கூறுகின்றன.

**குற்றாலக் குறவஞ்சி**

குறவஞ்சி நூல்கள் நாடகப் போக்குடையன. அப் பாடல்களுக்கு இசையமைத்து நாட்டிய நாடகமாக இப்பொழுது பலர் இயக்கிச் சிறப்பிக்கின்றனர். இக் குறவஞ்சி நூல்களுள் திரிகூடராசப்ப கவிராயர் இயற்றிய திருக்குற்றாலக் குறவஞ்சி தலைசிறந்ததாகும். குற்றால நாதர் இந்நாடகத்தின் தலைவர் ஆவார். வசந்த வல்லி பந்து ஆடுகிறாள். அவள் உலாவரும் குற்றாலநாதரிடத்து உள்ளத்தைப் பறி கொடுத்துப் பா**ங்கியைத்** தூது அனுப்புகிறாள், குறத்தி அவளைச் சந்தித்துக் குறிசொல்லிப் பரிசு பெறுகிறாள். கவர்ச்சி மிக்க உரையாடல்கள் இவற்றில் இடம்பெறுகின்றன. இது முத்தமிழ் இலக்கியமாக விளங்குகிறது. அவருடைய பாடல்களில் குற்றால மலை வருணனை கற்பனை வளமும் ஒப்பனை நயமும் மிக்கதாகும்.

'வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்
கானவர்கள் விழியெறிந்து வானவரை அழைப்பர்
கமன சித்தர் வந்து வந்து காயசித்தி விளைப்பர்.''
தேனருவித்திரையெழுப்பி வானின் வழி ஒழுகும்
செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்
கூனலிளம் பிறைமுடித்தவேணி யலங்காரர்
குற்றாலத் திரிகூட மலையெங்கள் மலையே'

பொதுவாகக் குறவஞ்சி இலக்கியங்கள் நாடு, நகர், மலை, கோயில், தலம் இவற்றின் சிறப்புகளை விளக்குவதால் அவற்றைத் தலபுராணங்களின் மாற்று வடிவம் எனக் கூறலாம்.

**பிற குறவஞ்சிகள்**

கும்பேசர் குறவஞ்சி, திருவாரூர், குறவஞ்சி, மீனாட்சியம்மை குறவஞ்சி, சரபேந்திர பூபால குறவஞ்சி, அர்த்தனா ரீசுவரர் குறவஞ்சி முதலியன குறிப்பிடத்தக்கனவாகும். இவற்றைக் குறத்திப் பாட்டெனவும், குறவஞ்சி நாடகம் எனவும் கூறும் வழக்கம் உள்ளது.



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



**சதகங்கள்**

ஏதேனும் ஒரு பொருள் பற்றி 100 பாடல்கள் பாடப்பட்டால் அதனைச் சதகம் என்று கூறினர்.

'விளையும் ஒரு பொருள் மேலொரு நூறு
தழைய வுரைத்தல் சதகமென்ப'

என்று இலக்கண விளக்கப்பாட்டியல் கூறும். எண்ணிக்கை பற்றி இந்நூலுக்கு இப்பெயர் அமைந்துள்ளது. முதன் முதலில் திருச்சதகம் என்ற ஒரு பகுதி திருவாசகத்தில் இடம்பெற்றுள்ளது. இதுவே தமிழில் முதல் சதக இலக்கியமாகும்.

கிபி1 ஆம் நூற்றாண்டில் இஃது ஒருவகைத்தனி இலக்கியமாக வளர்ந்தது. முதன் முதலில் அவினாசி ஆரைக் கிழார் என்பவரே இச்சதக இலக்கியத்தைப் புகுத்தினார். அவர் தம் நூலுக்குக் கார்மண்டல சதகம் என்ற பெயரை இட்டு வழங்கினர். அதனை அடிப்படையாகக் கொண்டு சோழ மண்டல சதகம், ஈழ மண்டல சதகம் முதலிய நூல்கள் எழுந்தன.

**நாயக்கர் காலம்**

இவை நாட்டு வரலாற்றை விவரித்துக் கூறும் பொருள் மரபைப் பெற்று விளங்கின. தொடக்கத்தில் மண்டலங்களின் எல்லைக்குட்பட்ட வாழ்வை விவரிக்கத் தொடங்கிய **சதகங்கள்** இறைப் பொருளும் நீதிகளும் உணர்த்தத் தொடங்கின. அருணாசல சதகம், குமரேச சதகம், கையிலாச நாதர் சதகம் முதலியன இத்தகையன.

**திருப்பள்ளி எழுச்சி**

துயிலெடை நிலை என்பது புறத்திணையாகும். அதனை யொட்டி நாயன்மார்கள் பாடல்களிலும், ஆழ்வார்கள் பாடல்களிலும் பள்ளி எழுச்சிப் பாடல்கள் இடம் பெற்றன. மாணிக்கவாசகர் பாடல்கள் தொண்டரடிப் பொடியாழ்வார் பாடல்கள் ஒரு சில இத்துறையில் அமைந்துள்ளன.

**நாயக்கர் காலம்**

இவற்றை அடிப்படையாக வைத்து 17ஆம் நூற் றாண்டில் தத்துவராயர் திருப்பள்ளி எழுச்சிப் பாடலைப் பாடியுள்ளார். மற்றும் சிவப்பிரகாச சுவாமிகள், சொரூபானந்த சுவாமிகள் முதலியவர்கள் பள்ளி எழுச்சிப் பாடல்கள் பாடியுள்ளனர். சிதம்பர சுவாமிகள் முருகனைப் பற்றித் திருப்பள்ளி எழுச்சி பாடியுள்ளார்.

இம்மரபினை ஒட்டி இக்காலத்தில் பாரதியார் பாரத அன்னையின் திருப்பள்ளி எழுச்சியைப் பாடியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

**சைவசித்தாந்த நூல்கள்**

தேவாரமும் திருவாசகமும் இறைவனின் பாமா**லைகள்;** கோயில் தலங்களின் பெருமைகளைக் கூறுவன; இறை யுணர்வு மிக்கன; இவை உள்ளத்தைத் தொடும் நூல்கள்.

பதி பசு பாசம் பற்றிய விளக்கங்கள் சாத்திர நூல் களில் இடம்பெற்றுள்ளன. 17 முதல் 14ஆம் நூற்றாண்டில் அறிவு நூல்களான இச் சைவ சாத்திர நூல்கள் எழுந்தன. அவை பின்வருமாறு :

1. திருவுந்தியார், 2. திருக்களிற்றுப் படியார், 3. சிவ ஞான போதம், 4. சிவஞான சித்தியார் 5. இருபா இருபஃது 6. உண்மை விளக்கம் 7. சிவப்பிரகாசம் 8 திருவருட்பயன் . வினாவெண்பா 10. போற்றிப் பஃறொடைவெண்பா 17. கொடிக்கவி 12. நெஞ்சுவிடு தூது 13. உண்மை நெறி விளக்கம் 14. சங்கற்ப நிராகரணம்.



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



**சித்தர் பாடல்கள்**

சித்தர்கள் பதினெண்மர் என்பர். அகத்தியர், புலத் தியர், புஜண்டர் நந்தி, திருமூலர் காலாங்கிநாதர், போகர் கொங்கணர் உரோமமுனி, சட்டைமுனி, மச்சமுனி, கருவூரர், தன்வந்திரி, தேரையர், பிண்ணாக்கீசர், கோரக்கர், யூகி முனி, இடைக்காடர் எனப்படுவார். அகத்தியரே இவர்களுள் தலைமை மிக்கவர். திருமூ லரையும் இந்தச் சித்தர்களோடு வைத்து எண்ணுவர். இவர்கள் யோகம் செய்து மெய்யுணர்வு பெற்றவர்கள் என்று கருதப்படு கின்ற னர்.

இவர்களைத் தவிர பாம்பாட்டிச் சித்தர், அகப் பேய்ச் சித்தர், குதம்பைச் சித்தர், இடைக்காட்டுச் சித்தர் முதலியோரும் அறியப்படுகின்றனர். இவர்கள் சமுதாயச் சடங்கு முறை**களைச்** சாடும் இயல்பினர்.

குதம்பை என்னும் காதணி அணிந்த பெண்ணொருத் தியை விளித்துப்பாடும் மரபு ஒட்டி அவர் குதம்பைச் சித்தர் என அழைக்கப்படுகிறார். அவ்வாறே இடையரை விளித்துப் பாடுபவரை இடைக்காட்டுச் சித்தர் என்றனர். ஞானநெறியைப் பற்றி இப்பாடல்கள் கூறுகின்றன.

ஒரு சிலர் மருத்துவச் செய்திகளையும் தம் பாடலில் அறிவித்துள்ளனர். அவர்கள் பெயரில் சித்த மருத்துவம் என்ற நாட்டு மருத்துவம் வளர்ந்துள்ளது.

சித்தர் பாடல்கள் பெரும்பாலும் பொருள் விளங் **காதனவாகவும் உருவகமாகவும் அமையும்.**

'மாங்காய்ப்பால் உண்டு மலைமேல் இருப்போர்க்குத்
தேங்காய்ப் பால் ஏதுக்கடி - குதம்பாய்
தேங்காய் பால் ஏதுக்கடி'

என்பது இத்தகைய பாடல்களுள் ஒன்றாகும்.

**உரையாசிரியர்கள்**

செந்தமிழ் நூல்கள் பலவற்றின் மங்காத புகழுக்கு மூ லகாரணம் அவற்றிற்குச் செய்யப்பட்ட நல்லுரைகளே எனின் அது மிகையாகாது. தொல்காப்பியம் என்னும் பண்டைத் தமிழ் இலக்கண நூல் தொடங்கி அண்மைக்கால நூல் வரை வாழ்ந்த அறிஞர்கள் பலர் சீரிய உரை களைத் தமிழ் நூல்களுக்கு வழங்கியுள்ளனர்.

**இளம்பூரணர்**

தொல்காப்பியம் முழுமைக்கும் உரை எழுதியுள்ளார். ஆனால் பொருளதிகாரப்பகுதியில் ஒரு சில பகுதிகள் கிடைத்தில இவரது உரை தெளிவும், எளிமையும் அழகும் வாய்ந்தது சுருக்கமானது. இவரை உரையாசிரியர்' என்றே அழைப்பர். பின் தொல்காப்பிய உரையாசிரியர் களைக் காட்டிலும் காலத்தால் முந்தியவர். நன்னூல் இவர் உரையினைத் தழுவியது என்பர் அறிஞர். நாற்பதுக்கு மேற்பட்ட நூல்களிலிருந்து தம் உரையில் மேற்கோள் காட்டியுள்ளார் இளம்பூரணர். இவர் வாழ்ந்த காலம் கி.பி. 12ஆம் நூற்றாண்டு என்பர். பழந்தமிழ் நூல்களிலிருந்து மேற்கோள் காட்டித் தம் உரையைச் செம்மைப்படுத்தியுள்ளார்.

**சேனாவரையர்**

தொல்காப்பியத்தின் சொல்லதிகாரத்திற்கு மட்டும் இவர் உரை உள்ளது. வடமொழி அறிவும் தென்மொழிப் புலமையும் உடையவர். அழகிய நடையில் அமைந்துள்ள சிறந்த உரை 'சேனாவரையம்.' 'வடநூற்கடலை நிலை கண் டுணர்ந்த சேனாவரையர்' என்ற இவரைப் போற்றுவர். இவருடைய காலம்



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



கிபி. 13ஆம் நூற்றாண்டு என்பர். தெளிவான, **விளக்கமான உரை** எழுதுவதில் இவரது கைவண்ணம் உரையில் அமைந்துள்ளது.

**பேராசிரியர்**

தொல்காப்பியத்தில் பொருளதிகாரத்தின் சில இயல்களுக்கு மட்டுமே இவரது உரை கிடைத்துள்ளது. இவர் முழு நூலுக்கு உரை எழுதினார் என்பர். பிற பகுதிகள் கிடைக்கவில்லை . இவரது காலம் கி.பி. 13 ஆம் நூற்றாண்டாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. திருக்கோவையாருக்கு உரையியற்றிய பேராசிரியரும் இவரும் வேறாவர் என்பது சிலர் கருத்து, வறுமை என்பதனை விளக்க வந்த இவ்வாசிரியர் அது போகம் துய்க்கப் பெறாத பற்றுள்ளம்' என்று கூறுகின்றார். நுண்மாண் நுழைபுலம் மிக்கவர் இவர் என்பதனை இவரது உரையே காட்டும்.

**நச்சினார்க்கினியர்**

"உச்சிமேல் புலவர்கொள் நச்சினார்க்கினியர் " என்று போற்றப்படும் இவர் பல இலக்கண இலக்கியங்களுக்கு உரை வகுத்துள்ளார். இவர் கி.பி. 14ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர். தொல்காப்பியம் முழுமைக்கும் உரை செய்துள்ளார். பத்துப்பாட்டு, கலித்தொகை, சீவகசிந்தாமணி ஆகிய இலக்கியங்களுக்கும் சிறந்த உரையினைப் படைத் துள்ளார். இளம்பூரணர் உரையைக் காட்டிலும் இவர் உரை விரிவானது; விளக்கமானது.

**அடியார்க்கு நல்லார்**

சிலப்பதிகாரத்திற்குத் தோன்றிய முதல் உரை அரும் பதவுரையாசிரியர் செய்தது. அவர் இயற்பெயர் தெளியவில்லை. அவ்வுரை சிறிய குறிப்புரையாகவே உள்ளது. அடுத்த உரை அடியார்க்கு நல்லாரால் இயற்றப்பட்டது.

இலக்கிய இலக்கண அறிவு மிக்கவர்; இசை, நாடகம், வான நூல் முதலான பற்பல நூலறிவினையும் பெற்றவர், மேற்கோள் தரும் போது நூலின் பெயரையும் குறிப்பிட்டு விளக்குபவர்.

நிரம்பை என்னும் ஊரைச் சேர்ந்த பொப் பண்ண காங்கேயனால் ஆதரிக்கப்பட்டவர். இவருடைய காலம் கி.பி. 12ஆம் நூற்றாண்டு ஆகும். இவரது உரை ஓர் அரிய கலைக் கருவூலம், அறிவுச் சுரங்கம் எனக் கூறின் மிகையாகாது.

**பரிமேலழகர்**

'தருமர், மணக்குடவர், தாமத்தர், நச்சர், பரிதியார், காளிங்கர், பரிப்பெருமாள், திருமலையர், மல்லர், பரிமேலழகர் என்னும் பதின்மர் வள்ளுவர் நூலுக்கு உரை செய்தவர்கள். இவர்களுள் பரிமேலழகரின் உரையே சிறந்தது என்பர் அறிஞர். வடமொழியறிவும் தமிழ் மொழிப் புலமையும் உடைய இவரது உரையைப் பாராட்டி, பாரித்த உரையெல்லாம் பரிமேலழகர் தெரித்த உரையாமோ தெளி' என்று புலவர் போற்றுவர்.

காஞ்சிபுரம் பெருமாள் கோவில் அர்ச்சகர் மரபில் வந்தவர் என்பர். இவரது காலம் கிபி. 13 ஆம் நூற்றாண்டாகும். மாந்தர் சின்னாள் பல்பிணிச் சிற்றறிவினர்' என்றும், வீடு 'சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்து' என்றும் இவ்வாறு பல விளக்கங்களைத் தந்துள்ளார் பரிமேலழகர், இவர் பரிபாடல் என்னும் சங்க நூலுக்கும் உரை செய்துள்ளார்.



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



இவ்வுரையாசிரியர்களே அன்றி வேறு பலரும் தமிழிற்கு நல்லதொண்டினை ஆற்றியுள்ளனர். நன்னூலுக்கு மயிலைநாதர், சிவஞான முனிவர், சங்கர நமச் சிவாயர் முதலானோர் சிறந்த **உரைகளை எழுதியுள்ளனர்.**

திருவாய் மொழிக்கு ஆறாயிரப்படி, முப்பதாயிரப்படி என்று பல உரைகள் உள்ளன. இவை மணிப்பிரவாள நடையில் அமைந்தவை. பெரிய வாச்சான்பிள்ளை பிரபந்த உரையாசிரியர்க்குள் குறிப்பிடத்தக்கவர் ஆவார்.

இவர்களே அல்லாமல், கல்லாடர், தெய்வச் சிலையார் ஆகியோர் தொல்காப்பியத்திற்கும், நக்கீரர் இறையனார் அகப் பொருளுக்கும், இராமானுசக் கவிராயர் நன்னூலுக்கும், **சொக்கப்ப நாவலர் தஞ்சை வாணன் கோவைக்கும் குணசாகரர்** யாப்பு நூல்களுக்கும், சாமுண்டு தேவநாயகர் புறப்பொருள் பெண்பாமாலைக்கும் வேறுபலர் பல்வேறு நூல்களுக்கும் உரை வழங்கினர்.

இவ்வுரைகள் தமிழ் நூல்களின் தரத்தை உயர்த்துகின்றன; பெருமைக்குச் சான்றாகின்றன, காலந்தொறும் வளர்ந்த உரைநடைத் தமிழுக்கு விளக்கமாகத் திகழ்கின்றன.

## 7. தனிப் புலவர்கள்

### (சோழர் காலமும் நாயக்கர் காலமும்) பட்டினத்தார்

இவர் காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்தவர், சைவசமயத்தைச் சார்ந்தவர் ஆவார். இவருடைய கோயில் நான்மணிமாலை, திருக்கழுமலை மும்மணிக்கோவை, திருவிடைமருதூர் மும்மணிக்கோவை, திருவேகம்ப முடையார் திருவந்தாதி, திருவொற்றியூர் ஒருபா ஒருபது என்பவை சிறந்த நூல்களாகப் போற்றப்படுகின்றன. இவருடைய பாடல்கள் பதினொன்றாம் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளன.

இவருடைய பாடல்கள் இனிமையும், எளிமையும், நேரான ஓட்டமும் உடையன. இவர் இல்லற வாழ்விலே செம்மையாக வாழ்ந்து சிவனிடம் அன்பு கொண்டு முத்தி பெற்ற பெருமகனாராவார். இவருடைய காலம் பத்து அல்லது பதினொன்றாம் நூற்றாண்டு

**ஓட்டக்கூத்தர்**

'கவிராட்சசன்' என்றும், 'கவிச்சக்கரவர்த்தி' என்றும் போற்றப்படுபவர் ஒட்டக்கூத்தர். தண்டியலங்காரத்தில் 'மலரிவருங் கூத்தன்' என்ற தொடரைக் கொண்டு இவரது ஊர் 'மலரி' என்று கூறுவர். இவர் கைகோளர் மரபினைச் சேர்ந்தவர். எனவே, இம்மரபினைப் பற்றி ஈட்டி யெழுபது' என்னும் நூல் செய்தார். விக்கிரம சோழன் இரண்டாம் குலோத்துங்க சோழன், இரண்டாம் இராசராச சோழன் ஆகியோர் மீது உலாக்கள் பாடினார். இது மூவருலர்' என்று வழங்கப்படுகிறது. தக்கயாப் பரணி' இவர் செய்தது. இது தக்கன் இறைவனை எதிர்த்து அழிந்த வரலாற்றைக் கூறுவது. இவர் பாடிய பிற நூல்கள் குலோத்துங்கன் பிள்ளைத் தமிழ்' காங்கேயன் நாலாயிரக் கோவை, அரும்பைத் தொள்ளாயிரம் முதலியன. பிள்ளைத்தமிழ் நூலை முதன் முதலில் செய்தவர் ஒட்டக்கூத்தரே. இராமாயணத்தில் உத்தரகாண்டத்தை இவர் பாடியதாகக் கூறுவர். கோவையுலா அந்தாதிக் கொட்டக் கூத்தன்' என்னும் தொடர், இவர்தம் புலமை நலத்தைக் காட்டுவதாகும். இவர் காலம் கிபி. பன்னிரண்டாம் நூற்றாண்டு.

**புகழேந்திப் புலவர்**

வெண்பா நூல்களில் சிறந்ததாகிய நளவெண்பா வினைப் பாடியவர் புகழேந்திப் புலவர் வெண்பாவிற் புகழேந்தி' என்னும் தொடர் இவர்தம் பாடலியற்றும் திறத்தை வெளிப்படுத்துவதாகும். தொண்டை



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



நாட்டில் பொன் விளைந்த களத்தூரைச் சேர்ந்த இவரை மள்ளுவ நாட்டு முரணைநகர் சந்திரன் சுவர்க்கி என்ற தலைவன் ஆதரித்தான்.

நளவெண்பா 424 பாக்களைக் கொண்டது. சுயம்வர காண்டம், கலிதொடர் காண்டம், கலிநீங்கு காண்டம் என்ற மூன்று பகுதிகளை உடையது. மகாபாரதத்தில் வரும் நளனது கிளைக் கதையையே புகழேந்தியார் நளவெண்பா எனும் தனி நூலாகச் செய்தார். செஞ்சிக் கலம்பகம் என்ற நூலையும் இவர் இயற்றியுள்ளார். இக்காலத்தே இவரியற்றியதாக அல்லி யரசாணிமாலை' முதலான நூல்கள் வெளிவந்துள்ளன. அஃது உண்மையன்று அவை பிற்காலத்தொருவரால் செய்யப்பட்டவை. இவருடைய காலம் கி.பி. 13ஆம் நூற்றாண்டு என்பர்.

**பதினான்கு, பதினைந்தாம் நூற்றாண்டுத் தமிழ்ப் புலவர்கள்**

**இரட்டையர்கள்**

முதுசூரியன், இளஞ்சூரியன் என்று பெயர் பெற்ற புலவர் இருவர். ஒருவர் கண் பார்வை இல்லாதவர் மற்றொருவர் நடக்க இயலாதவர். முதலாமவர் தோளில் மற்றவர் ஏறிப் பல இடங்களுக்கும் சென்று தமிழ்ப் பணி ஆற்றியுள்ளனர். ஒருவர் முதலிரண்டிகளைப் பாட மற்றொருவர் பின்னிரண்ட்டிகளைப் பாடுவர். இவர்கள் பெயரால் பல தனிப் பாடல்கள் உள்ளன.

101 பாடல்களைக் கொண்ட தில்லைக் கலம்பகம், 556 கண்ணிகளைக் கொண்ட ஏகாம்பரநாதர் உலா, மூவர் அம்மானை ஆகியவற்றை இவர்கள் எழுதியுள்ளனர். திருவாமாத்தூர்க் கலம்பகமும் சிறந்த நூலாகும். இவர்கள் இயற்றியதாகக் கூறப்படும் கச்சிக் கலம்பகமும் கச்சியுலாவும் கிடைக்கப் பெறவில்லை . இவர்களின் காலம் கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டாகும். 'கலம்பகத்திற்கு இரட்டையர்கள்' என்ற தொடர் இவர்தம் பெருமையைச் சாற்றுவதாகும்.

**வில்லியுத்தூர்**

வில்லிபுத்தூரர் திருமுனைப்பாடி நாட்டிலே சனியூரிலே வாழ்ந்த வீரராகவன் என்பவர்க்கு மைந்தராகப் பிறந்தவர். வக்கபாகையை ஆண்ட வரபதி ஆட்கொண்டான் என்னும் மன்னனின் அவைக்களப் புலவராக விளங்கினார். இவர் **வைணவர்.**

வில்லிபுத்தூரர் பாடிய பாரதம் சந்தம் மிக்க பாடல்களால் வடமொழி வியாசபாரதக்கதையினைச் சுருக்கமாகக் கூறுவதாகும். இந்நூல் 4339 விருத்தப் பாக்களைக் கொண்டு விளங்குகின்றது. விருத்தப்பாவின் வடமொழிச்சந்தங்களையும் வடசொற்களையும் மிகுதி யாகக் கலந்திருந்தாலும் தமிழ்ச் சுவை குன்றாமல் நடை யாலும் சொல்லாட்சியாலும், உருக்கமான பாடல்களாலும் படிப்பவர் உள்ளத்தைக் கவர்கின்றது.

இவரியற்றிய பாரதம் இவர் பெயராலேயே வில்லி பாரதம் என்று அழைக்கப்படுகிறது. இவர் வாழ்ந்த காலம் கி.பி. பதினான்காம் நூற்றாண்டு.

**காளமேகப் புலவர்**

கும்பகோணம் அருகே உள்ள நந்திபுரத்தில் இவர் பிறந்தார். அந்தணர் மரபைச் சேர்ந்த இவரது இயற்பெயர் வரதர்' என்பது. திருவரங்கன் கோயிலில் மடைப்பள்ளியில் தொழில் செய்தவர். இறைவியின் அருள் பெற்றுக் கவி பாடத் தொடங்கியவர், முறைப்படி கல்லாதவர். கவிதையை மழை போலப் பாடியதால் 'காளமேகம்' என்ற பெயர் பெற்றார். ஆசுகவி பாட வல்லவர் வசைபாடுவதில் இணையற்றவர். நகைச்சுவைகனிந்த பாடல்களே இவருடையவை. வகைபாடக் காளமேகம்' என்னும் தொடர் இவர் சிறப்பினை உணர்த்தும், வெள்ளைக் கலையுடுத்து, 'இம்மென்னும் முன்னே எழுநூறும்',



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



'முன்னே கடிவாளம்' முதலான தனிப் பாடல்கள் நகைச் சுவைக்கும் கவி நயத்துக்கும் எடுத்துக்காட்டாக விளங்குவன. திருவானைக்கா உலா இவர் எழுதியது.

'கத்து கடல் சூழ்நாகைக் காத்தான்தன் சத்திரத்தில்
அத்தமிக்கும் போதில் அரிசிவரும் - குத்தி
உலையிலிட ஊரடங்கும் ஓரகப்பை அன்னம்
இலையிலிட வெள்ளி எழும்'

இஃது இரு பொருள்படக் காளமேகம் பாடிய ஒரு பாடல் நாகப்பட்டினத்தில் காத்தான் சத்திரத்தில் இவரிருந்த போது உணவு படைக்கக் காலம் தாழ்த்திய நேரத்தில் இவர் பாடியது. அரிசி அத்தமிக்கும் போது வரும். குற்றி உலையிடுவதற்கு இரவாகும். சமைத்து இலையில் இடும்போது பொழுது விடிந்துவிடும்' என்பது ஒரு பொருள். எங்கும் அரிசி கிடைக்காது; அத்தமிக்கும் போது சத்திரத்தில் அரிசி வரும் ; குற்றி **உலையில் சமைக்க உணவு** கிடைத்து விட்டது என்ற மகிழ்ச்சியில் ஊர் துன்பம் நீங்கி அடங்கிவிடும். பின்னர், ஓர் அகப்பைச் சோற்றினை இலையில் இட, அது வெண்மையாக ஒளி வீசித் திகழும்' என்பது அதற்கு மாறான வேறொரு பொருள், இவர் பதினைந்தாம் நூற்றாண்டைச் சார்ந்தவர்.

**பட்டினத்துப் பிள்ளையார்**

இவருடைய பாடல்கள் "பட்டினத்துப் பிள்ளையார் பாடல் திரட்டு" என்ற பெயரில் வழங்கி வருகிறது. இவருடைய பாடல்கள் எளிமையும், பேச்சு வழக்கும் இனிமையும் உடையதாக உள்ளது.

இவர் இல்லறத்தைத் துறத்தவர் என்பதும், இல்லறத் தைத் தூற்றியவர் என்பதும் இவருடைய பாடல் வாயிலாக அறியலாம். கடுந்துறவியாகிய இப்பெருமகனாரின் பாடல்கள் படிப்போரின் மனதை உருகச் செய்யும் தன்மை உடையவனவாகும். இவர் பதினான்கு அல்லது பதினைந் தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் ஆவார்.

**அதிமதுர கவிராயர்**

அதிமதுர கவிராயர் காளமேகப் புலவரின் காலத்தில் வாழ்ந்தவர் ஆவார். இவருக்கும் காளமேகப் புலவருக்குமிடையே வேறுபாடு இருந்ததாகக் கூறப்படுகிறது. இவர் திருமலைராயன் அரசவையில் புலவராய் விளங்கியவர் ஆவார். பாடல் பல பாடியுள்ளார். இவருடைய காலம் கி.பி. 15ஆம் நூற்றாண்டு என்பர்.

**அருணகிரிநாதர்**

இவர் திருவண்ணாமலையில் தோன்றியவர். இளமை யிலேயே கவிபாடும் ஆற்றல் பெற்றுச் செல்வந்தர்கள் மீது பல சிற்றிலக்கியங்களை இயற்றினார். இவர் சிற்றின்பத் துறையில் அதிக ஈடுபாடு கொண்டு தம் வாழ்நாளை வீணாகக் கழித்துப் பின் தெளிவு பெற்றார். வீணே வாழ் நாள் கழிந்தமைக்கு வருந்தி முருகன் மீது மனமுருகப் பாடினார் தலங்களெல்லாம் சென்று இறைவன் புகழ் பாடி வழிபட்டார். முற்பகுதி வேசியர் மீது வெறுப்பும், பிற்பகுதி முருகன் மீது விருப்பும் காட்டுவன அவர் பாடல்கள்.



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



இவர் முருகன் மீது பாடிய பாடல்களின் தொகுப்பே 'திருப்புகழ்' ஆகும். இவற்றில் இன்று 1037 பாடல்களே கிடைத்துள்ளன. அப்பாடல்களில் 1008 சந்தங்கள் பயின்று வருகின்றன.

இவருடைய திருப்புகழில் சலாம்', 'சபாசு', 'ராவுத்தன்' முதலான இந்துஸ்தானிச் சொற்களும் பயின்றுவரக் காணலாம். கந்தரலங்காரத்தில் அருணகிரியார் மொய்தார் அணிகுழல் வள்ளியை வேடவன் முத்தமிழால் வைதாரை யும் அங்கு வாழவைப்போன்' என்று முருகனைப் புகழ்கின் றார். இவரை 'வாக்கிற்கு அருணகிரி' என்றும், கருணைக்கு அருணகிரி' என்றும் புலவர்கள் பாராட்டியுள்ளனர். இவர் இயற்றிய பிற நூல்கள் திருவகுப்பு, கந்தரந்தாதி, கந்தரலங்காரம், கந்தரனுபூதி, வேல் விருத்தம், மயில் விருத்தம் முதலியனவாகும்.

தாயுமானவர் இவரை,

'ஐயா! அருணகிரியப்பா! உனைப்போல
மெய்யாக ஓர்சொல் விளம்பினர் யார்?'

என்று புகழ்கின்றார்.

'குயில் மொழிக் கயல்விழித்துகிரிதழ்ச் சிலைநுதல் கொடியிடைப் பிடிநடைக் குறமகள் திருவினைப் புணர்வோனே' என்னும் அடிகள் இவருடைய சந்த நடைக்குச் சான்றாகத் திகழ்கின்றன. இவருடைய காலம் கிபி. 15ஆம் நூற்றாண்டின் முற்பகுதி என்பர்.

**நல்லூர் வீர கவிராயர்**

இவர் ஆசுகவி பாடுவதில் வல்லவர். இவருடைய சொந்த ஊர் இராமநாதபுரத்தைச் சார்ந்த நல்லூராகும். இவர் அரிச்சந்திர வெண்பா என்னும் தமிழ் நூலையும், அரிச்சந்திர சரிதமென்னும் வடநூலையும் முதல் நூல்களாகக் கொண்டு அரிச்சந்திர புராணத்தைப் பாடினார். வீரகவிராயர் இந்நூலுக்கு அரிச்சந்திர சரித்திரம்' என்றே பெயரிட்டார். ஆனால், அரிச்சந்திர புராணம் என்ற பெயரே வழங்கி வருகிறது. உண்மையின் வடிவமாக அரிச்சந்திரன் விளங்குவதை மிக அழகாகக் காட்டுகின்றார்.

'பதியி ழந்தனம்; பாலனை யிழந்தனம் ; படைத்த
நிதியி ழந்தனம்; இனிஎமக் குளதென நினைக்கும்
கதியி ழக்கினும் கட்டுரை யிழக்கிலே மென்றார்;
மதியிழந்துதன் வாயிழந் தருந்தவன் மறைந்தான்'

இவ்வாறு எல்லாம் இழந்த நிலையிலும் அரிச்சந்திரன் வாய்மை இழந்தானில்லை . நல்லூர் வீரகவிராயருடைய காலம் கிபி.16ஆம் நூற்றாண்டு.

**பதினாறாம் நூற்றாண்டு புலவர்கள்**

**அதிவீரராம பாண்டியர்**

புலமைசால் புலவர்களில் அதிவீரராம பாண்டியரும் ஒருவராவார். இவர் இலிங்க புராணம், காசிக்காண்டம், கூர்மபுராணம், நைடதம் ஆகிய மொழிபெயர்ப்பு நூல்களையும், வெற்றி வேற்கை என வழங்கும் நறுந்தொகை, திருக்கருவைப் பத்தந்தாதி, திருக்கதவை வெண்பா முதலிய நூல்களையும் இயற்றியுள்ளார். இவருடைய தமையனார் வரதுங்கராம பாண்டியரும் சிறந்த புலவராவார்.

இவர் இயற்றியநைடதம் இன்பச் சுவைமிகுந்த காவியமாகும். 'நைடதம் புலவர்க்கு ஔடதம்' என்னும் பழமொழி வழங்குகின்றது. சிந்தாமணிக்கு அடுத்துத் தமிழில் காமச்சுவையும் வருணனை மிகுதியும் கொண்ட தமிழ் நூல் நைடதம் எனலாம். தமிழ்ப் பாடல்களைப் படிக்க இந்நூல் தூண்டுகோலாக விளங்குகிறது என்ற காரணத்தால் இந்தப் பழமொழி எழுந்தது எனலாம்.



https://t.me/tnpscfree

கருவை என வழங்கப்படும் கரிவலம் வந்த நல்லூரில் உள்ள சிவபெருமான் மீது அதிவீரராம பாண்டியர் பாடிய நூலே திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி என்னும் நூலாகும். கல்நெஞ்சையும் கனிவிக்கும் உருக்கமான பாடல்களைக் கொண்டிருத்தலால் இதனைக் குட்டித் திருவாசகம்' எனப் புகழ்வர். இவருடைய காலம் 16ஆம் நூற்றாண்டு.

**திருக்குருகைப் பெருமாள் கவிராயர்**

இவர் ஆழ்வார் திருநகரியில் பிறந்தவராவார். இவருடைய இயற்பெயர் சடையன் என்பதாகும். இவர் திருக்குருவைப் பெருமாள் திருக்கோயிற் புலவராக விளங்கினார் வடமொழியிலுள்ள அணியிலக்கண நூலைத் தழுவி மாறன் **அலங்காரம்** என்னும் நூலை இயற்றினார்.

மேலும் குருமகான்மியம், திருப்பதிக்கோவை, மாறன் அகப்பொருள், நம் பெருமாள் மும்மணிக்கோவை, மாறன் பாப்பாவினம், மாறன் கிளவி மணிமாலை முதலிய நூல்களை இயற்றியுள்ளார். இப்பெருமகனாருடைய காலம் கி.பி. 16ஆம் நூற்றாண்டு என்பர்.

**பரஞ்சோதி முனிவரால்**

பரஞ்சோதி முனிவர் சோழ நாட்டுத் திருமறைக் காட்டில் பிறந்தவர். மதுரை மடத்தில் தம்பிரானாக விளங்கினார். மீனாட்சியம்மை இவர் கனவில் தோன்றித் திரு**விளையாடற்** புராணம்' இயற்றுமாறு பணித்தார் என்று கூறுவர். இவர் திருவிளையாடற் போற்றிக் கலிவெண்பா, மதுரைப் பதிற்றுப் பத்தாந்தாதி ஆகிய நூல்களையும் இயற்றியுள்ளார். பரஞ்சோதி முனிவர் பாடிய திருவிளையாடற் புராணம், மதுரைச் சொக்கநாதரின் அறுபத்தி நான்கு திருவிளையாடல்களைக் குறிப்பிட்டுப் பாடுவதாகும். இது மதுரைக் காண்டம், கூடற் காண்டம், திருவாலவாய்க் காண்டம் என்னும் மூன்று பிரிவுகளைக் கொண்டது. இக்கதைகள் மதுரை நகரையும் ஆலவாய் இறைவனாகிய சுந்தரேசரின் பெருமையையும் விளக்க எழுந்தன. இதில் பல பாண்டிய மன்னர்களின் வரலாறுகளும் பிணைக்கப்பட்டுள்ளன. அவற்றில் கற்பனை மிகுதியாக உள்ளது. பெரியபுராணத்திற்கு அடுத்ததாகப் பெருமை பெற்று விளங்குவது இத்திருவிளையாடற் புராணம் எனலாம். தமிழ்நடை எளிமையும் இனிமையும் பெற்றுக் கதையின் தோற்றமும் முடிவும் அழகாக அமைந்து சிறுகதை வடிவில் இக்கதைகள் உருவாகியுள்ளன.

இக்கதைகள் மக்களுக்குச் சிறந்த கற்பனைகளைத் தந்து கடவுள் பேரில் பக்தியும் ஊட்டக்கூடிய வகையில் அமைந்துள்ளன. விறகு விற்ற படலத்தில் யாழிசைக்கு ஏற்றமும் உயர்வும் கொடுக்கப்படுகின்றன. பெரிய புராணத்திற் ஆனாயனார் புராணமும் குழலிசையின் பெருமையை உணர்த்துகிறது. குழலும் யாழும் தமிழிசைக் கருவிகள், சோழர் காலத்தில் கி.பி. 13ஆம் நூற்றாண்டில் ஏற்கனவே பெரும்பற்றப் புலியூர் நம்பி என்பவரால் ஒரு திருவிளையாடற் புராணம் இயற்றப்பட்டது. அதனையும் வடமொழியிலுள்ள "ஹாலாஸ்ய மான்மியம்" என்னும் நூலையும் தழுவி இந்நூல் அமைந்துள்ளது. சோழர் காலத்து எழுந்த புலியூர் நம்பியின் திருவிளையாடற் புராணம் செல்வாக்கு இழந்து விட்டது. பரஞ்சோதியார் திருவிளையாடலேமிக்கியம் பயிலப்பட்டு வருகின்றது. இவருடைய காலம் கி.பி. 16ஆம் நூற்றாண்டு என்பர்.

**பதினேழாம் நூற்றாண்டுப் புலவர்கள்**

**சைவ மடங்கள் வளர்த்த தமிழ்**

சைவ சமயத்தைக் காக்கத் தோன்றிய மடங்கள் தமிழ் வளர்க்கும் இடங்கள் ஆயின. பழந்தமிழ் நூல்களைக் காத்தனர்; புதிய நூல்களையும் தோற்றுவித்தனர் புலவர்கள் பலர் மடங்களில் தங்கித் தமிழ்

கற்றதோடு பிறருக்கும் கற்பித்தார்கள். பல நூல்களை இயற்றினர். பதினான்காம் நூற்றாண்டில் நிறுவப்பட்ட திருவாவடு துறை மடமும் தரும்புர மடமும் அரிய ப**ணிகளைச்** செய்துள்ளன.

**திருவாவடுதுறை மடம்**

திருவாவடுதுறை மடத்தைச் சார்ந்த ஈசான தேசிகர் இலக்கணக் கொத்து என்னும் நூலையும் கலம்பகம் முதலான சிற்றிலக்கியங்களையும் இயற்றினார். அவருடைய மாணவர் சங்கர நமச்சிவாயர் நன்னூலுக்கு விருத்தியுரை தந்தார்.

இம்மட**த்தைச் சார்ந்த சிவஞான முனி**வர் (18ஆம் நூற்றாண்டு) அவ்விருத்தியுரையை விரிவுப்படுத்தினார். மற்றும் காஞ்சிப்புராணம், நீதி நூல், சோமேசர் முதுமொழி வெண்பா சிவஞானமாபாடியம், இலக்கண விளக்கச் சூறாவளி, அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ், செங்கழுநீர், விநாயகர் பிள்ளைத்தமிழ் முதலிய நூல்களை இயற்றினார். சிவஞான சுவாமிகளின் மாணவர்கச்சியப்ப முனிவர் தணிகைப் புராணம் எழுதினார்.

**தருமபுர மடம்**

**குமரகுருபரர்**

திருவைகுண்டத்தில் சைவ வேளாளர் மரபில் பிறந் தவர் குமரகுருபரர். ஐந்தாண்டுகள் வரை ஊமையாகப் பேசாதிருத்த இவர் திருச்செந்தூர் முருகன் அருளால் பேசத் தொடங்கினார். பல அரிய நூல்களை எழுதினார். வடநாடு வரை சென்று தமிழைப் பரப்பி வந்தார். சைவம் தழைக்க இனிய செய்யுள் இயற்றினார். மீனாட்சியம்மைப் பிள்ளைத் தமிழ் இவர் பாடிய சிறந்த நூல். இவர் எழுதிய பிற நூல்கள் கயிலைக் கலம்பகம், மதுரைக் கலம்பகம், காசிக் கலம்பகம், முத்துக்குமார சுவாமி பிள்ளைத்தமிழ், நீதிநெறி விளக்கம், சகல கலாவல்லி மாலை, நான்மணி மாலை, சிதம்பரச் செய்யுட்கோவை முதலியன. அரு ளொழுகும் திருப்பாடல் களைப் பாடிய இவர் பாட்டினைக் கேட்டு மதுரை மீனாட்சியே சிறுமியாக வந்து கழுத்தணியைப் பரிசாக அளித்தாள் என்பர். வளமிக்க கற்பனையும், நலமிக்க ஓசை நயமும் கொண்டவை குமரகுருபரரின் பாடல்கள். இவர் காலம் கி.பி. பதினேழாம் நூற்றாண்டு.

இவர் இளம் பருவத்தில் இயற்றிய நூல் கந்தர் கலிவெண்பா ' ஆகும். மதுரை மீனாட்சியம்மன் மீது பாடிய மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழ் என்ற நூலைத்திருமலை நாயக்கர் **முன்னிலையில்** அரங்கேற்றினார் என்பர். இவருடைய பாடல்கள் அனைத்திலும் இறை மணம் கமழக் காணலாம்.

**துறைமங்கலம் மடம் சிவப்பிரகாச சுவாமிகள்**

சிவப்பிரகாசர் தொண்டை நாட்டுத் துறைமங்கலம் என்னும் ஊரில் வீரசைவ சமயத்தைச் சார்ந்த குடும்பத்தில் தோன்றியவராவார். வெள்ளியம்பலத் தம்பிரானிடம் கல்வி கற்றார். இவரைக் கற்பனைக் களஞ்சியம் எனச் சான்றோர் போற்றுவர்.

இவர் வெங்கைக் கோவை, சோணசைலமாலை, தருக்க பரிபாடை, நால்வர் நான்மணிமாலை, சிவஞான பாலையர் நெஞ்சுவிடு தூது, திருக்கூவப்புராணம், பிரபுலிங்கலீலை, ஏசுமத நிராகரணம், நன்னெறி, சீகாளத்தி புராணம் முதலிய நூல்களை இயற்றியுள்ளார்.

இவர் நால்வர் நான் மணிமாலையில் சம்பந்தரை வெண்பாவாலும், அப்பரைக் கலித்துறையாலும், சுந்தரரை விருத்தப்பாவாலும், மாணிக்கவாசகரை அகவற்பாவா லும் போற்றிப் பாடியுள்ளார்.

https://t.me/tnpscfree



வீர சைவத்தின் பெருமையை விளக்கும் பிரபுலிங்க லீலை என்னும் கன்னட நூலைத் தமிழில் இயற்றினார். இந்நூல் சிவபெருமானைத் தலைவனாகக் கொண்டு தத்துவக் கொள்கைகளுக்கு உருவகம் கொடுத்துக் கற்பனை மிகுதியாக விளங்க அமைக்கப்பட்டதாகும். இவரும் 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவராவார்.

இவருடைய **கற்பனைக்கு,**
'குழலும் யாழும் இனியவெனக் கூறாவண்ணம்
மென்கனிவாய்
மழலை மொழிந்தும், உடற்கின்பம் மருவ ஓடி
மேல்விழுந்தும்,
விழையும் அமிழ்தின் மிக இனிமை விளைய நுகரும்
சுவையடிசில்
செழிய சிறுகை யாலளைந்தும் செய்தாள் மோகம்
ஈன்றோரை'

என்னும் பாடலைக் கூறலாம்.

கன்றின் துணையால் தான் பசுவிடம் பாலைக்கறக்கின்றோம்; அதுபோல் அறிமுகம் ஆனவர் மூலம் அறிமுகம் ஆகாதவரிடம் செயலை மேற்கொள்ள வேண்டும் என்ற கருத்தமைந்த பாடலைப் பாடியுள்ளார். மற்றும் ஓட்டைக் குடத்தில் நீர் ஒழுகுவது வியப்பல்ல, ஒழுகாமலிருப்பதே வியப்பு, ஒன்பது துளையுடைய மனித உடம்பில் உயிர் நீங்குவது வியப்பல்ல நீங்காமலிருப்பதே வியப்பு என்ற கருத்தமைந்த பாடலையும் பாடியுள்ளார்.

'பெரியவர் தம் நோய் போலப் பிறர் நோய் கண்டுள்ளம்
எரியன் இழுதாவ ரென்க - தெரியிழாய்!
மண்டு பிணியால் வருந்து பிறவுறுப்பைக்
கண்டு கலுழுமே கண்'

என்னும் அரிய கருத்தமைந்த பாடலை இவர் பாடியுள்ளார்.

**திருப்போரூர் மடம்**

திருப்போரூரில் மடம் ஒன்றை ஏற்படுத்தியவர் சாந்த லிங்க சுவாமிகள். அவர் 18ஆம் நூற்றாண்டில் வைராக்கிய சதகம் அவிரோக உந்தியார், நெஞ்சுவிடு தூது, கொலை மறுத்தல் முதலிய நூல்களை இயற்றினார்.

**தனிப் புலவர்கள்**

**அந்தகக் கவி வீரராகவ முதலியார்**

இவர் தொண்டை நாட்டின் கண் பூதூரில் பிறந்தவர். இவர் ஒரு பிறவிக்குருடர். இவர் கல்வி கற்ற விதத்தை ஓர் ஆயிரம் கோடி எழுதாது தன் மனத்து எழுதிப் படித்த விரகன்' என்று தம்மைப் பற்றிக் கூறிக்கொள்வதால் அறியலாம். பிறர் வியக்கும் வகையில் நகைச்சுவைத்தும் பப் பாடுவதிலும் வசை படுவதிலும் வல்லவர். வீரராகவர் ஈழத்திற்குச் சென்று பரராசசேகரனைப் பாடிப் பல பரிசில்கள் பெற்றுத் திரும்பினார். இவர் இரு பொருள் தரும் சிலேடைப் பாடல்களையும் பாடியுள்ளார். இவர் சந்திர வாணன் கோவை, பஞ்சரெத்தினம், சேயூர் முருகன் பிள்ளைத்தமிழ் சேயூர்க் கலம்பகம், திருக்கழுக்குன்ற புராணம், திருக்கழுக்குன்றத்து உலா, திருவாரூர் உலா முதலிய நூல்களை இயற்றியுள்ளார். இவருடைய காலம் கி.பி. 17ஆம் நூற்றாண்டு ஆகும்.



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



**படிக்காசு புலவர்**

சான்றோர் நிறைந்த தொண்டை நாட்டில் பொன் விளைந்த களத்தூரில் பிறந்தவர். இவர் இராமநாதபுர அரசினர் அவைப்புலவராய் விளங்கினார். காயற்பட் டினத்தில் சீதாக்காதியில் சீதக்காதி என்னும் முகமதிய வள்ளலைப் பற்றிப் பல தனிப் பாடல்கள் பாடியுள்ளார். தொண்டை மண்டல சதகம் என்பது தொண்டை மண்டலத்தைச் சிறப்பித்துப் பாடுவது. இதனையும் புள்ளிருக்கு வேளூர்க் கலம்பகம், உமைபாகர் பதிகம், சிவந்தெழுந்த பல்லவனுலா, சிவந்தெழுந்த பல்லவன் பிள்ளைத்தமிழ், பாம்பலங்காரர் வருக்கக் கோவை முதலிய நால்களையும் பாடியுள்ளார். இவர் பாடல்கள் மிகுந்த இனிமை வாய்ந்தவை. இவருடைய காலம் கிபி. 17ஆம் நூற்றாண்டு.

**பிள்ளைப் பெருமாளையங்கார்**

**(அழகிய மணவாளதாசர்)**

இவரைத் திவ்விய கவி என்றும், மணவாளதாசர் என்றும் அழைப்பர். திருமங்கை என்னும் திருப்பதியில் தோன்றியவர். காவிரி சூழ் திருவரங்கத்தில் காலங்கழித்தவர். தமிழ், வடமொழி ஆகிய இருமொழிகளிலும் வல்லவராய் விளக்கியவர் ஆவார்.

''திவ்விய பிரபந்த சாரம்'' என்று கூறப்பெறும் அஷ்டப்பிரபந்தத்தை இவர் இயற்றினார். இந்நூல் யமகம், திரிபு, சிலேடை முதலிய சொல்லணிகள் அமையப் பெற்றும், சொல் நோக்கு, பொருள் நோக்கு, தொடை நோக்கு, நடை நோக்கு துறைநோக்கு ஆகிய எந்நோக்கும் பெற்று இலக்கியமாய் விளங்குகிறது. அஷ்டப் பிரபந்தம் கற்றவன் அரைப் பண்டிதன்' என்னும் பழமொழியால் இந்நூலின் பெருமை புலனாகும். அஷ்டப்பிரபந்தத்தில் திருவரங்கக்கலம்பகம், திருவரங்கத்தந்தாதி, சீரங்கநாயகர் ஊசல், திருவேங்கடமாலை, திருவேங்கடத்தந்தாதி, அழகர் அந்தாதி, நூற்றெட்டுத்திருப்பதி அந்தாதி என்னும் எட்டு நூல்கள் இணைந்துள்ளன. பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் திருநாறையூர் நம்பிமேகவிடு தூது என்னும் சிற்றிலக்கியத்தையும் இயற்றியுள்ளார். இவருடைய காலம் கிபி. 17ஆம் நூற்றாண்டு ஆகும்.

**வைத்தியநாத தேசிகர்**

திருவாரூரில் பிறந்த வைத்தியநாத தேசிகர் தமிழி லும், வடமொழியிலும் வல்லவர் இவருடைய மாணவர்கள் படிக்காசுப் புலவர், அரசூர்ச் சொக்கப் புலவர், ஒப்பிலா மணி தேசிகர் முதலிய பெருமக்களாவர். இவர் ஐந்திலக் கணங்களையும் கூறும் இலக்கண விளக்கம்' என்னும் நூலை இயற்றியுள்ளார். இந்நூல் குட்டித் தொல்காப்பியம் ' என்று அழைக்கப்படுகின்றது. மேலும், இவர் பாசவதைப் பரணி, நல்லூர் புராணம், மயிலம் பிள்ளைத்தமிழ் முதலிய நூல்களையும் இயற்றியுள்ளார் இவருடைய காலம் கி.பி. 17ஆம் நூற்றாண்டு ஆகும்.

**மற்றும் சிலர்**

மற்றும் இப்பதினேழாம் நூற்றாண்டில் 'நாணிக் கண் புதைத்தல் என்னும் ஒரு துறையில் ஒரு துறைக்கோவை பாடிய அமிர்த கவிராயரும், கடிகை முத்துப் புலவரும், கருணைப் பிரகாசரும், அழகிய சிற்றம்பலக் கவிராயரும் வாழ்ந்துள்ளனர்.

**பதினெட்டாம் நூற்றாண்டுப் புலவர்கள்**

**தாயுமானவ சுவாமிகள் (1705-1742)**



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



திருமறைக் காட்டில் சைவ வேளாளர் குலத்தில் தோன்றிய தாயுமானவ சுவாமிகள் தமிழ் வடமொழி இரண்டிலும் வல்லவர். முதன் முதலில் சமரச சன்மார்க்க நெறியை உணர்த்திய பெருமை தாயுமானவ சுவாமி களையே சாரும். இவர் திரிசிரபுரத்தில் விஜயரகுநாத சொக்கலிங்க நாயக்கரிடம் கணக்கராகப் பணியாற்றினார். முதலில் இல்லறத்தில் ஈடுபட்டு மெய்ஞ்ஞானப்பற்றால் துறவு பூண்டார். இவர் பக்திப்பாடல்கள் சைவ சமய உண்மைகளையும் சிந்தாந்தக் கொள்கைகளையும் உணர்த்துகின்றன.

‘ஆசைக்கோர் அளவில்லை அகிலமெல் லாங்கட்டி
யாளினுங் கடல் மீதிலே
ஆணை செல் வே நினைவர்.’

என்று மக்களின் இயல்பைக் கூறுகின்றார் தாயுமானவர்

‘எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே’

என்று தம்மியல்பைக் கூறுகின்றார். போலியான பக்தி நெறியைக் கடிந்து இறைவன் இருக்குமிடமாக 'நெஞ்சகமே கோயில் நினைவே சுகந்தமன்பே

மஞ்சனநீர் பூசைகொள்ள வாராய் பராபரமே’

என்று கூறுகின்றார்.

தாயுமானவர் பாடிய பாடல்கள் 'தாயுமானவர் திருப் பாடல் திரட்டு' என்னும் பெயரால் தொகுக்கப்பட்டுள்ளன. இப்பாடல்களைத் தமிழ் மொழியின் 'உபநிடதம்' எனப் போற்றுவர்.

இவருடைய பாடல்களில்,

‘சினம் அடங்கக் கற்றாலும் சித்திஎலாம் பெற்றாலும்
மனம் அடங்கக் கல்லார்க்கு வாய்ஏன் பராபரமே'

என்னும் உயரிய சமய உண்மைகள் நிறைந்திருக்கக் காணலாம். இப்பெருமகனார் ‘ஆகாரபுவனம்’, ‘ஆனந்தக் களிப்பு’ ‘பைங்கிளிக் கண்ணி’ என்னும் பாடல்களில் காதல் துறை வாயிலாக உயர்ந்த உண்மைகளைப் புகட்டுகின்றார்.

**'அகமேவும் அண்ணலுக்கு என் அல்லல்எல்லாம் சொல்லச்**
சுகமான நீபோய்ச் சுகம் கொடுவாபைங்கிளியே'

பராபரக் கண்ணி 389 **கண்ணிகளை** உடையது. இவருடைய காலம் கிபி. 18ஆம் நூற்றாண்டு.

**சிவஞான முனிவர்**

சிவஞான முனிவர் பாண்டி நாட்டு விக்கிரமசிங்க புரத்தில் வேளாளர் குலத்தில் தோன்றியவராவார். இவர் திருவாவடுதுறை வேலப்ப தேசிகரிடம் சந்நியாசமும், சிவதீட்சையும் சிவஞானயோகி என்னும் சிறப்புப் பெயரும் பெற்றார்.

இவர் தொல்காப்பியச் சூத்திர விருத்தி, இலக்க**ண விளக்கச்** சூறாவளி முதலிய இலக்கண நூல்களையும், சிவஞானமாபாடியம், சிவசமய வாலவுரை மறுப்பு முதலிய தருக்க நூல்களையும், முல்லை வாயிலந்தாதி, திருக்குறட் கதைகளைக் கூறும் சோமேசர் முதுமொழி வெண்பா, திருவேகம்பர் ஆனந்தக் களிப்பு, அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ், கலைசையந்தாதி, களிப்பு, அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ், கலைசையந்தாதி, காஞ்சிப் புராணம் முதலிய நூல்களையும் இயற்றியுள்ளார். இவர் நன்னூ லுக்கு எழுதிய உரை சிறந்த உரையாகப் போற்றப்படுகிறது. இவருடைய மாணவர்கள் கச்சியப்ப முனிவர்,



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



தொட்டிக் கலை சுப்பிரமணிய முனிவர் ஆகியோர் ஆவர். சிவஞான முனிவரின் காலம் கிபி. 18ஆம் நூற்றாண்டு ஆகும்.

**பலபட்டைச் சொக்கநாதப் புலவர்**

இவர் மதுரையம்பதியில் தோன்றியவர் ஆவார். இவர் தம் பெற்றோருக்குத் தவப்புதல்வனாய் அவதரித்தவர் ஆவார். மதுரை சொக்கநாதர் அருளால் இவரைப் பெற்றமையால் இவருடைய பெற்றோர்கள் இவருக்குச் சொக்கநாதர் என்று பெயரிட்டனர் என்று கூறப்படுகிறது.

இவர் மதுரை மும்மணிக் கோவை, மதுரை யமக அந்தாதி, தேவையுலா முதலிய நூல்களை இயற்றியுள்ளார். திருமாலிருஞ்சோலை இறைவன் உலா வரும் போது அவரைக் கண்டு காதல் கொண்ட தலைவி கிளியைத் தூது விடுகின்ற முறையில் அழகர் கிள்ளை விடு தூது' என்னும் நூலைப் பாடியுள்ளார்.

அழகர் கிள்ளைவிடு தூது என்னும் நூலுள் முதலில் கிளியை விளித்து அதன்பின் மாலின் பெருமைகளை எடுத்தோதி நீயே தூது உரைக்கும் தன்மையுடையை எனக் கூறி, பின் தலைவி தன் ஏக்கம் கூறித் தூது அனுப்பும் முறையில் அமைந்துள்ளது. இவர் காலம் கி.பி. 18ஆம் நூற்றாண்டு.

**கச்சியப்ப முனிவர்**

கச்சியப்ப முனிவர் காஞ்சிமாநகரில் பிறந்து, திருத் தணிகையில் வாழ்ந்தவர் ஆவார். சிவஞான முனிவரிடம் தமிழ் மொழி கற்றுத் தேர்ந்தவர் ஆவார். இவர் தல புராணம் பாடுவதில் ஒப்பற்று விளங்கினார்.

இவர் தணிகைப்புராணம், பேரூர்ப்புராணம், திரு**வானைக்கா** புராணம், கச்சியானந்த ருத்திரேசர் வண்டு விடு தூது, சென்னை விநாயகர் பிள்ளைத் தமிழ் முதலிய சிற்றிலக்கியங்களைப் படைத்துள்ளார். இவருடைய காலம் கி.பி. 18ஆம் நூற்றாண்டு ஆகும்.

**திரிகூடராசப்பர்**

திருவாவடுதுறை ஆதினமடத்தின் தலைவராகவிளங்கியிருந்த மறைத்திரு சுப்பிரமணிய சுவாமிகளின் மரபுவழியில் தோன்றியவர். பாடல் நூல் சிறப்புப் பெற்ற திருநெல்வேலி மாவட்டத்தில் தென்காசியை அடுத்துள்ள மேலகரம் என்னும் ஊரில் பிறந்தவர். மடக்கு, திரிபு, சிலேடை முதலிய சொல்லணிகளும் உவமை முதலிய பொருளணிகளும் சிறக்கப்பாடுதலில் வல்லவர். குறவஞ்சி நூல்களில் சிறப்பாகக் கருதப்படும் திருக்குற்றாலக் குறவஞ்சியை இயற்றினார். இந்நூலின் சிறப்புக்கண்டு மகிழ்ந்த மதுரை மன்னர் முத்துவிசயரங்க சொக்கநாத நாயகர் குறவஞ்சிமேடு' என்னும் பெயர் கொடுத்து நன்செய் நிலத்தைப் பரிசாக அளித்தார். திரிகூடராசப்பக் கவிராயர் குற்றாலத் தலபுராணம், குற்றால மாலை, குற்றாலச்சிலேடை வெண்பா திருக்குற்றால் உலா யமக அந்தாதி, திருக்குற்றாலப் பிள்ளைத் தமிழ் முதலிய நூல்களை இயற்றியுள்ளார்.

திரிகூடராசப்பக் கவிராயரை ஆதரித்த வள்ளல் சொக்கப்பட்டிக்குறுநிலமன்னர் சின்னண்ணஞ்சாத்தேவராவார். இறைவன் திருப்புகழ் பாடி வணங்கி மகிழ்வதே தம் கடனாகக் கொண்டு வாழ்ந்தவர் ஆவார்.

கூத்தும் நாடகப் பகுதியுமாக விளங்கும் குற்றாலக் குறவஞ்சியில் குறத்தி மலைவளம் பாடுதலும், குற்றால நாதரின் சிறப்பும், வசந்த வல்லியின் காதலும், குறத்தி குறி கூறுதலும், குறவன் குறத்தி உரையாடலும் ஆகிய செய்திகள் கூறப்படுகின்றன.



https://t.me/tnpscfree

இந்நூல் குற்றாலத் தலத்தினைச் சிறப்பித்துப் பாட எழுந்த நூல் ஆகும். குமர குருபரர் பாடிய மீனாட்சியம்மை குறம் இக்குறவஞ்சிக்கு முன்மாதிரியாக அமைந்தது. திரிகூடராசப்பக் கவிராயருடைய காலம் கி.பி. 18ஆம் நூற்றாண்டு.

**நல்லாப்பிள்ளை**

நல்லாப்பிள்ளை தொண்டை நாட்டைச் சேர்ந்தவர் ஆவார். இவர் தமிழ், தெலுங்கு வடமொழி ஆகிய மும்மொழிகளையும் கற்றுத் தேர்ந்த மேதையாவார். இவர் வில்லி பாரதத்தையே பல கிளைக் கதைகளையும் சேர்த்து விரிவாகப் பாரதத்தைப் பாடினார். வில்லிபாரதத்தைக் காட்டிலும் பத்தாயிரம் பாடல்கள் அதிகமுள்ள இந் நூலை நல்லாப் பிள்ளை பாரதம்' என வழங்குவர் மற்றும் தேவயானைப் புராணம் என்னும் நூலையும் இயற்றியுள் ளார். இவருடைய காலம் கி.பி. 18ஆம் நூற்றாண்டு ஆகும்.

**அருணாசலக் கவிராயர்**

சோழ நாட்டுத் தில்லையாடியில் பிறந்த அருணாசலக் கவிராயர் தருமை யாதீனத்தைச் சார்ந்த அம்பலவாணக் கவிராயரிடம் தமிழ் பயின்றவராவார். இவர் வருவாய்க் காகக் காசுக்கடை நடத்தினார். தம் வாழ்நாளின் பிற்பகுதி யைச் சீர்காழியில் கழித்தார். '

இவர் இராம நாடகம், அசோமுகி நாடகம், சீர்காழித் தலபுராணம், சீர்காழிக் கோவை, அனுமார் பிள்ளைத் தமிழ் முதலிய நூல்களை இயற்றியுள்ளார்.

இவர் இயற்றிய இராம நாடகம் கம்பராமாயணத் தைப் பின்பற்றியதாக உள்ளது. எளிய சொற்களால் இயன்று பாமர மக்களையும் கவர்வதாக இந்நூல் அமைந்துள்ளது. அருணாசலக் கவிராயரின் பாடல்களைக் கம்பராமாயண காலட்சேபம் நடத்துபவர்கள் இன்றும் எடுத்துச் சொல்வதைக் கேட்கலாம். இவர் காலம் 18-ஆம் நூற்றாண்டு.

**சிவக்கொழுந்து தேசிகர்**

இவர் கும்பகோணத்திற்கு அருகிலுள்ள கொட்டை யூரில் பிறந்தவர். இவரை ஆதரித்த வள்ளல் தஞ்சையை ஆண்ட சரபோஜி மன்னவராவர். சிவக்கொழுந்து தேசிகர் தஞ்சை மன்னரின் விருப்பப்படி, சரபேந்திரர் வைத்தியம், சரபேந்திரர் வைத்திய முறைகள், சரபேந்திரர் சன்னிரோக சிகிச்சை, ஆகிய மருத்துவ நூல்களை இயற்றினார்.

இவர் இயற்றிய நூல்கள் கோடீச்சுரக் கோவை, தஞ்சைப் பெருவுடையார் உலா, ஸ்ரீசரபேந்திர பூபாலக் குறவஞ்சி முதலியனவாகும். இவருடைய காலம் கி.பி. 18ஆம் நூற்றாண்டு.

**சாந்தலிங்க சுவாமிகள்**

இவர் சென்னையை அடுத்த திருப்போரூரில் வாழ்ந்தவர். திருப்போரூரில் மடம் ஒன்றை நிறுவச் சமயப் பணி ஆற்றினார். இவர் இயற்றிய நூல்கள் வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், அவிரோத உந்தியார், கொலை மறுத்தல், நெஞ்சுவிடு தூது முதலியனவாகும். இவர் வீரசைவசமய சார்ந்தவர் துறவியாகவே வாழ்நாள் முழுதும் வாழ்ந்து காலம் கழித்தவர் ஆவார். இவருடைய காலம் கி.பி. 18ஆம் நூற்றாண்டு

**சிதம்பர சுவாமிகள்**

இவரும் திருப்போரூரில் வாழ்ந்தவராகவே கருதப்படு கிறார். இவரும் துறவியாக வாழ்ந்து சமயப் பணி ஆற்றியவர் ஆவார். இவர் காலத்தில் எண்ணற்ற இலக்கியம் படைத்துப் புகழடைந்தவர் ஆவார்.

https://t.me/tnpscfree



இவர் இயற்றிய நூல்கள் திருப்போரூர் முருகன் பிள்ளைத் தமிழ், திருப்போரூர் முருகன் தாலாட்டு, திருப்போரூர் முருகன், திருப்பள்ளியெழுச்சி, மற்றும் குயில் பாட்டு, கிளிப்பாட்டு, தூது, ஊசல் முதலிய நூல்களையும் இயற்றியுள்ளார். குயில் பத்து, அடைக்கலப் பத்து முதலியன திருவாசகத்தைப் பின்பற்றிப் பாடப் பட்டவையாகும். இவை திருவாசகம் போல் உருக்கமான பாடல்களைக் கொண்டுள்ளது. இவருடைய பாடல்கள் பக்திச் சுவை மிகுந்தவை ஆகும். இவருடைய காலம் கி.பி. 18ஆம் நூற்றாண்டு.

**தத்துவராயர் (தத்துவப் பிரகாசர்)**

இவர் பாடல்களில் மிகுதியும் தத்துவக் கருத்துகள் நிறைந்திருக்கக் காணலாம். தத்துவக் கருத்துகள் நிறைந்த பாடல்கள் பாடியமையால் தத்துவராயர் எனப் பெயர் பெற்றார் என்பர். இவருடைய நடையில் நாட்டுப் பாடல் வடிவம் மிகுந்திருக்கக் காணலாம். இவர் உலா, தூது, கலம்பகம், பரணி, அந்தாதி முதலான நூல்கள் பலவும் படைத்துள்ளார்.

அஞ்ஞவதைப் பரணி, மோகவதைப் பரணி, திருவாசகத்தைப் பின்பற்றி அம்மானை, திருவெம்பாவை, ஊசல், திருப்பள்ளியெழுச்சி போன்ற பாடல்களையும், தேவாரத்தைப் பின்பற்றிக் காதல் துறைப் பாடல்களையும் பாடியுள்ளார். நாட்டுப் புறப் பாடல் அமைப்பில் பாம்பாட்டியின் பாடலும், கோழி கிளியை விளிக்கும் பாடலும் அமைந்துள்ளன ஆண்டாள் பாடலைப் பின்பற்றிச் சில பாடல்கள் பாடியுள்ளார். இவருடைய பாடல்கள் இனிமையும், எளிமையும், பக்திச் சுவையும் **உடையனவாக அமைந்துள்ளன.**

> ‘ஓடும்மனம் நம்மினுடன் உறவுசெயு மாகில்
>
> உள்ளநிலை மெள்ள உணர்வு ஆடவரு மாகில்
>
> நாடும்இடம் எங்கும்அறிவு ஆகிவிடு மாகில்
>
> நல்லகுரல் நல்லதிசை சொல்லுசிறு பல்லி'

என்னும் பாடலில் பல்லிச் சொல்லின் பலன் கேட்கும் நிலையைக் காண்கிறோம். இவருடைய காலம் கி.பி. 18ஆம் நூற்றாண்டு என்பர்.

**தாண்டவராயர்**

தாண்டவராயர் இயற்றிய நூல் கைவல்ய நவநீதம் என்பது ஆகும். இந்நூல் 310 விருத்தப்பாக்களைக் கொண்டது. இந்நூல் முழுமையும் தத்துவக் கருத்துகள் நிறைந்திருக்கக் காணலாம். இந்நூல் சமய உண்மைகளைச் சுருக்கிக் கூறும் நூலாகவே அமைந்துள்ளது. பாடல்கள் அனைத்தும் எளிய நடையும், இனிமையும் உடையனவாய் அமைந்துள்ளன. இவருடைய காலம் கி.பி. 18ஆம் நூற்றாண்டு என்பர்.

**பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ்ப் புலவர்கள்**

**மீனாட்சி சுந்தரம் பிள்ளை (1815-1866)**

திருச்சி மாவட்டம் எண்ணெய்க்கிராமத்தில் 1815ஆம் ஆண்டு பிறந்தார். இவருடைய தந்தையார் ஆசிரியராக **விளங்கினமையால்** அவரிடமே இலக்கண இலக்கியங் களைத் தெளியக் கற்றார். சென்னை , திரிசிரபுரம் முதலிய இடங்களுக்குச் சென்று, அறிஞர் பலரோடு கூடித் தம் புலமையைப் பெருக்கிக் கொண்டார். இளம் வயதிலேயே பாடம் போதிக்கும் ஆற்றல் பெற்றவராய் விளங்கினார்.

நவீன கம்பர் எனப் போற்றப்படும் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் நாளொன்றுக்கு முந்நூறு பாடல்களை இயற்றும் ஆற்றல் உடையவர் என்பர். இவர் திருவாவடுதுறை ஆதீனப் புலவராய்



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



விளங்கினார். இவருடைய மாணவர்கள் டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர், தியாகராஜ செட்டியார், வேதநாயகம் பிள்ளை முதலியோர் ஆவர்.

இவர் பதினாறு தல புராணங்களையும், பத்து பிள்ளைத் தமிழ் நூல்களையும், பதினாறு அந்தாதிகளை யும், நான்கு மாலைகளையும் இயற்றியுள்ளார்.

இவரியற்றிய நூல்களில் சிறந்து விளங்குபவை, முருகன் பிள்ளைத் தமிழ், திருவிடைக்கழிக் குறவஞ்சி, சூத சங்கிதை, குடந்தைத் திரிபந்தாதி, அகிலாண்ட நாயகிமாலை, அம்பலவாண தேசிகர் கலம்பகம், வாட்போக்கிக் கலம்பகம், திருவிடை மருதூர் உலா, சுப்பிரமணிய தேசிகர் நெஞ்சுவிடு தூது, உறையூர் புராணம், ஆற்றூர்ப் புராணம், திருக்குடந்தைப் புராணம், திருப்பெருந்துறைப் புராணம், விளத்தொட்டிப் புராணம், சேக்கிழார் பிள்ளைத் தமிழ் முதலியனவாகும்.

சேக்கிழார் பிள்ளைத் தமிழில் "பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவ" என்று சேக்கிழாரை இவர் பாராட்டுவதன் மூலம் புலவரைப் பாடும் புலவராகக் காட்சி தருகிறார்.

மற்றும் எண்ணற்ற தனிப்பாடல்களையும், எண்ணற்ற உலா கோவை, தூது நூல்களையும் படைத்துள்ளார். இவர் 1815இல் தோன்றி 1876 வரை இந்நிலவுலகில் வாழ்ந்து புகழ் பெற்ற மேதை ஆவார்.

### இராமலிங்க அடிகள் (1823-1874)

இவர் தென்னாற்காடு மாவட்டம் மருதூர் என்ற ஊரில் பிறந்தவர் ஆவார். இவருடைய தந்தை இராமையா பிள்ளை யாவார்; தாய் சின்னம்மையார் ஆவார். இளம் வயதிலேயே இறையன்பு மிக்கவராய் விளங்கிக் கவிதை புனையும் ஆற்றல் பெற்று விளங்கினார்.

இவர் பாடிய பக்திப் பாடல்கள் அனைத்தையும் ஆறு திருமுறைகளாகத் தொகுத்துத் திருவருட்பா என அழைத்தனர். ஆனால் ஆறுமுக நாவலர் அவற்றை அருட்பா அல்ல மருட்பா என மறுத்து வழக்குத் தொடுத்து முடிவில் தோல்வி கண்டார் என்பர். ஆறுமுக நாவலர் இராமலிங்க அடிகளைப் பற்றிக் கூறும் போது, "நான் அவருடைய பாடல்களை அருட்பா அல்ல என்று மறுத்தேனே ஒழிய அவரைக் குறை கூறவில்லை. அவர் உயர்ந்த சான்றோர், ஒழுக்கத்தின் திருவுருவம், உண்மையின் வடிவம்" என்று புகழ்கின்றார்.

அருட்பெருஞ்சோதி தனிப் பெருங் கருணையாகிய இறைவனை அடைய சமரச சன்மார்க்க நெறியைப் போதித்தவர் இராமலிங்க அடிகள் ஆவார். மற்றும் இவர் மனுமுறை கண்ட வாசகம் என்னும் உரைநடை நூலையும், சிவநேச வெண்பா நெஞ்சறிவுறுத்தல் , மகாதேவமாலை, இங்கிதமாலை, சீவகாருண்ய ஒழுக்கம் முதலிய நூல்களையும் இயற்றியுள்ளார். மக்களிடையே ஒழுக்கம் வளர வேண்டுமாயின் பசிப் பிணியைப் போக்க வேண்டுமென்று சத்திய தருமசாலையை ஏற்படுத்தினார்.

> ‘வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம்
> வாடினேன் ! பசியினால் உளைந்தே
> வீடுதோறிரந்தும் பசியறாது அயர்ந்த
> வெற்றரைக் கண்டு பதைத்தேன்!
> நீடிய பிணியால் வருந்துகின் றோரென
> நேருறக் கண்டு உளம் துடித்தேன்!
> ஈடின் மாணிகளாய் ஏழைகளாய் நெஞ்
> சிளைத்தவர் தமைக் கண்டே இளைத்தேன்’



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



என்று உயிர்களுக்காக உள்ளம் உருகிப் பாடுகிறார். இருட் டறையில் உள்ளதடா உலகம் என்று ஏங்கினார். கண்மூடி பழக்க வழக்கங்களைச் சாடினார். இவருடைய உள்ளம் அன்பின் வடிவம் என்பதற்கு

‘அப்பாநான் வேண்டுதல்கேட்டருள் புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம் நான் அன்புசெயல் வேண்டும்’

என்னும் அடிகள் சான்று பகர்வன.

அருட்பெருஞ்சோதி, தனிப் பெருங்கருணை என்பதே அவருடைய அருள் வாக்கு. இவர் ஒளிவடிவாக இறைவனைக் கண்டார். வடலூரில் பல்லாண்டு அருந் தொண்டாற்றிய இம்மகான் 1874ஆம் ஆண்டு இறைவனுடன் கலந்தார். இவருடைய பாடல்கள் எளிமையானவை, பக்திச் சுவை மிகுந்தவை பாரதிக்கு வழிகாட்டியாக அமைந்தவை, உள்ளத்தை உருக்கும் ஆற்றல் பெற்றவை. காலத்தால் அழியாத் தன்மை உடையவை. அவருடைய காலம் கி.பி.1823-1874

### பூண்டி அரங்கநாத முதலியார் (1837-1893)

இவர் தொண்டை நாட்டிலுள்ள பூண்டி என்னும் சிற்றூரில் பிறந்தவர் ஆவார். இவர் தொழுவூர் வேலாயுத முதலியாரிடம் தமிழ் பயின்றார். சென்னை மாநிலக் கல்லூரியில் கணிதப் பேராசிரியராகப் பணியாற்றிய இவர் ஆங்கிலம் தமிழ், தத்துவம், வரலாறு ஆகியவற்றிலும் வல்லவராய் விளங்கினார். இவர் காஞ்சிபுரத்தில் எழுந்தருளியிருக்கும் ஏகாம்பரநாதர் மீது கச்சிக் கலம்பகம் நூலைப் பாடியுள்ளார். இந்நூல் எளிய செய்யுள் நடை யும், இனிமையும், பக்திச் சுவையும் மிகுந்து விளங்குகிறது.

### ஆறுமுக நாவலர்

ஆறுமுக நாவலர் யாழ்ப்பாணத்துத் தமிழ்ப் புலவராவார். சைவத்தை நிலை நிறுத்தவும், தமிழை வளர்க்கவும் இவர் அரும் பணியாற்றினார். கிருத்துவர்களின் பிரச்சாரத்திற்கு மறுப்புரைகள் பலவற்றை வெளியிட்டார். இவர் சொற்பொழிவாற்றுவதில் வல்லவராக விளங்கிய காரணத்தால் நாவலர்' என்ற சிறப்புப் பெயரால், அழைக்கப்பட்டார். பள்ளிப் பிள்ளைகளுக்காக இவர் பாடப் புத்தகங்கள் பலவற்றை இயற்றியுள்ளார். சென்னையில் அச்சுக்கூடம் ஒன்றை நிறுவிச்சைவசமய நூல்களையும், இலக்கண நூல்களையும் பதிப்பித்தார். வசன நடையில் வல்லவராக விளங்கினார்.

இவர் ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன் முதலிய சிறு நூல்களுக்கும், திருமுருகாற்றுப்படை, திருசெந்தில் அந்தாதி முதலிய நூல்களுக்கும் உரை எழுதியுள்ளார். மேலும் திருவிளையாடற் புராண வசனம், பெரிய புராண வசனம் இலக்கணச் சுருக்கம், இலக்கண வினாவிடை, சைவ வினாவிடை முதலிய நூல்களையும் இயற்றியுள்ளார். இவர் தமிழ் மொழிக்கும், சைவசமயத்துக்கும் செய்த தொண்டு ஈடு இணையற்றது என்பதை யாராலும் மறுக்க முடியாது.

### பரிதிமாற் கலைஞர் (1870-1903)

இவருடைய இயற்பெயர் சூரிய நாராயண சஸ்திரியார் என்பது. இவர் தமிழ் மீது கொண்ட காதலால் தமது பெய

ரைப் பரிதிமாற் கலைஞர் எனத் ததுழாக்கிக் கொண்டார். இவர் தமிழ் மொழி வரலாறு என்னும் நூலைச் செம்மை யான முறையில் ஆக்கியுள்ளார். இவர் எழுதிய நாடக வியல் என்னும் நூல் நாடகத்தின் இலக்கணம் கூறுவதாக அமைந்துள்ளது. அவ்விலக்கண நூலுக்கு இலக்கியமாகக் கலாவதி மானவிஜயம், ரூபாவதி என்னும் நாடகங்களை யும் படைத்துள்ளார். இந்நாடகங்கள் சிறப்புடையனவாக இன்றும் மதிக்கப்பட்டு வருகின்றன. தமிழ்ப்புலவர் சரித்திரம் என்னும் நூலும் இவருடைய படைப்பே ஆகும்.



https://t.me/tnpscfree

**இராமச்சந்திர கவிராயர்**

நகைச் சுவையோடு கூடிய எளிய இனிய பாடல்களை இவர் இயற்றியுள்ளார். இவர் எல்லீசரால் பெரிதும் பாராட்டப்பட்டவர் ஆவார். பொய் சொன்ன வாய்க்குப் போசனம் கிடைக்காது' என்னும் பழமொழியை இல்லாது சொன்னேனுக்கு இல்லை என்றான், யானும் என்றான் குற்றத்தால் ஏகின்றேனே' என்று கூறுவதன் மூலம் மெய்ப்பிக்கின்றார்.

பணவிடு தூது என்னும் நூலை இயற்றிய சரவணப்பெருமாள் கவிராயரும், புலவர் புராணம் பாடிய தண்ட பாணி சுவாமிகளும் பஞ்சதந்திரம் என்னும் நூலை வெளி யிட்டவரும், கதாமஞ்சரி என்னும் நூலை இயற்றியவரு மான தாண்டவாய முதலியாரும், யாப்பிலக்கணத்திற்கும், அணியிலக்கணத்திற்கும் வினாவிடை இயற்றிய விசாகப் பெருமாள் ஐயரும், ஆத்மபோத விரகாசிகை என்னும் வட மொழி நூலைத் தமிழில் மொழி பெயர்த்த இராமானுசக் கவிராயரும் இந்நூற்றாண்டில் தமிழ்ப் பணி புரிந்த பெருமக்களாவர்.

**இருபதாம் நூற்றாண்டு**

**டாக்டர் உ.வே. சாமிநாதையர் (1855-1942)**

டாக்டர் உவே. சாமிநாதையர் மகாவித்துவான் திரிசிரபாம் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் மாணாக்கர் செல்லிற்கும் மடமைக்கும் இரையாகிச் செத்துக் கொண் டிருந்த பல தமிழ் நூல்களை அச்சிட்டு வாழவைத்த அறிஞர். சிறந்த முன்னுரையோடும் அரிய குறிப்புரைகளோடும் பயன்படும் சொற்பொருள் அகர வரிசை யோடும் இவரது பதிப்புகள் அமைந்தன. கடும் உழைப்பால் இவர் பதிப்பித்த நூல்கள் பத்துப்பாட்டு, புறநானூறு, குறுந்தொகை, பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு, பரிபாடல், சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி, மணிமேகலை, பெருங்கதை முதலியன. வேறுசில சிற்றிலக்கிய நூல்களையும் இவர் பதிப்பித் துள்ளார்.

தம் ஆசிரியரின் வரலாற்றைப் பெரு நூலாகச் செய் துள்ளார். என் சரித்திரம்' என்னும் இவருடைய சுய வரலாறும் சிறந்த முறையில் எழுதப் பெற்றது. இவை யிரண்டும் வாழ்க்கை வரலாற்று நூல்களில் குறிப்பிடத் தக்க சிறந்த நூல்களாகும். 'நினைவு மஞ்சரி, புதியதும் பழையதும், கண்டதும் கேட்டதும், சங்ககாலத் தமிழும் பிற்காலத் தமிழும் முதலிய உரைநடை நூல்கள் எளிமையும் இனிமையும் வாய்ந்தவை. 86 ஆண்டுகள் வாழ்ந்த இவர் தொண்டினைப்பாராட்டிக் கவியரசர் பாரதியார் 'பொதியமலைப் பிறந்த மொழி வாழ்வறியும் காலமெலாம் புலவர் வாயில், துதியறிவாய், அவர் நெஞ்சின் வாழ்த் தறிவாய், இறப்பின்றித் துலங்குவாயே' என்று பாடியுள்ளார்.

**மறைமலையடிகளார் (1876-1950)**

நாகப்பட்டினத்திற்கருகே ஒரு சிற்றூரில் பிறந்தவர். இயற்பெயர் வேதாசலம் என்பது. ஆங்கிலம், வடமொழி, தமிழ் ஆகிய மொழிகளில் புலமை வாய்ந்தவர். சங்க இலக்கியத்தைப் பற்றி விரிவாகப் பேசியவர்; எழுதியவர். முல்லைப் பாட்டு, பட்டினப்பாலை ஆகியவை பற்றி ஆராய்ச்சிக் கட்டுரைகள் வரைந்துள்ளார். திருவொற்றியூர் மும்மணிக்கோவை, சோமசுந்தரக் காஞ்சியாக்கம் ஆகிய செய்யுள் நூல்களையும், குமுதவல்லி, கோகிலாம்பாள் கடிதங்கள் ஆகிய நாவல்களையும் மறைமலையடிகள் செய்துள்ளார்.

காளிதாசர் வடமொழியில் செய்த சாகுந்தலத்தைமிக அழகிய முறையில் தமிழாக்கியுள்ளார் அடிகளார் . 'மாணிக்கவாசகர் வரலாற்றும் காலமும்' என்னும் விரிவான ஆராய்ச்சி நூல், அவரது ஆய்வுத் திறனுக்கோர் எடுத்துக்காட்டு. சைவசமயதத்துவ விளக்க நூல்கள் பலவற்றையும், சிறுவர்க்கான செந்தமிழ் நூல்களையும் அடிகளார் இயற்றியுள்ளார். இவரது நாடகப் புலமைக்கு 'அம்பிகாபதி -

https://t.me/tnpscfree



அமராவதி' சான்று பகரும். மக்கள் நூறாண்டு வாழ்வது எப்படி?' தொலைவில் உணர்தல் முதலான அறிவியல் நூல்களையும் அடிகளார் படைத் துள்ளார். 'ஞான சாகரம்' என்னும் ஏடு நடத்தினார். தனித்தமிழ் இயக்கம் தொடங்கியதே இவர். இது தமிழிலக்கிய உலகம் செய்த, மறுமலர்ச்சிச் செயல் ஆகும். மறைமலையடிகளார் 1950-ஆம் ஆண்டுவரை வாழ்ந்தார். செந்தமிழ் மொழியின் உயர் வாழ்வில் பெரும் பங்கு இவர்க்கும் உரித்து என்பது வெள்ளிடைமலை.

### திரு.வி. கலியாணசுந்தரனார் (1883-1953)

இருபதாம் நூற்றாண்டின் ஈடிணையற்ற ஒரு தமிழ்ப் பெரியார் திருவாரூர் வி. கலியாணசுந்தரனார் ஆவார். அரசியல் விடுதலை இயக்கத்திலும், தொழிலாளர் நலப் பணியிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு புகழ் பெற்ற திரு.வி.க. எழுத்திலும் பேச்சிலும் இலக்கிய மணம் கமழச் செய்தார். மாநாடுகளில் தலைமைச் சொற்பொழிவு களைச் செம்மையாக எழுதி உணர்ச்சி மிகப் பேசினார். இவர் பேச்சுகள் தமிழ்த் தென்றல்' என்ற தொகுப்பாக வெளிவந்தன. பெண்மையினை வாழ்த்திப் 'பெண்ணின் பெருமை' என்னும் நூலையும், அண்ணல் காந்தி வாழ் வினைப் பற்றிக் காந்தியடிகளும் மனித வாழ்க்கையும்' என்னும் நூலையும் அவர் படைத்தார். முருகன் அல்லது அழகு சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து, இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம், தமிழ் நாடும் நம்மாழ்வாரும், இந்தியாவும் விடுதலையும், தமிழ்ச்சோலை, உள்ளொளி, சைவத் திறவு முதலிய பன்னல்களை எழுதித் தமிழ் உரை நடைக்குப் புத்துயிர் ஊட்டினார். முருகன் அருள் வேட்டல், பொதுமை வேட்டல்

முதலிய செய்யுள் நூல்களையும் எழுதியுள்ளார். தேசபக்தன், நவசக்தி முதலிய தமிழ் ஏடுகளையும் நடத்தினா.

### சோமசுந்தர பாரதியார் (1887-1959)

வழக்கறிஞராக இருந்து தமிழ் கற்றவர் தொல்காப்பியத்தின் சில பகுதிகளுக்கு ஆராய்ச்சி உரை தந்துள்ளார், மாரிவாயில் இவரது அரிய இலக்கியப் படைப்பு ஆகும். தசரதன் குறையும் கைகேயி நிறையும், சேரர் தாயமுறை இவை இவர் தந்த ஆய்வு நூல்களாம்.

### பண்டித மு.கதிரேசச் செட்டியார் (1891-1953)

இவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியாகப் பணியாற்றினார். சுக்கிர நீதி, மண்ணியல் சிறு தேர் இவை வடமொழியினின்று மொழிபெயர்க்கப் பட்டவை. உரை நடைக்கோவை, சுலோசனை, உதயணன் சுதை முதலிய உரை நடை நூல்களை இயற்றியுள்ளார். மண்ணியல் சிறு தேர் சிறந்த நாடக நூலாகும்.

### வையாபுரிப்பிள்ளை (1891-1956)

இவர் சென்னைப் பல்கலைக் கழகத்தில் பேராசிரிய ராகப் பணியாற்றினார். தமிழ்ச் சுடர் மணிகள், சொற்கலை விருந்து எழுதினார். பேரகராதியாகிய லெக்சிகனை உருவாக்கியதில் அவருக்குப் பெரும் பங்குண்டு. அவர் சங்க இலக்கியம் முழுமையும் பதிப்பித்தார். இலக்கிய விளக்கம் முதலிய ஆராய்ச்சி நூல்களை அவர் எழுதி வெளியிட்டார். புதுமை இலக்கியத்தில் அவருக்கு இருந்த ஆர்வத்தின் காரணமாக இராஜி என்ற நாவலையும், சிறுகதை மஞ்சரி என்ற சிறு கதைகள் தொகுப்புகளையும் வெளியிட்டார்.

### இரா.பி. சேதுபிள்ளை (1896-1961)

அவருடைய இலக்கியச் சொற்பொழிவுகள் சுவை மிக்கன திருக்குறள், சிலப்பதிகாரம், கம்பராமாயணம், கந்த புராணம் ஆகியவற்றைத் தம் இலக்கியச் சொற்பொழிவுகளில் மிகுதியாகப் பேசினார். அவருடைய



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



இலக்கியக் கூட்டங்களின் வாயிலாகத் தமிழில் தேமதுரஓசையைத் தெருவெல்லாம் பரப்பிய பெருமை அவருக்குண்டு. அவருடைய எழுத்திலும் பேச்சிலும் எதுகை மோனை நயங்கள் கவர்ச்சி மிக்கனவாக விளங்கும். எதுகை மோனை அமைந்த உரை நடைக்கு அவரே வழிகோலியவர் என்றும் கூறலாம். அவருடைய 'ஊரும் பேரும்' என்ற நூல் ஆராய்ச்சி மிக்க நூலாகும்.

**டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார் (1907-1967)**

இவருடைய நடை தனித் தமிழ் நடையாகும். அவர் எழுதிய கட்டுரைகள் முன்பனிக் காலம்', தமிழோசை', தமிழ் காட்டும் உலகம் முதலியன. பழந்தமிழ்ச் சொற்களை மிகுதியாகக் கலந்து நடையை அழகு படுத்துவது அவர் இயல்பாகும்.

**தெ.பொ. மீனாட்சி சுந்தரனார்**

தமிழ் ஆராய்ச்சித் துறைக்கு வழிகாட்டிய பேறிஞர் ஆவார். அவருடைய மொழி வரலாறு' என்னும் நூல் அத்துறையில் அமைந்துள்ள சிறந்த நூலாகும். அவருடைய கானல்வரி' என்ற ஆராய்ச்சி நூல் சிலப்பதிகாரத்தின் சீர்மையை எடுத்துக் காட்டும். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் மொழியியல் பேராசிரியராக விளங்கித் தமிழுக்கு, வேண்டிய ஆக்கங்களைச் செய்து தந்தவர். அவரைப் பல்கலைச் செல்வர் என்று பாராட்டுகின்றனர்.

## 8. பொதுக் கட்டுரைகள்

**சமணர் நூல்கள்**

கியி மூன்றாம் நூற்றாண்டில் வடக்கே மௌரியப் பேரரசைச் சந்திரகுப்தன் ஆண்டபோது பத்திரபாகு என்னும் முனிவர் சமண மதத்தைத் தென்னகத்திற்குக் கொண்டு வந்து பரப்பினார். பின்னர் அகச் சமயங்களை அடக்கி, இப்புதிய புறச் சமயம் அரசாங்க ஆதரவைப் பெற்று நிலைத்தது. வச்சிரநந்தி என்பவர் கிபி. 470இல் திரமிள சங்கம்' என்னும் ஓர் அப்பினை நிறுவித் தமிழை வளர்த்தார். சமணரால் தமிழ் குறிப்பிடத்தக்க வளம் பெற்றது. சமணச் சமயச் சான்றோர் பல்வேறு துறைகளில் நூல்களைப் படைத்துப் பெருந் தொண்டு புரிந்தனர். பிற சமயத்தினரைவிட இவர்களே மிகுதியான அளவிற்குத் தமிழ்ப் பணி மேற்கொண்டனர் எனலாம்.

**1. இலக்கணம்**

தமிழிலக்கியத்தைப் பொறுத்தவரை இலக்கண நூல்களில் பெரும்பகுதி, சமணராலேயே இயற்றப்பட்டுள்ளன. முதல் நூலாகிய தொல்காப்பியமே சமணர் செய்தது என்பர் சிலர். இதற்குப் போதிய சான்றுகள் இல்லை.

**யாப்பருங்கலம்**

அமித சாகரனார் என்பவரால் கி.பி. 10ஆம் நூற்றாண் டில் எழுதப் பெற்ற யாப்பிலக்கண நூல் இது. நூற்பா யாப்பில் அமைந்த இந்நூல் மூன்று இயல்களில் 96 நூற் பாக்களில் யாப்பினை ஆராய்கிறது. இதற்குக் குணசாகரர் விருத்தியுரை செய்துள்ளார்.

**காரிகை**



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



அமித சாகரனாரே யாப்பருங்கலத்தைச் சுருக்கியும் விளக்கியும் மற்றொரு நூல் செய்தார். அது யாப்பருங் கலக்காரிகை' என்பதாகும். கட்டளைக் கலித்துறை யாப்பில் செய்யப் பெற்ற இந்நூலில் மூன்று இயல்களும் 44 காரிகைகளும் உள்ளன. இதற்கும் குணசாகரர் உரை உள்ளது.

**நன்னூல்**

பதின்மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த நன்னூ ல் எழுத்திலக்கணத்தையும் சொல்லிலக்கணத்தையும் நுவல்கின்றது. இதன் ஆசிரியராகிய பவணந்தியார் அக்காலம் வரை வளர்ந்து வந்த தமிழிலக்கணத்தை நன்கு வடித்துள்ளார். தொல்காப்பியத்துக்குப் பின் இவரது நூலே பெரிதும் போற்றப்படுவது. மயிலை நாதர், சங்கர நமச்சிவாயர், சிவஞான முனிவர் முதலான பலர் இதற்கு உரை விளக்கம் செய்துள்ளனர். "பழையன கழிதலும் புதியன புகுதலும், வழுவல கால வகையினானே" என்னும் நூற்பா இலக்கண இலக்கிய ஆய்விற்கு என்றும் வழிகாட்டு வதாகும்.

**நேமிநாதம்**

குணவீர பண்டிதர், நேமிநாதர் என்னும் ஒரு சமண தீர்த்தங்கரர் பெயரால் செய்த இலக்கண நூல் நேமிநாதம். எழுத்தும் சொல்லும் விளக்கும் இந்நூல் 97 நூற்பாக்களைக் கொண்டது. 9 பிரிவுகளை உடையது. பன்னிரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த இந்நூல் சின்னூல்' என்றும் அழைக்கப்படும்.

**வெண்பாப் பாட்டியல்**

வச்சணந்தி என்னும் முனிவர் பெயரால் அவருடைய மாணவர் குணவீர பண்டிதர் பாடியது. 'வச்சணந்தி மாலை' எனப்படும் வெண்பாப் பாட்டியல் சிற்றிலக்கியங் களின் அமைப்புப் பற்றியும், வேறு செய்யுள் எழுதும் முறைகள் குறித்தும் கூறும் இந்நூல் மூன்று இயல்களைக் கொண்டது. **103 வெண்பாவி**ல் அமைந்த இப்பாட்டியல்கியி.12ஆம் நூற்றாண்டில் எழுதப் பெற்றது.

**நம்பியகப் பொருள்**

நாற்கவிராச நம்பி என்னும் சமண சான்றோரால் இயற்றப்பட்டது இந்நூல். இதனை அகப் பொருள் விளக்கம்' என்றும் கூறுவர். அகத்திணையியல், களவியல், வரைவியல், கற்பியல், ஒழிபியல் என்ற ஐந்து இயல்களில் அகப்பொருளை விளக்குகிறது இந்நூல். இதற்கு இலக்கிய மாகத் திகழ்வது **தஞ்சைவாணன் கோவை.**

**பெருங்காப்பியங்கள்**

ஐம்பெருங் காப்பியங்களுள் சீவக சிந்தாமணி, சிலப் பதிகாரம், வளையாபதி ஆகிய மூன்றனையும் சமண சமயத்தைச் சார்ந்தோர் படைத்துள்ளனர். தமிழிலக்கிய வளர்ச்சியில் முன்னைய இரண்டும் முக்கிய இடத்தைப் பெற்றிருப்பன. வளையாபதி முற்றும் கிடைக்கப் பெறாத ஒரு நூல். பெருங்கதை கொங்குவேளிரால் செய்யப் பெற்ற ஒரு பெருங்காவியம். இவையனைத்தும் சமண சமய தத்துவங்களை வலியுறுத்துவன.

**சிறுகாப்பியங்கள்**

சூளாமணி, யசோதர காவியம், உதயண குமார காவியம், நாக குமார காவியம், நீலகேசி ஆகிய ஐந்து சிறு காப்பியங்களும் சமணர் தமிழுக்குத் தந்த செல்வங்களே ஆகும் ('காப்பியங்கள்' என்ற தலைப்பில் இவை பற்றிக் காணலாம்.)

**அறநூல்கள்**



https://t.me/tnpscfree

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் நாலடியார், பழமொழி, சிறுபஞ்சமூலம், ஏலாதி ஆகியவை சமண மதத்தினரால் இயற்றப்பெற்றவை. திருக்குறள் ஆசிரியர் வள்ளுவர் புலாலுண்ணாமை', 'கொல்லாமை' ஆகிய வற்றை வற்புறுத்துவதால் அவரும் சமணரே எனச் சாதிப்பார் சிலர் அதற்குப் போதிய சான்றுகள் இல்லை . மற்ற கீழ்க்கணக்கு நூல்களிலும் பரவலாகச் சமண சமயக் கருத்துகள் இடம் பெற்றுள்ளன.

**சிற்றிலக்கியங்கள்**

உதீசித் தேவர் எழுதிய திருக்கலம்பகம் அருகன் புகழ் கூறும் ஒரு நூல் பலவகைப் பாக்களால் ஆனது. திருநூற்றந் தாதி, அவிரோதி நாதர் என்பவரால் அந்தாதித் தொடையில் செய்யப் பெற்ற நன்னூல். வேறு சில சிற்றிலக்கியங்களையும் சமணர் படைத்துள்ளனர்.

**புராணங்கள்**

வாமன முனிவர் செய்த மேருமந்தர புராணம் சமணர் புராணங்களில் தலையாயது ஆகும். மேரு, மந்தரா என்னும் இருவரின் வரலாறு வாயிலாகச் சமண சமயக் கருத்துகளை விளக்குவது இது. வடமொழிக் கதை மூலத்தைக் கொண்டு செய்யப் பெற்ற வழி நூலாகிய இப் புராணத்தில் 12 சருக்கங்கள் உள்ளன. 1400 பாடல்கள் அடங்கிய இந்நூல் கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் எழுந்தது. சாந்தி புராணம் முதலான வேறு சில புராண நூல்களையும் சமணர் எழுதியுள்ளனர்.

**உரைநடை**

மண்டல புருடரால் இயற்றப்பட்டதாகக் கூறப்படும் ஸ்ரீபுராணம் வடமொழி மூலத்தைக் கொண்டது. சமண தீர்த்தங்கரர்களின் வரலாறுகளைத் தொகுத்துக் கூறும் இந்நூல் மணிப்பிரவாளம் எனப்படும் தமிழ் - சமஸ்கிருத மொழிக் கலவையில் அமைந்தது. சமணர் தம் சமய வழிபாட்டில் வைத்துப் போற்றும் ஓர் அரிய நூல் இது.

**பிற நூல்கள்**

சங்கப் பாடல்களில் சிலவற்றைச் செய்த உலோச்சனார், நற்றிணையில் ஒரு பாடலை எழுதிய நிகண்டனார் ஆகியோரைச் சமணம் சார்ந்தவர் என்பர். இஃது ஆய்வதற் குரியது. திவாகரம், பிங்கலம், சூடாமணி, உரிச்சொல் நிகண்டு ஆகிய நிகண்டு நூல்களை இயற்றியவர்கள் சமணர்களே.

இங்ஙனம் சமணர் தமிழ் இலக்கியத் தொண்டில் ஈடு இணையற்ற நற்பணி ஆற்றியுள்ளனர் என்பது வெளிப்படை எல்லாத் துறைகளிலும் ஈடுபட்டு அரிய தொண்டாற்றிய சமணரின் நூல்கள் தமிழ் உள்ளளவும் வாழ்வனவாக அமைந்துள்ளன. இந்நூற்றாண்டிலும் மறைந்த அ.சக்கரவர்த்தி நயினார் அவர்களும் ஜீவபந்து கூளு. ஸ்ரீபால் அவர்களும் இன்னும் பிறரும் அரிய பணி ஆற்றியுள்ளனர்.

**பௌத்த சமயத்தினரின் நூல்கள்**

கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் அசோகரின் ஆட்சிக் காலத்தில் பௌத்த சமயம் தமிழகத்தில் பரவத் தொடங் கியது. பாலி, சமஸ்கிருதம் ஆகியவற்றில் தேர்ந்த பலர் புத்த சமயம் சார்ந்தவராய்த் தமிழகத்தில் அன்றிருந்தனர். பௌத்தர்களுள் பலரும் சமய உணர்வு கொண்டவராக இருந்தனரே அன்றி, இலக்கிய ஈடுபாடு கொண்டவர்களாக இல்லை. எனவே அவர்கள் பல தமிழ் நூல்களை இயற்றவில்லை.

சங்க இலக்கியத்துள் ஒன்றான நற்றிணையில் 75ஆம் பாடலை இளம் போதியர் என்பவர் பாடியுள்ளார். இவர் பெயரைக் கொண்டு இவர் பௌத்தராக இருக்கலாம் என்று சிலர் கருதுகின்றனர்.

**மணிமேகலை**

பௌத்த சமயத்தை விளக்கும் தலைசிறந்த தமிழ் நூல் மணிமேகலையே ஆகும். சிலம்புடன் பிறந்த இக்காப்பியத்தை மதுரைக் கூலவாணிகன் சாத்தனார் இயற்றியுள்ளார். கி.பி. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த இந்நூல் பௌத்த சமய நெறிகள் பலவற்றையும் மாண்புடன் விளக்குகின்றது.

**குண்டலகேசி**

ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றான குண்டலகேசி பௌத்த சமயத்தைச் சேர்ந்த நாதகுப்தனார் என்பவரால் இயற்றப் பெற்றது. விருத்தப் பாவில் ஆன இந்நூலின் சில பகுதிகளே இன்று கிடைத்துள்ளன. மந்திரிகுமாரியாகிய பத்திரை என்னும் குண்டலகேசி, காளன் என்னும் கள்வனை விரும்பி மணம் செய்து கொண்டாள். ஒருநாள் ஊடலில் **அவனைக்கள்வன் என்று அவள்** கூற, அவனும் மனம் நொந்து அவளை அழிக்க முற்படுகிறான். மலையுச்சிக்கு அழைத்துச்சென்று தன் மனக்கருத்தைக் கூறினான் அவன்; அவளும் அவனை வணங்கி இறப்பதாகச் சொல்லிச் சுற்றி வந்து அவனையே மலையிலிருந்து கீழே தள்ளிக் கொன்று விடுகிறாள். பின் அவள் துறவு பூண்டு, சமய வாதம் செய்தாள். "பாளையாம் தன்மை செத்தும் பாலனாம் தன்மை செத்தும்

காளையாம் தன்மைசெத்தும் காமுறு இளமை செத்தும்
மீளுமிவ் வியல்புமின்னே மேல்வரு மூப்புமாகி
நாளுநாட் சாகின் றோமால் நமக்கு நாம் அழாத தென்னோ!"

என்பது குண்டலகேசியில் உள்ள சிறந்த பாட்டாகும்.

**வீரசோழியம்**

புத்தமித்திரனால் என்பவரால் இயற்றப் பெற்ற ஓர் இலக்கண நூல் வீரசோழியம் கி.பி. 14ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. வீரசோழன் என்னும் மன்னன் பெயரால் எழுதப்பட்டதால் இப்பெயர் பெற்றது. இதனை வீர சோழியக் காரிகை' என்றும் கூறுவர். இஃது தமிழில் ஐந்திலக்கணத்தையும் கூறும் ஒரு சிறந்த நூலாகும்.

பௌத்த சமயச் சான்றோர் வேறு பல சிறு நூல்கள் செய்தனர் என்றாலும் அவை புகழ் மிக்கவையாக நிலைத்து நிற்கவில்லை. இருப்பினும் மணிமேகலை ஒன்றே பௌத்தரின் தமிழ்த் தொண்டை உறுதிப்படுத்த போது மான சான்றாகும்.

**இசுலாமியமும் தமிழும்**

இசுலாமிய அரபு மொழிப்பயிற்சியோடு தமிழ் மொழிப் புலமையும் பெற்றுப் பல நல்ல நூல்களைப் படைத்துள்ளனர். சிதக்காதி முதலான வள்ளல் பெருமக்கள் தமிழ்ப் புலவர்களைப் புரந்து காத்துள்ளனர். இலக்கியப் படைப்பில் இசுலாமியர் பணி தனித்தன்மையானது. காப்பியம், புராணம், சிற்றிலக்கியம், நாடகம் ஆகியவற்றை இயற்றியதோடு அமையாது. பல புதிய இலக்கியவகை களையும் தமிழில் அவர்கள் அறிமுகப்படுத்தியுள்ளனர். மசலா நாமா முதலியவற்றைப் புதியதாக அவர்கள் அளித்துள்ளனர் கும்மி, ஒப்பாரி தாலாட்டு ஏசல், சிந்து முதலிய பாமரர் இலக்கிய வகையிலும் இசுலாமியர் நூல்கள் செய்துள்ளனர்.

**1. உமறுப்புலவர்**

முகம்மது நபிகளின் வரலாற்றை நவிலும் 'சீறாப் புராணம்' என்னும் காப்பியத்தை எழுதியவர் உமறுப் புலவர். மூன்று கண்டங்களையும் ஏறத்தாழ நூறு பாடல் களையும் கொண்ட இந்நூல். கம்பரைப் பின்பற்றி உமறு இந்நூலை எழுதியுள்ளார் என்பர். இதில் ஏறத்தாழ 5000 பாடல்கள் உள்ளன. கி.பி. 17ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த உமறுப்புலவர்கடிகைமுத்துப் புலவரிடம் தமிழ் பயின்றவர். கற்பனை நயத்தோடு சீறாப்புராணத்தைச் சுவை குன்றாமல் செய்துள்ளார்.

https://t.me/tnpscfree



**2. பீர்முகமது**

பதினெட்டாயிரம் பாடல்களுக்கு மேல் பாடிய பீர்முகமது சாயுபு தென்காசி தக்கலையில் பிறந்தவர். திருநெறி நீதம், ஞானக்குறம், ஞானப்பாட்டு முதலான பல நூல்களை இயற்றியவர். **யானை மலை**யில் 5 ஆண்டுகள் தவமியற்றினார். தவமிருந்த பகுதி 'பீர்மேடு' என்று அழைக்கப்படுவதாகும். தத்துவ நூல்களை மிகுதியாகப் பாடிய கவிஞர் இவர்.

**3. குணங்குடி மஸ்தான்**

சுல்தான் அப்துல் காதிறு என்னும் பெயர் பெற்ற குணங்குடி மஸ்தான் சாகிபு ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடியுள்ளார். முகையதீன் சதகம் முதலானவை அவர் பாடியவை. தாயுமானவரின் பாடல்களைப் போலக் கவி அழகும் சொல்லடுக்கும் பெற்றுள்ளன இவரது நூல்கள். தத்துவக் கருத்துகளை மிகுதியாகக் கொண்டன இவர் பாடல்கள்.

**4. வண்ணக்களஞ்சியப் புலவர்**

மீசலை என்னும் இடத்தில் பிறந்த இப்புலவர் இராஜாயகம் என்னும் பெருநூலை இயற்றியவர். அலிபாதுஷா நாடகம் என்றொரு நூலையும் இவர் செய்துள்ளார். இவர் புலமையை மதித்துத் தஞ்சை மன்னர் பொற்சிவிகை அளித்தார் என்பர்.

**5. செய்குதம்பிப்பாவலர்**

கோட்டாற்றைச் சேர்ந்த செய்குதம்பிப்பாவலர் சதாவதானம் செய்வதில் வல்லவர். பல இனிய இசுலாமிய சமய நூல்களைச் செய்துள்ளார். கோட்டாற்றுப் பிள்ளைத் தமிழ், திருநாவுர் திரிசந்தாதி நீதி வெண்பா காரணமாலை முதலிய பற்பல நூல்கள் இவரால் ஆக்கப்பட்டுள்ளன.

**6. அப்துல்காதிர் புலவர்**

ஞான வெண்பாப் புலிப் பாவலர், வித்துவதீபம் என்னும் சிறப்புப் பெயர்களைப் பெற்றவர் அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர். 1866இல் பிறந்து 1918இல் மறைந்த இவர் முப்பதுக்கும் மேற்பட்ட நூல்களை யாத்துள்ளார். சந்தத் திருப்புகழ் திருமதீனத்து மாலை, நவமணிதீபம், மெய்ஞ்ஞானக் கோவை கண்டிக் கலம்பகம் முதலானவை இவரால் பாடப் பெற்றவை.

இங்ஙனம் செஞ்சொற் புலவர்கள் பலர் தம் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு பற்பல அரிய நூல்களை எழுதியுள்ளனர். உமறுப்புலவர், குணங்குடியார், பீர் முகம்மது முதலான சிலர் இன்றும் போற்றத்தக்க நன்னூல்களைப் படைத்த சான்றோர்கள் ஆவர். இருபதாம் நூற்றாண்டில் இசுலாமியர்பணி தொடர்ந்து சிறப்பாக நடைபெற்று வருகிறது.

**அயல் நாட்டுக் கிறித்தவர்கள் ஆற்றிய பணி**

பதினாறாம் நூற்றாண்டு தொடங்கி மேலை நாட்டி லிருந்து தமிழகம் வந்த கிறித்தவப் பாதிரிமார்கள் சமயத் தைப் பரப்பியதோடு சிறந்த தமிழ்ப் பணியும் ஆற்றினர். அச்சுக் கலையை நல்ல முறையில் தமிழ் வளர்ச்சிக்குப் பயன்படுத்தியவர்கள் அவர்களே, தமிழ் உரைநடைக்கு ஆக்கம் அளித்தனர். தமிழ்மொழியின் சிறப்பினையும் இலக்கணப் பெருமையினையும் உலகறியச் செய்தனர்; அகராதிகளைத் தொகுத்தனர்; பல நூல்களை இருவழியும் மொழிபெயர்த்தனர்; நாவல், சிறுகதை முதலான புதிய இலக்கிய வகைகளைத் தமிழகத்திற்கு அறிமுகப் படுத்தினர், திறனாய்வுக் கட்டுரைகள் தோன்றுதற்கும் வழிகோலினர். தமிழின் இக்கால வளர்ச்சிக்கு கடந்த முந்நூறு ஆண்டுகளில் கிறித்தவர் ஆற்றிய தொண்டு ஒரு முக்கிய காரணமாகும்.



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



### 1. இராபர்ட் - டி - நொபிலி

கிபி.6-இல் தமிழகம் வந்த இத்தாலிய நாட்டுப் பாதிரியான இவர் தத்துவ போதக சுவாமி என்று அழைக்கப்பட்டார். சைவ சமயத் துறவிபோலத் தோற்றம் புனைந்து கிறித்தவமதத்தொண்டு ஆற்றினார். பல மொழிகள் அறிந்தவர். ஆயுரக் கணக்கில் உயர்ந்த சாதி மக்களை மதம் மாற்றினார். ஞானோபதேச காண்டம், கடவுள் நிருணயம், ஏசுநாதர் சரித்திரம், மந்திரமாலை, ஞான தீபிகை, தத்துவக்கண்ணாடி தமிழ் - போர்த்துக்கீசிய அகராதி முதலிய பல நூல்களை இவர் இயற்றினார். தமிழ் உரைநடை முன்னோடிகளில் இவர் குறிப்பிடத்தக்கவர்.

### 2. வீரமாமுனிவர்

கான் ஸ்டான்டைன் ஜோசப் பெஸ்கி என்னும் இயற்பெயரினைக் கொண்ட வீரமாமுனிவர் 18 ஆம் நூற்றாண்டில் இத்தாலி நாட்டிலிருந்து தமிழகம் வந்தார். பல மேனாட்டு மொழிகளிலும் தமிழிலும் புலமை பெற்றவர். சுப்ரதீபக் கவிராயரிடம் தமிழ் பயின்றவர். பிற தென்மொழிகளையும் கற்றுணர்ந்தவர். தொன்னூல் விளக்கம் என்னும் ஐந்திலக்கண நூலை இவர் செய்தார், சதுரகராதியை உருவாக்கினார்; இது பெயர், பொருள், தொகை, தொடை எனும் நான்கு பகுதிகளை கொண்டது. பரமார்த்த குரு கதை என்னும் நகைச்சுவைக் கதை நூலைச் செய்து கதையிலக்கியத்திற்கு வழிகாட்டினார். வேதியா ஒழுக்கம் வேத விளக்கம் முதலிய உரைநடை நூல்களையும் செய்தார்.

தேம்பாவணி' இவர் செய்த குறிப்பிடத்தக்க காப்பிய நூலாகும். தூயவளனாரின் வரலாற்றைக் கூறும் இந்நூல் இலக்கிய வளம் மிக்கது; காவிய மணம் கமழ்வது. ஏறத்தாழ 3200 பாடல்களைக் கொண்டது. திருக்காவலூர்க் கலம்பகம், கித்தேரியம்மாள் அம்மானை, அடைக்கல மாலை, அன்னை அழுங்கல் அந்தாதி, அடைக்கல நாயகி வெண்கலிப்பா ஆகிய நூல்களையும் இவர் இயற்றினார்; குறில் எகர ஒகர எழுத்துகள் முன் காலத்தில் புள்ளியிட்டு எழுதப்பட்டன; வீரமாமுனிவரே புள்ளிபெறாமல் இருப்பவற்றைக்குற்றெழுத்தென்றும், ஏ,ஓஎன்று கீழ்க் கோடும் கீழ்ச் சுழியும் அமைத்து நெட்டெழுத்தென்றும் மாற்றியமைத்தார். இவ் எழுத்துச் சீர்திருத்தத்தைத் தமிழர் விரும்பி ஏற்றுக் கொண்டனர். தமிழில் நிறுத்தக் குறிகளை அறிமுகப்படுத்தியவரும் இவரே. இவர் தொண்டு தமிழுலகு உள்ளவரை நிலைத்து நிற்பதாகும்.

### 3. சீகன் பால்கு

1705-இல் தமிழகம் வந்த செர்மன் நாட்டுப் பெருமகனா ராகிய சீகன் பால்கு தரங்கம்பாடியில் ஓர் அச்சகம் நிறுவித் தமிழ் நூல்கள் பலவற்றை வெளியிட்டார். தமிழ் - இலத்தீன் அகராதியையும், தமிழ் - இலத்தீன் ஒப்பிலக்கணத்தையும் இவர் செய்தார்.

### 4. எல்லீஸ்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சென்னை கலெக்டராக விளங்கிய எல்லீஸ்துரைமகனார் திருக்குறளின் முதல் பதின்மூன்று அதிகாரங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.

### 5. ஜி.யு.போப்

1825- இல் பிறந்த போப்தம் பத்தொன்பதாம் வயதில் தமிழகம் வந்தார். நீண்டநாள் தமிழ்ப்பணியாற்றியவர். திருக்குறள், நாலடியார், சிவஞானபோதம், திருவாசகம் முதலியவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். தமிழ் இலக்கணத்தைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் வெளியிட்டவர் தம் கல்லறையில் 'ஒரு தமிழ் மாணவன்' என்று பொறிக்க வேண்டும் என விரும்பிய அவரது தமிழ் உள்ளம் நெஞ்சை இளகச் செய்வது. இவர் சமுதாயப் பணியும் ஆற்றியவர் ஆவார்.



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



**6. டாக்டர் கால்டுவெல்**

1813-ஆம் ஆண்டு அயர்லாந்தில் பிறந்தவர், சமயத் தொண்டாற்றத் தமிழகம் வந்தார். திருநெல்வேலி மாவட்டத்தில் தங்கி, ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகட்கு மேல் பணி ஆற்றினார். பல மேனாட்டு மொழிகளையும் தென்னக மொழிகளையும் நன்கு கற்றுத் தேர்ந்து பெரும் புலமை பெற்றார். 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' என்னும் அழியாத பெருநூலை இயற்றினார். திராவிட மொழிகளின் தனித்தன்மைகளைச் சுட்டி, அவற்றின் பெருமையை உலகறியச் செய்தார். உலக மொழிகள் பலவற்றிலும் தமிழ்ச் சொற்கள் சென்று கலந்ததை எடுத்துக் காட்டினார். திருநெல்வேலி சரித்திரம்' என்னும் அரிய வரலாற்று நூலை எழுதினார். இவ்விரண்டு நூல்களும் ஆங்கிலத்தில் செய்யப்பட்டவைதாமரைத் தடாகம், தற்கருணைத் தியானமாலை முதலிய பல உரைநடை நூல்களை எழுதினார். தமிழுக்காகவும் சமயத்துக்காகவும் உழைத்த இவ் அறிஞர் பெருந்தகை தாயகம் செல்ல மறுத்துக் கொடைக்கானலிலேயே உயிரிழந்தமையை நினைத்தால் நெஞ்சம் உருகும்.

**7. மற்றவர்கள்**

'வேத உதாரணத்திரட்டு' என்னும் நூலைச்செய்த இரேனியஸ், புதிய ஏற்பாட்டைத் தமிழில் தந்தார். இலாசரஸ் என்பவர் நன்னூ லையும் திருக்குறளையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.

தமிழ்ப் பழமொழிகளைத் தொகுத்து வெளியிட்டார். பெர்சிவல் பாதிரியார் தமிழ்ப் பழமொழிகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டார், தினவர்த்தமானி' என்னும் வார ஏட்டையும் நடத்தினார். பெப்ரிஷியஸ், பன்யனின் பில்கிரிம்ஸ் ப்ரோக்ரஸ்' என்னும் நூலைத் தமிழாக்கினார். இராட்லர் தமிழ் - ஆங்கில அகராதியை உருவாக்கினார். டாக்டர் வின்ஸ்லோ திரட்டிய அகராதி மிகவும் புகழ் வாய்ந்தது. செக்நாட்டைச் சேர்ந்த கமில்ஸ்வெலபில், பிரான்ஸ் நாட்டினரான பிலியோஸா ருசிய நாட்டு ஆண்டிரனோவ், ரூடின் (செம்பியன்), பிரிட்டனைச் சேர்ந்த ஜான்மார் ஆஷர் முதலானோரின் அருந்தமிழ்ப்பணியும் போற்றற் குரியதாகும்.

**தமிழ்நாட்டுக் கிறித்தவர் ஆற்றிய பணி**

மேலை நாட்டுக் கிறித்தவப் பாதிரிமாரிகளே அன்றித் தமிழகக் கிறித்தவரும் நற்றமிழ்த் தொண்டினை ஓரளவு செய்துள்ளனர்.

**1. வேதநாயக சாஸ்திரியார்**

திருநெல்வேலியில் 18-ஆம் நூற்றாண்டில் பிறந்தவர். சரபோஜி மன்னரால் போற்றப்பட்டவர். பெத்லெகம் குறவஞ்சி, சென்னைப் பட்டினப் பிரவேசம் ஆகிய நாடக நூல்களையும், ஞான ஏற்றப் பாட்டு, ஞான உலா, ஜெபமாலை முதலிய பல நூல்களையும் செய்தார்.

**2. வேதநாயகம்பிள்ளை**

திருச்சிக்கருகே குளத்தூரில் பிறந்து, மாயூரத்தில் முனிசீப்' என்னும் முதல் தமிழ் நாவலை எழுதியவர் இவரே. சர்வசமய சமரசக் கீர்த்தனை இவரது பரந்த உள்ளத்திற்கு எடுத்துக்காட்டு. நீதி நூல், பெண்மதிமாலை ஆகியவை எளிய நடையில் நீதி உணர்த்துபவை. 'சுகுணசுந்தரி சரித்திரம் ' இவர் எழுதிய மற்றொரு நாவலாகும். தமிழ் நாவல் உலகின் முன்னோடி என்னும் பெயர் என்றும் நிலைத்திருக்கும். கீர்த்தனை வாயிலாகத் தமிழிசைக்குச் சிறந்த பணிபுரிந்துள்ளார் எனலாம்.

**3. கிருஷ்ணப்பிள்ளை**



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



19-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவரான ழ.ஹ. கிருஷ்ணப் பிள்ளை கிறித்தவக் கம்பன்' என்று புகழப்படுபவர். இவர் "பில்கிரிம்ஸ் புரோக்ரஸ்" என்னும் நூலை 'இரட்சணிய யாத்திரிகம்' என்ற பெயரில் மொழி பெயர்த்தார். ஏறத்தாழ நாலாயிரம் விருத்தப்பாக்கள் கொண்ட நூல் இது. இவர் செய்த பிற நூல்கள் இரட்சணிய மனோகரம், இரட்சணியக் குறள் முதலியவை.

### 4. ஆபிரகாம் பண்டிதர்

திருநெல்வேலியைச் சேர்ந்த ஆபிரகாம் பண்டிதர் 'கருணாமிர்த சாகரம்' என்னும் அரிய இசையிலக்கண நூலை எழுதியுள்ளார். தமிழ் இசையின் பழம் பெருமையை நிலைநாட்டிய இவர் மருத்துவத்துறையிலும் சிறந்த பணி ஆற்றியுள்ளார்.

தனிநாயக அடிகள், நல்லூர் ஞானப்பிரகாசர், சதாசிவப்பிள்ளை , டாக்டர் வி.மி. ஞானப்பிரகாசம், டாக்டர் மைக்கேல் இதயம் ஆகியோரும் இவ்வரிசையில் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.

## இருபதாம் நூற்றாண்டுக் கவிதை

### இருபதாம் நூற்றாண்டில் தமிழ்க் கவிதையும் வளர்ச்சியும்

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை , இராம லிங்க அடிகளார் முதலான தமிழ்ப் பெருங் கவிஞர் களுக்குப் பின்னர், இருபதாம் நூற்றாண்டில் எழுச்சிமிக்க கவிதைகளுக்கு வழிகோலியவர்கள் பாரதியும் பாரதிதாசனும் ஆவர். இவர்களின் தமிழ்க் கவிதைப் படைப்பு களினால் கவரப்பட்ட கவிஞர் பலர் புதுப் புனைவுகளை எழுதித் தமிழை வளப்படுத்தினர். இயற்கை நலத்தைக் கற்பனையழகோடு வருணிப்பதை மட்டும் தம் கருத்தாகக் கொள்ளாமல், சமுதாய உணர்வோடு சீர்திருத்தக் கொள்கைகளைக் கவிதையில் எடுத்துக்காட்ட வேண்டும் என்ற கவிநோக்கு இவர்களிடம் இருந்தது.

### 1. பாரதியார்

1882இல் எட்டையபுரத்தில் பிறந்து 1921இல் சென்னையில் மறைந்த பெருங் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார். தந்தை சின்னசாமி ஐயரிடம் தமிழ் பயின்றார் வடமொழி, இந்தி, பிரெஞ்சு, ஆங்கிலம் ஆகிய பல மொழிகளைப் பயின்றார். எட்டையபுரத்தில் சமஸ்தானப் புலவராகச் சில காலம் இருந்தார். சுதேசமித்திரன் ஏட்டில் துணையாசிரியராக இருந்தபோது எழுச்சிமிக்க கட்டுரை களை எழுதினார்; இந்தியா என்னும் ஏட்டை நடத்தினார். தேசிய விடுதலைக் கனலைத் தம் கவிதையிலும் கட்டுரையிலும் எழுப்பினார். சிறையிட விரும்பிய ஆட்சியிடம் சிக்காமல் புதுவையில் தங்கியிருந்தார், பின்னர் அவ்வெல் லையைக் கடந்தவுடன் சிறையினில் அடைக்கப்பட்டார்.

'பாருக்குள்ளே நல்ல நாடு', செந்தமிழ் நாடென்னும் போதினிலே', 'யாமறிந்த மொழிகளிலே', 'வந்தே மாதரம் என்போம்' கண்ணீர் விட்டே வளர்தோம்', 'மங்கியதோர் நிலவினிலே', 'விடுதலை, விடுதலை' முதலிய பல புகழ் வாய்ந்த கவிதைகளை எழுதினார். தேசியப் பற்றும் தமிழ்ப் பற்றும் இவரிடம் ஒருங்கே அமைந்திருந்தன.

'தனியொருவனுக் குணவிலை யெனில் சகத்தினை அழித்திடுவோம்' என்பது பாரதியின் புரட்சிச் கருத்து. பூமியில் எவர்க்கும் இனி அடிமை செய்யோம்' என்று விடுதலை யுணர்வைப் பாடினார். தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்' என்று தமிழினைப் போற்றினார். தமிழ் நாட்டைச் செந்தமிழ் நாடு ' என்ற கூறியவர் தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்றதாயென்று கும்பிட்டி பாப்பா என்று கூறினார். புதிய ஆத்திச்சூடி, சுயசரிதை முதலானவற்றையும் தெய்வம் பாடல்களையும் படைத்தார்.

கண்ணன்பாட்டு, பாஞ்சாலி சபதம், குயில் பாட்டு ஆகிய முப்பெரும் பாடல்கள் பாரதி படைத்த சுவைமிக்க முக்கனிகளாகும். கண்ணனைப் பல கோணத்தில் ஆராய்ந்து பக்தியை வெளிப்படுத்தும் ஓர்



https://t.me/tnpscfree

இனிய நூல் கண்ணன் பாட்டு. பாரதத்தின் முக்கிய கட்டம் ஒன்றினைப் புதிய நோக்கில் காலச் சூழ்நிலைக்கேற்றவாறு பாடியது பாஞ்சாலி சபதம் என்னும் குறுங்காவியம். தத்துவக் கருத்துகள் நிரம்பிய கற்பனைக் கதையோவியம் குயில் பாட்டு. இம்மூன்றும் பாரதியின் கவிமகுடத்தில் பதிக்கப்பட்டுள்ள வைரக் கற்களாகும். இது பொறுப்பதில்லை தம்பி, எரிதழல் கொண்டுவா கதிரை வைத்திருந்தான் அண்ணன் கையை எரித்திடுவோம்' என்ற வீமனுக்குக் கட்டுண்டோம் பொறுத்திருப்போம் காலம் மாறும் என்று வில்லிசயன் பதில் கூறும் இடம் பாஞ்சாலி என்ற நெஞ்சைத் தொடுவ தாகும்.

பாரதியார் பல தலைப்புகளில் கலைகளைப் பற்றியும், மாதரைப் பற்றியும், வேறுபல செய்திகளைப் பற்றியும் கட்டுரைகளைத் தீட்டியுள்ளார். சந்திரிகையின் கதை, சின்ன சங்கரன் கதை, நவதந்திரக் கதைகள் முதலிய கதை களையும், வசன கவிதைகளையும் பாரதி படைத்துள்ளார். எளிய நடையில் பாமரரும் அறியும் வகையில் சிந்து, கண்ணி இசைப் பாடல்கள், நாட்டுப்புற மெட்டுகள் ஆகியவற்றில் பாரதி பாடிய மக்கள் மனத்தைக் கவர்ந்தார். பாட்டுக்கொரு புலவன் பாரதி' என்று இவர் பாராட்டப் பெற்றுள்ளார்.

## 2. பாரதிதாசன்

1897-ஆம் 17891ஆம் ஆண்டு புதுச்சேரியில் பிறந்தவர் பாரதிதாசன்; இவரது இயற்பெயர் கனகசுப்புரத்தினம் என்பது. 'எங்கெங்கு காணினும் சக்தியடா - தம்பி, எழுகடல் அவள் வண்ண மடா' என்று பாரதியார் கட்டளையிட்டவுடன் பலர் முன்னிலையில் பாடிய பாடல், அவரைச் சிறுவயதிலேயே பெருங்கவிஞர் ஆக்கியது என்பதைக் காட்டுகிறது. பல செய்யுள் நூல்களையும், நாடகங்களையும் எழுதியுள்ளார் பாரதிதாசன். அழகின் சிரிப்பு, குடும்ப விளக்கு, தமிழியக்கம், பாண்டியன் பரிசு, எதிர்பாராத முத்தம், குறிஞ்சித் திட்டு, கண்ணகி புரட்சிக் காப்பியம், மணிமேகலை வெண்பா முதலிய பல கவிதை நூல்களைப் படைத்துள்ளார். இரணியன், நல்ல தீர்ப்பு, கற்கண்டு, சேரதாண்டவம், பிசிராந்தையார், சௌமியன் முதலிய நாடக நூல்களைத் தீட்டினார். தனிக் கவிதைகளையும் சிறிய கதைப் பாடல் களையும் பாரதிதாசன் கவிதைகள்' என்ற தலைப்பில் மூன்று தொகுதிகளாக வெளியிட்டுள்ளார். கைம்மை மணம், சீர்திருத்தத் திருமணம், குடும்பக் கட்டுப்பாடு, சாதிக் கொடுமை, சமயச் சழக்கு பெண் கல்வி, பெண்ணுரிமை எனப்பல **பிரச்சனைகளையும் தம் கவிதைக**ளில் ஆய்ந்து விடை தந்துள்ளார். சுவைமிக்க எளிய கவிதை களைப் படைத்த பாரதிதாசன், தமிழ் மக்களால் பாவேந்தர்' என்றும், புரட்சிக் கவிஞர்' என்றும் போற்றப் படுகின்றார். குயில்' என்னும் ஏட்டைச் சிறப்பாக நடத்தினார். தமிழுக்கு அமுதென்று பேர் - இன்பத் தமிழெங்கள் உயிர்க்கு நேர்'', எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு', 'கனியிடை ஏறிய சுவையும், மத ஓடத்தில் ஏறிய மாந்தரே' முதலிய பல இனிய பாடல்கள் எங்கும் ஒலிப்பன.

"வாடாத பூப்போன்ற மங்கை நல்லாள்
மணவாளன் இறந்தால் மணத்தல் தீதோ
பாடாத தேனீக்கள் உலவாத் தென்றல்
பசியாத நல்வயிறு பார்த்த துண்டோ?"

என்று கைம்மை மறுமணம் குறித்துப் பாடுகின்றார் பாரதிதாசன். 'அழகின் சிரிப்பு மிகச் சிறந்த இயற்கை வருணனைப்பாடல்களின் தொகுப்பாகும். இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞர் பாரதிதாசன் என்பதை இவரது நூல்கள் பறை சாற்றுகின்றன.

## 3. கவிமணி

https://t.me/tnpscfree



1876ஆம் ஆண்டு தேரூரில் பிறந்தவர் தேசிக விநாயகம் பிள்ளையவர்கள். 'தேவி', 'கவிமணி' என்று அன்பாக அழைக்கப்பட்டவர். மலரும் மாலையும்' இவரது கவிதைகளின் தொகுப்பு ஆகும். தேவியின் கீர்த்தனைகள் இசைப்பாடல்களின் தொகுதி. 'நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மியம்' நகைச்சுவை மிக்க கவிதை நூல். குழந்தைகளுக்காக மிகப் பல கவிதைகளை எழுதியுள்ளார். தமிழில் முதல் குழந்தைக் கவிஞர்' இவர் என்று கூறுவது பொருத்தமாகும். ஆனால், கவிமணி மொழிபெயர்ப்பு நூல்கள் செய்வதில் சிறந்து விளங்கினார் என்று கூற இடம் உள்ளது.

எட்வின் ஆர்னால்டு எழுதிய திலைட் ஆஃப் ஏசியா' என்ற நூலை ஆசிய ஜோதி' என்ற தலைப்பிலும், பிட் ஜெரால்டு ஆங்கிலத்தில் செய்த உமர்கய்யாமின் பாரசீகக் கவிதைகளை 'உமர் கய்யாம் பாடல்கள்' என்ற தலைப்பிலும் மிகச் சிறப்பாகத் தமிழாக்கியுள்ளார் கவிமணி.

'வெய்யிற் கேற்ற நிழலுண்டு; வீசும் தென்றற் காற்றுண்டு;
கையிற் கம்பன் கவியுண்டு; கலசம் நிறைய மதுவுண்டு;
தெய்வ கீதம் பலவுண்டு, தெரிந்து பாட நீயுண்டு;
வையம் தருமிவ் வளமன்றி வாழும் சொர்க்கம் வேறுண்டோ ?

என்பது மொழிபெயர்ப்பாக அமைந்ததென்று கூறமுடியாதவாறு, இயல்பாகவே அமைந்துள்ள திறம் கண்டு மகிழலாம்.

'மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா' என்று பெண்ணின் பெருமையைக் கவிமணி பாடுகிறார்.

'உள்ளத் துள்ளது கவிதை – இன்பம்
உருவெடுப்பது கவி
தெள்ளத் தெளிந்த தமிழில் – உண்மை
தெரிந்துரைப்பது கவிதை'

என்பது கவிதை பற்றிய கவிமணியின் கொள்கை. இது அவர் கவிதைகளுக்கு முற்றிலும் பொருந்துவதாகும்.

### 4. நாமக்கல் கவிஞர்

பாரதி, தேசியக் கவிஞர், பாரதிதாசன் புரட்சிக் கவிஞர் கவிமணி குழந்தைக் கவிஞர், நாமக்கல்லர் காந்தீயக் கவிஞர். அவனும் அவளும்' என்னும் காவியம் புகழ் மிக்கதாகும். "மானென அவளைச் சொன்னால் மருளுதல் அவளுக்கில்லை" என்று தொடங்கும் பாடல் சுவைமிக்கது. 'தமிழன் என்றோர் இனமுண்டு, தனியே அவற்கொரு குணமுண்டு' என்ற பாடலும், 'கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது' என்ற பாடலும் இவருக்குப் புகழ் தேடித் தந்த தனிப்பாடல்களாகும். 'மலைக்கள்ளன்' என்ற நாவலை எழுதினார் இக்கவிஞர் தமிழன் இதயம், இலக்கிய இன்பம், தேமதுரத் தமிழோசை முதலிய பல கட்டுரை நூல்களை இவர் எழுதியுள்ளார். என் கதை' என்ற தலைப்பில் தம் வரலாற்றைச் சுவைபடக் கூறியுள்ளார் நாமக்கல் கவிஞர். 'தமிழனென்று சொல்லடா! தலை நிமிர்ந்து நில்லடா!' என்று பெருமையுடன் கூறி, உணர்ச்சியூட்டிய பெருங் கவிஞர் இவர்.

### 5. மற்ற கவிஞர்கள்

இந்த நான்கு பெரும் கவிஞர்களையடுத்துப் பலர் கவிதைத் துறையில் மிக்க ஆர்வத்துடன் ஈடுபட்டனர். முன்னோடிகளின் எழுச்சிமிக்க கவிதைகள் அடுத்து வந்தவர்களுக்கு ஊக்கமூட்டின. 'எமக்குத் தொழில் கவிதை இமைப் பொழுதும் சோராதிருத்தல்', 'பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திடல் வேண்டும்' என்றெல்லாம் பாரதியார் கூறியது போலத் தம் வாழ்வையே கவிதைக்கெனப் பிற்காலக் கவிஞர் சிலர் ஈந்துள்ளனர்.



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



கவியோகி சுத்தானந்த பாரதியார், பாரதசக்தி மகாகாவியம்' என்னும் நூலையும், வேறு பல கவிதை நூல்களையும் எழுதினார். ஆனால் அவர் கவிதைகள் பிறர் கவிதைகளைப் போல் எந்தவொரு கிளர்ச்சியையும் ஏற்படுத்தவில்லை.

உவமைக் கவிஞர் சுரதா, 'தேன்மழை', 'நீரும் நெருப்பும்', 'சுவரும் சுண்ணாம்பும்', 'துறைமுகம் முதலிய நூல்களை எழுதினார்; இவர் சுரதா', 'இலக்கியம்', 'காவியம்' என்னும் கவிதை இதழ்களே நடத்தினார். இவர் கவிதைகள் உவமைகளின் சிறப்பாலும், செறிவான கருத்துகளாலும், இனிய நடையாலும் மக்கள் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தன. 'அமுதும் தேனும்', 'மணக்க மாட்டேன்', 'வன்னி வீரன் குறுங்காவியம்', 'தாய் நாடே, நெப்போலியன் கடிதம் முதலியன புகழ்வாய்ந்தவை. பல சொல் விளக்கக் கவிதை களையும் சுரதா எழுதியுள்ளார்.

கவிஞர் கண்ணதாசன் திரைப்படத் துறையில் மிகுந்த செல்வாக்குப் பெற்றவர். மாங்கனி , ஆட்டனத்தி - ஆதி மந்தி முதலிய சிறு காவியங்களைப் படைத்துள்ளார். திரைப் படப் பாடல்கள் கண்ணதாசன் கவிதைகள்' என்ற பெயரில் ஐந்து தொகுப்புகளாக வெளிவந்துள்ளன. எளிமையும் இனிமையும் வாய்ந்தன இவர் கவிதைகள்.

கிவா, ஜகந்நாதன், ('ஜோதி') அ. சீனிவாசன் (நாணல்'), மீப். சோமசுந்தரம் (சோமு'), தூரன் கம்பதாசன், தமிழழகன், கோமுகி வேலன், என்.எஸ். சிதம்பரம், கொத்தமங்கலம் சுப்பு, திரலோக சீதாராம் ஆகியோர் நல்ல கவிதைகளைப் படைத்துள்ளனர்.

முடியரசன், வாணிதாசன், பொன்னடியான், குருவிக் கரம்பை ஏ. சண்முகம், மின்னூர் சீனிவாசன், வல்லம் வேங்கடபதி, பொன்னிவளவன், கருணானந்தம், முருகு சுந்தர, தமிழன்பன் ஆகியோர் பாரதிதாசன் பரம்பரையில் வந்த சிறந்த கவிஞர்கள் ஆவார்.

### 6. புதுக் கவிதைகள்

தமிழ்க் கவிதையுலகில் அண்மைக் காலத்தில் ஒரு புதிய எழுச்சி உண்டாகியுள்ளது. கவிதைக்கு யாப்புத் தடையாக இருத்தல் கூடாது கருத்துகளே இன்றியமையா தவை' என்ற கொள்கையில் பலர் கவிதை எழுத முற்பட்டனவர். வேகமாக இந்த இயக்கம் வளரத் தொடங்கியது. சரியோ தவறோ இம் மரபைப் பின்பற்றிப் பலர் தம் கவிதை நூல்களை வெளியிட்டுள்ளனர். ந. பிச்சமூர்த்தி (குயிலின் சுருதி) இவ்வியக்கத்தின் முன்னோடி. எஸ். வைத்தீஸ்வரன் (உதய நிழல்), ஞானக்கூத்தன் (அன்று ஞாயிற்றுக் கிழமை), சி.சு. செல்லப்பா ஆகியோர் தொடக்க காலத்தில் புதுக் கவிதைகள்' எழுதினர். கலைஞர் கருணாநிதியின் தலைமையில் 'கவியரங்க' நிகழ்ச்சிகள் நடைபெறத் தொடங்கிய பின், பலர் இத்துறையில் யாப்பிலாக் கவிதையினைப் புனைந்து பாடத் தொடங்கினர். ஈரோடு தமிழன்பன் (தமிழன்பன் கவிதைகள், தோணி வருகிறது) அப்துல் ரகுமான் (பால் வீதி), மீரா (**கனவுகள்** + கற்பனைகள் = காகிதங்கள்), மி. மேத்தா (கண்ணீர்ப் பூக்கள்), கணியூர் மதுநெஞ்சன் முதலானோர் புதுக் கவிதை நூல்களை வெளியிட்டுள்ளனர். கவியரசு நா. காமராசன் இவர்களில் குறிப்பிடத்தக்கவர். இவரது கருப்பு மலர்கள்' புகழ் பெற்ற ஒரு கவிதைத் தொகுப்பு. 'தாஜ்மகாலும் ரொட்டித் துண்டும்', 'சகாராவைத் தாண்டாத ஒட்டகங்கள்' முதலிய பல புதுக் கவிதைத் தொகுப்புகளைப்படைத்துள்ளார். புதிய சிந்தனைகளும், சம்உடமைக் கொள்கைகளும், எழுச்சிமிக்க கருத்துக்களும், நல்ல ஓட்டமும் உடையவை இவருடைய கவிதைகள்.

மரபுக் கவிதையும் புதுக் கவிதையும் இன்று தமிழுலகில் போட்டி போட்டு வளர்ந்து வருகின்றன. இதற்கிடையில் கண்ணதாசன், புலவர் புலமைப்பித்தன், வாலி, பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம், மருதகாசி முதலா னோரின் திரைப்படக் கவிதைகளும் சிறந்த எழுச்சியைக் கவிதையுலகில் விளைவித்தன; விளைவிக்கின்றன.



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



நூற்றுக்கணக்கான இளங்கவிஞர்கள் இன்று தமிழ்க் கவிதைகளைப் படைத்து வருகின்றனர். ஒளிமிக்க எதிர்காலம் கவிதைக்கு உறுதியாக உள்ளது எனலாம்.

**நாவல் இலக்கியம்**

**முதல் நாவல்கள் (1879-1913)**

தமிழ் நாவல் இலக்கியத்திற்கு நூறு ஆண்டு கால வரலாறும் வளர்ச்சியும் உண்டு. 1865இல் முதல் முதலாக இந்தியாவில் பங்கிம் சந்திரர் 'துர்கேச நந்தினி' என்ற நாவலை வங்க மொழியில் எழுதினார். அடுத்து 1879-இல் மாயூரம் வேதநாயகம் பிள்ளை எழுதிய பிரதாப முதலியார் சரித்திரம் தமிழ்மொழியில் தோன்றிய முதல் நாவலாகும்.

வேதநாயகம்பிள்ளை ஆங்கில இலக்கியம் படித்தவர். நீதிபதியாக வேலை பார்த்தவர் பல்வேறுபட்ட நாகரிகம் பண்பாடு உடைய மக்களோடு பழகினார். அவர் பெற்ற அனுபவங்களைப் பிற மக்களுக்கும் உணர்த்த விரும்பி அந்த நோக்கில் நாவல் எழுதத் தொடங்கினார். நீதிகளை அறிவுறுத்துவதே அவர் எழுத்தின் நோக்கமாகும். தமக்கு இருந்த பண்பாட்டுப்பிடிப்பு ஒரு காரணம் உயர்ந்த பண்பாடுகள் இறவாத் தன்மை கொண்டவை, அவை உலகிற்கே சொந்தம்; எனவே எல்லோரும் அவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும் என்ற நோக்கிலேயே எழுதினார். பெண்கல்வி, பாலிய விவாகம், அளவான உணவு போன்ற நீதிகளை வலியுறுத்த 'சுகுண சுந்தரி' நாவல் எழுதினார். பின்னர்த் தோன்றிய சமுதாய குடும்ப நாவல்களுக்கு இந்த நாவல் வழிகாட்டியாக அமைந்தது.

1893இல் வெளியிடப்பட்ட ராஜம் அய்யரின் கமலாம்பாள், சரித்திரம்' நாவல் இலக்கியத்தில் திருப்பத்தை ஏற்படுத்திய நாவலாகும். திறனாய்வு அடிப்படையில் முதல் இடம் பெறும் நாவலும் இதுவே ஆகும். வாழ்க்கை விளக்கங்கள் தத்துவங்களாக இந்நாவலில் இடம் பெற்றுள்ளமை சிறப்பாகும்.

1893-இல், திரிசிரபுரம், சி.வை. குருசாமி சர்மா பிரேம் கலாவத்யம்' நாவலை எழுதினார். பண்பாட்டு விளக்கத் தைக் கதைமாந்தரோடு இணைத்து, செயல்களால் பண்பாட்டை விளக்கும் உத்தி முறையை முதன்முதலாக இவர் வற்புறுத்திக் காட்டினார்.

1898-இல், மாதவய்யா பத்மாவதி சரித்திரம்' நாவலை எழுதினார். தொடர்ந்து, 'விஜய மார்த்தாண்டம்', 'முத்து மீனாட்சி', 'பாரிஸ்டர் பஞ்சநாதம்' ஆகிய நாவல்களை வெளியிட்டார். முத்து மீனாட்சி ' விதவை மறுமணத்தை நடத்திக் காட்டுவதாக எழுதப்பட்ட நாவலாகும்.

1900 - இல் 'தீனதாயாளு ' நாவலைப்பண்டிதந்டேச் சாஸ்திரி எழுதினார். காதல் விவகாரங்கள் இல்லாத கதைகளை எழுதினார். மாற்றாந்தாய்க் கொடுமையை விளக்கி, மாற்றாந்தாயை நல்ல தாயாகப் படைத்துக் காட்டினார். புதுமைப் பெண்ணை நாவலில் முதன் முதலாக இவரே படைத்துக் காட்டினார். திக்கற்ற இரு குழந்தைகள்', 'தலையணை மந்திரோப் தேசம், மாமி கொலுவிருக்கை', கோமளம் குமரியானது ' இவர் எழுதிய பிற நாவல்களாகும். 1894-இல் இவர் எழுதிய தானவன் என்ற நாவலே முதல் துப்பறியும் நாவலாகும்.

1903- இல் தொடங்கிய தி.ம. பொன்னுசாமிபிள்ளை 'காமாட்சி', ஞானாம்பிகை', சிவஞான' போன்ற நாவல் களை எழுதினார்.

**சமுதாய விமரிசன நாவல்கள் (1904-1940)**



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



செந்தமிழ் நடையில் மதிவாணன்' என்ற கதையை வி. கோ. சூரியநாராயண சாஸ்திரி 1887-இல் எழுதினார். இதே **காலத்தவரான மறைமலையடிகள்** 1911-இல் ஓர் ஆங்கில நாவலைத் தழுவிச் செந்தமிழ் நடையிலேயே 'குமுதவல்லி' நாவலை எழுதினார்.

**தழுவல் நாவல்கள்**

18-ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இங்கிலாந்தில் ஜிடபிள்யு.எம். ரெயினால்ட்ஸ் என்பவர் தமது லண்டன் வீக்லி மிசலினி' என்ற வாரப் பத்திரிகையில் தொடர்ந்து நாவல்களை எழுதி வெளியிட்டார். அவை புத்தகங்களாகப் பல நாடுகளுக்குச் சென்றன. இந்தியரும் அவரது நாவல்களை ஆர்வத்துடன் படித்தனர். பரபரப்பும், மர்மமும் நிறைந்த அவரது நாவல்களை மொழிபெயர்த் தும், தழுவியும் பல நாவல்களை எழுதினர். இலட்சக்கணக் கான மக்களை அவை கவர்ந்தன. ஆரணி குப்புசாமி முதலியார், வடுவூர் துரைசாமி ஐயங்கார், கோதை நாயகியம்மாள் மூவரும் முன்னோடிகள்.

1911 இல் ஆரணி குப்புசாமி முதலியார் 'மதனகாந்தி', இரத்தினபுரிரகசியம் போன்ற துப்பறியும் கதைகளை எழுதினார். இவரைத் தொடர்ந்து வடுவூர் துரைசாமி ஐயங்கார் மேனகா', கும்பகோணம் வக்கீல் போன்ற நாவல்களை எழுதினார். அடுத்து வை. மு. கோதை நாயகி அம்மாள் சண்பக விஜயம்' என்ற சிறந்த நாவலை எழுதினார். இவர் 100க்கு மேற்பட்ட நாவல்களை எழுதியுள்ளார்.

மர்ம நாவல் எழுதி மக்களைக் கவர்ந்தவர் டி எஸ்.டி. சாமி ஆவர். கருங்குயில் குன்றத்துக் கொலை' ரசிகர்களின் பெருமதிப்பைப் பெற்ற நாவலாகும்.

**சீர்திருத்த நாவல்கள்**

நாட்டு விடுதலை காரணமாகச் சமுதாயச் சிந்தனைகள் நாவலில் இடம் பெற்றன. சீர்திருத்தம், விதவை மறுமணம், போன்ற நாவல் கருவாயின. பாரதியின் சின்னச் சங்கரன் கதை', ஆறில் ஒரு பங்கு' , 'ஸ்வர்ண குமாரி' ஆகியவை அளவில் சிறியதெனினும் குறிப்பிடத் தக்கவை. பாரதியின் சந்திரிகை', வரா.வின் சுந்தரி அல்லது அந்தரப் பிழைப்பு இரு நாவல்களும் சிந்தனை சீர்திருத்தம், மொழிநடை சொல்லும் முறை ஆகியவற் றால் தனிச்சிறப்புடையன.

**தேசியமும், காந்தியமும்**

1927-இல் கே.எஸ். வேங்கடரமணி எழுதிய 'முருகன் ஓர் உழவன்' புரட்சிப் படைப்பாகும். 1930 இல் இவர் எழுதிய தேசபக்தன் கந்தன்' மகாத்மா காந்தியின் மறு உருவமான பாத்திரப் படைப்பு நாவலாகும். 1934 இல் சீத்தாராமய்யா எழுதிய காட்டூர் ராமு' உழவின் பெருமை, கிராம வாழ்க்கை, தன்னம்பிக்கை ஆகியவற்றை உணர்த்தும் சிறப்புகள் கொண்ட நல்ல படைப்பாகும்.

1925-30 வரை திருவி.க. எழுதிய 'ஏமாங்கதத்து இளவரசன்', 'காந்திமதி அல்லது காந்தார நாட்டுக் கட்டழகி' என்ற இரு நாவல்களும் செந்தமிழ் நடையில் எழுதப்பட்டவை

1925-35 வரையிலான காலத்தில் மு.ராஜீ செட்டியார் ஞான காந்தி', 'காதலி', 'நாகரிகம்', 'சந்திரி சேகரி' ஆகியவை புரட்சி நோக்கங் கொண்ட படைப்புகளாக அமைந்தன.

1931இல் சகோதரி கிரிஜா எழுதிய மோகன சுந்தரி அல்லது சமூகத் தோற்றம்' பிராமண விதவைக் கொடுமை, பாலிய விவாகம், பகுத்தறிவின்மை ஆகிய கொடுமைகளை உரத்த குரலில் பேசிய நாவலாகும். 1936இல் மூவலூர் ஆ. ராமாமிர்தத்தம்மாள் எழுதிய 'தாசிகள் மோசவலை அல்லது மதிபெற்ற மைனர்' என்ற நாவல் பகுத்தறிவுச் சிந்தனை இயக்க நாட்டத்தைக் கொண்டு எழுதப்பட்டது.



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



**கல்கியின் தோற்றம்**

கல்கியின் முதல் நாவல் விமலா ' அடுத்த இவரது 'கள்வனின் காதலி', கதை எழுதுவோரிடையே ஒரு திருப்பத்தை உண்டாக்கிய நாவலாகும். பின்னர் 1950களில் கல்கி அலையோசை', 'சிவகாமியின் சபதம்', 'பார்த்திபன் கனவு', 'பொன்னியின் செல்வன்' போன்ற மக்களைக் கவர்ந்த படைப்புகளைப் படைத்தார். 1939 இல் எழுதிய தியாக பூமி' காந்தியப் பின்னணி கொண்டு எழுதப்பட்டது.

'கல்கி' பத்திரிகை நாவல் போட்டிகளை நடத்தி எழுத்தாளர்களை ஊக்குவித்தது. முதல் நாவல் போட்டி யில் குகபரியை எழுதிய சந்திரிகா', வெங்கடாசலம் எழுதிய 'மஞ்சுளா' என்ற இரு நாவல்களும் பரிசைப் பகிர்ந்து கொண்டன.

சுத்தானந்த பாரதியார், ஏழையபடும் பாடு', 'இளிச்சவாயன்' என்ற இரண்டு நாவல்களைப் பிரஞ்சு மொழியின் தழுவலாக எழுதினார். நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை ' மலைக்கள்ளன்' நாவலை 1943-இல் எழுதி வெளியிட்டார்.

**பிறமொழித் தாக்க நாவல்கள்**

1906-இல் மகேசகுமார சர்மா ஆனந்த மடம்' என்ற பக்கிம் சந்திர சட்டோபாத்தியாவின் வங்க மொழி நாவலை மொழிபெயர்த்தார். 1907-இல் டி.வி. கிருஷ்ண சாமி சாஸ்திரி 'பரிமளாவையும், 1911-இல் சி.டி வெங்கடாச்சாரியார் துர்க்கேச நந்தினி'யையும் தமிழாக் கினர். வரா. பக்கிம் சந்திரரின் ஜோடி மோதிரங்களைத் தமிழாக்கினார். 1936-இல் தநா. குமார ஸ்வாமியால் விஷவிருக்ஷம்' மொழிபெயர்க்கப்பட்டது. இவரே தாகூரின் அனைத்துப் படைப்புகளையும் தமிழாக்கியுள்ளார்.

1940-இல் மராத்திய நாவல்கள் தமிழாக்கம் பெற்றன. விஸ. காண்டேகரின் 'கருகிய மொட்டு', 'கிரௌஞ் சவதம்' போன்ற நாவல்களை க.ஸ்ரீ ஸ்ரீ. தமிழில் வழங் கினார். தமிழ் நாவல் இலக்கியத்திற்கு இவரது மொழி பெயர்ப்புப் புத்துணர்ச்சி ஊட்டியது எனலாம்.

**வரலாற்று நாவல்கள்**

கல்வி அவர்களைத் தொடர்ந்து சாண்டில்யன், சோமு, கோவி மணிசேகரன், ஜெகசிற்பியன் அகிலன், நா. பார்த்தசாரதி, விக்கிரமன் போன்றவர்கள் தமிழில் வரலாற்று இலக்கிய **நாவல்களைப் படைத்தனர்.**

சாண்டியல்யனின் ஜீவபூமி', மலைவாசல்', ஜலமோகினி', 'கன்னிமாடம், கடல் புறா' இராஜ முத்திரிரை யும், அகிலனின் '**வேங்கையின் மை**ந்தன்' ஜெகசிற்பியனின் நந்திவர்மன் காதலி', 'மகர யாழ்' ஆலவாய் அழகன்' நாவல்களும், நாபா வின் 'பாண்டிமாதேவி', 'மணிபல்லவம்' நாவல்களும், விக்கிரமனின் 'நந்தி புரத்து நாயகி', உதயசந்திரன் பாண்டியன் மகுடம்', 'பாராந்தகன் மகள் ஆகிய நாவல்களும், அரு. இராம நாதனின் 'வீரபாண்டியன் மனைவி', அசோகன் காதலி' நாவல்களும் சிறந்த வரலாற்று நாவல்களாக அமைந்துள்ளன.

**பல ஆயிரக்கணக்கான வாசகர்களைத் தன்பால் ஈர்த்து** வைத்திருந்த பெருமை இந்த வரலாற்று நாவல் களுக்கு உண்டு.

**நாட்டு விடுதலை**

1950-இல் ராஜவேலு எழுதிய 1942' நாவல் வெளிவந்தது. தம் சொந்தச் சிறை வாழ்க்கையை இதில் எழுதியுள்ளார். 1951இல் நாரண துரைக்கண்ணன் சீமான் சுய நலம்' என்ற நாவலை நேர்மைக்கும் சூழ்ச்சிக்கும் நடக்கும் போராட்டத்தை வைத்து எழுதினார். 1966- இல் வல்லிக்கண்ணன் வீடும் வெளியும்' என்ற **நாவலை** எழுதினார். 1969இல் சிதம்பர சுப்பிரமணியன் மண்ணில் தெரியுது வானம்'



https://t.me/tnpscfree

எழுதினார். நா. பார்த்தசாரதியின் ஆத்மாவின் ராகங்கள்' ராச நல்லபெருமாளின் கல்லுக்குள் ஈரம்' இரண்டும் நல்ல படைப்புகள்.

**சமூதாய நாவல்கள் (1940-1979)**

கிருத்திகாவின் புகை நடுவில் ' (1953), சத்யமேவ (1971), இரண்டும் அரசியல், சமூகப் போலிகளைச் சாடுவன ஆகும். ஜெகசிற்பியனின் 'ஜீவகீதம்' (1967), மண்ணின் குரல்' இந்திரா பார்த்த சாரதியின் 'தந்திர பூமி' (1969) 'சுதந்திர பூமி' (1970), இரண்டும் வேகமாக மாறிவரும் சமூதாயத்தைப் பிரதிபலிப்பன. நாயா வின் சத்திய வெள்ளம்' (1973) மாணவர் உலகையும், ராஜம் கிருஷ்ணனின் வேருக்கு நீர்' (1973) பொதுமக்கள் குழப்பத்தையும், 'ரோஜா இதழ்கள் ' தமிழக அரசியல் நிலைமைகளையும், ரா.க. நல்லபெருமாளின் போராட்டங்கள்' உள்ளவனுக் கும் இல்லாதவனுக்கும் இடையே நடைபெறும் போராட் டத்தையும் விளக்குகின்ற நாவல்களாகும். ராஜம் கிருஷ்ணனின் 'அமுதமாகி வருக மலைவாழ் மக்கள் வாழ்வைப் பிரதிபலிக்கும் சிறந்த படைப்பு. உமாசந்திரனின் 'முள்ளும் மலரும்', க. சுப்பிரமணியத்தின் வேரும் விழுதும் மக்களின் பாதிப்பையும், சமூக மாற்றத்தையும் காட்டுவன ஆகும்.

**சமூக மாற்றங்கள்**

டி செல்வராஜின் மலரும் சருகும்' (1966) பொருளாதாரப் பின்னணியில் சமூகத்தின் போலி வாழ்க்கையைப் பிரதிபலிப்பது. இந்திரா பார்த்தசாரதியின் குருதிப்புனல் கம்யூனிஸ்ட் வாழ்வை மேற்கொண்டோர்க்கு ஏற்படும் இன்னல்களைக் காட்டும் நாவல் ஆகும். சமூகச் சூழ்நிலையை அகிலனின் புதுவெள்ளமும்', சத்தியத்திற்கும் பொய்க்கும் நடக்கும் போராட்டத்தை ந பாவின் 'நெஞ்சக்கனல் ' நாவலும் விளக்குகின்றன.

**பெண், காதல்**

அகிலனின் பெண் பாவை விளக்கு, சித்திரப் பாவை 'எங்கே போகிறோம்?' நாவல்களும், டாக்டர் முவவின் நெஞ்சில் ஒரு முள்', கயமை', அல்லி' ஆகிய நாவல்களும் பெண்களின் வாழ்க்கை நிலைகளைக் கொண்டு காதலின் அடிப்படையில் படைக்கப்பட்ட நாவல்களாகும்.

**குடும்பம்**

புதுமைப்பித்தனின் சிற்றன்னை , 'கடிவாளம்', சி.சு. செல்லப்பாவின் 'ஜீவனாம்சம் ஆர்வியின் அணையா விளக்கு, பி எஸ். ராமையாவின் பிரேம்ஹாரம் ஹெப்சிபா ஜேசுதாசனின் 'புத்தம் வீடு', நீல பத்மனா பனின் தலைமுறைகள்', கோவி மணிசேகரனின் 'ஒரு தீபம் ஐந்து திரிகள்' யாவும் குடும்ப நிலைகளைத் தனித்தன்மையோடு விளக்க எழுந்த நாவல்களாகும்.

**தனிமனிதன்**

கா நா. சுப்பிரமணியனின் பொய்த்தேவு', சி.என். அண்ணாதுரையின் 'ரங்கோன் ராதா', சிதம்பர சுப்பிர மணியனின் இதயநாதம், ஆர்வியின் மனித நிழல்கள் நடப்பியல் தன்மைகளோடு தனிமனிதனின் சிறப்பான அம்சங்களையும் வைத்து எழுதப்பட்ட நாவல் களாகும்.

**பாலுணர்ச்சி**

உளவியல் அடிப்படையில் அண்மைக் காலத்தில் பாலியல் தொடர்பான நாவல்கள் எழுந்துள்ளன. தி. ஜானகிராமனின் 'அம்மா வந்தாள்', 'அடி' முதலிய நாவல்கள் பாலுணர்வு அடிப்படையில்

https://t.me/tnpscfree



எழுந்தவையாகும். ஈழத்து எழுத்தாளர் பொன்னுத்துரையின் தீ ' ஆண்பெண்பாலுணர்வை மானிடவியல் நோக்கில் கூறிச் செல்கின்ற நாவலாகும்.

**வர்க்க இனப் போராட்டங்கள்**

தொ.மு. சிதம்பர ரகுநாதனின் 'பஞ்சும் பசியும்' நெசவுத் தொழிலாளாரின் வாழ்க்கைப் போராட்டத்தை விளக்கும் நாவல். டி செல்வராஜின் தேநீர் தேயிலைத் தோட்டத் தொழிலாளரைப் பற்றிய நாவல், ஐசக் அருமைராஜனின் 'கீறல்கள்', ராஜம் கிருஷ்ணனின் 'குறிஞ்சித்தேன்' கொத்தமங்கலம் சுப்புவின் 'தில்லானா மோகனாம்பாள்' போன்றவை தனிப்பட்ட இனத்தாரைப் பற்றிய சிறப்பான விளக்க நாவல்களாகும்.

ர.சு.நல்லபெருமாளின் எண்ணங்கள் மாறலாம், ஆ. மாதவனின் புனலும் மணலும் தனிப்பட்ட தொழில் செய்வோரின் மனப்போராட்டங்களை வெளிப்படுத்தும் நாவல்களாகும்.

**புதுமைப் பொருள் நாவல்கள்**

பொதுமக்களுக்குப் பழக்கப்படாத கருப் பொருள் களை வைத்து நாவல்கள் படைக்கப்படுகின்றன. சிசு. செல்லப்பாவின் 'வாடிவாசல்' மிருகத்தையும் மனிதனை யும் பற்றியது. சுந்தர ராமசாமியின் ஒரு புளியமரத்தின் கதை மரத்துக்குச் சிறப்பிடம் தருவது. சா. கந்தசாமியின் சாயா வனம்' காட்டின் சிறப்பைக் கூறுவது . டேவிட் சித்தய்யாவின் 'சிறைச்சாலை என்ன செய்யும்' வன்முறைப் போராட்டத்தைப் பற்றியது. பொன்னீலனின் 'கரிசல்' நெல்லை மாவட்ட மண்ணின் மணத்தோடு விவசாயத் தொழிலாளார் முதலாளி போராட்டம் பற்றியது. நீல. பத்மனாபனின் பள்ளி கொண்ட புரம்', கிருத்திகாவின் புதிய கோணங்கி', ராஜம் கிருஷ்ணனின் 'முள்ளும் மலர்ந்தது', கி. ராஜநாராயணனின் கோபல்ல கிராமம்' ராசியின் 'நனவோட்டங்கள்' யாவும் தனக்கெனத் தனித் தன்மையோடு **அமைந்த நாவல்களாகும்.**

**ஒரு சில ஆசிரியர்கள்**

டாக்டர் மு.வ. அவர்கள் பதின்மூன்று நாவல்களைப் படைத்தார். அவையனைத்தும் குடும்ப வாழ்வையும், சமுதாயச் சிக்கல்களையும் கருவாகக் கொண்டவை. 'செந்தாமரை', 'கள்ளோ காவியமோ', அகல் விளக்கு', கரித்துண்டு', 'பெற்ற மனம்', 'மண்குடிசை' முதலியன அவர் எழுதிய நா**வல்களுள்** குறிப்பிடத்தக்கவையாகும்.

அகிலன் 'பெண்', சிநேகிதி', 'நெஞ்சின் அலைகள்', 'பாவை விளக்கு', 'சித்திரப்பாவை', பால்மரக் காட்டினிலே', 'எங்கே போகிறோம்' முதலிய தலைசிறந்த நாவல்களைப் படைத்துள்ளார் தாம் எழுதிய சித்திரப்பாவைக்காகஞானபீடப் பரிசினைப் பெற்றுள்ளார்.

ஜெயகாந்தன் தமிழ் நாவல்களுள் புதுமையும், இலக்கியத் தரமும், கருத்தோட்டமும் மிக்க நாவல்களை எழுதி வருபவர். சில நேரங்களில் சில மனிதர்கள், பாரிசுக்குப் போ', சினிமாவுக்கு போன சித்தாளு ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள், உன்னைப் போல் ஒருவன்' அட சும்மாகிடபுள்ளே ', 'ஊருக்கு நூறுபேர்', 'ஜெயஜெய சங்கரா' முதலிய நாவல்களை இவர் எழுதியுள்ளார். மேலும் தொடர்ந்து எழுதும் தலை சிறந்த எழுத்தாளர் இவர்.

நா.பார்த்தசாரதி கல்கியின் பாணியைப் பின்பற்றி எழுதுபவர். சத்திய வெள்ளம், ஆத்மாவின் ராகங்கள், நெஞ்சக்கனல், நெற்றிக்கண் முதலிய சமுதாய விமரிசன நாவல்களை எழுதியுள்ளார். இலட்சிய மாந்தர்களைக் கதாநாய**கர்களாகக்** கொண்ட குறிஞ்சி மலரும்', 'பொன் விலங்கும்' இவருடைய அற்புதப் படைப்புகள் ஆகும்.



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



நீல. பத்மனாபனின் 'உறவுகள்', 'தலைமுறைகள்', 'பள்ளி கொண்டபுரம்' ஆகியவை சிறந்த நாவல்களாகும். இராஜம் கிருஷ்ணனின் குறிஞ்சித் தேன்' படகர் வாழ்க்கையைச் சித்தரிப்பதாகும். இலட்சுமியின் பெண் மனம்' ரகுநாதனின் 'பஞ்சும் பசியும்' ராசியின் 'நனவோட்டங்கள் ' ஜானகிராமனின் 'அம்மா வந்தாள் முதலியன குறிப்பிடத்தக்க சிறந்த நாவல்களாகும்.

**முடிவுரை**

நாவல் இலக்கியம் பொழுது போக்கு அம்சமாக மட்டுமன்றி, மக்களின் இன்றியமையாத தேவைகளில் ஒன்றாகவே மாறிவிட்டிருப்பதை இன்று காணலாம். இலக்கிய மேன்மையோடும், சிந்தனை மெருகோடும் இன்று நாவல்கள் படைக்கப்படுகின்றன.

## 9. தமிழ்ச் சிறுகதை இலக்கியம்

ஆங்கில இலக்கியத்தில் நாவல் இலக்கியம் தோன்றி நூற்றாண்டுகளுக்குப் பின்னரே சிறுகதை என்ற புதிய இலக்கியவகை தோன்றியது. அதைப் போலவேதமிழிலும் நாவல் இலக்கியம் ஏறத்தாழ அரை நூற்றாண்டுக்குப் பின்னரே சிறுகதை தோன்றியது.

தமிழ்ச் சிறுகதை தொடக்கத்தில் தமிழ்க்கருவையும் ஆங்கில உருவையும் கொண்டிருப்பதாகக் கூறுவர். உயிராக உள்ளத்து உணர்வும், அதனைத் தாங்கிவரும் உருவமாக மொழியும் அமைந்து, வாழ்வு பெறுகின்ற இலக்கியமே சிறுகதை இலக்கியம்.

**சிறுகதையின் தோற்றம்**

18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வீரமாமுனிவரின் 'பரமார்த்த குரு கதை தமிழில் உரைநடையில் படைப்பு இலக்கியம் தோன்றக் காரணமாய் அமைந்தது. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வீராசாமி செட்டியாரின் 'விநோதரச மஞ்சரியும், தாண்டவராய முதலியார் மொழி பெயர்த்த பஞ்ச தந்திரக் கதையும் ' சிறுகதையின் தோற்றத்திற்கு ஒரு வாய்ப்பினை அமைத்துக் கொடுத்தன எனலாம்.

19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் பத்திரிகைகள் சிறுகதைகளை வெளியிட ஆர்வமூட்டின. சிறுகதைகள் - பத்திரிகைகளுக்காக எழுதப்பட்டன.

**தொடக்க காலம்**

பத்திரிகைகளில் வெளியிடத் தக்க அளவில் சிறுகதை எழுதியவர்களில் சிறப்பானோர் சுப்பிரமணிய பாரதியார், அ. மாதவையா, வவே.சு. ஐயர் ஆவர்.

**பாரதியார்**

பாரதியார் சிறுகதைகளை எழுதியும் தாகூரின் சிறு**கதைகளை** மொழிபெயர்த்தும் சிறுகதை இலக்கியத் தொண்டாற்றியுள்ளார். 'பாரதியார் கதைகள்', 'பாரதியார் மொழி பெயர்த்த தாகூர் சிறுசதைகள்' இரண்டு தொகுப்பும் சிறப்புடையன. பாரதியின் கதைகள் கட்டுக்கதைகளே.

**மாதவையா**

மாதவையா சிறுகதைகள் குசிகர் குட்டிக் கதைகள்' என்ற பெயரில் தொகுத்து வெளியிடப்பட்டுள்ளன. ஆங்கிலத்தில் எழுதி 'இந்து' பத்திரிகையில் வெளியிடப் பட்டுப் பின்னர் அவரது 'பஞ்சாமிர்தம்' என்னும் பத்திரிகையில் தமிழில் வெளியாயின. சமூகச் சீர்த்திருத்தத் தையே முக்கிய இலக்காகக் கொண்டு எழுதியவர். பெண்ணின் இழிநிலை, வரதட்சணை பற்றியேஅதிகமாக எழுதினார்.



https://t.me/tnpscfree

**வ.வே.சு. ஐயர்**

வரகனேரி வேங்கட சுப்பிரமணிய ஐயரின் கதைகளே சிறுகதை உருவத்தையும், உள்ளடக்கத்தையும் செறிவாக அமைத்துக் காட்டுவனவாய் முதன் முதலாக அமைந்தன. சிறுகதை இலக்கிய முன்னோடி என்ற பெயரைப் பெறுவதற்கும் அதுவே காரணம் எனலாம்.

இவரது எட்டுக்கதைகள் மங்கையர்க்கரசியின் காதல்' என்ற தொகுப்பு நூலாக வெளிவந்துள்ளது. ஐயரின் 'குளத்தங்கரை அரசமரம்' என்ற சிறுகதை குறிப் பிடத்தக்கது. தமிழ் நாட்டுப் பிரச்சனையையும், வாழ்வு முறையையும் எடுத்துக்காட்டுவதாக இக்கதை அமைந்துள்ளது.

காந்திய நெறி, இந்தியச் சீர்திருத்தம், ஆங்கில எதிர்ப்பே அவரது கதைப் பொருளாயின. ஐயர் 'தேச பக்தன்' என்னும் பத்திரிகையை வெளியிட்டுச் சமுதாயத் தொண்டும், இலக்கியப் பணியும் புரிந்தார்.

**காந்தியுகம்**

காந்திய எண்ணமும், எழுச்சியும் காரணமாகப் பல பத்திரிகைகள் தோன்றின. சாதி ஒழிப்பு, ஒற்றுமை, தொழிற் சங்கத் தேவை, கதர் அணிதல், கட்குடி மறியல், அந்நியத் துணி எதிர்ப்பு ஆகியன கருப்பொருளாய் அமைந்து பல கதைகள் எழுதப்பட்டன.

தமிழில் இப்பணியைச் செய்த பத்திரிகைகள் பல. டாக்டர் வரதராஜுலு நாயுடுவின் தமிழ்நாடு', திரு.வி.க.வின் தேசபக்தன்', 'நவசக்தி', டி எஸ். சொக்கலிங்கத்தின் காந்தி', சங்கு கணேசனின் சுதந்திரச் சங்கு', சீனிவாசனின் மணிக்கொடி', எஸ்.எஸ் வாசனின் ஆனந்த விகடன்' ஆகியனவும், 'ஹனுமான்', 'பாரத மணி', ஆனந்த போதினி', சுதேசமித்திரன்', கலைமகள்' ஆகியனவும் சிறுகதை இலக்கியத்திற்குப் பெருந்தொண்டாற்றிய பத்திரிகைகள் ஆகும்.

சிறுகதை பரவலான வளர்ச்சிக்குக் கல்வி அவர்களுக் கும் ஆழமான வளர்ச்சிக்கு மணிக்கொடிக் குழு எழுத்தாளர்களும் காரணமாவர். இவர்களை ஒட்டியே சிறு கதை இலக்கியம் வளர்ச்சியும் வாழ்வும் பெற்றதெனலாம்.

**கல்வி (1899-1954)**

திரு.வி.க.வின் 'நவசக்தியிலும் ' ராஜாஜியின் 'விமோ சனத்திலும், ஆனந்தவிகடனிலும் ' பணியாற்றி விட்டுப் பின்னர் 1941-இல் 'கல்கி' பத்திரிகையைத் தொடங்கினார். கல்கியின் படைப்பும், விமரிசன நோக்கும் வெளியாயின.

'சாரதையின் தந்திரம்', வீணை பாவானி', ஒற்றை ரோஜா', 'மாடத்தேவன் சுனை', 'கணையாழியின் கனவு' அமர வாழ்வு' என்ற பெயரில் கல்கியின் கதைகள் தொகுப்பாக வெளிவந்துள்ளன.

தானே கதை கூறும் முறையில் கதைகளை எழுதியவர். மிக நீண்ட அளவினது இவரது கதைகள் வாசகர் கூட்டம் பற்றிய சமுதாய உணர்வோடே இவர் கதைகளை எழுதினார் என்பர்.

**மணிக்கொடிக் காலம்**

தமிழ்ச் சிறுகதை வளர்ச்சியிலும், வரலாற்றிலும் இக்கால எழுத்தாளர்களுக்குச் சிறப்பிடமுண்டு.

1933-இல் மணிக்கொடி' பத்திரிகை தோன்றியது. இதன் பொறுப்பாசிரியர் கே. சீனிவாசன், வ.ரா துணையிருந்தார். பி.எஸ். ராமையா ந. பிச்சமூர்த்தி, பெகோ. சுந்தரராஜன், புதுமைப்பித்தன் ஆகியோர் மணிக்கொடியில் எழுதினார்.

https://t.me/tnpscfree



1934-இல் காந்தி' எனும் பத்திரிகையுடன் மணிக் கொடி இணைக்கப்பட்டது. இவ் இணைப்பால் அதன் இலக்கிய வாழ்வு பாதிக்கப்பட்டது. 1936-இல் நிறுத்தப்பட்டது. மீண்டும் 1937-இல் வெளிவந்தது.

மணிக்கொடியின் இரண்டாவது கட்ட எழுத்தாளர்கள் குப.ராஜகோபாலன், சி.சு. செல்லப்பா, இளங்கோவன், சிதம்பர சுப்பிரமணியம், பி.எம். கண்ணன் மௌனி முதலியோர் ஆவர்.

தமிழின் சிறந்த இலக்கியச் சிறுகதைகள் என்று பாராட்டப்படும் பல சிறுகதைகளைத் தமிழுக்குத் தந்த பெருமை மணிக்கொடிக் குழு எழுத்தாளர்களுக்கு உண்டு.

**புதுமைப்பித்தன் (1906-1948)**

புதுமைப்பித்தனுக்குத் தமிழ் இலக்கிய வரலாற்றில் என்றும் நிலையான இடம் உண்டு. புனைகதை மூலம் சிறப்பாகச் சிறுகதை மூலம் இலக்கிய வளம் சேர்ந்தவர் இவர்.

1906-இல் சொ. விருத்தாச்சலம் என்கிற புதுமைப் பித்தன் பிறந்தார். வ.வே.சு. ஐயரால் தொடங்கப்பட்ட சிறுகதை மரபு புதுமைப்பித்தனின் தமிழாகி, தமிழ் உரைநடையின் சிகரமாகி, சிறுகதை இலக்கியத்தையே பெருமைப்படுத்தியது எனலாம்.

தமிழ் இலக்கிய மரபினைச் சிறுகதையுடன் இணைத் தார். அன்று இரவு', 'சாப விமோசனம்', அகல்யை ', 'கபாடபுரம்' ஆகிய கதைகளை வரலாற்று உணர்வோடு சிறுகதையாக்கினார்.

விக்கிரமாதித்தன் கதை போன்ற பொருள் மரபோடு 'திருக்குறள் குமரேசம் பிள்ளை ', 'புதிய கந்த புராணம்', 'கட்டிலை விட்டிறங்காக் கதை களைப் படைத்தார்.

தமிழ் இலக்கியச் சம்பவங்களைப் புதிய கண்ணோட்டத்தில், லக்கியச் செம்மையைப் புதுமுறையில், சொல் நடையைப் புதிய மெருகோடு அமைத்துப் பல சோதனை களைச் சிறுகதைகளில் செய்து பார்த்தவர் புதுமைப்பித்தன்.

நினைவோட்ட உத்தியைக் கையாண்டு சிறுகதை எழுதத் தொடங்கியவரும் இவரே. 'கயிற்றரவு', காஞ்சனை', சுப்பையா பிள்ளையின் காதல்கள்' இத்தன்மையன.

வாழ்வின் யதார்த்த நிலையை உணர்த்தவும், கதைப் பொருளைச் சுவைபடக் கூறவும் பேச்சுத் தமிழைத் தன் படைப்பில் கையாண்டார். மண்ணின் மணத்தை முதன் முதலில் வெளிப்படுத்திய பெருமையும் இவரைச் சாரும்.

இவரது கதைகளில் நாடகப் பண்பும் உண்டு. 'கடவுளும் கந்தசாமிப்பிள்ளையும்', 'மனக்குகை ஓவியங்கள்', மகாமசானம்', 'இது மிஷின் யுகம்', 'துன்பக் கேணி' ஆகிய கதைகள் இத்தன்மை கொண்டவை.

**கு.ப.ராஜகோபாலன்**

1907- இல் பிறந்தார். 43-ஆவது வயதில் காலமானார் , புனர் ஜன்மம், கனகாம்பரம், காஞ்சனமாலை ' என்ற தொகுதிகளில் இவரது கதைகள் வெளியாகியுள்ளன.

சிறுகதை எழுதுவதோடு விமரிசனம் செய்தல், புதுக்கவிதை எழுதுதல் ஆகிய பணிகளையும் செய்தவர். அடிமறந்தால் ஆழம்', அர்ச்சனை ரூபாய் நடுத்தெரு நாகரிகம்' போன்ற சிறுகதைகள் இவரது மேன்மைப் படைப்புகளாகும்.



https://t.me/tnpscfree

கு.பரா. பெரும்பாலும் பாலுணர்வு முனைப்பு நிலை களின் அடி ஆழத்தை வைத்தே சிறுகதைகளை எழுதினார் என்பர். சிறுக்தையின் உருவ அமைப்பில் இவரது பணி குறிப்பிடத்தக்கதாகும்.

**ராஜாஜி**

ராஜாஜி தமிழ் இலக்கியத்தைப் போராட்டக் காலப் பிரச்சார சாதனமாகவே கையாண்டவர். அவரது கதை களும் அத்தகையனவே. அரசியற் **கொள்கைகளை மக்களிடையே** பரப்புவதை வெகு ஆர்வமாகக் கொண்டிருந்தவர்.

'கூனி சுந்தரி', 'முகுந்தன், அறியாக் குழந்தை ', 'தேவனை ' முதலியன நல்ல சிறுகதைகளாகும். இறுதிக் காலத்தில் குழந்தைகளைக் கவரும் வண்ணமே எழுதினார்.

**கா.நா. சுப்பிரமணியம்**

வரலாற்று மூலங்களிலிருந்தே தமக்கு வேண்டிய கருவை எடுத்துக்கொண்டு கதை எழுதியவர். இவரது சிறுகதைகள் பொருளால் சிறப்புப் பெற்றன என்பர்.

**எஸ்.வி.வி.**

நகைச்சுவையை அடிப்படையாகக் கொண்டு, சிறுகதை எழுதியவர் இவர். வாழ்க்கையோ வாழ்க்கை ' என்பது இவரது சிறுகதைத் தொகுதி. இவரையொட்டி நாடோடி, தும்லன் ஆகியோர் எழுதினர்.

**பி.எஸ். ராமையா**

மத்தியதர மக்களின் வாழ்க்கையின் அடிப்படை உணர்வு **வேட்கைகளை வைத்துக் கதைகளை விளக்கி**யவர். அடிச்சாரைச் சொல்லியழு' இவரது நல்ல கதைகளுள் ஒன்று. குங்குமப் பொட்டுக்குமாரசுவாமி' இவரது பலகதைகளின் ஒரே நடமாடும் மாந்தராவார்.

**மௌனி**

'அழியாச் சுடர்' என்ற பெயரில் இவரது கதைகள் வெளியாகியுள்ளன. குறிப்பிட்டவொரு சூழ்நிலையில், மனதில் **தோன்றும் நினைவுகளைக்** கூறுவனவாகவே இவரது கதைகள் **அமைந்துள்ளன.**

**லா.ச. ராமாமிர்தம்**

மௌனியின் உத்தி முறையை இவரும் கையாண்டு சிறுகதை எழுதினார் என்பார். 'பாற்கடல்', இவரது நல்ல சிறுகதை . 'ஜனனி', இதழ்கள் ' இவரது சிறுகதைத் தொகுப்புகள் இவரது நடை தனித்தன்மையது.

**சுதந்திரத்திற்குப் பின்னர்**

அரசியல், பொருளாதாரம், சமூகம் ஆகிய வாழ்க்கையின் கூட்டு நிறுவனங்கள் கதைப் பொருளாயின. தேசிய உணர்வோடு, பிரதேச உணர்வும், இன உணர்வும், மொழியுணர்வும் வளரத் தொடங்கின.

வடக்கும், தெற்கும் என்ற உணர்வு அவ்வக் காலக் கண்ணோட்டத்தோடு இலக்கியத்தில் இடம் பெற்றன. தமிழகத்தைப் பொருத்தவரை தமிழினம், தமிழ்மொழி என்ற நிலையில் சுயமரியாதை இயக்கமும், தனித்தமிழ் இயக்கமும் தலை தூக்கின.

பண்பாட்டுத் துறையில் இத்தாக்கம் பரவலாயிற்று. தி.மு.க. தோற்றமும், அதனடியாய்ப் பிறந்த எழுத்துப் போக்கும் இலக்கியத்தில் பல மாற்றங்களுக்குக் காரணமாயின.

அரசியலுக்காக இலக்கியமும், கலைத்துறையும் பிரச்சாரக் கருவியாயிற்று. இந்தப் பின்னணியில் எழுதப்பட்ட சிறு**கதைகள்** வரலாற்றுக்குறிப்புகளைத்தாங்கியுள்ளவை என்பது ஆய்வுக்குரிய ஒன்று .

சி.என். ஏவின் சிறுகதைகள்' தொகுதியும் கலைஞரின் ஓடிப் போனவள்' தொகுதியும் இதற்குச் சான்று பகர்கின்றன. தி.மு.க.வின் இயக்க வளர்ச்சி வாசகர் வட்டத்தைப் பெருக்கிற்று. டி.கே. சீனிவாசன் குறிப்பிடத்தக்க படைப்பா**வியாவார்.**

**புதிய யுகம்**

**1948-** முதல் **1953-** வரை நீடித்த தி.மு.க. பிரச்சார எழுத்து வன்மை காரணமாகப் பிற எழுத்தாளர் நிலைபதுங்கிப் போவதாக அல்லது ஒதுக்கப்பட்டதாகவே இருந்தமை காணமுடிகிறது. இத்தேக்க நிலையைத் தகர்த்த வர்களில் விந்தனும், அகிலனும் சிறப்பிடம் பெறுகின்றனர்.

**விந்தன்**

தொழிலாளியாக வாழ்ந்து எழுத்தாளராக வளர்ந்தவர். இலக்கியப் பொருளில் புதிய அம்சங்களைப் புகுத்தியவர்.

ஏழைகளைப் பற்றியும், சமுதாய அடித்தள மக்களைப் பற்றியும், கிராம மக்களைப் பற்றியும் அதிகமாக அக்கறையோடு எழுதியவர், ஏழை படும் இன்னலும், அதற்கான காரணமும் விந்தன் கதைகளில் சிறப்பிடம் பெறுகின்றன.

'முல்லைக் கொடியாள்' என்ற சிறுகதைத் தொகுதி இவரது சிறந்த படைப்புகளைக் கொண்டது. ஆபாசமின்றி ஆண், பெண் உறவைச் சிந்திரிப்பதிலும் வல்லவர். வஞ்சகப் புகழ்ச்சி இவருக்குக் கைவந்த கலை.

**அகிலன்**

ஆண், பெண் உறவில் காதலுக்குரிய இடத்தை மையமாகக் கொண்டே அதிகமான கதை எழுதியவர்.

'சக்தி வேல்', நிலவினிலே', அமராவதிக்கரையில்', ஆண் பெண்', செங்கரும்பு, வழி பிறந்தது', 'மின்னுவதெல் லாம்', 'குழந்தை சிரித்தது ' இவரது கவிதைத் தொகுப்புகள் ஆகும். மிகச் சிறந்த நாவலாசிரியராக இன்று விளங்குகிறார்.

**புதிய மாற்றம்**

**1953-**க்குப் பின்னர் தமிழ் இலக்கியத்தில் இருவேறு சக்திகள் தோன்றின. சாந்தி, சரஸ்வதி, தாமரை போன்ற பத்திரிகைகள் தோன்றின. ஒரு புதிய யுகம் பிறந்தது.

கு. அழகிரிசாமி, ந. பிச்சமூர்த்தி, தி. ஜானகிராமன் செயகாந்தன், சுந்தர ராமசாமி இதில் சிறப்பிடம் பெறுகின்றனர்.

**கு. அழகிரிசாமி**

மணிக்கொடியின் இறுதிக்கால எழுத்தாளர் மரபு இலக்கிய வளமும், செம்மையும் உடையவர். இவரது அழகிரிசாமிகதைகள்', 'சிரிக்கவில்லை , காலகண்டி, தெய்வம் பிறந்தது, தவப்பயன்', 'கற்பக விருட்சம்', 'வரப் பிரசாதம்', 'இரு சகோதரிகள்' ஆகிய தொகுதிகள் குறிப்பிடத்தக்கன.

https://t.me/tnpscfree



பாத்திரத்தின் விளக்கத்தை நகைச்சுவையோடு சித்திரிப்பதில் இவரது தனித்தன்மை துவங்குகிறது. இவரது கதைகளால் சிறுகதை வளர்ச்சியின் தனித்தன்மை காணமுடிகிறது.

**தி. ஜானகிராமன்**

தஞ்சை மண்ணின் மணமும், அம்மக்களின் பேச்சு ஓட்டமும் இவரது **கதைகளின் உயிர்நாடி எனலாம். நகைச்சு**வையும், வஞ்சகப் புகழ்ச்சியும் இவரது எழுத்தில் சிறப்பாக உண்டு. கழுகு, நானும் எம்டனும்', 'சந்துவின் முடிவு' சிலிர்ப்பு', 'சிவப்பு ரிக்ஷா', 'பரதேசி வந்த பின்', நடேசண்ணா , அதிர்வு' ராவணன் காதல் ஆகியவை குறிப்பிடத்தக்க கதைகளாகும்.

**புதிய பரம்பரை**

இலக்கிய மறுமலர்ச்சிக்கு உருவம் கொடுத்துச் சிறப்பித்தவர்களே இவர்களாவர். சமூக முன்னேற்றத்திற்கு இலக்கியத்தின் மூலம் பெரும் பணியைச் செய்ய முடியும் என்று துணிவோடு எழுத்தில் செயல்பட்டவர்களைப் புதிய பரம்பரையினாகக் கொள்ளலாம். முற்போக்குக் கொள்கைக்கு, தொமு.சி.ரகுநாதனின் சாந்தி' வ.விஜயபாஸ்கரனின் சரஸ்வதி', பொதுவுடைமைக் கட்சி நடத்தி வரும் தாமரை ஆகியவை சிறந்த களங்களாக அமைந்தன.

சிறுகதை வரலாற்றில் சிறப்பிடம் பெறுகின்ற பலர் இப்பரம்பரையினரே. செயகாந்தன், சுந்தர ராமசாமி, வையவன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

**செயகாந்தன்**

செயகாந்தனது கதைகள் வாழ்க்கையில் ஏற்றத் தாழ்வுகளை, மனித உணர்ச்சி நிலைகளைப் பாலுணர்ச்சி நிலையில் வைத்துப் பார்ப்பதாகவே அமைந்தன சாளரம்', தாம்பத்தியம், போர்வை, 'தர்க்கம்', ஆகியன தக்க சான்றுகளாகும். வாய்ச்சொற்கள்', 'இருளைத் தேடி' ஆகிய கதைகள் செயகாந்தனின் படைப்பு ஆளுமைக்குச் சான்றாவன.

ஒரு பிடி சோறு, இனிப்பும் கரிப்பும், மேற்கும் கிழக்கும்' இவரது சிறுகதைத் தொகுதிகள். இலக்கியத் தரமான சிறுகதைப் படைப்புகள் மக்களால் விரும்பப்படும் நிலையை உருவாக்கிய பெருமை செய்காந்தனைச் சாரும். யதார்த்தத்தை இலக்கியத்தில் புகுத்தி, மக்களின் மனதை ஆட்சி செய்த சிறுகதை மன்னனாகவும் இவர் விளங்குகின்றார்.

**சுந்தர ராமசாமி**

புதுமைப்பித்தன் வழிச் சிறுகதை எழுத்தாளர் என்ற பெருமைக்குரியவர். அக்கரைச் சீமையிலே', பிரசாதம்' என்பன இவரது சிறுகதைத் தொகுதிகள்.

**நா. பார்த்தசாரதி**

அகிலனின் கதைகளைப் போல அமைந்தவை இவரது **கதைகள் என**லாம். வலம்புரிச் சங்கு', 'மூவரை வென்றான், காலத்துக்கு வணக்கம்', வேனில் மலர்கள்' இவரது சிறந்த கதைகள் ஆகும்.

**பெண் எழுத்தாளர்கள்**

ஆண், பெண் மன நிலைகளைக் குடும்பச் சூழலில் மிக ஆழமாக எழுதியவர்கள், ஆண்களைவிடப் பெண் எழுத் தாளர்களே குறிப்பிடத்தக்கவர் எனலாம். குறிப்பிடத் தக்கவர் சூடாமணி, மற்றும் சிவகாமசுந்தரி, சிவசங்கரி, லட்சுமி, ராஜம் கிருஷ்ணன் ஆகியோர் சிறப்பிடம் பெறுகின்றனர்.



https://t.me/tnpscfree

**இன்றைய எழுத்தாளர்கள்**

சமுதாய உணர்வோடு கதை எழுதுகிறவர்களில் சு.சமுத்திரம், வண்ண நிலவன், வண்ணதாசன், பொன்னீலன், செயந்தன் ஆகியோர் இன்று பாராட்டத்தக்க படைப்பு களைத் தந்து வருகின்றனர்.

**சில பகுப்புகள்**

ராஜாஜி கல்கி, அறிஞர் அண்ணாதுரை கலைஞர் கருணாநிதி, சுந்தானந்த பாரதியார், ஜீவா, வணங்காமுடி, புதுமைப்பித்தன் ஆகியோர் சிறந்த சமூக சீர்த்திருத்தக் கதைகளைப் படைத்தவர்கள்.

**பாலிய விவாகம், மறுமணம்**

கல்வி, அண்ணா , புதுமைப்பித்தன், எஸ். ஏ. பி. குறிப்பிடத்தக்கவர்.

**சமுதாயச் சீர்கேடு**

விந்தன், இராதாமணாளன், செகசிற்பியன் கலைஞர் கருணாநிதி, தில்லை வில்லாளன் - குறிப்பிடத்தக்கவர்கள்.

**தத்துவங்கள்**

லா.ச. ராமாமிர்தம், அவை. சுப்பிரமணியம், ரா.ஸ்ரீதேசிகன், சு. குஞ்சிதபாதம், கேதாரி - குறிப்பிடத் தக்கவர்கள்.

**காதல் கதைகள்**

அரு. இராமநாதன், தில்லை வில்லாளன், டி.கே. சீனிவாசன், ப. கண்ணன், இராதாமணாளன் குறிப்பிடத் தக்கவர்கள்.

**ஆண் பெண் மனநிலைகள்**

கு.பரா, லட்சுமி, அண்ணா , எல்லார்வி, மாயாவி.

**குழந்தை மனங்கள்**

தூரன், பி.எஸ்.ராமையா, டாக்டர் மு.வ, ராஜம் கிருஷ்ணன், கி.வா.ஜகந்நாதன்.

**வரலாற்றுப் பின்னணி**

குபரா. கலைஞர் கருணாநிதி, புஷ்பாத்துரை சுப்பிரமணியன், புதுமைப்பித்தன், எம்.ஏ. வஹாப், எம்.எஸ், சுப்பிரமணிய அய்யர், அரு. இராமநாதன் ஏகே. வேலன், கநா. சுப்பிரமணியன், கோவி. மணிசேகரன்.

**நகைச்சுவை**

வரா, கல்வி, நாடோடி, எஸ்.விவி, சுகி. சுப்பிரமணியன், புதுமைப்பித்தன், விந்தன், தேவன்.

**சிறுவர் கதை**

தெய்வசிகாமணி, வை. கோவிந்தன், தங்கமணி, வள்ளியப்பா, சோனா, ஆர்.வி. முத்து, கண்ணன், குஞ்சிதம், வடிவேலு, சூடாமணி.

https://t.me/tnpscfree



**பொழுதுபோக்கு**

மாயாவி, எல்லார்வி, ஆர்வி, அகிலன், ராஜம் கிருஷ்ணன், டி எம். கண்ண ன், பூவை ஆறுமுகம், ரா.கி.ரங்கராஜன், வை ரங்கராஜன்.

**உளவியல் கதைகள்**

'ஜீவா', கு. அழகிரிசாமி, அரு. இராமநாதன் சோமு, வேம்பு, இராமாமிர்தம்.

**துப்பறியும் கதைகள்**

சிரஞ்சீவி, ஆர். எஸ். மணி, வாசவன், கே எஸ். பாலசுப்பிரமணியன், சேரன், வேலன், செகசிற்பியன்,

**சமுதாயப் பார்வை**

செயகாந்தன், சு. சமுத்திரம், பொன்னீலன், செயகாந்தன், வண்ண நிலவன், வண்ணதாசன்.

**முடிவாக**

தமிழ்ச் சிறுகதை இலக்கியம் காலந்தோறும் கருத்து வெளிப்பாட்டுக் கருவியாகப் பயன்பட்டிருப்பதை வரலாற்று நோக்கில் நம்மால் காண முடிகிறது. சிறுகதை இலக்கியம் தர்க்கரீதியான வளர்ச்சியை, சமுதாய வளர்ச்சியோடு இயைந்தே பெற்றிருப்பதையும் காணலாம்.

மனிதனின் சிறப்பு நிலைகளை மட்டுமல்லாது முழுமையும் வெவ்வேறு கோணங்களில் சிறுகதை நமக்குக் காட்டுவதை உணரலாம். வளர்ந்து வரும் நாகரிகப் பண்பு மனித வாழ்வுக்கும், மனித மனத்துக்கும் மதிப்புக் கொடுத்து வருவதை இன்று **கவனிக்க மு**டிகிறது.

இந்நிலையில் இனியும் சிறுகதை இலக்கியம் புதுப் பொலிவோடும், போராட்டக் குரலோடும் சிறந்து வெளிப்படும் எனக் கருத இடமுண்டு.

## 10. நாடக இலக்கியங்கள்

இயல், இசை, நாடகம் எனத் தமிழ் முத்தமிழாக இயங்கியது. நாடகம் என்பது பழைய காலத்தில் இசைப் பாடலுக்கு இயைய ஆடிய ஆடல்களைக் குறித்தது. இதனைக்கூத்து என்றும், நாடகம் என்றும் குறித்தனர். இக்காலத்தில் தொடர் நிகழ்ச்சிகளைக் கொண்டு ஒரு முழுக் கதையைக் காட்டும் நாடகங்கள் இருப்பது போலச் சங்க காலத்தில் இருந்தன என்று கூறுவதற்கு இல்லை. தொல்காப்பியர் 'நாடக வழக்கும் புலனெறி வழக்கும் என்று இருவகை வழக்குகளைக் குறிப்பிட்டுள்ளார். அவர் குறிப்பிடும் நாடக வழக்கு இக்கூத்துக்களையே குறித்ததாகும். நாடக அரங்குகள் என்று குறிப்பிடப்பட்டவையும் நாட்டிய அரங்குகளே எனலாம். கூத்துகளாக இருந்தவை, பின் இசை நாடகங்களாக மாறின. உரைநடை நாடகங்கள் இருபதாம் நூற்றாண்டிலேயே முழுமை பெற்றன எனக் கூறலாம்.

**சிலப்பதிகாரம்**

சிலப்பதிகாரம் கூத்துகளையும், ஆடல் வகைகளை யும் குறிப்பிடுகின்றன. அடியார்க்கு நல்லார் உரை வாயிலாகப் பண்டைக் காலத்துக் கூத்து வகைகளை நாம் அறிய முடிகிறது. குரவைக் கூத்து, வெறியாடல், துணங்கைக் கூத்து, வள்ளிக் கூத்து, கயிற்றாடல் , வேட்டுவவரி, சாக்கைக் கூத்து களி



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



நடனம் (கழாய்க் கூத்து), தோற் பாவைக் கூத்து, விதூடகக் கூத்து, வென்றிக் கூத்து, வசைக் கூத்து, விநோதக் கூத்து முதலிய கூத்து வகைகள் இருந்தமை அறியப்படுகின்றன.

பண்டைத் தமிழகத்து நடனமாந்தர்கள் நாடகமகளிர் என்று குறிப்பிடப்பட்டனர். அவர்கள் பதினொரு வகை ஆடல்களில் வல்லவர்களாக விளங்கினர். இந்த ஆடல்கள் பெரும்பாலும் புராணக் கதைகளைக் கொண்டே அமைக்கப்பட்டவை. அவை அல்லியம், கொடுகொட்டி, குடையாடல், குடம், பாண்டரங்கம், மல்லாடல், துடிக் கூத்து, கடயம், பேடியாடல், மரக்காலாடல், பாவை யாடல் ஆகியவையாம்.

**நாட்டுபுற ஆடல்கள்**

சங்க இலக்கியங்களிலும், தமிழ்க் காப்பியங்களிலும் குறிப்பிடப்படாத பல ஆடல்கள் நாட்டுப்புற மக்க**ளின் வாழ்க்கை** முறையோடு தொடர்பு கொண்டு இன்னும் வாழ்ந்து வருகின்றன. அவைகளும் நாடகவளர்ச்சிக்குப் பெரிதும் துணை செய்கின்றன. அவற்றுள் சிலபின்வருமாறு: கும்மியடித்து ஆடல், ஒயிலாட்டம், பொம்மலாட்டம், பாகவத மேளா, உறுமிக் கோமாளியாட்டம், கரக ஆட்டம், கழியலாட்டம் காவடியாட்டம் முதலியன. இவை **ஆடல் கலைகளையும் இசைக் கலையையும் வளர்த்தன.**

**சோழர் காலம்**

இவ்வாறு கூத்துகளாகவும் ஆடல்களாகவும், நாட்டுப் புறக் கலைகளாகவும் விளங்கிய கூத்து வகைகளே நாடகத் திற்கு வழிகோலின. சோழர் காலத்திலேயே தொடர் நிகழ்ச்சிகளைக் கொண்ட முழுநாடகம் நடிக்கப்பட் டமைக்குச் சான்றுகள் கிடைக்கின்றன. ராஜராஜேஸ்வரி நாடகம் ஆண்டு தோறும் வைகாசி மாதம் நடைபெற்றத் தைக் கி.பி. 984ஆம் ஆண்டு இராசேந்திரன் கல்வெட்டுத் தெரிவிக்கிறது. மற்றும் மற்றொரு கல்வெட்டின் மூலம் திருமூல நாயனார் நாடகமும் ஆரியக் கூத்தும் நடைபெற்ற தாக அறியப்படுகிறது. பூம்புலியூர் நாடகத்தில் நடிப்பதற்காக மானியம் தரப்பட்டது. இதை 1119ஆம் ஆண்டுக் கடலூர் கல்வெட்டுக் கூறுகிறது. இதைப் போன்ற பல கல்வெட்டுச் சான்றுகள் நாடக வளர்ச்சிக்குத் தரப்பட்ட கொடைச் செய்திகளைக் கூறுகிறது.

**நாயக்கர் காலம்**

பள்ளு, குறவஞ்சி முதலிய பாடல்கள் நாடகங்களாக நடிக்கப்பட்டன. இவற்றுள் முக்கூடற்பள்ளும், திருக் குற்றாலக் குறவஞ்சியும், பூபேந்திரக்குறவஞ்சியும் குறிப்பிடத்தக்கவையாகும். இவற்றோடு தஞ்சை மராட்டிய மன்னர்கள் குறவஞ்சி நாடகங்கள் ஊக்கப்படுத்தினர். பொருள் கொடை தந்தனர். நொண்டி நாடகங்களும், குளுவ நாடகங்களும் நடத்தப்பட்டன. நொண்டி நாடகங் களுக்குப் பயன்படுத்தப்பட்ட சிந்து நொண்டிச் சிந்து என்றே பெயர் பெற்றது. தவறு செய்தவன் தண்டிப்படு கிறான். கையோ காலோ இழந்து அவதிப்படும் நிலையே நொண்டி நாடகம் எனப்பட்டது. குளுவன்' என்பவன் தொண்டு செய்யும் **அடியவன். அவன் தன்னை** வெளிப்படுத்திக் கொள்ளும் நாடகம் குளுவநாடகம் என்பதாகும். இவை நான்கும் 18ஆம் நூற்றாண்டில் மிகுதியாக நடிக்கப் பட்டன.

**இசை நாடகங்கள்**

18ஆம் நூற்றாண்டின் இறுதியில் சில இசை நாடகங் கள் தோன்றின. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை அருணா சலக்கவிராயர் எழுதிய இராம நாடகமும், கோபால கிருஷ்ண பாரதியார் எழுதிய நந்தனார் சரித்திரமும் ஆகும்.

**புராண நாடகங்கள்**



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



இந்த இசை நாடகங்களை ஒட்டிப் புராண நாடகங்கள் எழுந்தன. அவையே தெருக் கூத்துகள் எனப்பட்டன. 1967இல் அரங்கப் பிள்ளை அரிச்சந்திர விலாசம் வெளியிட்டார். இசை நாடக வடிவில் மார்க்கண்டேயர் விலாசம், புரூரவ சக்கரவர்த்தி நாடகம், உத்தர ராமாயணம் போன்றவை எழுந்தன. இந்நாடகத்தைக் கட்டியங்காரன் முன்னிருந்து நடத்தினான். **வசன**ங்கள் மிகுதியாக இல்லாததால் அவன் அப்பாத்திரங்களை அறிமுகப்படுத்தினான். அவன் நாடகக் காட்சிகளுக்கு விளக்கம் தந்தான். தெருக்கூத்துகளில் கட்டியங்காரனின் கோமாளித் தனமான பேச்சும் நடிப்பும் நகைச்சுவையைத் தந்தன.

**உரையாடல் நாடகங்கள்**

19-ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்துதான் உரைநடை உரையாடல்கள் கொண்ட நாடகங்கள் நாடக அரங்கில் இடம் பெற்றன. இடையிடையே பாடல்களும் கலந்தன. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை சாரங்கதரா நாடகம், சாவித்திரி, கோவலன், நல்த்தங்காள், வள்ளித் திருமணம் முதலியன.

**மேடை நாடகங்கள்**

1870ஆம் ஆண்டுக்குப் பிறகு தமிழ் நாடகம் பெரிதும் மாற்றம் பெற்றது. மேலை நாட்டு நாடக அமைப்பை ஒட்டி அங்கம், களம் முதலிய உட்பிரிவுகள் ஏற்பட்டன. 1867இல் காசி விசுவநாத முதலியார் டம்பாச்சாரி விலாசம் என்ற நாடகத்தை வெளியிட்டார். அவரே 1868இல் தாசில்தார் நாடகம் என்பதை வெளியிட்டார். இவையே முதன் முதலில் தோன்றிய சமூக நாடகங்கள். 19-ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் தமிழ் நாடகம் முழுவளர்ச்சியை அடைந்தது என்று கூறலாம் பரிதிமாற் கலைஞர், பேராசிரியர் சுந்தரம்பிள்ளை , **சங்கரதாஸ் சுவாமிகள்,** பம்மல் சம்பந்த முதலியார் ஆகியோர் மேலை நாட்டுப் பாணியில் தமிழ் நாடகங்களை அமைத்துத் தந்தனர். நாடகம் எழுதவும் நடிக்கவும் வழிகாட்டும் வகையில் நாடகவியல்' என்ற நாடக இலக்கண நூல் ஒன்றையும், ரூபாவதி, கலாவதி, மான விஜயம் நாடகங்கள் மூன்றையும் பரிதிமாற்கலைஞர் வெளியிட்டார். விபுலாநந்த அடிகள் மதங்க சூளாமணியை வெளியிட்டார்.

**தற்காலத் தமிழ் நாடகங்கள்**

**பம்மல் சம்பந்த முதலியார் (நாடகத் தந்தை)**

இவர் தமிழ் நாடகத் தந்தை என்று பாராட்டப் படுகிறார். தமிழ் நாடகத்தை நவீன நிலைக்குக் கொண்டு வந்தவர் அவரே. இவர் 1891ஆம் ஆண்டு 'சுகுணவிலாச சபை' என்ற நாடகக் குழுவைத் தொடங்கினார். இதில் கற்றவர்கள் பங்கு கொண்டனர். சம்பந்த முதலியார் நாடகங்களை எழுதி வெளியிட்டுள்ளார். அவருடைய முதல் நாடகம் 1891 ஆம் ஆண்டு வெளியான புஷ்ப வல்லியாகும். அவர் எழுதிய மனோகரன்' புகழ் வாய்ந்ததாகும். அவர் பல புராண நாடகங்களை எழுதியதோடு ஷேக்ஸ்பியர் நாடகங்களைத் தமிழ் ஆக்கம் செய்துள்ளார். சமூக நாடகங்கள் எள்ளல் சுவைமிக்கவை. அவற்றுள் குறிப்பிடத்தக்கது சபாபதி'

**சங்கரதாஸ் சுவாமிகள் (நாடக ஆசிரியர்)**

இவர் சுமார் 40 நாடகங்கள் எழுதியுள்ளார். அவர் தனக்கு என்று ஒரு நாடகக் குழுவை அமைத்துக் கொண்டார். அவர் எழுதிய நாடகங்களுள் சில பின் வருமாறு அபிமன்யு சுந்தரி, பவளக்கொடி, கோவலன் சரித்திரம், வள்ளித் திருமணம், சத்தியவான் சாவித்திரி, சதி சுலோசனா, மிருச்ச கடிகம். ரோமியோ ஜூலியட், சிம்பலைன், மணிமேகலை, பிரபுலிங்க லீலை முதலியன. இவற்றுள் சிலமொழிபெயர்ப்பு நாடகங்களும் ஆகும். சிலப்பதிகாரக் கதையை மாற்றி, மாதவியை ஒரு பரத்தை




https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



யாகக் காட்டி மக்கள் வெறுக்கத்தக்க பாத்திரமாக வேண்டுமென்றே அமைத்துள்ளார். மக்களைத் திருத்த வேண்டும் என்பதால் இம்மாற்றம் செய்யப்பட்டது.


To buy this Book Online : https://imojo.in/2mmbx8t

Content of the Book https://iyachamy.com/wp-content/uploads/2020/03/CONTENT-.pdf

தமிழில் ஏப்ரல் மாதத்தில் வெளியிடப்படும்


**பேராசிரியர் சுந்தரம்பிள்ளை (கவிதை நாடகம்)**

தமிழ்க் கவிதை நாடகங்களுள் மிக்க சிறப்பு வாய்ந்தது பேராசிரியர் சுந்தரம்பிள்ளை எழுதிய மனோன்மணீயம் ஆகும். இதுவே பின்னர் வந்த கவிதை நாடகங்களுக்கு முன்னோடி எனலாம். ஆங்கிலத்தில் லிட்டன் பிரபு எழுதிய இரகசிய வழி என்ற கதைப் பாடலின் தழுவலாக இது அமைக்கப்பட்டுள்ளது. இஃது ஓர் இலக்கிய நாடகமாக அமைந்து விட்டது. இதனை ஒட்டிப் புலவர் குழந்தை எழுதிய காமஞ்சரி அமைந்தது. இதுவும் மாத்யூ ஆர்னால்ட் எழுதிய சோரபுரம் ரஸ்டமும்' என்ற கதைப் பாடலைத் தழுவி அமைக்கப்பட்டதாகும்.

**மறைமலையடிகளார் (இலக்கிய நாடகம்)**

காளிதாசனின் சாகுந்தலத்தைத் தமிழில் மொழியாக்கம் செய்துள்ளார். மற்றும் அவர் அம்பிகாபதி என்ற நாடக மும் எழுதியுள்ளார். இவை உரைநடையில் எழுதப்பட்டவை எனினும் இடையில் கவிதைகளைத் தந்துள்ளார்.



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



**கதிரேசன் செட்டியார் (மொழிபெயர்ப்பு நாடகம் )**

கதிரேசன் செட்டியார் மிருச்சகடிகம்' என்னும் வடமொழி நாடகத்தை மண்ணியல் சிறுதேர் என்று மொழிபெயர்த்துள்ளார்.

**எஸ்.டி. சுந்தரம் (நாடகக் கலைஞர்)**

எஸ்.டி. சுந்தரம் சிறந்த நாடகக் கலைஞர். அவர் பல நாடகங்களை எழுதி நடிக்கவைத்தார். அவற்றுள் கவியின் கனவு' சிறப்பு வாய்ந்ததாகும். அவருடைய மற்றொரு சிறந்த நாடகம் 'வீர சுதந்திரம்', மனிதனும் மிருகமும்' என்ற நாடகமும் அவர் எழுதியதே.

**அறிஞர் அண்ணா (சீர்திருத்த நாடகங்கள்)**

அண்ணாவின் நாடகங்கள் சமூக சீர்திருத்தப் போக்கு உடையன. சந்திரோதயம், வேலைக்காரி, ஓர் இரவு, நல்ல தம்பி, காதல் ஜோதி முதலியவை அவர் இயற்றிய நாடகங்களாகும்.

**கலைஞர் கருணாநிதி (சிந்தனை நாடகங்கள்)**

அவர் நாடக உலகில் தனித் தன்மையைக் காட்டி மக்களைக் கவர்ந்தவர். அவர் கதைகள் பல திரையுலகத்தை ஒளி செய்தன 'பராசக்தி' என்ற படம் பெயரும் புகழும் வாய்ந்தது. அதுவே சிவாஜி கணேசன் நடித்த முதல் படமும் ஆகும். அவர் எழுதிய நாடகங்கள் மந்திரி குமாரி, தூக்குமேடை, நச்சுக்கோப்பை, காகிதப் பூ முதலியன.

**கிருஷ்ணசாமிப் பாவலர் (சுதந்திரப் பின்னணி நாடகங்கள்)**

சுதந்திரப் போராட்டப் பின்னணியில் எழுந்த நாடகங்களுள் தெபொ கிருஷ்ணசாமிப் பாவலரின் நாடகங்கள் குறிப்பிடத்தக்கனவாகும். சுதேசி இயக்கமும் கதரின் சிறப்புகளும் விளக்கிக் காட்டப்பட்டுள்ளன. இவை நாட்டுப்பற்றை ஊட்டின. 1930 இல் தேசியக்கொடி' என்ற நாடகம் எழுதப்பட்டது. பதிபக்தி, பம்பாய் மெயில், கவர்னர் கப், வள்ளித் திருமணம் முதலியவை அவர் இயற்றியவையாகும்.

**பி.எஸ். இராமையா (வாழ்க்கை நாடகங்கள்)**

இவர் ஒரு சிறந்த சிறுகதை எழுத்தாளர். எனினும் இவர் படைத்த போலீஸ்காரன் மகள், பூவிலங்கு தேரோட்டி மகன், சறுக்கு மரம் முதலியவை புகழ் வாய்ந்த நாடகங்களாகும்.

**சோ (அங்கதம்)**

அங்கத நாடங்களுள் சோவின் நாடகங்கள் புகழ் வாய்ந்தனவாகும். முகம்மது பின் துக்ளக், யாருக்கும் வெட்கமில்லை, சம்பவாமி யுகே யுகே, கோவாடிஸ், மனம் ஒரு குரங்கு முதலியவை அவர் சிறந்த படைப்பு களாகும். டாக்டர் கோரா எழுதிய சிபாரிசம், பிஞ்சுப்பழம், பெண் சாதி, தன்மானம், யார் கண்டது முதலியவையும் அங்கதப் படைப்புகளாகும். இஃது இருபதாம் நூற்றாண்டின் புதிய போக்காகும்.

**நாடக நடிகர்கள்**

நாடகம் எழுத்தால் மட்டும் சிறப்புப் பெறுவது அன்று, அவற்றை நடிக்கும் நடிகர்களாலேயே அவை பரவுகின்றன. நடிகர்கள் மக்கள் உள்ளத்தைக் கவர்கின்றனர். நாடகவரலாற்றில் சிறப்பிடம் பெற்றவர்கள் சிலர் உள்ளனர். அவர்கள் நாடக வளர்ச்சிக்கு ஆக்கம் தந்துள்ளனர்.



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



டி. கே. எஸ். சகோதரர்கள் நாடகக் கலைக்கு மிகுதியாக உதவியுள்ளனர். 1926இலிருந்து அவர்கள் நாடகம் நடிக்கப்பட்டன. அடுத்ததாகக் குறிப்பிடத்தக்கவர் நகைச்சுவை நடிகர் என்.எஸ். கிருஷ்ணன், 1924இலிருந்து அவர் நாகர் கோவிலில் தொடங்கிய பாய்ஸ் கம்பெனியில் சேர்ந்து தொடர்ந்து நடித்தார். இவருக்குத் துணையாக டி.ஏ. மதுரம் நடித்தார். கே.வி. சுந்தரம்பாள் சிறந்த பாடகியார். எனினும் அவர் வள்ளித் திருமணம், அவ்வையார் முதலிய நாடகங்களில் நடித்தார். சகஸ்ர நாமம் சேவாஸ்டேஜ்' குழு அமைத்து நாடகத்துக்குப் பணி செய்தார். மனோகர் நேஷனல் தியேட்டர் மூலம் நவீன முறையில் சிறந்த காட்சி அமைப்புகளோடு நாடகம் நடத்தி வருபவர். சிவாஜி கணேசன் நாடக உலகில் புகுந்து திரை வானில் மின்னும் நட்சத்திரமாவார். அவர் வசனம்' கவர்ச்சி மிக்கதாகும். எம்.ஜி. ராமச்சந்திரனும் தொடக்கத்தில் நாடகத்திலேயே பங்கு கொண்டார். எம் ஆர். இராதாரத்தக் கண்ணீர் நாடகத்தில் பெரும் புகழ்பெற்றார். சோ ஒரு சிறந்த நகைச்சுவை நடிகரும் ஆவார்.

## 11. இசைத் தமிழ்

இயல், இசை, நாடகம் எனும் முத்திறத்தும் தமிழ் சிறந்து வளர்ந்தது. தமிழர் இசையில் தொன்றுதொட்டு இசைபெற்று வாழ்ந்தனர். பண்ணொடு கலந்து பாடல் பயின்றனர் நிலத்துக்கு ஏற்ற பண்கள் நிலைபெற்று விளங்கின.

நிலத்துக் கருப்பொருள்களில் பறையாழின் செய்திகளைத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். பறையும் யாழும் அவர்கள் பயன்படுத்திய இசைக் கருவிகள், குழலும் யாழும் அவர்களோடு கொஞ்சிப் பேசின. மகளிர் குரலுக்கும் இவற்றை உவமைப்படுத்தினர்.

'நரம்பார்த்தன்ன இன்தீங்கிளவி' - அகம். 109

'குழலினும் இனைகுவள் பெரிது' - ஐங். 306

இயம், கிணை, குளிர், தடாரி, தண்ணுமை, துடி, முழவு, ஆகுளி, முரசு இவை பறைகளின் வகைகளாக விளங்கின. வயிர் நெடுவங்கியம் இவை ஊதுகருவிகள், இளி, கொலை, பாலை, விளர் முதலியன இசை வகைகள்.

'இளிதேர் தீங்குரல் இசைக்கும் அத்தம்' - அகம். 33

என்ற குரலுக்கு அடைமொழி தரப்பட்டது.

**மறைந்த இசை நூல்கள்**

கடல்கோளில் கலந்து மறைந்த கணக்கற்ற இசை நூல்களின் பெயர்களை இறையனார்களவியல் உரை இயம்புகிறது. பெருநாரை, பெருங்குருகு, பாரதீயம், பஞ்சமரபு, தாள சமுத்திரம், இந்திர காளியம், இசை நுணுக்கம், இசைத் தமிழ் தாளவகையோத்து முதலிய இசை நூல்கள் மறைந்தமையை இந்நூல் குறிப்பிடுகிறது.

**சிலம்பில் இசைப் பாடல்கள்**

அரங்கேற்று காதையும், வேனில் காதையும் பண்கள் திறத்தைப் பகுத்துக் காட்டுகின்றன. ஆராய்ச்சியர் குரவையும், வேட்டுவ வரியும் நிலத்து மாந்தரின் இசைப் பாடல்களைக் குறிப்பிடுகின்றன. கானல் வரிப்பாட்டைக் கேட்டு நிலத் தெய்வம் வியப்பெய்தியது நீள் நிலத்தோர் மகிழ்ச்சி அடைந்தனர்.

**சிந்தாமணியும் பிற நூல்களும்**



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



காந்தருவ தந்தையின் கடிமணமே இசைப் போட்டி யின் வாயிலாக நிகழ்கிறது. மதங்கொண்ட யானையை உதயணன் யாழ் இசையால் மயக்கி அடக்குகிறான். தேவோர இசை கோயில் தலங்களை நிரப்பின, தெய்வ கீதங்கள் கோயில்களில் படப்பட்டன.

**நாயக்கர் காலம்**

சந்த இசையால் தமிழைப் பரப்பிய பெருமை அருணகிரி நாதருக்கு உண்டு, இசைச் சந்தம் திருப்புகழைப் பயிலச் செய்தது. தமிழகத்தில் கிடந்த பண் வகைகள் கருநாடக இசை என்ற மாற்றுப் பெயரைப் பெற்றது. இதில் தெலுங்குப் பாடல்களும் இயற்றப் பட்டன. தியாகையர் கீர்த்தனைகள் இசையின் உச்ச நிலையை எட்டிப் பிடித்தன. அருணாசல கவிராயரின் இராம நாடகத்தில் இசையும் நாடகமும் கலந்தன. முத்துத் தாண்டவர் பாடிய கீர்த்தனைகள் தமிழிசையை வளரத் தன. கோபால கிருஷ்ண பாரதியார் பாடிய நந்தனார் சரித்திரம் இசைப் பாடல்களாக உருவெடுத்தன. அண்ணா மலை ரெட்டியாரின் காவடிச்சிந்து புதிய மெட்டுகளைத் தந்தன. இராமலிங்க அடிகள் அருட்பாடல்கள் பண்ணொடு கலந்து இசைத்தன.

**இருபதாம் நூற்றாண்டு**

கவி சுப்பிரமணிய பாரதியாரின் பாடல்கள் இசைப் பாடல்களாக இசைக்கப்பட்டன. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையும் பாரதிதாசனும் இசைத் தமிழைப் பாடி இசைக்கு இன்பம் ஊட்டினர். பெரியசாமித் தூரன் உளுந்தூர்ப்பேட்டை சண்முகம், மின்னூர் சீனுவாசன் முதலியோர் இசைப் பாடல்களைத் தந்தனர்.

**திரைப் பாடல்கள்**

கற்றவரையும் கல்லாதவரையும் மயக்கும் திரைப் தமிழ்ப் பாடல்கள் இருபதாம் நூற்றாண்டுப் புதிய இசைப்பாடல்களாகும். கண்ணதாசன் பாடல்கள் திரைவானில் மின்னி ஒலிக்கின்றன. பட்டுக்கோட்டை கலியாண சுந்தரம் இசைப் பாடலில் புரட்சிக் கருத்துகளைப் புகுத்தினார். கொத்தமங்கலம் சுப்பு, பாபநாசம் சிவன், குயிலன், வாலி, புலமைப்புத்தன், கங்கை அமரன், காமராசன், வைரமுத்து இவர்கள் பாடல்களும் சிறந்த திரைப் பாடல்களாகும்.

**அண்ணாமலை மன்றம்**

தமிழில் இசைப் பாடவேண்டும் என்ற இயக்கத்தைத் தோற்றுவித்துத் தமிழிசைக்குப் புத்துயிர் தந்தவர் இராசா சர். அண்ணாமலை செட்டியார் ஆவார். தேவாரப்பண் ஆராய்ச்சிகள் ஆண்டுதோறும் இம் மன்றத்தில் நடை பெறுகின்றன.

## 12. தமிழில் திறனாய்வு நூல்கள்

தமிழில் இப்போது வளர்ந்து வரும் துறை திறனாய் வுத் துறை திறனாய்வு என்ற கலைப் பிரிவு தமிழ் மொழிக்குப் புதிது. கிரேக்கரே திறனாய்வுத்துறையை முதன் முதலாகத் தொடங்கினர்.

அரிஸ்டாட்டில் தொடங்கி வைத்த திறனாய்வுக் கலை ஹட்சன், வின்செஸ்டர், ஆபர்கிராம்பி, பிராட்லி, பௌரா, ஜான்சன் போன்ற ஆங்கிலப் புலவர் பெருமக்களால் பேணி வளர்க்கப்பட்டது.

இம்மேலைநாட்டுத் திறனாய்வாளர்களி**ன் வரையறைகளை** ஒட்டியே, தமிழிலும் இன்று திறனாய்வுத் துறை வளர்ந்து வருகின்றமை காணலாம்.

தமிழ் மொழியைப் பொருத்தவரை இக்கலையைத் தொடங்கி வைத்தவர் தொல்காப்பியரே. தொல்காப்பியப் பொருளதிகாரம்' தலைசிறந்த தமிழ் இலக்கியத் திறனாய்வு நூல் ஆகும்.



https://t.me/tnpscfree

பேராசிரியர் ஆ. முத்து சிவன் அவர்களே திறனாய்வுத் துறையில் முன்னோடியாக வழிகாட்டியவர் எனலாம். 'அசலும் நகலும்' என்ற இவரின் கட்டுரையே முதல் முயற்சி ஆகும்.

தொடர்ந்து, திறனாய்வு பற்றிய பல அரிய அறிமுக நூல்கள் தமிழுக்குக் கிடைத்தன. கவிதை, நாவல், சிறுகதை, நாடகம், புதுக்கவிதை போன்ற அனைத்து இலக்கிய வகைகளும் இன்று திறனாய்வு செய்யப்படுகின்றன.

**திறனாய்வுக் கலை அறிமுக நூல்கள்**

அ.சா. ஞானசம்பந்தனின் 'இலக்கியக் கலை', டாக்டர் முவவின் இலக்கிய ஆராய்ச்சி', இலக்கியத் திறன்', 'இலக்கிய மரபு ஆகிய நூல்கள் குறிப்பிடத் தக்கன. காவியம், நாடகம், சிறுகதை, நாவல் ஆகிய நான்கு இலக்கியத் துறைகளின் அமைப்பையும் இந்நூல்கள் விளக்குகின்றன.

ந. சுப்புரெட்டியாரின் கவிதை இன்பம்' நல் கவிதை யைக் கற்றலும், கற்பித்தலும் என்ற அணுகுமுறையோடு எழுதப்பட்ட சிறப்புடையது. க.நா. சுப்பிரமணியத்தின் விமரிசனக் கலை' இலக்கிய விமரிசனம் பற்றிய செய்தி களை உணர்த்தும் சிறந்த நூல். ரகுநாதனின் இலக்கிய விமரிசனம்' கவிதை, நாடகம், சிறுகதை ஆகியவை பற்றிச் சிந்தனைகளை வெளிப்படுத்தும் நூல்.

ப. கோதண்டராமனின் இலக்கியமும் விமரிசனமும்' என்ற நூல் மேனாட்டாரின் இலக்கியமும் விமரிசனமும் ' ஒட்டி எழுதப்பட்ட சிறந்த நூல்.

டாக்டர் க. கைலாசபதியின் 'இலக்கியமும் திறனாய்வும்' என்ற நூல் மார்க்சீய அணுகு முறையில் எழுதப்பட்ட நல்ல அறிமுக நூலாகும்.

டாக்டர் சு. பாலச்சந்திரனின் இலக்கியத் திறனாய்வு' ஒழுங்குபடுத்தப்பட்ட திறனாய்வு அமைப்பு விளக்கமாக அமைகிறது எனலாம்.

மேலும், புதுமைப்பித்தன் எழுதிய 'புதுமைப்பித்தன் கட்டுரைகள்', அகிலனின் 'கதைக்கலை மணவாளனின் 'அரிஸ்டாடிலின் கவிதையியல்' ஆகிய நூல்கள் இலக்கியத் திறனாய்வுத் துறைக்குத் தமிழுக்குக் கிடைத்த நல்ல அறிமுக நூல்கள் எனலாம்.

**சங்க இலக்கியத் திறனாய்வு நூல்கள்**

டாக்டர் மு.வ.வின் சங்க இலக்கியத்தில் இயற்கை', டாக்டர் வசுப. மாணிக்கத்தின் தமிழ்க் காதல்', டாக்டர்ரா. சீனிவாசனின் 'சங்க இலக்கியத்தில் உவமைகள்' ஆகிய மூன்று நூல்களும் குறிப்பிடத்தக்க சங்க கால இலக்கியத் தின் திறனாய்வு நூல்கள் எனலாம்.

**கவிதை பற்றிய திறனாய்வு நூல்கள்**

இன்றைய தமிழ்க் கவிதைகளைப் பற்றியும், கவிதைக் கலை பற்றியும் கூறும் ஆ. முத்து சிவனின் கவிதையும் வாழ்க்கையும்' சிறந்த நூலாகும். வீஆர்எம் செட்டியாரின் தற்காலத் தமிழ்க் கவிதை', அ. சீனிவாசராகவனின் பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதை' நா. பார்த்தசாரதியின் கவிதைக்கலை ' ஆகியன குறிப்பிடத்தக்கன.

டாக்டர் கே.மீனாட்சி சுந்தரம், மு.கோவிந்தசாமி ஆகியோர் 'பாரதி பாநலம்' பற்றிய நல்ல நூல்களையும், மு.கோவிந்தசாமி, சாலை இளந்திரையன் ஆகியோர் பாவேந்தர் பாரதிதாசன் பாநலம்' பற்றியும் சிறந்த நூல்களையும் தந்துள்ளனர். டாக்டர் சு. பாலச்சந்திரன் தேசிக விநாயகம் பிள்ளை**யின் கவிதைகளைத்** திறனாய்வு செய்துள்ளார்.

https://t.me/tnpscfree



**நாவல் பற்றிய திறனாய்வு நூல்கள்**

கிவாஜகந்நாதனின் தமிழ் நாவலின் தோற்றமும் வளர்ச்சியும்', நாவல் வகைகள் பற்றிய க. கைலாசபதியின் தமிழ் நாவல் இலக்கியம்' டாக்டர் தாவே வீரசாமியின் சமுதாய நாவல்கள்', கநா. சுப்பிரமணியத்தின் முதல் ஐந்து தமிழ் நாவல்கள், பூவை எஸ். ஆறுமுகத்தின் அகிலன் முதல் கல்கிவரை நாவலாசிரியர்கள்' மா. இராமலிங்கத்தின் (எழில் முதல்வன்) நாவல் இலக்கியம், செல்வி கீதாவின் தமிழ் நாவல்கள் ஓர் அறிமுகம்', இரா. தண்டாயுதத்தின் நாவல் வளம்', சுந்தரராஜன் (சிட்டி பெ. கோ. சிவபாத சுந்தரம் ஆகியோர் எழுதிய தமிழ் நாவல் - நூற்றாண்டு வரலாறும் வளர்ச்சியும், தமிழ் எழுத்தாளர் சங்கக் கட்டுரைத் தொகுப்பான தமிழ் நாவல்கள்', 'மதுநெஞ்சனின் ராசியின் சமுதாய பார்வை போன்றவை குறிப்பிடத்தக்க நாவல் திறனாய்வு நூல்களாகும்.

**சிறுகதை பற்றிய திறனாய்வு நூல்கள்**

நாவல் இலக்கியம் பற்றித் தோன்றியுள்ள நூல் களைப் போல் சிறுகதை இலக்கியத்திற்குத் திறனாய்வு நூல்கள் இல்லை எனலாம். எனினும் குறிப்பிடத்தக்க நூல்கள் ஒருசில உள்ளன.ப. கோதண்டராமனின் சிறுகதை -ஒருகலை', கா. சிவத்தம்பியின் 'தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும்', சாலை இளந்திரையனின் சிறுகதைச் செல்வம்', 'தமிழில் சிறுகதை கனக செந்தில்நாதனின் தமிழில் சிறுகதையின் தோற்ற மும் வளர்ச்சியும் போன்றவை குறிப்பிடத்தக்க சிறுகதைத் திறனாய்வு நூல்கள்.

தமிழ் நாடகங்களைப் பற்றி விகோ பரிதிமாற் கலைஞரின் 'நாடகவியல், விபுலானந்த அடிகளாரின் மதங்கசூளாமணி', பம்மல் சம்பந்த முதலியாரின் நாடகத்தமிழ் டிகே. சண்முகத்தின் 'நாடகக் கலை ஆகியவை சிறந்த முன்னோடி நூல்கள் ஆகும்.

நாடகத் துறையில் தனிக்கவனம் செலுத்தி மிகச் சிறந்த ஆய்வு நூல்களைத் தந்துள்ளவர்கள் டாக்டர் ஏ. என். பெருமாளும், டாக்டர் இரா. குமரவேலன் அவர் களும் ஆவர். டாக்டர் ஏ என். பெருமாளின் தமிழ் நாடகத்தின் தோற்றமும் வளர்ச்சியும்' என்னும் நூலும், தமிழ் நாடகவியல், என்னும் நூலும் நாடக வரலாற்றையும் அமைப்பையும் விளக்குகின்றன. டாக்டர் குமரவேலனின் தமிழ் நாடக ஆய்வு' கவிதை நாடகம் - ஒரு கண்ணோட்டம்' ஆகிய இரு நூல்களும் வரலாற்று நோக்கிலும், வளர்ச்சி நோக்கிலும்' இலக்கிய நோக்கிலும் எழுதப்பட்ட நூல்களாகும்.

இன்று வளர்ந்து வருகின்ற கவிதைத் துறை புதுக் கவிதை **அல்லது வசனகவிதை** எனலாம் பரிணாமக் கொள்கைக் கொப்பக் காலமாற்றத்தின் ஒரு நிரந்தரத் தேவையாக அமைந்துவிட்ட புதுக் கவிதைத் துறை வளர்ந்து வருகின்றனமை காணப்படுகிறது.

வல்லிக்கண்ணன் புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்' என்னும் நூலே, புதுக் கவிதை பற்றிக் கிடைத்துள்ள முதன்மையான முழு நூலாகும்

நா. வானமாமலை, க. கைலாசபதி, க . கனகசபாபதி, சி.சு. செல்லப்பா, கா.நா. சுப்பிரமணியம், செல்வம் (மணி), செந்தில்நாதன், கா. சிவத்தம்பி, செ. கணேசலிங்கன், அ. சீனிவாசராகவன் ஆகியோர் புதுக் கவிதைத் துறைக்குப் பெரும்பங்காற்றிய திறனாய்வுக் கட்டுரைகளைத் தந்துள் ளனர்.

இப் புதுக்கவிதைத் துறைக்குக் கட்டுரைகள் வெளியான அளவிற்குத் தனி நூல்கள் இன்னும் வெளியிடப்பட வில்லை என்று கொள்ளலாம்.

## 13. புதுக் கவிதை



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



**புதுக் கவிதையின் தோற்றம்**

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் பிரான்சிலும் இங்கிலாந்திலும் கவிஞர்கள் சிலர் ஏநசள டெடை சந்' என்ற பெயரிலும் சூநற் ஞுடிநவசல' என்ற பெயரிலும் யாப்பிலக் கணத்தை மீறிய, ஆனால் கருத்தாழமிக்க கவிதைகளை இயற்றினர். மரபு மீறிய இக்கவிதைகள் எதிர்ப்புகளுக் கிடையே வளரவும் செய்தன. எஸ்ரா பவுண்ட், வால்ட் விட்மன், டி. எஸ். எலியட், எட்வர்ட் கார்பென்டர் முதலான கவிஞர்கள் இத்துறையில் பெருவெற்றி யடைந்தனர். தமிழில் இத்தகைய **கவிதைகளை** எழுதச் சிலர் முயன்றனர். அவர்கள் தொடக்கத்தில் வசன கவிதை' என்றும், பின்னர் புதுக் கவிதை' என்றும் இதற்குப் பெயரிட்டனர் மரபுகளை மீறுவதாகவும், யாப்பிலக்கணத்திற்கு அடங்காததாகவும், எப்பொருள் பற்றியதாகவும் அமைகின்ற **கவிதைகளைப்** பொதுவாகப் புதுக் கவிதை' எனலாம்.

**தமிழில் புதுக் கவிதையின் தந்தை**

கவிஞர் சுப்பிரமணிய பாரதியாரையே தமிழ்ப் புதுக் கவிதையின் தந்தையாகக் கருதுவர். வால்ட் விட்மனின் கவிதைகளிலும், தாகூரின் கவிதைகளிலும் ஈடுபாடு கொண்ட பாரதி கவிதை இலக்கணத்திற்கு அடங்காத - ஆனால் வசன நடையிலும் மேம்பட்ட எழுத்தோவியங் களைத் தீட்டினார். அவை காட்சிகள் ' என்ற தொகுப்பாகவந்தன. பாரதி எழுதியவை 'வசன கவிதைகள்' எனப்பட்டன. அவரே தமிழ்ப் புதுக் கவிதை மரபைத் தொடங்கி வைத்தவர். 1960க்குப் பிறகு வசன கவிதை' என்ற பெயர் மாறி புதுக் கவிதை' என்ற பெயர் நிலைத்த இடம் பெற்றது.

**தொடக்க காலம்**

தமிழ்ப் புதுக் கவிதை இயக்கத்தை மூன்று காலகட்டங் களில் பிரித்தாராயலாம். முதற்பிரிவு, தொடக்க காலம் இதில் நா. பிச்சமூர்த்தி, குப ராசகோபாலன் ஆகியோருடைய கவிதைகள் இடம் பெறும். இரண்டாம் பிரிவு, இக்காலப் புதுக் கவிதைகள்.

தொடக்க கால எழுத்தாளர்களான பிச்சமூர்த்தியும், கு.ப. ராசகோபாலனும் 'மணிக்கொடி' எனும் இதழில் தம் கவிதைகளை எழுதினர். 1934ஆம் ஆண்டு முதன் முதல் காதல்' என்ற கவிதையைப் பிச்சமூர்த்தி மணிக்கொடியில் எழுதினார். பின் ஒலியின் அழைப்பு, கிளிக்கூண்டு, காற்றாடி, அக்கா குருவி, கொம்பும் கிணறும், பொற்றாமரை, மழைக் கூத்து முதலான பல கவிதைகளை அவர் தீட்டி னார். பிக்ஷ' என்ற புனைபெயரில் அவர் கவிதைகள் வந்தன. குயிலின் சுருதி', வழித்துணை', 'காட்டு வாத்து' என்பன அவர் எழுதிய புதுக் கவிதைத் தொகுப்பு நூல்கள் ஆகும்.

கு.ப.ரா, கருவளையும் கையும்', விரதம்', 'ராக்கி நெனப்பு' 'ஏனோ?', 'நண்பனுக்கு முதலான கவிதைகளை எழுதினார்.

அக்காலத்தில் மணிக்கொடி இதழோடு, கலா மோகினி, சூறாவளி, ஜெயபாரதி, நவசக்தி, கிராம ஊழியர் ஆகியவையும் புதுக்கவிதையினை வெளியிட்டன. பிச்சமூர்த்தியைப் பின்பற்றிக் கநா.சு., வல்லிக்கண்ணன், திரிலோக சீதாராம், எம்.வி. வெங்கட்ராம், தி.க. சிவசங்கரன், சது.சு. யோகியார் ஆகியோர் புதுக் கவிதைகளை எழுதினர். இவர்களுள் மிகுதியான அளவிற்கு எழுதியவர் பிச்சமூர்த்தியே ஆவார். அவர் கவிதைகள் உருவகச் சிறப்போடு தனித் தன்மை பெற்று விளங்குவன.

"செம்பட்டுச் சல்லடம்
சொகுஸாக உடுத்தி
செம்மலர்க் கூடையை
இடுப்பில் இடுக்கி
சதங்கைகள் சிலம்ப



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



கீழ்வானில் முனைத்தாள்
இரவென்னும் பெட்டியை
உஷை மெள்ளத் திறந்தாள்
சூழிருள் சிறையுற்ற
கதிரவன் கிரணம்
தம்பைத் தெறித்த
மாடுபோல் பாய்ந்தது''

இப்புதுக்கவிதை 'உதயம்' என்ற தலைப்பில் ந. பிச்சமூர்த்தியால் எழுதப் பெற்ற தொடக்ககாலக் கவிதை யாகும். இவரைச் சிலர் 'புதுக் கவிதையின் பிதாமகன்' என்றும் குறிப்பிடுவார்.

**எழுத்து இதழ்**

1959ஆம் ஆண்டு சி.சு. செல்லப்பா என்பவரால் தொடங்கப் பெற்றது 'எழுத்து' என்னும் திங்கள் இதழ் தமிழில் புதுக் கவிதையின் வளர்ச்சிக்குச் சிறந்த களம் ஒன்றனை அமைத்துக் கொடுத்தது இந்த இதழே. ந. பிச்சமூர்த்தி, கந. சுப்பிரமணியம், டி. கே. துரைசுவாமி, சுந்தர ராமசாமி, கி. கஸ்தூரிரங்கன், தருமு சிவராமு, சி. மணி, எஸ். வைதீஸ்வரன் முதலான பலர் இவ்விதழில் புதுக் கவிதைகளை எழுதி வந்தனர். எழுத்து' இதழில் 24 கவிஞர்கள் எழுதிய 63 கவிதைகளைத் தொகுத்துப் 'புதுக் குரல்கள்' என்ற பெயரில் ஒரு நூலை வெளியிட்டார் சி.சு. செல்லப்பா.

இதுவரை இல்லாத ஓர் எழுச்சியை இந்த இதழ் ஏற்படுத்தியது. பெருமளவிற்குப் புதுக் கவிதைகளை உயர்த்திவிட வேண்டும் என்ற நோக்கில் நூற்றுக்கணக்கான கவிதைகளை எழுத்து' வெளியிட்டது. பின்னர், அதில் கவிதை எழுதியவர்களில் பலர் தனித்தனியே நூல்களாகத் தம் கவிதைகளை வெளியிடவும் தொடங்கினர்.

இந்த இதழைத் தொடர்ந்து கணையாழி, தீபம், கசடதபற, நடை, தாமரை முதலான இதழ்கள் புதுக் கவிதை வளர்ச்சியில் மிகுந்த அக்கறை காட்டின.

**இக்காலப் புதுக் கவிதைகள்**

1970ஆம் ஆண்டில் எழுத்து நின்றுவிட்டது. ஏறத்தாழ 500 கவிதைகளை வெளியிட்டுப் புதுக் கவிதை வளர்ச்சியில் அரும்பணி ஆற்றியது 'எழுத்து', 'மணிக்கொடிக்கும் இக்கால ஏடுகளுக்கு இடையே புதுக்கவிதையை விழாமல் தாங்கி வளரச் செய்த பெருமை 'எழுத்து' இதழுக்கு உண்டு.

அதனை அடுத்து வெளிவந்த 'கணையாழி' முதலான இதழ்கள் கவிதையின் தரத்தைப் பற்றிக் கவலைப்படாமல் புதுக் கவிதைகள் மிகுதியாக வெளிவரவேண்டும் என்ற கணக்கில் கவிதைகளை வெளியிட்டன. இதன் விளை வாகப் பல பதர்க் கவிதைகள் தோன்றிப் புதுக் கவிதைக்குப் புதிய எதிர்ப்புகளை உருவாக்கின.

விடுகதைகள், பாலுணர்ச்சி, துணுக்குகள், சொல் ஜாலம், இந்தி - சமஸ்கிருதம் - ஆங்கிலம் ஆயிவை கலந்து ஒருவகை மணிப் பிரவாளம், ஆங்கிலத் தலைப்பு என்ற போக்கில் புதுக் கவிதைகள் பாடப் பெற்றன.

இந்தச் சிக்கலான நேரத்தில் 'மானுடம் பாடும் வானம்பாடிகள்' என்று ஒரு கவிஞர் கூட்டம் தோன்றியது. இதில் புவியரசு, சிற்பி பாலசுப்பிரமணியன், அக்கினி புத்திரன், மு. மேத்தா, ஞானி, தமிழ்நாடன் முதலான பலர் இடம் பெற்றறனர். இவர்கள் பணி குறிப்பிடத்தக்கதாக அமைந்தது.

எழுபதுக்குப் பின் புதுக்கவிதை ஆர்வலர்கள் குறு நூல்களை வெளியிடத் தொடங்கினர். இந்த மினி , கவிதை நூல்கள் புற்றீசல் போல் வந்தன. புள்ளி, வெள்ளம், உதயம், கம்பம், ரசிகன், நி, அலைகள் என்ற



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



பெயர்களில் மிகக் குறைந்த விலையில் புதுக் கவிதைத் தொகுப்புகள் வெளிவந்தன. இவையே அன்றி, வானம்பாடி, இன்று நாணல், ஏன், ஐமுதலான பல இலவசமான புதுக்கவிதை இதழ்களும் வெளியிடப் பெற்றன.

எஸ். வைத்தீஸ்வரன், நா. காமராசன், அப்துல் ரகுமான், மீரா, மு. மேத்தா, ஞானக் கூத்தன், அபி, இன்குலாப், சி. மணி, ஈரோடு தமிழன்பன், கங்கை கொண்டான், தருமு சிவராம் முதலானவர்கள் புதுக் கவிதை நூல்களை வெளியிட்டனர்.

**நா. காமராசன் முதலானோர்**

'கறுப்பு மலர்கள்' என்ற நல் வாயிலாகச் சிறந்த புதுக் கவிஞராக அறிமுகமான நா. காமராசன் பல நல்ல நூல்களை எழுதியுள்ளார். புல், விலை மகளிர், பிச்சைக் காரி, குடிகாரன் முதலான சிறந்த கவிதைகளைக் கறுப்பு மலர்களில் காணலாம். இதனைத் தொடர்ந்து சூரியகாந்தி, சகாராவைத் தாண்டாத ஒட்டகங்கள், தாஜ்மகாலும் ரொட்டித் துண்டும், மகா காவியம் முதலான பல தொகுதி களை இவர் எழுதி வெளியிட்டுள்ளார். புதுக் கவிதை களை எண்ணிக்கையில் அதிகமாகவும் தரத்தில் உயர்ந்த தாகவும் தந்தவர் காமராசனே.

அப்துல் ரகுமான் 'பால் வீதி', 'நேயர் விருப்பம் என்ற தொகுதிகளை எழுதியுள்ளார். தமிழன்பன் 'தீவுகள் கரையேறுகின்றன', தோணி வருகிறது' ஆகிய புதுக் கவிதை நூல்களை வெளியிட்டுள்ளார். வரும் போகும்', ஒளிச்சேர்க்கை' ஆகியவற்றை சு.மணி எழுதியுள்ளார்.

மு.மேத்தாவின் கண்ணீர்ப்பூக்கள்', மீராவின் ஊசிகள்' கனவுகள் + கற்பனைகள் = காகிதங்கள்', இன்குலாப் கவிதைகள்', வைரமுத்துவின் திருத்தி எழுதிய தீர்ப்புகள்' வைதீஸ்வரனின் உதய நிழல்' ஞானக்கூத்தனின் அன்று வேறு கிழமை', அபியின் மௌனத்தின் நாவுகள்', கங்கை கொண்டானின் கூட்டுப் புழுக்கள் சக்திக்கனலின் கனகாம்பரமும் டிசம்பர்ப் பூக்களும்'

கணியூர் மது நெஞ்சனின் மகரந்தச் சிறகுகள்' ஆகியவை இக்காலத்தில் தோன்றிய குறிப்பிடத்தக்க புதுக் கவிதைத் தொகுப்புகள் ஆகும்.

**புதுக் கவிதையின் உள்ளடக்கம்**

தனி மனிதனின் அக உணர்வுகளும், புற உலகச் சிக்கல் களும் புதுக் கவிதையின் உள்ளடக்கம் ஆகத் தொடக்கத்தில் அமைந்தன. இளைஞர்களின் சமுதாயப் பார்வை கோபக் **கனலா**க வீசும்போது புதுக் கவிதைகள் உணர்ச்சி யோடு வெடித்துக் கிளம்புகின்றன. இத்**தகைய புற உலகக்கவிதைகளுக்கு** மார்க்சியம் உரம் ஊட்டுகிறது. ஆனால், அகப் போராட்டங்கள், சிக்கல்கள் ஆகியவற்றை வெளியிடும்போதும் பிராய்டிஸம் என்ற மனோதத்துவ அடிப்படைக் கொள்கை ஊற்றாக அமைகிறது.

வாழ்க்கை, சாவு, பாலுணர்வு, நிராசை, தனி மனிதம், நனவாடை உத்தி, கவிஞன் தொழில், எழுத்தாளன் தொழில், உருவம் - படிபம் - கோரமான உவமை, கூடார்த்தம் (இருண்மை ) ஆகிய இந்தப் பத்துத் தலைப்புகளில் புதுக் கவிதையின் உள்ளடக்கத்தை ஆராய்கிறார் நா. வானமாமாலை.

**புதுக் கவிதையில் நாவலும் நாடகமும்**

புதுக் கவிதையில் நீண்ட கவிதைகளைப் பிச்சமூர்த்தி யும் காமராசனும் வேறு சிலரும் படைத்துள்ளனர். அழுகை என்ற தலைப்பில் ஒரு நாவலையே இத்தகைய கவிதை கொண்டு எழுதியுள்ளார் ராசீ அவர்கள். இதனைத் தொடர்ந்து சுழிகள்' என்ற தலைப்பில் ஒரு நாவல் வெளிவந்துள்ளது. நாடகத் துறையிலும் புதுக் கவிதை கால் ஊன்றுகிறது. நா. காமராசனின் 'சராசரிகள் இதற்கு எடுத்துக் காட்டு ஆகும்.



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



## 14. தமிழில் இதழ்கள்

தமிழ் இலக்கிய வளர்ச்சியில் இதழ்களுக்குச் சிறந்த இடம் உண்டு. நாளிதழ்கள், கிழமை இதழ்கள், திங்கள் இதழ்கள், காலாண்டு இதழ்கள், ஆண்டு மலர்கள் எனப் பலவகையில் இவை வெளியிடப் பெறுகின்றன. ஏறத்தாழ நூற்றைம்பது ஆண்டுக்கால வளர்ச்சியில் தமிழ் இதழ்கள் சிறந்த முன்னேற்றம் அடைந்துள்ளன.

செய்திகளைத் தருவதோடு மட்டுமல்லாமல் கவிதை, சிறுகதை, நாவல் துறைகளையும் இவை வளர்த்துள்ளன. கடந்த ஐம்பதாண்டுக்கால இதழ்களில் தொடர்கதையாக வெளிவந்த நாவல்கள் எண்ணிலடங்கா, இவ்விதழ்கள் அவற்றை வெளியிடாதிருந்தால் பல நாவலாசிரியர்களும் சிறுகதை எழுத்தாளர்களும் வளர்ந்திருக்க இயலாது. சிலர் முழுவதும் கவிதையிலேயே கூடக் கிழமை இதழ்களை நடத்தியுள்ளனர்.

**நாளிதழ்கள்**

தமிழ் நாளிதழ்களில் மிகவும் குறிப்பிடத்தக்க ஏடு 'சுதேசமித்திரன்' ஆகும். 1883ஆம் ஆண்டு கிழமை இதழாக வெளிவந்த இது 1898ஆம் ஆண்டு முதல் நாளிதழாக வெளியிடப் பெற்றது. இதனைத் தொடங்கியவர் தமிழ் இதழ்களின் தந்தை' என்று கருதப்படும். ஜி. சுப்பிரமணிய ஐயர். காங்கிரஸ் இயக்கம் தொடங்கிய காலத்திலிருந்து அதில் பங்கேற்றுப் பணிபுரிந்த தேச பக்தர் இவர்.

மொழித் தூய்மையைப் பற்றிக் கவலைப்படாமல் விடுதலை இயக்கம் பற்றி மக்களிடையே விளக்கம் தருவதில் இவ் விதழ் முனைந்து நின்றது. மதம், இலக்கியம் ஆகியவை பற்றியும், சுதேச மித்திரனில் கட்டுரைகள் வெளிவந்தன. 1904ஆம் ஆண்டு முதல் சிறிது காலம் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் இதன் துணை ஆசிரியராக இருந்தார். சில கட்டுரைகளையும் இதில் எழுதினார். ஜி.சுப்பிரமணிய ஐயரை அடுத்து அரங்கசாமி ஐயங்கார் என்பவர்

ஆசிரிய ரானார். பின்னர் வந்தவர்களுள் குறிப்பிடத்தக்கவர் சி.ஆர். சீனிவாசன், தமிழ்ப் பத்திரிகை உலகிலும் விடுதலை இயக்கப் பணியிலும் சுதேசமித்திரன் சிறப்பிடம் பெற்றதாகும்.

தேசபக்தன், நவசக்தி ஆகிய இரண்டு நாளிதழ்களை அடுத்தடுத்து நடத்தியவர் தமிழ்த் தென்றல் திரு.வி. கலியாண சுந்தரனார் அவர்கள். சுதேச மித்திரனிலிருந்து அவ்விதழ்கள் மொழிநடையில் வேறுபட்டிருந்தன. நல்ல இனிய தமிழில் இவை நடத்தப் பெற்றன. முதல் இதழ் மூன்றாண்டுக் காலமும், இரண்டாம் இதழ் 13 ஆண்டுக் காலமும் வெளிவந்தன. தமிழில் நாளிதழ் நடத்துவதற்கு நவசக்தி 'யே இலக்கணமாகத் திகழ்ந்தது **எனலாம்.**

அடுத்துக் குறிப்பிடத்தக்க இதழாசிரியர் டி.எஸ். சொக்கலிங்கம். இவர் தமிழ்நாடு', 'தினமணி' ஆகிய இதழ்களின் ஆசிரியராக விளங்கியவர். தினமணியில் பதினைந்தாண்டுக் காலம் இவர் ஆற்றிய தொண்டு மிகவும் பாராட்டத்தக்கது. விடுதலை இயக்க வீரரான ஏ.என். சிவராமன் தினமணியின் வளர்ச்சிக்குக் காரணமான மற்றோர் ஆசிரியர் ஆவர். அரசியல், வரலாறு, பொருளாதாரம், சட்டம் முதலான பல துறைகளைப் பற்றிப் பாமரரும் புரிந்து கொள்ளும் வண்ணம் எழுதும் ஆற்றல் பெற்றவர் ஏ.என். சிவராமன்.

மதுரை கருமுத்து தியாகராச செட்டியார் தமிழ்நாடு என்ற நாளிதழைச் சிறப்பாக நடத்தினார்.

நாளிதழ்களில் தனித்தன்மை வாய்ந்ததும் தன்னிகரற் றதுவும் ஆக விளங்குவது 'தினந் தந்தி'. இதன் ஆசிரியர் சியா ஆதித்தனார். ஏழை மக்களும் நாட்டு நடப்புகளை அறிந்து கொள்வதற்குக் காரணமாக அமைந்து தினத் தந்தியே. 1942ஆம் ஆண்டு மதுரையில் தொடங்கப் பெற்ற இது, தற்போது ஏழு



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



இடங்களிலிருந்து வெளியாகிறது. மிக அதிகமான அளவில் விற்பனையாவதும் படிக்கப்படுவதும் இந்த நாளிதழே ஆகும்.

பெரியார் ஈவெரா, அவர்கள் குடியரசு, விடுதலை' ஆகிய இரண்டு நாளிதழ்களை நடத்தினார். பகுத்தறிவுப் பிரசாரம் செய்யும் ஏடுகளாக இவை அமைந்தன. பெரியார் அன்று ஏடு நடத்தும் போது மேற்கொண்ட எழுத்துச் சீர்திருத்தத்தை இன்றைய அரசு ஏற்றுக் கொண்டது இங்குக் குறிப்பிடத்தக்கது.

அரசியல் உணர்வுகள் பெருகிவிட்ட காரணத்தினால் கட்சிக் கொள்கைகளைப் பரப்பும் நாளிதழ்கள் பல தமிழில் தோன்றின. பொதுவுடைமைக் கொள்கை பரப்பிய 'ஜனசக்தி', காங்கிரஸ் இயக்கத்தின் சுதேச மித்திரன்', 'நவ இந்தியா', 'பாரததேவி', 'திராவிடர் கழகத்தின் 'விடுதலை', தி.மு.க.வின் நம் நாடு', அண்ணா தி.மு.க.வின் அண்ணா ', தென்னகம்' ஆகியவை இவற்றில் குறிப்பிடத்தக்கவை. தொழிலாளர் ஒத்துழைப்பையும் கூட்டுறவையும் கொண்ட 'நவமணி', 'மக்கள் குரல்' முதலான ஏடுகள் தோன்றின.

இன்று பல நாளிதழ்கள் தமிழில் உள்ளன. ஞாயிறு வெள்ளி முதலான நாட்களில் இவை கலை, இலக்கியம் தொடர்பான பகுதிகளைத் தாங்கி வருகின்றன.

**கிழமை இதழ்கள்**

பெர்சிவல் பாரதியார் 1885ஆம் ஆண்டில் தின வர்த்தமானி' என்ற ஒரு கிழமை இதழை - வார இதழைத் தொடங்கினார். இதுவே முதல் தமிழ் வார இதழ் அறிஞர் சி.வை. தாமோதரம் பிள்ளை இவ்விதழின் ஆசிரியராகச் சில காலம் இருந்தார்.

வார இதழ்களில் குறிப்பிடத்தக்கது லோகோபகாரி' வி. நடராஜ ஐயர் நடத்திய இவ்விதழ் 60 ஆண்டுகள் நடந்தது.

'இந்தியா' என்ற வார இதழைக் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் கொஞ்சகாலம் நடத்தினார், 'விஜய' என்ற நாளிதழையும், 'கர்மயோகி', சக்ரவர்த்தினி' என்ற மாத இதழ்களையும் இவர் நடத்தியிருக்கிறார்.

டாக்டர் பா. வரதராசுலு நாயுடு தமிழ்நாடு' என்னும் வார இதழை நடத்தியபோது டி. எஸ். சொக்கலிங்கம், நெ.து. சுந்தரவடிவேல் ஆகியோர் துணை ஆசிரியர்களாக இருந்தனர்.

ஒருதம்பிடி விலையில் பாலபாரதி ' என்னும் இதழைச்சதுசு. யோகியாரும், காலணாப் பத்திரிகையைச் சங்கு கணேசனும், அதே விலையில் காந்தி' இதழை டி. எஸ். சொக்கலிங்கமும் நடத்தியிருக்கின்றனர்.

1928 முதல் வார இதழாக நடைபெற்று வரும் ஆனந்த விகடன்' 1926இல் மாத இதழாக எஸ்.எஸ்.வாசனால் தொடங்கப் பெற்றது. நகைச்சுவை, சிறுகதை, நாவல், கேலிச்சித்திரம், அரசியல் எனப் பல துறைகளில் தமிழை நீண்ட காலமாக வளர்த்துவரும் இதழ் ஆனந்தவிகடன், உ.வே.சா., கல்வி, துமிலன், பி.ஸ்ரீ., எஸ்.விவி மணியன் முதலான பலர் இதில் கதை கட்டுரைகளை எழுதியுள்ள னர்.

1941 ஆகஸ்டில் கல்கி' இதழ் வெளிவந்தது. இதன் ஆசிரியர் ரா. கிருஷ்ணமூர்த்தி. கல்கி, கர்நாடகம் முதலிய பெயர்களில் விகடனில் எழுதி வந்த இவர், இந்த இதழைத் தொடங்கிய பிறகு பல புகழ்பெற்ற சரித்திர நாவல்களை எழுதினார்.



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வெளியான வேறு குறிப்பிடத்தக்க இதழ்கள் ஆனந்த போதினி', பிரசண்ட விகடன்' முதலானவை.

தமிழ் வார இதழ்களில் மிகுதியாக விற்பனையாவது எஸ்.ஏபி. அண்ணாமலையின் குமுதம்' இதழ், இந்தியாவிலேயே அதிகமாக விற்கும் வார இதழ் இது.

தினமணி கதிர், சாவி, குங்குமம், இதயம் பேசுகிறது முதலான வார இதழ்கள் இப்போது வெற்றிகரமாக நடைபெற்று வருகின்றன.

**திங்கள் இதழ்கள்**

வை. கோவிந்தன் நடத்திய 'சக்தி', சீனிவாசன் வெளியிட்ட 'மணிக்கொடி', கி.வா.ஜகந்நாதனின் கலைமகள்' ஜீவானந்தம் தொடங்கிய 'தாமரை' ஆகிய மாத இதழ்கள் சிறந்த தமிழ்ப்பணி ஆற்றியுள்ளன.

தமிழில் தோன்றிய முதல் இதழான 'தமிழ்ப் பத்திரிகை' என்பதே மாத இதழ்தான்.

இலக்கிய இதழ்களான செந்தமிழ்' மறைமலையடிகளாரின் 'ஞானசாகரம் (அறிவுக் கடல்)', சுப்பிரமணிய சிவா நடத்திய 'ஞானபானு', சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வெளியிடும் 'செந்தமிழ்ச் செல்வி', கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் தமிழ்ப் பொழில்' ஆகியவை தமிழ் வளர்ச்சிக்கு இந்நூற்றாண்டில் பெருந்தொண்டு புரிந்துள்ளன.

நா. பார்த்தசாரதி 'தீபம்' என்ற இதழைச் சிறப்புற நடத்தி வருகிறார்.

1947இல் மருகு சுப்பிரமணியன் பொன்னி, என்னும் சிறந்த மாத இதழைத் தொடங்கினார். கவர்ச்சிமிக்க நல்ல இதழாக அது விளங்கியது.

ஜி. உமாபதி 'உமா' என்ற இதழையும், கண்ண தாசன் தன் பெயரிலேயே ஓர் இதழையும் நடத்தியுள்ளார்.

கடலூரிலிருந்து தனித் தமிழ்த் திங்கள் இதழாக வெளிவரத் தொடங்கியது தென்மொழி'. இதன் ஆசிரியர் பெருஞ்சித்திரன்.

**கவிதை இதழ்கள்**

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் குயில்' என்ற கவிதை இதழைச் சிறப்பாக நடத்தினார்.

அவரைப் பின்பற்றி இத்துறையில் பலர் ஆர்வம் காட்டியுள்ளனர். கவிஞர் சுரதா இலக்கியம் காவியம், சுரதா' ஆகிய கவிதை இதழ்களை நடத்தினார். தெசிணி கவிதை' என்ற இதழையும், பொன்னடியான் முல்லை சரம்' என்ற இதழையும், பரமசிவன் எழிலோவியம்' என்ற இதழையும் வெளியிட்டு வருகின்றனர். பரந்த அளவில் இவை விற்பனையாகா விட்டாலும் ஆசிரியர்களின் முயற்சி பாராட்டுதற்குரியதாகும்.

அண்மையில் எழுத்தாளர் செங்குட்டுவன் கவிக்கொண்டல்' என்ற இதழைத் தொடங்கியுள்ளார்.

**குழந்தை இதழ்கள்**

1940ஆம் ஆண்டுக்குப் பிறகு குழந்தைகளுக்காகத் தனியே பல இதழ்கள் நடத்தப் பெற்றன. அழ. வள்ளியப்பா அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்தவை பாலர் மலர், டமாரம்' 'சங்கு'



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



என்பவை. இவற்றைத் தொடர்ந்து அம்புலிமாமா', 'பாப்பா', 'பூஞ்சோலை' ஆகியவை வெளிவந்தன. 'பூஞ்சோலையின் ஆசிரியர் அழ. வள்ளியப்பா கலைமகள் நிறுவனத்தார் கண்ணன்' என்ற சிறுவர் இதழை வெளியிட்டனர். தமிழ்வாணனின் 'கல்கண்டு' குழந்தைகள் இதழாகவே பல ஆண்டுகள் நடைபெற்று வந்தது. இப்போது 'பாலமித்ரா', 'சம்பக்', பொம்மை வீடு முதலான இதழ்கள் குழந்தைகளுக்காக வெளியிடப் பெறுகின்றன.

**பிற இதழ்கள்**

உலகம் சுற்றிய தமிழர் ஏ.கே. செட்டியார் குமரி மலர்' என்னும் இதழைத் தொடங்கிச் சிறப்பாக நடத்தி வந்துள்ளார் இன்றும் இது வெளிவருகிறது.

ஜி ஆர் . தாமோதரன் ஆசிரியராக இருந்து நடத்தி வரும் அறிவியல் இதழ் கலைக்கதிர் இதனைப் பின்பற்றி அணுக்கதிர் என்ற ஏடு வந்தது. தற்போது விஞ்ஞானச் சுடர்' என்னும் இதழ் கோவையிலிருந்து வருகிறது.

'நூலகம்', மூலிகைமணி', சித்தாந்தம்', தமிழரசு', திட்டம்' எனப் பல்வேறு துறைகளின் தொடர்பாக இதழ்கள் வெளியிடப் பெற்று வருகின்றன.

திரைப்படக்கலை தொடர்பாக பேசும் படம், பொம்மை' முதலான இதழ்கள் வெளியிடப் பெறுகின்றன. நையாண்டி மூலம் அரசியல் உணர்வு ஏடாக 'துக்ளக்' நடத்தப் பெறுகிறது.

தத்தம் கட்சி வளர்ச்சிக்காகவும் அரசியல் தலைவர்கள் ஏடுகளை நடத்தி வருகின்றனர். அண்ணா அவர்களின் 'திராவிட நாடு', காஞ்சி' இதழ்களும், கருணாநிதியின் 'முரசொலி' 'முத்தாரம்' இதழ்களும், கண்ணதாசனின் தென்றல்' இதழும், பொதுவுடைமைக் கட்சியினரின் 'ஜனசக்தி' இதழும், ம.பொ. சிவஞானத்தின் செங்கோல் இதழும், அண்ணா ', தென்னகம்', மக்கள் குரல் ஆகிய இதழ்களும் இவ்வகையில் குறிப்பிடத்தக்கன.

மகளிர்க்காக மங்கை', 'மங்கையர் மலர்' முதலான இதழ்கள் வெளியிடப் பெறுகின்றன.

இவ்வாறு பல்வேறு துறைகளில் பல்வேறு போக்கு களில் தமிழ் இதழ்கள் நடத்தப்பட்டு வந்தன நடத்தப்படுகின்றன. தமிழ் இலக்கிய வளர்ச்சியில் இவற்றின் பங்கு மிகவும் குறிப்பிடத்தக்கது. திரு.வி.க., மறைமலையடிகள், பாரதியார், உட்படப் பலர் இத்துறையில் ஈடுபட்டமையே தமிழர் இதழ்களில் காட்டிய ஆர்வத்துக்குப் போதியச் சான்றாகும்.



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



## 15. நாட்டுப்புற இயல் வரலாறு

பழங்கால நாகரிக மாந்தர்களின் மரபு வழிப்பட்ட படைப்புகளை நாட்டுப்புற இயல் (குடிடமட்டிசந) என்பர்.

இந்த இயலுக்குள் நாட்டுப்புறத்து மக்களின் இலக்கியம், கலை, பண்பாடு, பழக்க வழக்கம், நம்பிக்கை ஆகியன அடங்கும். இவ்வியல் தொன்று தொட்டு நாட்டில் இருந்து வந்தாலும், இதனை அறிவியல் ரீதியாக நோக்கும் எண்ணம் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தான் தோன்றியது. மேலை நாட்டில் வில்லியம் ஜான் தாமசு (றுடைடயை அ துடிானே கூாடி அயள) என்ற ஆங்கிலேயர் 1846இல் நாட்டுப்புற இயல் என்ற சொற்றொடருக்குரிய ஃபோக்லோர் (குடிடமடிசந) என்ற சொல்லை உருவாக்கினர். அன்றிலிருந்து நாட்டுப்புற இயலை அறிந்து கொள்வதிலும், ஆராய்ந்து கொள்வதிலும் அறிஞர்கள் பலர் உலகெங்கும் ஈடுபட்டனர். பின்னரே இவ்வியல் பற்றிய ஆய்வு இந்தியாவுக்கு வந்து சேர்ந்தது.

**நாட்டுப்புறப் இலக்கியத்தின் வகைகள்**

1. நாட்டுப்புறப் பாடல். 2. கதை 3. கதைப் பாடல் 4. விடுகதை 5. பழமொழி என ஐந்து வகையாக நாட்டுப்புற இலக்கியத்தைப் பகுக்கலாம். இவ்வைந்து வகை இலக்கியங்களும் தமிழில் வளர்ந்த வரலாற்றினை ஓரளவு கொண்டுள்ளது.

இவ்விலக்கியங்களைத் தொகுத்தல், அச்சிடல், சுவைத்தல், ஆராய்தல் என நான்கு நிலைகள் தமிழில் உள்ளன. சுவைத்தலில் விளக்கலும் அடங்கும்.

**பாடல்கள்**



https://t.me/tnpscfree

நாட்டுப்புறப் பாடல்களைத் தமிழில் முதல் முதலாக 1940இல் தி. சதாசிவ ஐயர் மட்டக்களப்பிலிருந்து வெளியிட்டார். தமிழகத்தில் மு. அருணாசலம் 1943இல் காற்றில் மிதந்த கவிதை எனும் நூலை வெளியிட்டார். இதில் தொகுப்பும் சுவைப்பும் உண்டு. இவர்களுக்கு முன் சார்லஸ் ஈ.கோவர் (ஊாயசடநள நு . ழுடி எநச) கூரந குடிடம் ளுடி பேளாடிகளுடிரவாநசனே ஐனேயை' என்னும் நூலை வெளியிட்டார். இதில் தமிழகப் பாடல்களும் உள. ஆனால் இவர் திருக்குறள், திருவாசகம், சித்தர் பாடல்கள் போன்றவற்றையும் சேர்த்துள்ளார். இது இவரது பெரும் பிழையாகும். மாக்வீன் என்ற கலெக்டரும் ஏராளமான பாடல்களைத் தொகுத்துள்ளார். இப்பாடல்கள் 'மலையருவி' என்ற பெயரில் 1958இல் கி.வாஜாவால் பதிப்பிக்கப்பட்டது. டாக்டர் தமிழண்ணல், திநா. சுப்பிரமணியம், வ.மு. இராமலிங்கம், பெ. தூரன், ர. அய்யாசாமி, நா. வானமா மலை, அ.முபமுவை அரவிந்தன், செ. அன்னகாமு, மா. வரதராஜன், க.கிருஷ்ணசாமி போன்றோர் தொகுப்பாளர் களாகவும் சுவைப்பாளர்களாகவும் விளங்குகின்றனர். டாக்டர் சண்முக சுந்தரத்தால் 1978இல் நாட்டுப் புறப் பாடல்கள் என்ற தலைப்பில் மாவட்ட வாரியாகச் சிறந்த பாடல்கள் தொகுக்கப்பட்டன.

கலைமகள், தாமரை, செம்மலர், புதிய வானம் போன்ற பல்வேறு இதழ்களும் பாடல்களை அச்சிட்டுள்ளன. நூற்றுக்கும் மேற்பட்ட கட்டுரைகள் பாடல்களை விளக்கியுள்ளன.

தமிழவன் மலையாள நாட்டுப்புறப் பாடல்களையும், நா. வானமாமாலை சில கன்னடப் பாடல்களையும், மஞ்சரி இதழ் இந்தி, தெலுங்கு போன்ற பிறமொழிப் பாடல் களையும் வெளியிட்டுள்ளனர். கருத்தரங்குகள் பல நாட்டுப் புறப்பாடல்களை ஆராய முற்பட்டுள்ளன. சென்னையில் உலக ஆராய்ச்சி நிறுவனம் 1979 இல் நிகழ்த்திய நாட்டுப்புற இயல் கருத்தரங்கம் இவற்றுள் மிகச் சிறப்பானது.

**கதைகள்**

நாட்டுப்புறத்துக் கதைகளையும் பலர் தமிழில் தொகுத்து உள்ளனர். 1867இல் 'மயில் ராவணன் கதை' வீராசாமி நாயக்கரால் பதிப்பிக்கப்பட்டது. நடேச சாஸ்திரி 1884 முதல் 1893 வரை தென்னிந்திய நாட்டுப்புறக் கதைகளை குடிடமட்டிசந் டிகளுடிரவா ஐனேயை' என்ற பெயரில் 4 பாகங் களாக வெளியிட்டுள்ளார். இவரே கதைகளைத் தொகுத்த முதல்வர் எனலாம். 1885இல் ராபின்சன் என்பவர் தமிழகப் பாடல்களுடன் **கதைகளை**யும் தொகுத்தார். பின்னர் கா. அப்பாதுரையின் 'நாட்டுப்புறக் கதைகள்' வெளிவந்தது. சு அ. இராமசாமிப் புலவர் நடேச சாஸ்திரி நூலைத் தெளிவாக்கி 6 பாகங்களாகத் 'தென்னாட்டுப் பழங்கதை'களாக வெளியிட்டார். கி. ராஜநாராயணன் நெல்லை மாவட்டக்**கதைகளை அருமையாகத்** தொகுத்து வெளியிட்டுள்ளார். மரியாதை ராமன் கதைகள் 1958இல் அரு. ராமநாதனால் வெளியிடப்பட்டது.

ஈசாப் கதைகள், அராபியக் கதைகள், பஞ்ச தந்திரக் கதைகள், தெனாலிராமன் கதைகள், விக்கிரமாதித்தன் கதைகள், பீர்பால் கதைகள், முல்லா நஸ்ரூதின் கதைகள் ஆர்மீனிய நாட்டுக் கதைகள், ரஷ்ய நாட்டுக் கதைகள், உலக நாடோடிக் கதைகள் என இவ்வாறு பிற மொழிக் கதைகளும் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டன.

தாமரையில் தமிழகக் கதைகள் தொடர்ந்து அச்சாயின. மஞ்சரியிலும், தினமணி கதிரிலும் பிறமொழிக் கதைகள் வெளியாயின. நாட்டுப்புறக் கதைகளை இதுவரை யாரும் ஆய்வு நிலையில் அதிகமாக அணுகியதில்லை. 1938இல் அண்ணாமலைப் பல்கலைக் கழகக் கருத்தரங்கில் எமனோ என்பவர் கதைகளில் வரும் சொற்றொடர்கள் சிலவற்றை ஆராய்ந்து உள்ளார்.

**கதைப் பாடல்கள்**

https://t.me/tnpscfree



புராணக் கதைப் பாடல்களில் பல புகழேந்தியால் பாடப்பட்டன என்று கூறப்படினும் அவை நம்பப்படுவதில்லை. வரலாற்றுக்கதைப் பாடல்கள் பல இராமப்பய்யன் இரவிக்குட்டி தேசிங்குராஜன், கட்டபொம்மன், கான்சாகிபு, மருது ஆகியோர் காலத்தில் எழுதப்பட்டன.

முதலில் 1868இல் அமராவதி கதைப் பாடல்' அச்சாகியது. இதுவரை நூற்றுக்கணக்கான கதைப்பாடல்கள் அச்சாகியுள்ளன. குஜ்ஜிலி பதிப்புகள், பவானந்தம் பிள்ளை பதிப்புகள், பல்கலைப் பதிப்புகள் எனப் பல பதிப்புகள் சிறப்புடையன. தனிப்பட்ட முறையில் ஆறுமுகப் பெருமாள் நாடார், பா. நடராஜன் போன்றோர் அச்சிட்டுள்ளனர். மாதர் மஞ்சரி, பூமகள் விலாசம், ஆர்.ஜி. பதி கம்பெனி, இரத்தின நாயகர் – சன்ஸ் ஆகிய அமைப்புகள் பல்வேறு கதைப் பாடல்களை மறுபதிப்பு செய்துள்ளன.

1976இல் மு. அருணாசலம் க்ஷயட்டயன ஞுடி நவசல ' என்ற நூலில் கதைப் பாடல்களை ஆய்வு செய்துள்ளார். 1979இல் திசி. கோமதி நாயகம் தமிழில் கதைப் பாடல்கள்' என்னும் நூலில் சிறுகதைப் பாடல்களை அச்சிடுவதுடன் ஆய்வும் செய்துள்ளார். வையாபுரிப்பிள்ளை , நா. வானமாமலை, தெ.பொ.மீ. லூர்து, ஆறு. இராமநாதன், பிருந்தாபெக், ஹமீது ஆகியோர் கதைப் பாடல்களை ஆராய்ந்து கட்டுரைகள் சில எழுதியுள்ளனர்.

**பழமொழிகள்**

400 பழமொழிகளைக் கி.பி. 5ஆம் நூற்றாண்டிலேயே முன்றுரை அரையனார் தொகுத்து அவற்றை நானூறுபாடல்களில் அமைத்துப் பாடியுள்ளார். இவரைப் பழமொழிகளைத் தொகுத்த முதல்வர் எனலாம். பின்னர் 17ஆம் நூற்றாண்டில் பழமொழி விளக்கம்' நூலுள் 144 பழமொழிகள் தொகுக்கப்பட்டுள்ளன.

19ஆம் நூற்றாண்டில், பழமொழிகளை ஆர்வத்துடன் அறிவியல் பூர்வமாகத் தொகுக்க ஆரம்பித்தனர். 1842இல் ரெவ். பெ. பெர்சிவலும், 1870இல் எச்ய. லாரியும் மேனாட்டினராக இருப்பினும் தமிழகப் பழமொழிகள் ஆர்வத்துடன் தொகுத்தனர். 1874இல் எஸ். இராமசாமி ஐயங்காரும், 1887இல் எஸ். வேணுகோபாலும், 1888இல் குப்புசாமி நாயுடுவும் தொகுத்தளித்தனர். இதில் ஐயங்கார் ஆங்கிலப்பழமொழிகளையும் ஒப்பிட்டு வெளியிட்டனர்.

இவர்களைத் தொடர்ந்து சுந்தரசாஸ்திரி, ஜான் லாசரஸ் கிருஷ்ணசாமிச்செட்டியார், ஹெர்மன்ஜென்சன் தி. செல்வகேசவ முதலியார், அட்டாவதானம் வீராசாமி முதலியார் ஆகியோர் 19ஆம் நூற்றாண்டில் பழமொழித் திரட்டு, அகராதி போதனை, தீபிகை, அகரவரிசை, கொத்து என்ற பெயர்களில் தொகுத்து வெளியிட்டனர். தென்னிந்திய பழமொழிகளைத் தமிழில் தென் மொழிகள் புத்தகடிரஸ்டும், உலகப் பழமொழி களைத் தமிழில் ப. ராமசாமியும் வெளியிட்டனர். சிலர் அபூர்வமான, உயிரினம் பற்றிய, பண்பாடுகளை விளக்கக் கூடிய பகுத்தறிவைச் சார்ந்த, வாழ்வியலை விளக்குகின்ற, குடும்ப உறவுகளைத் தெரிவிக்கின்ற பழமொழிகளைத் தனித்தனியாகத் தொகுத்துப் புத்தகமாக்கினர்.

க.வெங்கடேசன், ஏ.என். பெருமாள், கிருட்டிண சஞ்சீவி போன்றோர் பழமொழிகளை விளக்கிக் கட்டுரைகள் எழுதியுள்ளனர். சாலை இளந்திரையன் பழமொழிகளை ஆய்வு செய்து டாக்டர் பட்டம் பெற்றுள்ளார்.

விவேக சிந்தாமணி, செந்தமிழ்ச் செல்வி, கலைமகள் கல்கி, மஞ்சரி, தாமரை போன்ற இதழ்கள் பழமொழி களைத் தொகுக்கவும் விளக்கவும் ஆராயவும் உதவின.

**விடுகதைகள்**

விடுகதையின் விளக்கத்தைத் தொல்காப்பியத்திலும் சான்றுகளை உரைகளிலும், தன்மைகளைப் புலவர்களின் பாடல்களிலும் காணமுடிகிறது. ஆனால், விடுகதைகளைத் தொகுக்கும் எண்ணம் இருபதாம் நூற்றாண்டில்தான் உருவானது. 19ஆம் நூற்றாண்டில் விடுகதைத் தன்மை கொண்ட இருசொல் அலங்காரம், முச்சொல் அலங்காரம் போன்ற நூல்கள் வந்தன. 1897இல் விவிலியத்தினின்றும் விடுகதைகள் தொகுக்கப்பட்டன. 1881ல்ஜனவிநோதினி எனும் இதழ் விடுகதைகளை முதல் முதலாக அச்சிட்டது.



https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree



1933இல் விவேக விளக்க விநோத விடுகவி பொக்கிஷம் அச்சானது. பின்னர் சிறுவர்க்கான விடுகதைப் பாட்டு களும் வெளிவந்தன. இவற்றுள் டாக்டர் சாவே. சுப்பிரமணியம் தமிழில் பதிப்பித்தவிடுகதைகளே சிறந்த முழுமையான நூலாகும். 1962இல் அழ. வள்ளியப்பா வெளிநாட்டு விடுகதைகளைத் தமிழில் தந்துள்ளார்.

கலைமகள், கல்கி, கண்ணன், ராணி போன்ற இதழ்கள் பேரளவில் விடுகதைகளை வெளியிட்டன. தமிழவன், அரு. ராம்நாதன், கு. மோகனராசு, ர. அய்யாசாமி ஆகியோர் விடுகதைகளை விளக்கி ஆராய்ந்து எழுதினர். இவற்றுள் தமிழில் புதிர்கள் - ஓர் ஆய்வு' எனும் நூல் சிறந்தது.

**நாட்டுப்புறக் கலைகள்**

தமிழகக் கிராமிய நடனங்களைப் பற்றியும், பலர் கட்டுரை எழுதி வருகின்றனர். இந்திய கிராமிய நடனங்கள், தென்னிந்திய கிராமிய நடனங்கள்' என்ற இரு நூல்கள் முறையே 1959, 1960 ஆகிய ஆண்டுகளில் வெளியாயின. இரண்டிலும் தமிழக நடனங்கள் விளக்கப்பட்டுள்ளன. சியாமளா பாலகிருஷ்ணனும், பத்மா சுப்பிரமணியமும் இதில் அதிக ஈடுபாடு உடையவர்கள். கும்மி, காவடி, பொய்க்கால் குதிரை ஆடல் போன்றவற்றைப் பற்றிப் பல்வேறு விளக்கக் கட்டுரைகள் வெளிவந்துள்ளன.

பாவைக் கூத்தினைப் பற்றி டாக்டர் இராமசாமி ஆய்வு செய்து பட்டம் பெற்றுள்ளார். தெருக் கூத்தினைப் பற்றியும் டாக்டர் பட்டத்துக்கு ஆய்வு நடந்து வருகின்றது. தி.சி. கோமதிநாயகம் வில்லுப்பாட்டுக் கலையை ஆராய்ச்சி செய்து வருகிறார். நாட்டுப்புறக் கலைகளைப் பற்றியும் சோமலெ கட்டுரை எழுதியுள்ளார்.

**IYACHAMY ACADEMY, NO 172,**

**TIRUGNANASAMBANDAR STREET,**

**TIRUVALLISWARAR NAGAR, TIRUMANGALAM,**

**ANNA NAGAR WEST, CHENNAI, 600040**

**044-48601550, 9952521550**

**FOR MORE DETAILS: WWW.IYACHAMY.COM**



https://t.me/tnpscfree


https://t.me/tnpscfree
Join Telegram
Channel :
@tnpscfree
https://t.me/sasiclasses